
# இலக்கியப் பாலம்

## பங்கும் பணியும்

முனைவர் திருமதி. இலக்குமி மீனாட்சி சுந்தரம்



# இலக்கியப் பாலம்

## பங்கும் பணியும்

முனைவர். திருமதி இலக்குமி மீனாட்சி சுந்தரம்
நன்யாங் தொழில் நுட்பப் பல்கலைக்கழகம்,
தேசிய கல்விக் கழகம், சிங்கப்பூர்.

மதிப்புக்குரிய கம்பன் அடிசூடி
பழ. பழனியப்பன் அவர்களுக்கு
நூலாசிரியரின் அன்பளிப்பு.
அன்புடன்,
M. S. ஸ்ரீலக்ஷ்மி
சிங்கப்பூர்
5/1/13

**தேமா பதிப்பகம்**
ஏ.ஐ. 141, அண்ணாநகர்,
சென்னை - 600 040.

முதல் பதிப்பு மார்ச்சு – 1993


விலை ரூ. 55

# உள்ளடக்கம்

## வாழ்த்துரை

பிள்ளைத்தமிழ்க்கவிஞர் பினாங்கு சி.அன்பானந்தம்

குஞ்சரம் நல்லருளும் கோலவேல் வெல்பொருளும்
மிஞ்சுபுகழ் சேர்த்து மிகவழங்க- கொஞ்சுதமிழ்
"பங்கும் பணியும்" பரிமளிக்கும்; லெக்குமிக்கு
எங்கும் நலங்கொழிக்கும் ஏற்று.

## அணிந்துரை


### முனைவர் இராம. பெரியகருப்பன் (தமிழண்ணல்)
### தமிழியற்புலம் மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம், மதுரை.


'இலக்கியப் பாலம் - பங்கும் பணியும்'. எனும் பெயரிய இந்நூலைப் படித்துப்பார்க்கும் வாய்ப்புக் கிடைத்தது. மலேசியா விலும், சிங்கப்பூரிலும் தமிழ்மொழி நிலைக்கப் பாடுபட்ட வர்களும், தமிழிலக்கியம் வளரத் தொண்டாற்றியவர்களும் மிகப் பலராவர். அவர்களுள் குறிப்பிடத் தக்கவர்களைப் பற்றி இந்நூல் நன்கு திறனாய்வுசெய்து பாராட்டுகிறது.

முனைவர் இலக்குமி மீனாட்சிசுந்தரம் துடிப்புள்ள தமிழார்வலர்; தமிழைப் பழுதறக் கற்றுத்தேர்ந்த பண்புமிக்கவர். அவர் மலேயாப் பல்கலைக்கழக இந்திய ஆய்வியல் துறையில் பணியாற்றினார். இப்போது சிங்கப்பூர் நன்யாங் தொழில் நுட்பப் பல்கலைக் கழகத்தின் தேசியக்கல்விக்கழகத்தில் பணிபுரிந்து வருகிறார். மலேசியா, சிங்கப்பூரில் தமிழும் தமிழரும் நிலை பெற்றிருப்பது தமிழன்னை பெற்ற அளப்பரும் செல்வப்பேறே யாகும். இங்கு கல்வி நிலையங்கள் வாயிலாகவே தமிழன்னை நன்கு உலா வருகின்றாள். அவள் குடியேறிய பொழுது தோட்டப்புறங் களில் ஏழை எளிய மக்களுடன் திகழ்ந்தாள். வணிகப்பெருமக் களின் வாழ்விலும் வாக்கிலும் காணப்பட்டாள். இன்றோ வானொலியில் நாள்தோறும் எதிரொலிக்கின்றாள். நாளேடு வார ஏடுகளில் இலக்கியத் தேரேறி வலம் வருகிறாள். கலைகளில் உல்லாசப் பவனி வந்து ஊக்கமும் ஆக்கமும் தருகிறாள். சமயவழியாக அவள் வேரூன்றி ஆல்போல் தழைக்கின்றாள். இத்தமிழ்மகளின் பெருவாழ்வை, இலக்கிய வளர்ச்சிப்பேற்றை திருமதி இலக்குமி அவர்கள் தமது முன்னைய 'இலக்கிய அரும்புகள்' என்ற நூலின் வழியாகவும், இப்போதைய 'இலக்கியப் பாலம்' நூலின் வழியாகவும் திறம்பட எடுத்துரைக் கின்றார்.

தமிழவேள் கோ. சாரங்கபாணி, கவிக்கோ சா.ஆ. அன்பானந்தன், ஆழி அருள்தாசன், பைரோஜி நாராயணன்,

முருகு சுப்பிரமணியன் போலும் மிகச் சிறந்த பேரறிஞர்கள் பற்றி இந்நூலில் விரிவான செய்திகள் காணப்படுகின்றன.

தமிழவேளுடன் தோளோடு தோள்நின்று பணிசெய்த சண்முகம் செட்டியார், சிங்கப்பூர் வானொலியில் தமிழினிமை பாய்ச்சிய மெ. திரு. அரசு போல எடுத்துக் கொண்டால், தமிழ்ப் பணியாற்றிய சான்றோர் தொகை அளவிறந்து காணப்படும்.

இச்சான்றோர்களைப் பற்றிய புகழுரைகளையும், பாராட்டுப் பாடல்களையும் தேடிக் கண்டுபிடித்து வரலாற்றை வரைவதில் இந்நூல் முழுவதும் மலையக இலக்கியமணம் கமழ்கிறது. 'நயனங்கள் படைத்த நற்கவிஞர்'; 'கலைஞர்களை உருவாக்கிய கலைஞர்'; 'விருதுகள் பல பெற்ற வித்தகர்' என இந்நூலின் துணைத் தலைப்புக்களிலும் தமிழ்மணம் கமழ்கிறது. சீரிய துடிப்புடைய நடையில், நடுவுநிலைமையுடன், எதனையும் சீர்தூக்கி எழுதும் திருமதி இலக்குமி மீனாட்சிசுந்தரம் மேலும் பல நூல்களை எழுதி மலையகத் தமிழின் மாண்பை உலகிற்கு உணர்த்த வேண்டும். அதற்கு இந்நூல்களை முன்னோடிகள் என்று குறித்துப் பாராட்டி வாழ்த்துகிறேன்.

சிங்கப்பூர், மலையக மக்கள் தம் தமிழ்ப்பெருமை சாற்றும் இந்நூலை நன்கு வரவேற்பர். தாய்த் தமிழகத்தினர்க்கும் இந்நூல் நல்ல அறிமுகநூலாகப் பயன்படும். செவ்விய தீந்தமிழ் வழங்கும் சிங்கப்பூரர்க்கு இந்நூல் சிறப்பளிக்கும் என்பதுறுதி!

தமிழண்ணல்<br>
சிங்கப்பூர்<br>
22.6.92.

# முன்னுரை

## முனைவர் திருமதி இலக்குமி மீனாட்சிசுந்தரம்
## நன்யாங் தொழில் நுட்பப் பல்கலைக்கழகம்
## தேசிய கல்விக்கழகம்
## சிங்கப்பூர்.

ஒரு மொழியின் இலக்கிய வரலாற்றை அணுகுவதில் பல முறைகள் உள்ளன. கால அடிப்படையில் இலக்கிய வரலாற்றை அணுகுவது ஒரு முறை. இம்முறையை அடியொற்றி மலேசியத் தமிழிலக்கிய வரலாற்றை எழுதியுள்ளார் மா. இராமையா. 'பங்கும் பணியும்' என்ற வரிசையில் தனியொருவராய்ப் பலர் செய்த இலக்கியப் பணிகளை - இலக்கிய முயற்சிகளை அணுகுவது இலக்கிய வரலாற்றினை அணுகும் மற்றொரு முறையாகும். இம்முறையின் மூலமாக மலேசியா, சிங்கப்பூர் ஆகிய இரு நாடுகளையும் இணைத்த நல்லோர் பலரின் நன்முயற்சியை விவரிக்கும் வகையில், ஆய்வுக் கண்ணோட்டத்துடன் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

தமிழவேள் கோ. சாரங்கபாணி, சமூகக்கலைமாமணி சா.ஆ. அன்பானந்தன், ஆழிஅருள்தாசன், பைரோஜி நாராயணன், நற்றமிழ் வளர்த்த நகரத்தார் பெருமக்கள், இன்றமிழ் வளர்த்த இசுலாமியர்கள் ஆகியோரின் பங்கையும் பணியையும் விளக்குகிறது இந்நூல். நாடுகளுக்கிடையே நல்லுறவை நிலை நாட்ட அமைக்கப்படும் பாலங்களுள் இலக்கியப்பாலம் ஏற்றமிகு பாலமாகும். இது பண்பாட்டுப் பாலமாகவும் அமைந்து முக்கியமான இடத்தைப் பெறுகிறது.

"நேற்று எழுதியதைவிட நல்லதை நாளை எழுதலாம் என்ற முனைப்பு எழுத்துத்துறையில் இருக்க வேண்டும். மனம் நிறைய நிறையாமை இருந்தால்தான் கலைத்துறையில் புதுமைகள் புனையமுடியும். வளர்ந்து கொண்டே மேற்செல்வதற்கும், புதுமைகள் புனைவதற்கும் இந்த நிறையாமைப்பண்பு ஓயாமல் தூண்டிக்கொண்டே இருக்கிறது. எழுத்தாளன் இத்தகைய தூண்டுதலை ஒரு போதும் இழந்துவிடக்கூடாது" என்று அமரர் நா. பார்த்தசாரதி குறிப்பிடுவது போல நிறையாமைப்பண்பு என்னைத் தூண்டியதால் இந்நூல் உருவாகியுள்ளது.

கள ஆய்வின்போது தரவுகள் சேகரிக்க எனக்கு ஒத்துழைத்த நன்னெஞ்சங்களுக்கும், ஆக்கமும் ஊக்கமும் வழங்கிய அனைவருக்கும், அணிந்துரை வழங்கிய மூதறிஞர் தமிழண்ணல் அவர்களுக்கும், இதயங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இலக்குமி மீனாட்சி சுந்தரம்
சிங்கப்பூர்
*25-6-92.*

# தமிழ்ப்பயிர் வித்திய தமிழ் உழவர்

சிதறிக்கிடந்த மலேசிய, சிங்கப்பூர்த் தமிழர்களை ஒன்றுபடுத்தி, உயர்வாழ்வடைவதற்கு எண்ணருந் தொண்டுகள் செய்தவர் தமிழவேள் ஆவார். தமிழவேள் பற்றிய நூல்கள் ஒன்றிரண்டே வெளிவந்துள்ளன. ஆயின் அவை தமிழவேள் கோ. சாரங்கபாணியின் பங்கு, பணிகளைச் செய்தித் தொகுப்பாகச் செப்பின. ஆய்வுநோக்கில் அவை அமைந்தில, ஆனால் அதே வேளையில் கவிதைகளின் வழியே தமிழவேளின் கவினார் பணியைக் கவிஞர்கள் நினைவுகூர்ந்துள்ளனர். இவற்றுள் சிங்கப்பூரில் வெளிவந்துள்ள 'கவிக்குலம் போற்றும் தமிழவேள்' நன் முயற்சியாம். இது தமிழவேள் நாடகமன்றத்தின் நன்றியுணர்வு கெழுமிய வெளியீடாகும். மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் வெளிவரும் கவிதைகளில் தமிழவேளின் தலையாயபணி தங்குதடையின்றி வெளியிடப்பட்டுள்ளது. ஆயின் உரைநடையில் அன்னாரின் பணி களையும், பங்கினையும் விளக்காவிடில் அவை ஊனமுடைப் படைப்பேயாம். ஆகலின் தமிழர்களின் ஏற்றமே பெருநோக்காய்க் கொண்டுழைத்த தகைசால் பெரியார் தமிழவேளின் பங்கினையும் இக்கட்டுரை இயம்புகிறது.

*1903* ஆம் ஆண்டு ஏப்ரல் *20* ஆம் நாளன்று தமிழ் மணக்கும் தஞ்சையில் திருவாரூர் வட்டத்தைச் சேர்ந்த விழுப்புரம் விஜயநகரத்தில் திரு. கோவிந்தசாமியின் பொன்மகனாய்ப் பிறந்தார் கோ. சாரங்கபாணி. தமிழவேளின் பிறந்த நாள் பற்றிய கருத்து வேறுபாடுகள் உள. 'தமிழவேள் கோ. சாரங்கபாணியும் சிங்கப்பூர் சமூகமும்' என்ற கட்டுரையில் எஸ். ஏ. முத்தை.யா என்பவர் மே மாதம் *11* ஆம் நாள் தமிழவேளின் பிறந்த நாள் என்பர்'. *1* ஆயின் இக்கட்டுரையில் கூறப்பட்டுள்ள நாள் தமிழவேள் அவர்களின் கல்லறையில் பொறிக்கப்பட்டதாகும்.

கல்வியில் பெருநாட்டமும், விளையாட்டுத்துறையில் வேட்கையும், படைப்பிலக்கியத் துறையில் தணியாத் தாகமும் கொண்டவராய்க் கோ.சா. இளமையில் ' திகழ்ந்தார். உயர்நிலைப் பள்ளிக் கல்வியை முடித்தபின் *1924* ஆம் ஆண்டு சிங்கப்பூர் வந்தார் கோ.சா. உழைப்பால் உயர்ந்து அந்நிறுவனத்தின் நிர்வாகியானார். இக்காலக்கட்டத்தில் வெண்தாடி வேந்தராம் ஈ. வே.ரா. பெரியாரின் சுயமரியாதை இயக்கத்தினால் ஈர்க்கப்பட்டார்.

சிங்கப்பூர்த் தமிழர்களின் பிற்போக்கான எண்ணங்கள், சாதி நூறு சொல்லும் தன்மை, ஒற்றுமை இன்றி- உணர்வின்றித் தாழ்வுற்றுக் கிடந்த

நிலை ஆகியவற்றைக் கண்டு மனம்வெதும்பித் தொண்டென்னும் தூயநெறிபாற் சார்ந்தார்.

முன்னேற்றம் தந்தவர்:

வே.சி. நாராயணசாமி என்பாரை ஆசிரியராய்க் கொண்டு, தாம் துணையாசிரியராய் இருந்து 'முன்னேற்றம்' என்னும் வாரஇதழைத் தொடங்கினார் கோ.சா. தமிழர் முன்னேற்றமே இம்முன்னேற்ற இதழின் நோக்கம். இதனைப் பாவலர் முல்லைவாணன்,

"பின்னேற்றந் தன்னில் பெருவிருப்புக் கொண்டஇனம்

முன்னேற்றம் கொள்ள முனைந்தததினால் "முன்னேற்றம்"

மின்னேற்ற மாக மிளிர்ந்தது சீர்திருத்தம்" 2

என்று அழகுறப் பாடுவர்.

கல்வி, தொழில், சமயம், சமுதாயம், அரசியல், மொழி முதலிய துறைகளில் முன்னேறவும், கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் செயலாற்றவும், தன்மானம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவற்றை மக்களிடையே வலுப்பெறச் செய்யவும் இவ்விதழ் உதவியது. சான்றாக முதல் வெளியீட்டில் அடங்கிய கட்டுரைகளே 'முன்னேற்றத்தின்' நோக்கைப் புலப்படுத்துவதாம். "நமது முன்னேற்றம்", "அகக்கண்ணாடி" 'தமிழ் மொழியும்' 'நமது கடமையும்' நமது நோக்கம் "இணக்கவயதுக் கமிட்டி", "நமது தொண்டு", "சமத்துவச் சீமானும் வைதீகச் சுப்பிணியும்" ஆகிய ஏழு தலைப்புகள் கொண்ட கட்டுரைகளை முதல் படியில் காணலாம். 27. 1. 1929இல் வெளிவந்த குடியரசு இதழ் மலாயா நாட்டுத் தமிழ்மக்கள் நிலையை அறிய விழைவோர் அனைவரும் இவ்விதழை ஆதரிக்கவேண்டுமென விண்ணப்பம் விடுத்தது.

1930இல் கோ.சா. அவர்களே முன்னேற்றத்தின் ஆசிரியரானார். உணர்வும்-எழுச்சியும் ஊட்டும் தலையங்கங்கள், சிந்திக்கவைக்கும் கட்டுரைகள் ஆகியவற்றின் மூலம் மக்களின் நீடுதுயிலினை நீக்கினார். இளம் எழுத்தாளர்கள் முன்னேறவும் 'முன்னேற்றம்' வாய்ப்பு அளித்தது. கோ.சா. பல புனைபெயர்களில் தம் படைப்புகளை வெளியிட்டார். பகுத்தறிவுப் பட்டறையாக, சுயமரியாதை இயக்கத்தின் எதிரொலியாக முன்னேற்றம் இலங்கியது. முன்னேற்றம் இதழின் மூலம் அவர் மக்களுக்குக் கொடுத்த ஊக்கமும்-குறிப்பாக இளம் எழுத்தாளர்க்குக் கொடுத்த ஊக்கமும் பாவலர்களின் பாடுபொருளாயின. ஆகவே வரலாற்றுப் பேழையாய்த் தமிழவேளைக் கண்ட முருகதாசன்,

"கள்ளிருக்கும் பூநாடும் களிவண்டாய்த்
தமிழர்களைக் கூட்டிக் காட்டி
கல்லுடைக்கும் கைகளுக்கும் கவிதைவரச்
செய்தவரை வணங்கு கின்றேன்.

. . . . . . . . . . . . . . . . . . . . . . .

எழுத்தாணி கைபிடித்திங் கெழுதிடநல்
வழியமைத்த தாரின் னாட்டில்?" 3

எனப் பெருமிதம் தோன்றப் பாடுவர் .

### தமிழர் சீர்திருத்தச் சங்கம் கண்டவர்:

1926 இல் மலாயாவில் இந்துக்கள் மாநாடு கூட்டப்பட்டது. பின் 1929 இல் அகில மலாயாத்தமிழர்கள் மாநாடு கூடியது. இதற்குத் தலைமை தாங்கப் பகுத்தறிவுப் பகலவனாம் ஈ.வே.ரா. வந்தார். பெரியாரின் வருகைக்குப் பின் பல அமைப்புகள் மலாயாவில் தோற்று விக்கப்பட்டன. இதனால் சிங்கையிலும் தமிழர்க்குச் சங்கம் வேண்டும் என்ற விழைவு வேரூன்றியது. இதன் விளைவாகத் தமிழர் சங்கமொன்று அமைக்கப்பட்டது. சீர்திருத்த நோக்கோடு அமைந்த இச்சங்கத்திற்கு 13.7.1930 இல் தமிழர் சீர்திருத்தச் சங்கம் என்னும் பெயர் ஒருமித்த எண்ணத்துடன் - ஒருமித்த மனத்துடன் சூட்டப்பட்டது.

பற்பல சங்கங்கள் அமைந்திருந்தாலும் தமிழர்க்குப் பயனேதும் விளையவில்லை. ஆயின் தமிழர் சீர்திருத்தச் சங்கம் உண்மையாகப் பாடுபடுவதையே நோக்கமாகக் கொண்டி ருந்ததால் அதன் செயற்றி றனில் வேறுபாடு (மற்ற சங்கங்களிலிருந்து) காணப்பட்டது. கோ. சாரங்க பாணியின் அரிய முயற்சியால் நூலகம் ஒன்றும் அமைக்கப் பட்டது. தமிழர்களின் கல்வி முன்னேற்றத்தில் கருத்தூன்றிய கோ.சா. அம்முன்னேற்றத்திற்குத் தடம் அமைக்கும் நூலகத்தை நிறுவினார். இந்நூலக முயற்சி காலத்தின் தேவையுமாகும்.

### முரசு கொட்டிய மூதறிஞர்:

சிங்கப்பூர்த் தமிழர் சீர்திருத்தச் சங்கத்தின் திறப்பு விழாவில் பிறந்தது தமிழ்முரசு எனும் பத்திரிகை. இப்பத்திரிகையின் வளர்ச்சி படிப்படியாக அமைந்தது. தோன்றிய காலத்தில் - தொடக்ககாலத்தில் அதன் விலை ஒரு காசுதான். பிறகு வாரம் மும்முறை வெளிவரும் இதழானது; பின்னர்ப் பெரிய அளவில் வாரம் மும்முறை வெளிவந்தது. தமிழர் சீர்திருத்தச் சங்கத்தின் ஏடு தமிழ்முரசு. ஆதலின் சங்கத்தின் கொள்கை பரப்பும் ஏடாகவும் இது மலர்ந்தது. பெரியாரின் திராவிடக் கழக ஏடுகளாக வெளிவந்த குடியரசு, விடுதலை ஆகியவற்றைப் போன்று தமிழ் முரசும் செயல்பட்டது. இவ்விதழின் விற் பனைக்காகக்

கோ.சா. பட்ட அரும்பாடுகளை எண்ணிப் பார்க்கும் போது தமிழ்ச் சமுதாயம் ஆமை நிலையில் · அறியாமையில் ஊறிக்கிடந்த கொடுமையை என்னென்றுரைப்பது! அரும்பாடுபட்டு அச்சடித்த ஏடுகளைத் தோளில் சுமந்துகொண்டு வீடுவீடாகச் சென்று விற்றார். தமிழ்முரசை வாங்கிப் படிக்காதவர்களிடம் விற்காத படிகளை இலவசமாகக் கொடுத்துவந்தார் கோ.சா. இதனால் நட்டமடைந்த சங்கம் தமிழ்முரசின் வெளியீட்டு உரிமையைக் கோ.சா.விடம் ஒப்படைத்தது.

தமிழ்ச் சமுதாயத்திடம் மண்டிக் கிடந்த மூடப்பழக்க வழக்கங்களைத் தகர்த்தெறிய, சிந்திக்கும் திறத்தை வளர்க்க, சோம்பிக் கிடந்த தமிழரிடையே விழிப்புணர்வை உண்டாக்கத் தமிழ் முரசு ஆற்றிய சேவை அளப்பரியது. தமிழ்முரசின் அந்நாளைய சேவையைப் பாவலர் சிங்கைமுகிலன்,

"பழங்கால நாளேட்டைப் புரட்டிப் பார்த்தால்
படிப்பதற்கே வியப்புத்தரும் அந்தச் செய்தி;
விழுந்திட்ட தமிழ்மகனும் எழுந்து நிற்பான்!
மீசையிலே கைபோட்டு முறுக்கிப் பார்ப்பான்!
எழுந்திட்ட உணர்ச்சிக்கோர் உருவாய் நின்றார்
எத்திக்கும் தமிழோசை எட்டச் செய்தார்
இழந்திட்ட உரிமையினை மீளச் செய்தார்
என்றென்றும் தமிழொன்றே மூச்சாய் நின்றார்" 4

என்று போற்றுவர். கவிஞரின் புகழுரை மிகையுரையன்று.

தமிழ்முரசு எழுத்தாளர் பெருக்கத்திற்கும் வித்திட்டது. புற்றீசல் போலப் புறப்பட்டு மாயும் வெறும் எண்ணிக்கைப் பெருக்கத்தை அஃது உருவாக்கவில்லை. வற்றாத உணர்வுடன் வளமான எழுத்துகளைப் படைக்கும் ஆற்றலரைப் பலராக்கியது தமிழ்முரசின் சாதனையே. ரசனை வகுப்பு; எழுத்தாளர் பேரவை ஆகிய அங்கங்கள் எழுத்தாளர்களை மேன்மேலும் எழுதத்தூண்டின. இதனைப் பாவலர் முல்லைவாணன்

"முரசிதழில் பேரவையும் முன்னே றெழுத்தர்
உரசிபுக ழாமா றுயர- அரசவினைத்
தாமென்ன பல்பெயரில் தாங்கொண்ட நல்வினையா
றாமென்று கிள்ளாய் அறை" 5

எனப் போற்றுவர்.

தமிழ்நேசனில் கதைவகுப்பு நடத்திய சுப. நாராயணன் தமிழ் முரசில் ரசனைவகுப்பினை நடத்தினார். சிறுகதை ஆக்கத்திற்குத் தம் உழைப்பை நல்கினார். இதன் மூலம் எழுத்துகளைப் படைக்கும் முறை; படைக்கும் சூழல் ஆகியவற்றை எழுத்தார்வம்மிக்கவர் அறிந்து கொண்டனர். சுப. நாராயணனின் விமர்சனங்களை ஏற்க இயலாக் கோழைமனத்தார் தம் உள்ளங்கள் பாதிப்படைந்ததாகக் கூறவே உருக்கமான முடிவுரையுடன் ரசனை வகுப்பை முடித்துவைத்தார் தமிழவேள்.

எழுத்தாளர் பேரவையில் வை. திருநாவுக்கரசுவும், அ. முருகையனும் தமிழ்முரசு ஆசிரியரான கோ. சாவுடன் இணைந்து சிறுகதை முயற்சிகளுக்கு உரமிட்டனர். திங்கள்தோறும் சிறுகதைப் போட்டி நடத்தியது தமிழ்முரசு. சில தலைப்புகளுக்கேற்பக் கதை படைக்கும் ஆற்றலையும் எழுத்தாளர்களிடையே வளர்த்தனர். சிறந்த சிறுகதைகளுக்குச் சிலகாலம் வரை இருபதுவெள்ளியைப் பரிசாக வழங்கினர்.

### மாணவர் மணிமன்றம் மாண்புறக் கண்டவர்:

சிறார்களின் நெஞ்சில் தமிழ் விதைக்க மணிமன்றம் கண்டவர் கோ.சா. மாணவர்களின் எழுத்தாற்றலை வளர்க்கும் நோக்குடன் மாணவர் மணிமன்றம் என்ற பகுதியைத் தமிழ்முரசில் துவக்கினார். 1952 இல் தொடங்கப்பட்ட இப்பகுதி மலேசிய, சிங்கப்பூர்ச் சிறார்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றது.இம்மணிமன்றத்தின் மாண்பார் பங்கு மலையக, சிங்கப்பூர்த் தமிழ் இலக்கிய வரலாற்றில் சிறுவர் இலக்கியம் அல்லது குழந்தை இலக்கியம் என்னும் துறை செழித்துவளர வாய்ப்பளித்தது. மலேசியத் தமிழ் இலக்கியம் மற்றும் சிங்கப்பூர்த் தமிழ் இலக்கியத்தின் பரப்பை விரிவுபடுத்தியது மாணவர் மணிமன்றமேயாம். இம்மணிமன்றத்தில் கலந்து கொண்ட பலரும் இன்று நல்ல எழுத்தாளர்களாக வளர்ந்துள்ளனர் என்பது பெருமைக்குரிய செய்தியாம். நல்ல கவிஞர்களை, நல்ல கதையாசிரியர்களை, நல்ல நாவலாசிரியர்களை, நல்ல நாடகாசிரியர்களை, நல்ல கட்டுரையாளர் களை உருவாக் கியிருப்பது மணிமன்றத்தின் மணியான சாதனையே!

மனிதர் ஒவ்வொருவரிடமும் ஏதேனும் ஒரு திறமை மறைந் திருக்கும். அதனை வெளிக்கொணர நல்வாய்ப்பு அளிக்கப் பட்டால், அவ்வாய்ப்பினையும் தக்கவாறு பயன்படுத்திக் கொண்டால் தனிமனித ஆற்றல் சமுதாயத்திற்குப் பயனுடை யதாகும். இவ் அடிப்படையில் சிறார்களின் திறமைகளை வெளிக்கொணர உருவாக்கப்பட்டதே மானவர் மணிமன்றமாகும். ஆகவே மாணவர் மணிமன்றம்

மாணவர்களின் எழுத்தாற்றலை மட்டும் வளர்க்காது, சிந்தனைத் திறத்துக்கும் சீரிய வழியமைத்துக்கொடுத்தது. மனம், மொழி, செயல் ஆகிய மூன்றினாலும் தமிழ்பற்றுக்கொண்டு செயல்பட மணிமன்றமே தடம் அமைத்தது.

மணிமன்றத்தின் ஒளிமிகு சேவையினைச் சிங்கப்பூர்ப் பெண் கவிஞரான பார்வதி பூபாலன் சிறப்புறப் போற்றுவர்.

"மணியென விளங்கிடும் மாணவர் குழாத்தை
மாண்புடன் விளங்கவே செய்யும்
பணிதனைக் கொண்டிவண் பைந்தமிழ் பயிலும்
பண்புடைச் சிறார்க்கிவன் மன்றம்
அணியென நிறுவினன் அதன்வழி இளையோர்
அரும்புகழ் மிகப்பல கண்டார்
மணியொலி எழுப்பிடும் மன்றமே தமிழின்
மன்னுசீர் இயம்பிடும் அன்றோ" 6

மாணவர் மணிமன்றத்தைப் பற்றி மா. இராமையா குறிப்பிடுவது இவண் கருதத்தக்கது.

"எழுத்தாளர்களை உருவாக்க முடியாது என்று அவ
நம்பிக்கை கொண்டவர்களே ஊக்குவிக்கும் அளவிற்கு
இங்கே தமிழ்த்தாகம் உச்சக்கட்டத்தில் இருந்தது.
இந்தச் சூழ்நிலையில் தமிழ் இங்கே புதிய மொழியாகவே
கற்கப்பட்டது என்பதையும் நாம் மறக்கக் -
கூடாது. தமிழின் ஈர்ப்புக்கு இந்தப் புதுமையும்
காரணமாகும்" 7

மாணவர் மணிமன்றம் எழுத்தாளர் பரம்பரை உருவாக வாய்ப்பளித்தது. மேலும் விளக்கமாகக் கூறப்புகின் இம்மணிமன்றம் ஒரு பயிற்சிக்களமே. சுடச்சுட ஒளிரும் பொன்போல் எழுத்தாளர்கள் ஒளிரப் பேருதவி புரிந்தது மாணவர் மணிமன்றமே!

### இளைஞர் மணிமன்றமும் இன்றமிழர் நலனும்:

சிறார்க்கென அமைக்கப்பட்ட மாணவர் மணிமன்றம் போல் இளையர்க்கும் இளைஞர் மணிமன்றம் கண்டார் கோ. சா. மாணவர் மணிமன்றம் என்ற வித்திலிருந்து இளைஞர் மணிமன்றம் என்ற பேராலமரம் உருவாயிற்று. ஆதலால் இளைஞர் மணிமன்றத்தின் தந்தை என்று கோ. சா. போற்றப்படுவர். இன்று மலையகமண்ணில்

தமிழ் இளைஞர் மணிமன்றம் எண்ணருங் கிளைகள் கொண்டு இலங்குகிறது. சா.ஆ.அன்பானந்தன், தமிழ்மணி முதலிய ஒரு சிலர் தவிர எஞ்சியோர் பலர் மணிமன்றத்திலும் இன்று அரசியலைப் பின்பற்றி வருவது வேதனைக்குரிய, வெட்கப்படவேண்டிய செயலாகும். உயரிய நோக்கோடு இளைஞர்களின் ஆற்றலை ஒன்றிணைத்து நாட்டிற்கும், மொழிக்கும், சமுதாயத்திற்கும் பயன்படுத்த எண்ணினார் கோ. சா. ஆயின் இன்றோ அம்மன்றம் பொருளீட்ட, புகழீட்டச் சிலருக்குக் கருவியாகியுள்ளது. ஆயினும் கோ.சா; சா.ஆ. அன்பானந்தன் ஆகியோர் காட்டிய வழியைப் பின்பற்றிச், சிறுமனங்களை - சில்லறைத்தனங்களை அகற்றிப் பெருமனத்துடன் உழைக்கவும், உயரவும் பாடுபடவேண்டிய கடமையை நினைவில் கொண்டால் இளைஞர் மணிமன்றம் மணியென இலங்கிட வழியுண்டு.

"ஆல மரமோர்சிறு விதையாலே - நம்
அமைப்பும் மாணவர்மணி மன்றத்தாலே
கோலக் கிளைபோலும் மன்றங்களே - தமிழ்க்
கொள்கை களேஅதன் விழுதுகளே" 8

என்று பாவலர் சா.ஆ. அன்பானந்தன் பாடியிருப்பது தமிழ் இளைஞர் மணிமன்றத்தின் விழுமிய நோக்கை வெளிப்படுத்தும்.

தமிழர்திருநாள் - ஒற்றுமைப்பாலம் - உறவுப்பாலம்:

"வெள்ளம்போல் தமிழர் கூட்டம்
வீரங்கொள் கூட்டம்; அன்னார்
உள்ளத்தால ஒருவரே மற
றுடலினால் பலராய்க் காண்பார்
கள்ளத்தால் நெருங்கொணாதே
எனவையம் கலங்கக் கண்டு
துள்ளும்நாள் எந்நாள்? உள்ளம்
சொக்கும் நாள் எந்நாளோ?" 9

எனப் பாவேந்தர் கண்ட கனவு நனவான நாளே தமிழர் திருநாளாம். இத்தமிழர் திருநாள் தமிழ்த்திருநாளாம்! சாதிச்சழக்குகளாலும் சமயப் பிணக்குகளாலும் வேறுபட்டுக் கூறுபட்ட நின்ற தமிழர்களை இணைக்கும் ஒற்றுமைப் பாலமாக, உறவுப்பாலமாகத் தமிழர் திருநாளைக் கூறலாம். எனவே தமிழர் திருநாளை அரசியல் கலவாத நாள்; அறவழி பிறழாத நாள்; துறவியும் ஏற்கின்ற நாள்; தொல்பெருமை விழைகின்ற நாள்; திறமனைத்தும் காட்டும் நாள்; தீந்தமிழைப் பருகும்

நாள்; மறத்தமிழன் மாண்புணர்த்தும் நாள்; மதப்பிணக்கு விரவாத நாள் என விளக்கலாம். உயர்நோக்குடன், தமிழர்களை இணைக்கும் இந்நாள் மலேசிய, சிங்கப்பூர்த் தமிழ்ச் சமூக வரலாற்றில் மட்டுமின்றித் தமிழ் இலக்கிய வரலாற்றிலும் முக்கியத்துவம் பெற்றநாளாகும். மக்களுக்கு மொழியுணர்வு பெருகத் தமிழகப் பேராசிரியர்களை வரவழைத்து, அவர்களின் சொற்பெருக்கிலே மக்களைத் திளைக்க வைத்தார் கோ.சா. இப்பேராசிரியர்களின் வருகை மலையக, சிங்கப்பூர் மக்களுக்குத் தமிழ்ப்பற்றையும், தமிழிலக்கியப்பற்றையும் ஊற்றெடுக்கச் செய்தது. தவத்திரு தனிநாயக அடிகள், டாக்டர் அ. சிதம்பரநாதன், எம்.கே. சண்முகம், முகம்மது ஹுசேன் நயினார், முத்தமிழ்க்காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம், அப்துல் கபூர், வித்வான் விசு. திருநாவுக்கரசு, டி.கே. நாகம் மையார், திருமதி. ரத்னாவதிஜான், கே. கோவிந்தராஜுலு, ரம்போலா மாஸ்கரனேஸ், ந.சஞ்சீவி, மெ.சுந்தரம், சாலை இளந்திரையன், கனகசவுந்தரி முதலியோர் தமிழர் திருநாள் சொற்பொழிவாற்றிய பெருமக்கள் ஆவர். 1955 முதல் 1961 ஆம் ஆண்டுவரை · ஏறத்தாழ ஏழாண்டுகளில் இவண் வந்த பேராசிரியர்கள் தமிழர் திருநாளின் நோக்கிற்கிணங்கப் பல சமயங்களைச் சார்ந்தவர்கள்; இவர்கள் மொழி என்னும் ஒரே சிந்தனையால் ·ஒன்றிய சிந்தனையால் மக்களை ஒன்றுபடுத்தினர்.

தமிழர் திருநாள் தொடர்பாகப் படைப்பிலக்கியப் போட்டிகளை நடாத்தி வெற்றி பெற்றோருக்கு ஆக்கமும் ஊக்கமும் நல்கினார் தமிழ் முரசில் தமிழர்திருநாள் கொண்டாட்டங்களைப் பற்றிய செய்திகளும், உணர்ச்சியூட்டும் தலையங்கங்களும், கண்ணையும் கருத்தையும் கவரும் படங்களும் வெளிவந்து மக்களிடையே பேரார்வத்தைப் பிறங்கச் செய்தது.

தமிழர் திருநாள் 1952 ஆம் ஆண்டுமுதல் கொண் டாடப்பட்டு வந்தது. இதன் நோக்கத்தைத் தமிழவேள் கீழ்க்கண்டவாறு விளக்குகிறார்.

> "தமிழர் திருநாளில் தமிழர் அனைவரும் ஒன்று கூடி
> நிற்பதால் ஒற்றுமை வளர, பொது முன்னேற்றம்
> தழைக்க வழி துலங்குகிறது.
> நல்ல முடிவாய் நலமுடன் வாழவேண்டும்
> என்ற உறுதி புலப்படுகிறது. வாழ்க்கையில்
> பல துறைகளில் பிரிந்து வாழும் தமிழர்கள்
> ஒன்றித்து ஒரு மனமாய்ச் செயலாற்றத்
> துணிவு எற்படுகிறது" 10

இவ்விளக்கத்தினால் தமிழர்களை ஒன்றுபடுத்தத் தமிழ்க்கலையே வழி எனத் துணிந்த தமிழவேளின் கலையுள்ளம் புலப்படுகிறது. இதனை முத்தமிழ் விழாவாகத்தான் கொண்டாடினார் கோ. சா. இயல், இசை, நாடகம் என முத்தமிழ் விரவிய கலைவிழாவாய் இஃது இலங்கிற்று. ஒவ்வோர் ஆண்டும் தமிழர் திருநாள் கொண்டாடப்பட்டவேளையில் நினைவு மலர்களும் வெளியிடப் பட்டன. இந்நினைவு மலர்களில் நிறைந்துள்ள படைப்புகள் இளைஞர்களின் இலக்கிய ஆர்வத்தை எதிரொலிக்கின்றன. ஆண்டுதோறும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட இளைஞர்கள் பங்கேற்றனர் எனின் ஆர்வப்பெருக்கை எவ்வாறியம்புவது?

மலையகத் தமிழ் இலக்கிய உலகில் பூவையரும் பொற்புடன் பணிசெய்ய வாய்ப்பு நல்கியது தமிழர் திருநாளே! சாதம் படைத்திடும் கரங்களுக்குச் சாத்திரம் படைக்கவும் துணிவுண்டு எனச் சாற்றுவது தமிழர் திருநாளே! இலக்கியத் துறையில் நாவல், சிறுகதை, நாடகம் முதலிய துறைகளில் மகளிர் பணியாற்றினர்; ஆயினும் கவிதைத்துறையில் மகளிரின் பணி மிகவும் குறை வானதே! அத்தி பூத்தாற்போல, ஒரோவழி கவிதைத் துறையில் நாட்டம் காட்டிய வனிதை ஆவார். ஐ. மேரி என்னும் இயற்பெயர் கொண்ட உஷாநாயர். மரபுக்கவிதைத் துறையில் ஈடுபட்ட இம்மங்கை ஒருவரே மலேசியப் பெண் கவிஞர். மலேசியாவில் தமிழர் திருநாள் பெண் படைப்பிலக்கியவாதிளையும் உருவாக்கியது எனல் பொருத்தமன்றோ?

முத்தமிழ் மூலம், மூண்டிருந்த ஒற்றுமையின்மையைக் களைந்தவர் முத்தமிழ் வித்தகராம் கோ.சா. இத்திருநாள் கலைவிழாவாக நடந்த கவின் காட்சியைக் கவிஞர் அமலதாசன்,

“சித்திரங்கள் நடைபயில சிற்பங்கள் எழில்வடிய
முத்தமிழும் அரங்கேற முகிழ்த்ததுகாண் ஒற்றுமை நாள்
அரசியலில் பொருளியலில் ஆராய்ச்சித் துறைகளிலே
வரலாறு படைத்திடவே வந்ததுகாண் செந்தமிழ்நாள்” 11

எனப் போற்றுகிறார்.

## தமிழ்க்கல்வி தந்த தகைசால் பெரியார்:

எண்ணருந் தொண்டுகளுக்கு இடையிலும் தமிழ்க்கல்வி தழைக்கவேண்டும் என்ற தணியாத வேட்கையுடன் சிங்கை நகரில் இருந்த தமிழ்ப்பள்ளிகளின்பால் தம் கவனத்தைத் திசை திருப்பினார் தமிழவேள். உலகப்போருக்கு முன்பு பல தனியார் தமிழ்ப்பள்ளிகள் தொடக்கநிலையில் தமிழைக் கற்பித்தன. அப்பள்ளிகள் திட்டமிடப்பட்ட பாடங்களையோ, பயிற்சி பெற்ற ஆசிரியர்களையோ

கொண்டிருக்கவில்லை. இந்நிலையில் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி அப்பள்ளிகளுக்கு அரசாங்க உதவி கிடைக்கச் செய்தார் தமிழவேள். பிரிவினையை விரும்பாத, பேரருள் உள்ளம் கொண்ட கோ.சா சிங்கையில் இயங்கிவந்த தமிழ்ப்பள்ளிகள் அனைத்தையும் ஒன்றிணைத்துத் 'தமிழ்க் கல்விக்கழகத்தைத்' தோற்றுவித்தார். எல்லாத் தமிழ்ப் பள்ளிகளின் நிர்வாகமும் இக்கழகத்திடமே இருந்தது. இன்று ஆங்கிலப்பள்ளிகளிலும் தமிழ் கற்பிக்கப்படுவதற்குத் தமிழவேளின் தன்னலமில்லாப்பணியே காரணமாகும்.

உமறுப்புலவர் தமிழ் ப்பள்ளி இன்று வளுவாக நிலை பெற்றிருக்கத் தமிழவேளே காரணமாவார். இப்பள்ளிக்கு நிதிப்பற் றாக்குறை ஏற்பட்டபோது தமிழ் முரசில் வெளிவந்த வேண்டு கோள் தமிழவேள் தமிழ்க்கல்வியின்பால் கொண்டிருந்த அக்கறையையே புலப்படுத்துகிறது.

> "சிறந்த தொடக்கநிலைத் தமிழ்ப்பள்ளிக்கூடங்கள்,
> உயர்நிலைத்தமிழ்ப்பள்ளிக்கூடங்கள் பல ஏற்பட
> வேண்டுமென்ற ஆசைகொண்டுள்ள அன்பர்கள் எல்லாரும்
> இந்த முதல்நிலைத் தமிழ்ப்பள்ளிக்கூடத்திற்கான
> மொத்தச் செலவில் மூன்றில் ஒரு பங்கிற்கும்
> குறைவான தொகையைக் கொடுத்துதவவில்லை
> என்றால் தமிழ்க்கல்விக்குப் பேராதரவு தந்துவரும் அரசும்
> மற்றவர்களும் தமிழர்களின் ஆசைகளைப்
> பற்றியும், தமிழ்வளர்ப்புப் பேச்சுகளைப் பற்றியும் என்ன
> நினைப்பார்கள்? இன்னும் கட்டப்பட வேண்டியதாக
> இருக்கும் தமிழ்ப்பள்ளிக்கூடங்களின் நிலை என்னாவது
> என்பதைத் தமிழ்மக்கள் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும்." 12

இவ்வேண்டுகோளில் தமிழர்க்கு இருக்கவேண்டிய அக்கறையைச் சுட்டிக்காட்டியுள்ள திறம் போற்றற்குரியது. தம்மினத்திற்கு உதவும் தாராள மனமில்லாத் தமிழர்க்கு ஏன் வீண்பேச்சு? தமிழர்கள் செயல்வீரர்களல்லர்; வாய்ச்சொல்லில்தாம் வீரர்கள் என மற்றவர் நினைத்தால் தமிழின மாண்பு என்னாவது? எனச் சிந்திக்கததூண்டி யுள்ளார் கோ.சா. இஃது அன்னாரின் மதிநுட்பத்தையே காட்டுகிறது.

> " இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
> அதனை அவன்கண் விடல்" 13

என வள்ளுவர் வழிநின்ற தமிழவேளின் செயல்திறனையே இப்பகுதி விளக்குகிறது. தமிழ்ப்பள்ளியின் நிதிப்பற்றாக் குறையைத் தீர்க்க

வேண்டியது தமிழர்களின் பொறுப்பே என்பதனைச் சுட்டிக்காட்டி, அவர்களைப் பொறுப்புள்ளவராயும் செயல்பட வைத்தார் தமிழவேள். ஒரே நாளில் இருபதாயிர வெள்ளி மதிப்புடைய 500 உண்டியல்கள் திரட்டப்பட்டன.

**கலைமகள் தொழிற்பள்ளி :**

உமறுப்புலவர் தமிழ்ப்பள்ளியைப் போலவே இப்பள்ளிக்கும் நிதிப்பற்றாக்குறை ஏற்பட்டது. ஒரே நாளில் முப்பதாயிரம் வெள்ளியைத் தொண்டர்களின் உதவியுடன் திரட்டினார் தமிழவேள். இதைப் போன்றே செம்பவாங் தமிழ்ப்பள்ளி நலனுக்காகவும் அரிய முயற்சிகளை மேற்கொண்டார். இதனைப் பாவலர் மு. தங்கராசன்,

" செம்பவாங்கில் மற்றுமோர் சிறந்தஉயர் பள்ளி
செம்மையுடன் எழுப்புதற்குச் சீர்சான்ற வாறு
செம்பவாங்கில் நிலவும்செந் தமிழர் சங்கத்தார்
சிங்கப்பூர் தழுவியதோர் குழுவொன்றும் ஆங்கே
அம்பலமாய்த் தகமுறவே அமைந்ததுணைக் குழுவின்
அணித்தலைமைப் பொறுப்பேற்ற ஆக்கத்தின் விளைவாய்
செம்புலந்தான் ஐந்தேக்கர் சீரசையாச் சொத்தாய்ச்
செம்மாந்தே உரித்தாக்கிச் சிரித்திட்டாய் நன்றி" 14

என்று நினைவுகூர்வர்.

**பல்கலைக்கழகத்தில் தமிழ்:**

மலாயாப் பல்கலைக்கழகத்தில் தமிழுக்கு நிலையான இடத்தை ஏற்படுத்திக் கொடுத்தவர் தமிழவேள் கோ.சா. சென்னையிலிருந்து வந்த நீலகண்ட சாத்திரியார் மலாயாப் பல்கலைக்கழகத்தில் வழக் கிழந்துபோன வடமொழிக்கே முதன்மையளிக்க வேண்டும் எனப் பரிந்துரைத்தார். தமிழவேள் தமிழுக்கே முதலிடம் தரவேண்டும்; இங்கிருப்பவர்கள் தமிழர்களே; அவர்களின் தாய்மொழி தமிழே தவிர வடமொழியன்று என நியாயத்தை எடுத்துக்காட்டித் தமிழ்ப் பகுதிக்கென்று நிதியும் சேர்த்துக்கொடுத்தார்.

"தமிழ்எங்கள் உயிரென்பதாலே - வெல்லும்
தரமுண்டு தமிழர்க்கு இப்புவிமேலே" 14அ

"தமிழுக்கும் அமுதென்று பேர் - அந்தத்
தமிழ் எங்கள் உயிருக்கு நேர்"15

எனப் பாவேந்தரின் வழிநின்று 'தமிழ் எங்கள் உயிர்' நிதி திரட்டினார். தமிழ்முரசின் வழி, தமிழ்மக்களை ஆளுக்கொரு வெள்ளி கொடுத்து உதவுமாறு வேண்டி, உயிர்காக்கும் பணியில் மொழிகாக்கும் பணியில் முனைப்போடு செயல்பட்டார். ஓர் இலக்கம் வெள்ளி திரட்டுவது சாதாரணமான செயலன்று. வியக்கத்தக்க இச்சாதனையில் தமிழவேள் கோ.சாவுடன் தன்மானமிக்க தமிழர்களும் இணைந்து செயல்பட்டனர். பல்கலைக்கழகத்தில் இந்தியப்பகுதியை நிறுவி, அதில் தமிழை நிலைநிறுத்திய அருமுயற்றி காரணமாகவே தவத்திரு குன்றக்குடி அடிகளார் 'தமிழவேள்' என்னும் பட்டமளித்துக் கோ. சாவைச் சிறப்பித்தார்.

இந்தியப் பகுதி அமைந்ததும் நூலகம் அமைக்கத் தமிழவேள் முழுமூச்சுடன் செயல்பட்டார். இந்திய அரசாங்கம் நன்கொடையாக ஆயிரம் நூல்களை அனுப்பியது. ஆயின் அன்பளிப்பாக வந்த அனைத்தும் வடமொழிநூல்கள். அவற்றைத் திருப்பி அனுப்பிவிட்டார் தமிழவேள். 'தமிழ் எங்கள் உயிர்' இயக்கம் மூலம் திரட்டப்பட்ட நிதி பல்கலைக்கழகத்தில் நூலகம் அமைக்கப் பாங்குடன் உதவியது.

பல்கலைக்கழகத்தில் மாணவர்கள் இணைந்து பயில்வதற்கும் தமிழவேளே வழிவகுத்துக்கொடுத்தார். பல்கலைக்கழகத்தில் இந்தியப் பகுதியில் சேர்ந்து பயிலும் மாணவர்களுக்கு முழு உதவிச்சம்பளமும் வழங்கினார். கோ. சா. தம் நண்பர்களுடன் இணைந்து வழங்கிய இவ்வுதவிச்சம்பளமே மாணவ சமுதாயம் மத்தியில் வரவேற்பைப் பெற்றது. பல்கலைக்கழகத்தில் தமிழ்ப்பகுதியை நிறுவி, அதில் படிக்க மாணவர்களையும் சேர்த்து, அவர்களுக்கு உதவிச்சம்பளமும் அளித்துத் தமிழர் நலனில் அக்கறை காட்டினார் தமிழவேள். வறுமையில் வாடிய தமிழர்க்குச் செழிப்பு உண்டாக இந்தியப்பகுதியில் பயின்ற கல்வியே காரணமாயிற்று.

பல்கலைக்கழகத்தில் தமிழை நிறுவத் தமிழவேள் பட்ட இன்னல்கள் ஏராளம்! பல்கலைக்கழகத்தில் தமிழ் இருந்ததனாலன்றோ மலேசிய நாட்டில் தமிழ்க்கல்விக்குத் தக்க இடம் அமைந்தது! அடிமட்டத்தில் தமிழை வாழவைக்க அதாவது தொடக்கப்பள்ளி, இடைநிலைப் பள்ளிகளில் தமிழை வாழவைக்கப் பல்கலைக்கழக - உயர்மட்டத் தமிழ்க்கல்வி ஆதாரமானது. உயர்மட்டத்தில் தமிழ் அழிந்தால் அடிமட்டத்தில் தமிழும் அழியுமன்றோ? ஆகவே தமிழ்க்கல்விக்குச் சாவுமணி அடிக்காமல் காத்தது தமிழவேளின் தமிழ்நெஞ்சமன்றோ! உயிர்மூச்சாய்த் தமிழைக் கருதிய தமிழவேள்

பல்கலைக்கழகத்தில் தமிழை நிறுவத் தாம் பட்ட இன்னல்களைக் கீழ்க்கண்ட பகுதியில் விவரிக்கிறார்.

"பல்கலைக்கழகத்தில் தமிழ் எளிதில்
நுழைந்துவிடவில்லை
தமிழை அங்கு நுழைப்பதற்கு ஒரு குழு அமைத்து
வேலைசெய்தோம் தமிழ் அதிலே இருக்கவேண்டும்
என்ற முயற்சிகள் நடக்கும்போது இந்தியைத்
திணித்துவிட வெளிப்படையான முயற்சிகள்
செய்தனர். இந்தியை நுழைக்க இந்திய வாணிப
சங்கத்தை தூண்டிவிட்டனர். பிறகு உருது வேண்டும்
என்ற சிக்கல் எழுந்தது. அடுத்து சமஸ்கிருதம்தான்
இருக்கவேண்டும் என்ற முயற்சி எடுக்கப்பட்டது
சிலரால். இதற்கு நீலகண்ட சாஸ்திரி பெருமுயற்சி
எடுத்தார். ஆனால் அது வெற்றிபெறவில்லை.
தமிழை அங்கு பரப்புவதற்குப் பல சிரமங்கள்
எடுத்துக்கொண்டேன்" 16

தமிழவேள் பொதுத்தொண்டில் தன்னலமில்லாது ஈடுபட்டவர். ஆதலின் 'அவரைத் தமிழ் முனிவர்' என்றழைப்பர். பொதுத்தொண்டு துன்பங்கள் மிக்கதுதான்; அதில் ஈடுபட்டோருக்கு எந்நேரமும் இன்னல்தான். இருப்பினும் தமிழவேள் தாம் அடைந்த துன்பங்களைச் சுட்டிக்காட்ட வேண்டிய தேவை என்ன? இவன் நாம் சிந்திக்கவேண்டும். இதனை விளம்பரத்திற்காகக் கூறவில்லை தமிழவேள். தமிழவேள் அடைந்த இன்னல்கள் நமக்கு- நம் தமிழ் சமுதாயத்திற்கு எச்சரிக் கைமணியாக ஒலிக்கவேண்டும். ஒரு செயலைத் தொடங்கி நிறை வேற்றுவது அத்துணை எளிதன்று. ஆயின் அச்செயலை அழிப்பது மிக எளிது என்னும் உண்மையை வலியுறுத்தவே சிரமங்களைச் சுட்டிக்காட்டினார் கோ.சா. அவருடைய அனுபவத்தில்.

"தண்ணீர் விட்டோ வளர்த்தோம் சர்வேசா! இப்பயிரைக்
கண்ணீரால் காத்தோம் கருகத் திருவுளமோ" 17

என்னும் ஏக்கமே எதிரொலிக்கிறது! பல்கலைக்கழகத்தில் தமிழவேள் விதைத்த தமிழ்ப்பயிர் செழிப்புடன் வளரவேண்டுமே தவிர நோய் கொண்டு, கருகி அழியக்கூடாது என்னும் விழைவு குறிப்புப் பொருளாகச் 'சிரமங்கள்' என்னும் சொல் வழியாக உணர்த்தப் பட்டுள்ளது.

822

தமிழ் சோறு போடுமா? தமிழைக்கற்று வாழவும் முடியுமா? என்று புலம்பியவர்களைக் கண்டு தமிழவேள் மனம் புழுங்கினார். அவ்வேதனையில் வெளிப்படும் அன்னார் சொற்களை இன்றைய தமிழ்ச்சமுதாயம் செவிமடுக்கவேண்டும்; சிந்தையில் பதிக்க வேண்டும். தமிழ்ச் சமுதாயத்தினரின் மொழியுணர்வின்மைக்குச் சாட்டையடி கொடுக்கிறார். கோ. சா.

"மலாயாவில் தமிழை வாழவைக்க உதவிச்
சம்பளம் வழங்கி மாணவர்களைப் படிக்க-
வைக்கிறோம். பிறமொழியைப் படிக்க நம்மவரிடம்
பணம் இருக்கிறது; ஆனால் தமிழைப் படிக்கப்
பணம் இல்லை. இந்த நிலையில் நாம் இருக்கக்
கூடாது. தமிழ் வாழுமா? என்று மட்டும்
இருந்துவிட்டால் அது வாழுமா? தமிழைப் படிக்க
வேண்டும். தமிழன் என்று சொல்லிக்கொள்ளவாவது
அதனைப் படிக்க வேண்டும். அதைப்படிக்க
நம்மவர்களுக்கு
உணர்ச்சி ஊட்டவேண்டும்" 18

கோ.சா. வின் இவ்வறிவுரை பொருளார்ந்தது. மொழி ஓர் இனத்தின் அடையாளம் என்பதை மக்களுக்கு உணர்த்தியுள்ளார் கோ.சா. ஓர் இனத்தை அழிக்கவேண்டுமாயின் முதலில் அவ்வினத்தின் மொழியை அழிக்கவேண்டும் என்பது பழமொழி. மற்றவர்கள் தமிழ் மொழியைஅழிப்பதற்கு முன் தமிழர்களே அந்த இழிசெயலைச் செய்துகொண்டு வருகின்றனர். "நுணலும் தன் வாயால் கெடுவது" போலத் தமக்கு இழிநிலையைத் தாங்களே தேடிக்கொள்கிறார்கள் என்பதைத் தமிழவேள் மேற்கொண்ட பகுதியில் இடித்துரைத்துள்ளார். ஆகவே தமிழினம் எழுச்சி பெறத் தமிழைக் கற்க வேண்டும் என்னும் உண்மையே இப்பகுதியில் எதிரொலிக்கிறது.

மலாயாப் பல்கலைக்கழகத்தில் இந்தியமொழிப்பகுதி அமைப் பதிலே கோ.சா காட்டிய பேரார்வத்தை- பெருஞ்சேவையை முன்னாள் மலாயாப் பல்கலைக்கழகப் பதிவாளர் திரு. பூயோ யோக் என்பார் பாராட்டுவது இவண் நினையத்தக்கது.

"மலையகத்தில் தமிழ்க்கலையைப் பற்றிய
அக்கறை மிக்கார் அனைவரும் உயர் திரு.
கோ. சாரங்கபாணி ஆரம்ப-உயர்தரத்

தமிழ்க்கல்வியின் விளைவுகளின் உயர்வுக்காக மட்டுமின்றி மேலும் மிக உயர்தரநிலைக்கும், தமிழ் ஏறி வளரச் செய்துள்ள சிறப்பான பணிகளை நெஞ்சங்களிலே நிலைத்திருக்கச் செய்வர். மலை நாட்டுத் தமிழ்ப் பொதுமக்கள் எல்லாருமே திரு. கோ. சாரங்கபாணி தீவிரம் மிகுந்த-பழுத்த தமிழ்ப் பற்றுதலுடைய பெரியார் என்பதனை அறிகின்றனர். மலாயாப் பல்கலைக் கழகத்தின் இந்திய மொழிப் பகுதி அமைப்பதிலை திரு. சாரங்கபாணி அக்கறை கொண்டு நலமிக்க நல்லாலோசனைகள் நல்கினார். இந்தியப்பகுதி நூல்நிலையத்திற்கு ஏராளமான நூல்களை நன்கொடையாக வழங்கித் தேவை உள்ள மாணவர்களுக்கு உதவிச் சம்பளப் பொருட்கொடை ஒன்றையும் ஏற்படுத்திப் பேருதவி புரிந்தார்" 19

*சுருங்கக் கூறின் தமிழ்ப்பணிக்காகத் தம்மையே அர்ப்பணித்த 'சாரங்கன் என்னும் சான்றோனை' - தமிழவேளை மூதறிஞர் செம்மல் வ.சுப.மா அவர்கள் போற்றுவதே சாலப்பொருத்தம்!*

"தமிழன்னையைக் காப்பதற்கென்றே தோன்றியவர் தமிழவேள். "தமிழ்முரசு" கொட்டிய சங்கத் தளபதி; மலைநாட்டுத் தமிழ்ப்பெருந் தலைவர். பல்கலைக்கழத்தில் தமிழன்னையின் உரிமையைக் காத்த ஆண்டகை. தமிழ்ப் புலவர்களை வரவேற்றுப் பெருஞ்சிறப்புச் செய்யும் தமிழ்வேந்தர். தமிழுக்குத் தொடர்பான அனைத்திற்கும் உரமூட்டும் தமிழ் உழவர்" 20

## சமுதாயத்தொண்டும் தமிழவேளும்:

*பொதுத்தொண்டு செய்யும் எண்ணம் பலருக்கும் எழுவ தில்லை. அவ்வாறே எண்ணம் உதயமாயினும் சுயநலந் துறந்து -புகழ் துறந்து, பதவி விழையாது தொண்டுசெய்வோர் வெகுசிலரே. தொண்டுள்ளம் எப்படிப்பட்டது என்பதைப் பாவேந்தர்,*

"தூயஉள்ளம் அன்புள்ளம் பெரியஉள்ளம்
தொல்லுலக மக்களெல்லாம் ஒன்றே என்னும்

தாயுள்ளம் தனிலன்றோ இன்பம் ஆங்கே
சண்டையில்லை தன்னலந்தான் தீர்ந்ததாலே" 21

எனப் பாடுவர். இத்தகு பெருமனம் படைத்தவரே தமிழ்வேள் கோ.சா.

தமிழ்ச்சமுதாயத்தின் சாபக்கேடாகிய சாதியை ஒழிக்கக் கலப்புத் திருமணங்களைச் செய்வித்தவர். 'ஊருக்கு உபதேசம் உள்ளுக்குள் வனவாசம்' செய்யுமாறு உபதேசித்தாரல்லர்; தாமே முன்னுதாரண மாகிக் கலப்புத் திருமணம் செய்துகொணடார். திருமணத்தில் சில மூடப் பழக்கங்களைச் சடங்குகள் என்ற போர்வையில் நடத்துவது கோ.சா விற்குச் சற்றும் உடன்பாடில் லாத கருத்தாகும். தமிழ்முறையில் திருமணம் நடத்தப் படவேணடும் என்ற விழைவும் கோ. சா விற்கு உண்டு. கோ.சா. சீர்திருத்தத் திருமணத்திற்குக் கொடுத்த ஆதரவைப் பாவலர் பார்வதி பூபாலன் கவிதையில் வடித்துள்ளார்.

"உருவான இருமனங்கள் ஒருமனமாய் ஆக
ஒண்டமிழர் கண்டமனம் உணர்ந்திடுக மண்ணில்
பொருளாக நினையாது பொறபில்லாச் சடங்கைப்
புகழ்மேவும் சிங்கையினில் புரட்சியினைச் செய்வோம்
அருளாளும் உலகினிலே அன்புவழி மேலென்று
அறைந்திவணே சீர்திருத்த அன்புமணம் கண்டான்
இருளான அறியாமை இழிபேயைப் போக்கி
இருநிலத்தில் பெரும்புகழை இனிதாகப் பெற்றான்" 22

பாட்டாளி வர்க்கத்தினரின் பாதுகாவலராக விளங்கியவர் கோ.சா. தொழிலாளரின் சிக்கல்களுக்குத் தனிப்பட்ட முறையிலும், தம் பத்திரிகை மூலமாகவும் வாதாடியவர். தமிழ்ச்சமுதாயம் நாடோடிச் சமுதாயமாக மாறிவிடக்கூடாது என்ற நல்லெண்ணத்தில், தமிழர்கள் எந்தெந்த நாடுகளில் வாழ்கிறார்களோ அந்தந்த நாட்டுக் குடிமக்களாகி அந்தந்த அரசாங்கங்களுக்கு ஒத்துழைப்புத் தரவேண்டுமென வேண்டுகோள் விடுத்தார். மலாயாவில் பலர் குடியுரிமைபெற வழியறியாது குடியுரிமைபெற மனமில்லாது; ஏதோ உழைத்துவிட்டு; அவ்வுழைப்பினால் வந்த பொருளை எல்லாம் உடைத்து ஊருக்கு (இந்தியாவுக்கு) அனுப்பி; ஊரும், உறவும், தாமும் வாழ இயலாமலே வீணாகிப்போயினர். இதனால் ஏற்படும் விளைவுகளைத் தொலை நோக்குடன் உணர்ந்தாரிலர். ஆகவே குடியுரிமை பெறவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார் தமிழவேள். 1957 ஆம் ஆண்டில் குடிமக்களாகும் வாய்ப்பை அரசு வழங்கியது. தமிழர் சீர்திருத்தச் சங்கக்

கட்டடத்தில் குடியுரிமை பெறுவதற்கான வாய்ப்பைத் தக்கவாறு பயன்படுத்திக்கொள்ள ஒரு நிலையத்தை அமைத்துத் தக்க வழிகாட்டினார் தமிழவேள்.

பிரிவினைக்கொள்கை தமிழர்க்குமிகவும் பிடித்தமான கொள்கை. ஆதலினால் இனம் வாரியாக, மதவாரியாக, சாதி வாரியாகப் பல தலைமுறைகளாகச் சிதறிக்கிடந்தது தமிழ்ச் சமுதாயம். சாதிக்கொரு சங்கம் அமைத்து நீதி பேசும் வழக்கும் பெருவழக்காயிற்று. இங்ஙனம் சிங்கையில் சிதறிக் கிடந்த தமிழர் சங்கங்கள் முப்பத்திரண்டு. இச்சங்கங்கள் அனைத்துதையும் ஒன்றிணைத்துத் தமிழர் பிரதிநிதித்துவ சபையை அமைத்தார். சாதிப்பற்றும், சமயப்பற்றும் பேசித்திரிந்த தமிழ்ச்சமுதாயத்திற்கு நீதிப்பற்றும், நியாயப்பற்றும், நேர்மைப்பற்றும் உருவாக இத்தமிழர் பிரதிநிதித்துவசபையின் தலைவராயிருந்து சீரிய பணியாற்றினார் தமிழவேள்!

**முடிவுரை:**

மலையக, சிங்கைத் தமிழிலக்கிய வரலாற்றில் நந்தா விளக்காய்த் திகழ்ந்து தமிழுரிமை பேணிய சொல்லேருழவர் தமிழவேள். தமிழரின் தாய்மொழிவாழ்வதற்கும், வளர்வதற்கும் வகைசெய்த தோன்றல் தமிழவேள். தமிழ்ச்சமுதாய எழுச்சிக்கும் மலர்ச்சிக்கும் வித்திட்டவர். மொழியும் இனமும் தமிழவேளின் இரு கண்கள் எனச் சாற்றுதல் தவறில்லையல்லவா?

"மலைநாடு கண்ட தமிழ்முனிவர்"
என முருகு குறிப்பிட்டது முற்றிலும்
பொருந்துமல்லவா?

## மேற்கோள் விளக்கம்


1. எஸ். ஏ. முத்தையா, "- தமிழவேள் கோ. சாரங்கபாணியும் சிங்கப்பூர் சமூகமும்" சிங்கப்பூர் தேசியப் பல்கலைக்கழகத் தமிழ்ப்பேரவை வெளியீடு, ப-56
2. முல்லைவாணன், "தமிழவேள் திரு அம்மானை", கவிக்குலம் போற்றும் தமிழவேள், ப-50
3. முருகதாசன், 'வரலாற்றுப் பேழையவர்", மேலது, ப-60
4. சிங்கைமுகிலன், "தமிழவேள் செயல் மறந்தார் தமிழ் மறந்தாரே", மேலது,ப - 15

5. முல்லைவாணன், "தமிழவேள் திரு அம்மானை, மேலது, ப-55
6. பார்வதி பூபாலன், "ஏந்தலாய்ப் பிறவாயோ", மேலது, ப - 79
7. மா. இராமையா, மலேசியத் தமிழ் இலக்கிய வரலாறு, ப-34
8. சா. ஆ. அன்பானந்தன், நயனங்கள், ப-45
9. பாரதிதாசன் , பாரதிதாசன் கவிதைகள் - முதல்தொகுதி, ப 98
10. மா. இராமையா, மலேசியத் தமிழ் இலக்கிய வரளாறு, ப -51
11. அமலதாசன், "தமிழவேள் ஒரு வரலாற்றின் திருப்புமுனை," கவிக்குலம் போற்றும் தமிழவேள், ப- 47
12. மு. திருவேங்கடம், மலையக சிங்கைத்தமிழுலகில் வரலாற்று நாயகர் கோ.சா., ப-20 இல் மேற்கோளாகக் காட்டப்பட்டுள்ளது.
13. திருவள்ளுவர், திருக்குறள், அதிகாரம் 52, குறள் - 7.
14. மு. தங்கராசன் "எதைநினைந்து பாடிடுவேன்", கவிக்குலம் போற்றும் தமிழவேள், ப-140
15. பாரதிதாசன், பாரதிதாசன் கவிதைகள்-முதல்தொகுதி, ப- 94
16. மு. திருவேங்கடம், மலையக சிங்கைத் தமிழுலகில் வரலாற்று நாயகர் கோ. சாரங்கபாணி, ப - 28
17. பாரதியார், பாரதியார் கவிதைகள், ப-46
18. மு. திருவேங்கடம், மலையக - சிங்கைத் தமிழுலகில் வரலாற்று நாயகர் கோ.சாரங்கபாணி, ப - 28
19. மேலது, ப -45
20. மேலது, ப- 45
21. பாரதிதாசன், பாரதிதாசன் கவிதைகள் - முதல்தொகுதி, ப - 130
22. பார்வதி பூபாலன், "ஏந்தலாய்ப் பிறவாயோ," கவிக்குலம் போற்றும் தமிழவேள், ப - 78

## 2. அளப்பரும் பற்றுடை அன்பானந்தன்

'கலைப்பண்பும் உயர்பண்பும் உடையாரே ஏடெழுதும் கணக்காயர்' எனப் புரட்சிக்கவி பாரதிதாசன் பாடினார். இவ்விலக்கணத்திற்குத் தக்கதோர் இலக்கியமாய் வாழ்ந்தவர் சா. ஆ. அன்பானந்தன். மலையகத் தமிழர்கள் பாலும், மலையகத் தமிழ் இலக்கியத்தின்பாலும் அளவிறந்த பற்றுடையவர் அன்பானந்தன். 'சிறியபிழை ஏடெழுதும் கணக்காயன் செய் திடினும் திருநாட்டார்பால் மன்னிவிடும் ஆதலினால் ஏடெழுதும் வாழ்க்கையிலே விழிப்பு வேண்டும்' எனச் சமுதாயநலம் நாடி விழிப்புணர்வோடு எழுதிய எழுத்தாளர் சா. ஆ. அன்பானந்தன். இவருடைய எழுத்து, சொல், செயல் அனைத்துமே சமுதாயவிழிப் புணர்வை ஏற்படுத்தின. சமுதாய அன்பு மீதூரப்பெற்ற இவர் 'சமூகக்கலைமாமணி' என்னுஞ் சிறப்புப் பெற்றவராவார்.

### அறிமுகம் :

சா.ஆ. அன்பானந்தன் என்பது புனைபெயராகும். சுப்பிரமணியன் என்பதே பெற்றோரிட்ட பெயராகும் இவர் சிலாங்கூர் மாநிலத்தில் சுங்கை காப்பி தோட்டத்தில், சாமிநாதன்-ஆச்சி இணையருக்கு 1939 ஆம் ஆண்டில் பிப்ரவரித் திங்கள் 5 ஆம் நாளன்று பிறந்தார். ஐந்தாம் வகுப்பு வரை தமிழைப் படித்திருப்பினும் இவர் கருவிலே திருவுடையராய்த் திகழ்ந்தார். இவர் பேச்சிலும் எழுத்திலும் மட்டும் சீர்திருத்தத்தைக் கையாளாது அதனை நடைமுறைப் படுத்தியும் காட்டியவர். 1958 ஆம் ஆண்டு செந்தமிழ்ச்செல்வர் சீ. வி. குப்புசாமி அவர்களின் தலைமையில் ரெ.இலட்சுமி என்ற இலட்சியப் பெண்மணியை மணந்துகொண்டார்.

### சமூக இயக்கங்களில் பங்கு :

1953 ஆம் ஆண்டு தொடங்கிச் சமூகசேவை புரிந்தார் அன்பானந்தன். தமிழவேள் கோ. சாரங்கபாணி தோற்றுவித்த மாணவர் மணிமன்றத்தில் உறுப்பிணர்ராகத் தன் சமூக சேவையைத் தொடங்கிய இவர் அதன் தலைவராக உயர்ந்தார். குறளியக்கம் (கோலாலும்பூர்), செந்தூல் இந்திய வாலிபர் சங்கம், அகிலமலாயா தமிழர் சங்கம் ஆகிய இயக்கங்களில் பல பணிகளை ஏற்றுச் செவ்வனே பங்காற்றினார் சா. ஆ. அன்பானந்தன். தமிழர் திருநாள் கொண்டாட்டக்குழு, தலைவர் பலரின் வரவேற்பு ஏற்பாட்டுக்குழு ஆகியவற்றில் இணைந்து செயல்பட்டுள்ளார். தமிழ் எழுத்தாளர் சங்கம், முத்தமிழ்ப் படிப்பகம் ஆகியவற்றிலும் உறுப்பியம் பெற்றுச் சேவை யாற்றினார். புகழுக்கும் பதவிக்கும் பொதுத்தொண்டை - சமூகத்

தொண்டை ஒரு கருவியாகக் கொள்வோர் பலரை இன்று நாம் காண்கின்றோம். ஆயின் சா. ஆ. அன்பானந்தன் தாயுள்ளம் கொண்டவராகச் சேவை மனப்பாங்கின் அடிப்படையில் சேவையாற்றினார். இவரால் பணியும், பணியால் இவரும் சிறப்படைந்த காரணத்தினாலன்றோ பேரரசர் அவர்களின் பி. பி. என் (PPN) என்னும் பட்டம் கிட்டிற்று?

1972இல் எம்.எஸ்.எம். (M.S.M.- Mutiara Seri Malaysia) என்ற பட்டமும், 1977இல் பேரரசர் அவர்களின் விருதும் கிடைத்தது பெருமைக்குரிய செய்தியாகும். இவ்விருதுபெற்ற அன்பானந்தனை 15.7.1979 இல் வெளிவந்த 'பெரித்தாமிங்கு' (Berita Minggu) என்னும் நாளிதழ் சிறப்பாகப் பாராட்டுகின்றது.

> " என் பொதுவாழ்க்கை, இலக்கிய வாழ்க்கை, கலை
> வாழ்க்கை எல்லாவற்றுக்கும் அடிப்படையாக
> அமைந்தவை பேரறிஞர் அண்ணா, கலைஞர்
> மு.கருணாநிதியின் படைப்புகளும் அவர்கள்
> மீது கொண்ட ஈடுபாடுமாகும்" 1

என அன்பானந்தன் தம் பொதுப்பணிக்கான உந்துசக்தியை இனங்காட்டுகிறார்.

**கலையுலக வாழ்க்கை:**

நாடக எழுத்தாளராக, நாடகக்கலைஞராக நகைச்சுவைக் கலைஞராகத் திரு. சா. ஆ. அன்பானந்தனை மலேசியத் தமிழர்கள் நன்கறிவர். நாடகத்தில் நடிப்பதனை ஏதோ முறையற்ற செயலைச் செய்வது போலக் கருதி அறியாமையில் உழன்ற தோட்டப்புற மக்கள் மத்தியில் சா.ஆ. அன்பானந்தனின் தந்தை நாடகங்களில் நடித்தார். 1948 ஆம் ஆண்டு தீபாவளிக் கொண்டாட்டத்திற்கென சுங்கைகாப்பி தோட்டத்தில் பவளக் கொடி நாடகத்தை நடிக்க ஏற்பாடு செய்திருந்தார் அத்தோட்டத்தின் சட்டாம்பிள்ளையும் நாடகாசிரியருமான முனியாண்டி. சா.ஆ. அன்பானந்தனை நடிக்க அனுமதிக்கும்படி அவர் தந்தையிடம் நாடகாசிரியர் முனியாண்டி கேட்கத் தந்தையும் அவ்வாறே செய்தார். இவண் மற்றொரு செய்தியும் சிந்திக் கத்தக்கது. பிள்ளைகளின் கலை ஈடுபாட்டிற்கும், கலை வளர்ச்சிக்கும் முட்டுக்கட்டை போடுவது பெரும்பான் மையான பெற்றோரின் வழக்கமாகும். ஆயின் அன்பானந்தனின் தந்தையும், பெரிய தந்தையும் நடிகர்களே ஆதலின் நாடகக் கலையின் மதிப்பையுணர்ந்து அன்பானந்தனை நடிக்க அனுமதித்தனர்.

சிறுவனாகிய அன்பானந்தனின் மனத்தில் விதைக்கப்பட்ட நடிப்புக்கலை நாட்டம் நாளுக்குநாள் பெருகியதே தவிரக் குறைய வில்லை. இதனால் படிப்பில் நாட்டமில்லாதிருந்தது. ஆகவே கலைமகள் நாடகக்குழுவில் சேர்ந்தார் அன்பானந்தன். பின் இரண்டொரு நாட்களில் இக்குழு கலைக்கப்பட்டு செந்தூல் இந்திய வாலிபர் சங்கத் தின் நாடகக்குழுவாக மலர்ந்தது. கலைஞர் கருணாநிதியின் 'ஒரே முத்தம்' நாடகத்தை 'துரோகி' என்ற பெயரில் இக்குழு நடித்தது. இந்நாட கத்தில் அன்பானந்தன் நகைச்சுவைப் பாத்திரம் ஏற்று நடித்தார்.

நடிகராக மலர்ந்த அன்பானந்தன் நாடக எழுத்தாளராயும் உருப்பெற்றார். நாடக ஈடுபாடும் சீர்திருத்த வேட்கையுமே இவரை நாடக எழுத்தாளராக உருவாக்கின. 1956 இல் 'ஆனந்ததிலகம்' என்ற சீர்திருத்த நாடகம் அன்பானந்தனின் கைவண்ணத்தில் மலர்ந்தது. இந்நாடகத்தில் இவர் பெண்வேடம் புனைந்து கதையின் நாயகியாக நடித்தார்.

1955இல் கோலாலும்பூர் தமிழ்க்கலா மன்றத்தினர் மூன்று நாட்களுக்குக் கலைவிழா நடத்தினர். சீன அசெம்பிளி மண்டபத்தில் நடந்த இக்கலைவிழாவின் ஓரங்கமாக நாடகப் போட்டியும் நிகழ்ந்தது. செந்தூல் இந்திய வாலிபர் சங்கத்தின் சார்பில் நடிக்கப்பட்ட 'உடைந்த உள்ளம்' என்னும் நாடகத்தின் வாயிலாக சா.ஆ. அன்பானந்தன் சிறந்த நடிகராகத் (நொண்டி வேலைக்காரன் பாகமேற்று அன்பானந்தன் நடித்தார்) தேர்ந்தெடுக்கப்பட்டுப் பரிசும் பெற்றார்.

நாடகவுலகில் இவர் பெற்ற அனுபவங்களினால் மலேசிய வானொலி மற்றும் கோலாலும்பூர் ரிடீப்யூசனிலும் நடிக்க வாய்ப்புக் கிட்டியது. இவறுக்கு சா.ஆ. அன்பானந்தனை சி.கோன் என்பவர் அறிமுகப்படுத்தினார். நடிகனாக இவர் பணியாற்றினாலும் பல வானொலி நாடகங்களையும், நகைச்சுவைச் சித்திரங்களையும் எழுதியுள்ளார். இவர் எழுதியவற்றுள் (இந்நூலாசிரியருக்குக்) கிடைத்த கையெழுத்துப் படிகளைக் கொண்டு நாடகங்கள் வகைப்படுத்தப் பட்டுள்ளன. இவர் வானொலிக்காக எழுதியநாடகங்களுள் தொடர் நாடகங்கள், இலக்கிய நாடகங்கள், சமூக நாடகங்கள், வரலாற்று நாடகங்கள் எனப் பல வகை உண்டு. இவை இக்கட்டுரையின் இறுதியில் பட்டியலிட்டுத் தரப்பட்டுள்ளன.

பண்பாட்டுக் குழுக்களுக்காக நாடகங்கள் பலவற்றை எழுதியுள் ளார் சா.ஆ. அன்பானந்தன். கோலாலும்பூர் தமிழ் இளைஞர் மணிமன்றத்தினர் நடத்திய கலை மற்றும் இலக்கிய விழாக்களுக்காகச்

'சமுதாயம்', 'இளரத்தம்', 'குடிகெடுத்த குடி' போன்ற நாடகங்களையும், மணிமன்ற மாநாட்டுப் போட்டி களுக்காகச் 'சமர்ப்பணம்', 'ஆண்டவன் பிள்ளைகள்', 'அடலேறு அபிமன்யு', 'தெருவிளக்கு' 'மணியோசை', 'கவரிமான்', 'உயர்வோம்' ஆகிய நாடகங்களையும் எழுதினார். இவற்றுள் 'உயர்வோம்' என்னும் நாடகம் தவிர எஞ்சியவை முதற்பரிசு பெற்றவை என்பதும் இங்கே நாம் நினைவுகூர வேண்டிய செய்தியாம்.

மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கத்துக்காக 'பித்தலாட்டம்' என்ற நாடகத்தையும், கோலாலும்பூர் ம.இ.கா. கிளைக்காக (லொக்யூ சன் பெங்) 'பட்டதாரி' என்ற நாடகத்தையும், வ.உ.சி. விளையாட்டுக் குழுவுக்காக 'சோழன் தொடுத்த போர்' என்ற நாடகத்தையும், சுங்கைவே சுபாங் தமிழ் இளைஞர் மணிமன்றத்திற்காக 'வீரமைந்தன் இந்திரஜித்' என்ற குறு நாடகத்தையும் எழுதினார்.

இவர் எழுதிய பல வானொலி நாடகங்களுள் ஐந்து நாடகங்களைத் தெரிவுசெய்து, 'திருப்பம்' என்னும் குறுநாடகத் தையும் இணைத்துத் தொகுத்துப் பத்துமலை தமிழ் இளைஞர் மணிமன்றத்தினர் திருப்பம் என்னும் நாடகநூலாக வெளியிட்டுள்ளனர். இந்நூலின் வழி சா.ஆ. அன்பானந்தனின் நாடகத் திறமையை - நாடக ஈடுபாட்டை அறியலாம்.

திருப்பம் - ஒரு மதிப்பீடு:

திருப்பம் என்னும் நாடகத்தொகுப்பில் 'திருப்பம்', 'எதுவெற்றி', 'தாமரைப்பூக்கள்', 'வீரமைந்தன் இந்திரஜித்' 'வளர்த்தபாசம்', 'சத்தியப்பேரொளி' ஆகிய ஆறு நாடகங்கள் தொகுக்கப்பட்டுள்ளன.

> "எழுத்தாளன் ஒருவன் தன்னுடைய இலட்சியத்தில்
> முழு வெற்றிபெறவேண்டுமானால் அவன் ஒரு
> சிறந்த நாடகாசிரியன் என்னும் இடத்தைப்
> பெற வேண்டும். நாடகாசிரியனாக ஆகும்போதுதான்
> இவனுடைய கற்பனைகள் கருத்துகளெல்லாம்
> நாட்டுமக்களுக்கு முழுமையாகப் பயன்படுகின்றன" 2

என நாடகாசிரியனின் பணியைப்பற்றிக் கிளப்பர் தி.க. சண்முகம். சா.ஆ. அன்பானந்தன் சிறுகதை, கவிதை, நாவல், நடைச்சித்திரம், கட்டுரை எனப் பல இலக்கிய வடிவங்களைச் சமுதாயநலம் நாடிப் படைத்திருப்பினும் அவரைப் பலர் நாடகாசிரியராயும், நாடகக்கலை ஞராயுமே கண்டனர். இதனால் தி..க.சண்முகம் அவர்கள் மேற்குறிப் பிட்டபடி, சா.ஆ. அன்பானந்தனின் எழுத்துலகப்பயணம் முழுமையும், வெற்றியும் அடைந்தது எனலாம்.

கருப்பொருள்:

நாடகத்தின் உயிராக விளங்குவது கரு. 'கரு' உயிர்களின் தோற்றத்திற்குக் காரணமாக அமைவது போலப் பல கருத்துகளின் தோற்றத்திற்குக் காரணமாக நாடகக்கரு அமைகிறது. ஆகவேதான் மேனாட்டறிஞரான ஆசுலே டியூக்ஸ் என்பார்,

> "இக்கதைக்கரு நாடகஅமைப்பில் காண்போர்க்குப்
> பல கருத்துகளை விளக்குவதாகவும், பல
> கண்டுபிடிப்புகளை அள்ளித் தருவதாகவும்
> அமையவேண்டும்" 3

எனக் கூறுவர். சா.ஆ. அன்பானந்தனின் நாடகங்களில் திருப்பம், தாமரைப்பூக்கள், வளர்த்தபாசம் ஆகிய நாடகங்களில் சமுதாயம் கருவாக அமைகிறது. தமிழ்ச்சமுதாயம் 'குடி' எனும் கொடிய 'பிசாசின்' கைகளினின்று விடுபடவேண்டும்; எதிர்கால வாழ்வைக் கருத்தில் கொண்டு சேமிக்கவேண்டும் என்ற விழைவின் அடிப்படையில் திருப்பம் நாடகக்கருவை அமைத் துள்ளார் அன்பானந்தன். தொழிற்சாலையில் வேலை பார்த்துவரும் ராமு சிறு சேமிப்பு சிறிதுமின்றித், தன் வருவாய் அனைத்தையும் குடியிலேயே செலவிடுகிறான். குடிபோதையில் மனைவி நாகம்மாவை அடிக்க அவளும் இறந்துவிடுகிறாள். குடும்பப் பொறுப் பின்றி இருந்தமையால் ராமுவின் மகனும் கயவர்களுடன் கூடிக் குற்றம் புரிகிறான். மனைவியின் சவ அடக்கத்திற்கும், மகனை விடுவிப்பதற்கும் பொருளின்றித் தவிக்கும் ராமுவின் குடும்பத்தைக் காட்டுவதன் மூலம் தமிழ்ச் சமுதாயத்திற்குப் படிப்பினை ஊட்டுகிறார் அன்பானந்தன். தோட்டப்புறத் தமிழர்களுள் ராமுவின் குடும்பத்தைப் போன்று பல குடும்பங்கள் 'குடியால்' அவமானச்சின்னங்களாக நடமாடுவது இன்றும் கண்கூடு. இந்நிலை மாறித் திருப்பம் உருவாகவேண்டும் என்னும் நோக்கில் 'திருப்பம்' என்ற நாடகத்தை எழுதியுள்ளார் அன்பானந்தன் தந்தை பொருளின்றிக் கலங்கும்போது மகள் சந்திரா தையற்கலை வாயி லாகக் கிடைத்த பத்து வெள்ளியைக் கொடுத்து உதவுகிறாள். இதனால் சிறுசேமிப்பின் அவசியத்தை உணர்த்துகிறார். திருப்பம் நாடகத்தில் படைக்கப்பட்டுள்ள நிகழ்ச்சிகள், உரையாடல்கள் அனைத்தும் குடியின் கேட்டையும், சிறுசேமிப்பின் அவசியத்தையும் வலியுறுத்துகின்றன. சான்றாகச் சந்திராவின் காதலன் சுந்தரம் கீழ்க்கண்ட வாறு கூறுகிறான்.

> "எனக்கு மட்டும் இதயம் இல்லியா? நான்
> உழைக்கலியா? இங்க பாரு எங்கப்பாவும்
> ஒரு தொழிலாளி பிள்ளைதான்! முயற்சி

இருந்தா, வாழ்க்கையிலே கட்டுப்பாடு இருந்தா,
சேமிக்கிற முன்னோசனை இருந்தா யாரும்
முன்னுக்கு வரலாம்; ஓட்டைப் பானையிலே
தண்ணி நிக்காது" 4

தாமரைப்பூக்கள் என்ற நாடகம் தோட்டத் தொழிலாளர்களைக் கருவாகக் கொண்டிலங்குவது. தாமரைப் பூக்கள் தாம் தோன்றிய குளத்திலேயே பூத்து மடிவதைப் போலத் தோட்டச் சூழலில் பிறந்து, அவண் வளர்ந்து, அவண் வாழ்ந்து, அங்கேயே மடியவிரும்பும் மாரிமுத்து தங்கம் இணையரும் விளங்குகின்றனர். மாரிமுத்துவும் தங்கமும் தோட்டப் புறச்சூழலிலே வாழ்ந்தாலும் தங்கள் மகன் நகர்ப்புறச்சூழலை நாடிச் செல்வதைத் தடுக்கவில்லை. ஆயின் நகர்ப்புறச்சூழலில் வசிப்பவர்கள் மனிதாபிமானம் சிறிதுமின்றித் தோட்டப்புற மக்களை இழிவுபடுத்துகின்றனர். இதற்கு ராணியும், அவள் பெற்றோரும் சான்றாவர். ஆயின் தோட்டப்புறத்தில் வாழ்ந்த மாரிமுத்துவின் அரிய உழைப்பையும் நாணயத்தையும் மதித்து அவருக்குப் பரிசும், பல சலுகைகளும் வழங்கு கிறது அரசு இந்நாடகத்தின் வழி நகர்ப்புறம், தோட்டப்புறம் ஆகிய இரு வேறு பின்னணிகளைப் படைத்துக்காட்டியுள்ளார் சா.ஆ. அன்பானந்தன். இதற்கான காரணம் ஒன்றுண்டு. தொடக்ககாலத்தில் தோட்டப் புறச் சூழ்நிலையில் வளர்ந்தவர்கள் நகர்ப்புறங்களுக்கு வாழ்வின் பொருட்டும், கல்வியின் பொருட்டும், தொழிலின் பொருட்டும் வந்தவர்கள், பழைய சூழலை மறந்து உதாசீனப்படுத்திவருவது தமிழ்ச் சமுதாயத்தினரிடையே அன்றாடம் நாம் காணும் சாதாரண நிகழ்ச்சியாகிவிட்டது. இந்நிலையில் இந்நினைப்பில் திருப்பம் வேண்டியே சா.ஆ. அன்பானந்தன் இவ்வாறு படைத்துள்ளார். இது தோட்டப்புறத்தைப் பற்றி எதிர்மாறான கருத்துகள் கொண்ட ராணி, அவள் பெற்றோர் போன்ற நகர்ப்புறத் தமிழர்களுக்குச் சாட்டையடியாகும்.

"நிலத்துக் கணியென்ப நெல்லும் கரும்பும்
குளத்துக் கணியென்ப தாமரை" 5

என்னும் நான்மணிக்கடிகைச் செய்யுள் தந்த சிந்தனையின் விளைவே அழகப்பனின் வாய்மொழியாகும்.

"அவங்கெல்லாம் தண்ணீர் இருக்கும் இடந்தேடி
ஓடுற தவளைகளா இருக்க விரும்பலப்பா.
பூத்த குளத்திலேயே புதைஞ்சி போக விரும்புற
தாமரைப்பூக்களாகவே இருக்க விரும்புறாங்க" 6

என்னும் கூற்று தோட்டப்புற மக்கள் பிறந்தமண்மாட்டுப் பெருவிருப் புடையவர்கள் என்பதைத் தெள்ளிதின் உணர்த்துகிறது. இந்நாடகத் தலைப்பு அன்பானந்தனின் திறமையைக் காட்டுவதாக அமைகிறது. குறியீடாகத் தலைப்புகள் கொடுப்பதில் சா.ஆ. அன்பானந்தன் வல்லார் என்பதற்கு இந்நாடகத்தலைப்பு நல்ல சான்றாகும்.

பிறந்த மண்மீது பெருவிருப்புக் கொண்ட பழந்தலை முறை யினரைக் காட்டும் சா.ஆ. அன்பானந்தன் மாறிவரும் காலத்துக் கேற்ற சிந்தனைகளைக் கொண்ட இளந்தலை முறையினரான பொன்னப்பன், அழகப்பன் ஆகியோரையும் படைத்துள்ளார். இந்நாடகத்தில் வரும் பாத்திரங்கள் சமுதாயக் கண்ணோட்டத்தை அடியொற்றிப் படைக்கப் பட்டவைகளே.

வளர்த்தபாசம் என்ற நாடகத்தில் இரு வேறுபட்ட இனங்களைப் பின்னணியாக்கிப் பாசஉணர்வினால் இரு இனத்த வர்க்கும் இடையே உறவுப்பாலம் அமைக்கிறார். வறுமைய்ல் வாடியபோதும், வியாபாரத் தில் சரிவு கண்ட போதும் பெற்ற குழந்தையை மற்றவரிடம் கொடுக்கத் துணிந்த லாய் என்ற சீனன் பணத்திலே நாட்டமுடையானாய், மனிதத்தன்மையின்றி நடக்கிறான். ஆயின் அவன் மனைவி சீமோய் ஒரு தாயாக நின்று பாண்டியனின் வளர்ப்புத்தாயான மீனாட்சியின் பாசவுணர்வை மதிக்கிறாள். பாண்டியனுக்குச் செலவிட்ட பணத்தை யெல்லாம் மீண்டும் தருவதாகப் பாசவுணர்வை விலைபேசும் லாய் வெறுக்கத்தக்கவன். இவன் பின்னர்த் தன் தவறை உணர்கிறான். பாசத்திற்கும் பணத்திற்கும் இடையே எழும் இப்போராட்டத்தில் பாசமே வெல்கிறது.

இந்நாடகத்தின் சிறப்பம்சம் இரு சமுதாயத்தினரின் குறைகளையும் நிறைகளையும் அழகுறப் படம் பிடித்துக் காட்டுவதாகும். தமிழ்ச் சமுதாயத்தினரைப் பிரதிப்பலிப்பதைக் கீழ்க்கண்ட உரையாடல் தெள்ளிதின் புலப்படுத்தும். பாண்டியனின் வளர்ப்புத்தந்தையின் கணிப்பில் தமிழ்ச்சமுதாயம் பொருத்தமுறக் காட்டப்பட்டுள்ளது.

"கடைக்காரரு உள்ளப்படியே நம்மப்
பொறுத்தவரையில கண்கண்ட கடவுள்தான்.
ஒருவன் முன்னேற்றத்தைப் பார்த்து வயிறெரியுற
இந்தக் காலத்துல இப்படியும் மனிதர்கள்
இருப்பது அதிசயந்தான்." 7

என உற்றுழி உதவும் உயர்குணத்தரான மாடசாமியைச் சிவம் போற்றுகிறார். தன்னலம் மறந்து பொதுநலம் விழையும் மாடசாமி

போன்றோர் பலர் தமிழ்ச்சமுதாயத்தில் பெருக வேண்டும் என்னும் வேட்கை இந்நாடகத்தில் எதிரொலிக்கிறது.

அடுத்தவன் முன்னேறக்கூடாது என்ற தீய எண்ணமும், அடுத்துக்கெடுக்கும் கயமைத்தனமும் தமிழ்ச்சமுதாயத்தின் அடிவேரை அரித்து இழிநிலைக்குத் தள்ளியுள்ளன. இந்நிலை மாறி நல்லெண்ணமும், நற்செயல்களும் பெருகவேண்டும் என்ற வேட்கையை எதிரொலிக்கிறது மீனாட்சியின் கூற்று.

"உலகத்துல களை மட்டும் வளரணும்னு
அமைஞ்சிருந்தா உலகம் எப்பவோ அழிஞ்சி
போயிருக்குமே. நம்ப கடைக்காரரு
மாதிரியான நல்ல பயிர்களும் விளைஞ்சி
ருக்குறதுனாலே தான் உலகமும் வாழுது!
மழையும் பெய்யுது" 8

சீனர்கள் பணத்திலே குறியானவர்கள். சிலநேரங்களில் பணத் திற்காகப் பண்பையும் பணயம் வைப்பர் என்பதற்கு லாய் நல்ல சான்று. அவன் பேச்சு அவன் குணத்தைக் காட்டுகிறது.

"முன்னைய நிலையில் அப்படி நடந்துகிட்டோம்.
இன்னைய நிலையில் இப்படி நடந்துக்கிறோம்
மேலும் அவனுக்கும் பணக்கார -
வங்க யாரு, .... வசதி இல்லாத பராரிங்க
யாருன்னு தெரியும். பழுத்த மரத்தைப்
பார்த்து வெளவால் போறது மாதிரி! பையனும்
பணம் கொடுத்திருக்கிற நம்பக்கிட்டே
தான் வருவான்" 9

சீனர்களிடமும் சில மூடநம்பிக்கைகள் உள்ளன. சான்றாகத் தன் வாணிபம் நொடித்துப் போனதற்குப் பத்தாவது குழந்தை பிறந்த நேரமே காரணம் என நம்புகிறான் லாய். அதிர்ஷ்டம் எல்லாம் அடிபட்டுப் போனது என அங்கலாய்க் கிறான் லாய்.

சீனக்குடும்பத்தில் பிறந்து தமிழ்க்குடும்பத்தில் வளர்ந்த பாண்டி யன் வளர்த்தவர்களுக்கும் பெற்றவர்களுக்கும் இணைப் புப்பாலமாக விளங்குகிறான். மலையகத் தமிழ்ப் படைப்புகளில் சீனர்கள் துணைப்பாத்திரங்களாக, சிறுபாத்திரங்களாகப் படைக் கப்பட்டுள் ளனர். ஆயின் இந்நாடகத்தில் கதை நிகழ்ச் சிகளுக்கே மூல

காரணமாகச் சினப்பாத்திரங்கள் அமைகின்றன. இனவேறுபாடுகளை மறந்து, பண்பாட்டு வேறுபாடுகளை மறந்து ஒருவரை ஒருவர் மதித்து வாழும் மனிதப் பண்பு இந்நாடகத்தின் வழி வெளிப்படுகின்றது.

எது வெற்றி? என்னும் நாடகம் இலக்கியக் கருப்பொருளைக் கொண்டது. சோழன் நலங்கிள்ளிக்கும் நெடுங்கிள்ளிக்கும் இடையே ஏற்பட்ட பகைமையை நீக்கி, நாட்டுமக்களை வாழ்விக்கக் கோவூர்க் கிழார் என்னும் புலவர் தூதுசென்று இருவரையும் சந்துசெய்வித்ததாகப் புறநானூற்றுப் பாடலொன்று கூறும். இப்பாடலை அடியொற்றி எழுதப் பட்டதே எதுவெற்றி? என்னும் நாடகம். கோவூர்க்கிழாரின் சொல்லுக்குக் கட்டுப்பட்டு முதலில் போரைக் கைவிட்டுவிடுகிறான் நலங்கிள்ளி. ஆயின் நீண்ட நாட்கள் கழித்து நலங்கிள்ளி, நெடுங்கிள்ளி மீது மீண்டும் படையெடுத்து உறையூரை அழிக்கிறான். கோவூர்க்கிழார் இதனையறிந்து அறம்பிறழ்ந்த உன் மண்ணை இனி ஒருபோதும் நான் மிதிக்கமாட்டேன் என வெகுண்டு நீங்குகிறார். நலங்கிள்ளி தவறுணர்ந்து இறக்கிறான். உண்மையில் போரில் வெற்றி பெற்ற தாக நலங்கிள்ளி செருக்கடைகிறான். கோவூர்க்கிழார் நினைவூட்டவே, சொன்னசொல் மறந்து, சுடர்த்தமிழ் நெறி கொன்று, நல்லவனைக்கொன்று, அறத்தையும் கொன்றதாக அலக்கணுற்று மாள்கிறான்.

தமிழிலக்கியவளத்தை அறியாத பாமரமக்களும் செவிவழித் துய்த்து இன்புறவேண்டும்; மொழிப்பற்றை வளர்க்கவேண்டும் என்னும் அடிப்படையில் இலக்கியக் காட்சியை நாடகமாக்கியுள்ளார். ஆயினும் இந்நாடகம் வழிப் பல பேருண்மைகள்- எல்லாக் காலத்திற்கும் பொது வான சில அறங்கள் வலியுறுத் தப்படுகின்றன. சொன்னசொல் மாறுவது, சொந்த சகோதரர்கள் துன்பத்தில் வாடக்கண்டும் சிந்தை இரங்காது மேலும் அவர்களுக்குத் துன்பம் தருவது, நல்லவனைக் கொல்வது போன்ற வன்செயல்கள் இன்றும் நடைபெறுகின்றனவே! இவற்றில் வெற்றிபெற்றவர்கள் தருக்கி வாழ்வது உண்மையான வெற்றியா? எனச் சிந்திக்க வைக்கின்றது இந்நாடகம். இலக்கியக் கருப்பொருளைக் கையாண்டிருப்பினும் சமகாலத் தமிழ்ச்சமு தாயத்திற்கு வேண்டிய நற்கருத்துகளை இந்நாடகத்தின் வழி ஊட்டியுள்ளார் சா.ஆ. அன்பானந்தன். இந்நாடகமும் இன்றையத் தமிழ்ச் சமுதாயத்தின் சிந்தனையில் 'திருப்பம்' வேண்டி எழுதப்பட்டது என்பதில் தவறில்லை யல்லவா?

வீரமைந்தன் இந்திரஜித் புராண (இதிகாசக்) கருப்பொருளை மையமாகக் கொண்டு எழுதப்பட்டது. கம்பனின் இராமகாதையில் இராவணனின் மகனான இந்திரஜித்தின் பெருவீரம் சிறப்புறச்

சித்திரிக்கப்பட்டிருக்கிறது. இராவணனைத் தமிழினத் தலைவனாகவும், இராமனை ஆரியரினத் தலை வனாகவும் கருதுவது பகுத்தறிவு இயக்கம் கண்ட திராவிடக் கழகத் தினரிடையே காணப்படுவது. முன்னர்க் குறிப்பிட்டவாறு சீர்திருத்தக் கருத்துகளினால் கவரப்பட்ட சா. ஆ. அன்பானந்தன் திராவிடக்கழகத்தினரைப் போன்றே இணையற்ற தமிழ்ப்பெரு வீரனாக இந்திரஜித்தைப் படைத்துள்ளார். புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், புலவர் குழந்தை ஆகியோரின் கைவண்ணத்தில் இராவணனின் சிறப்புகள் ஒப்பற்றவகையில் சித்திரிக்கப்பட்டுள்ளன. இரணியன் இணையற்ற வீரன், இராவண காவியம் ஆகியவற்றினால் கவரப்பட்ட சா. ஆ. அன்பானந்தன் இராவணனையும், அவன் மகன் இந்திரஜித்தையும் தமிழர் வீரங்காட்டும் படைப்புகளாக்கியுள்ளார்.

புராண எதிர்ப்பும், மூடநம்பிக்கை ஒழிப்பும், அறியாமை இருளகற்றி அறிவூட்டுவதும் திராவிடஇயக்கத்தினரின் கோட்பாடு களாக அமைந்தன. இதற்கு நல்ல கருவியாக அமைவது நாடகமே என்பது அறிஞர் அண்ணாவின் கருத்து. இதனைக் கீழ்க்கண்ட பகுதியால் அறியலாம்.

> "சமுதாயத்திலே புதிய முறைகள், அதன் அமைப்பிலே
> புதியதொரு மாற்றம் தேவை. அந்தப் புதிய
> உருவத்தை உருவாக்கும் உயரிய பணிதான்
> மறுமலர்ச்சி. அதன் அவசியத்தை மிகப்
> பெரும்பாலான மக்களுக்கு உணர்த்துவிக்க
> நாடகமே நல்ல கருவி. எனவே நாடகத்தில் மறுமலர்ச்சி
> மிக மிக முக்கியமானது. நாட்டின் விழிப்புக்கு அது
> நல்லதோர் அளவுகோல். நாளை நாம் எப்படியிருப்போம்
> என்பதற்கு அதுவே அறிகுறியுமாகும்" 10

சா.ஆ. அன்பானந்தன் நாடகத்தைச் சமூக மறுமலர்ச் சிக்காகப் பயன்படுத்தியவரே. காட்டிக்கொடுக்கும் கயமைத்தனம் வேரறுக்கப்பட வேண்டும் என்பது அன்பானந்தனின் அவா. இதனை இந்திரஜித் வலியுறுத்துகிறான். இவன் வீடணனிடம் பேசும் பேச்சு இதற்குச் சான்றாகிறது.

> "குலத்தைக் கெடுக்கப் பிறந்த கோடரிக் காம்பே....
> வீரர் குலத்தில் பிறந்த நீர், வீணர் பின்னால்
> திரிகின்றீரே .... உமக்கு வெட்கமாக இல்லை.
> சொந்தக்குலத்தையே காட்டிக்கொடுத்து வாழும்

உமக்கும் எச்சிலை உண்ணும் ஞமலிக்கும்
என்ன வேறுபாடு?" 11

புராணக் கருப்பொருளைக் கையாண்டிருப்பினும் இந் நாடகத்திலும் அன்பானந்தனின் சமூக அக்கறையைக் காண்கிறோம். பிறா வாழப் பொறாது தம் இனத்தவரைப் பணத்துக்காக - பதவிக்காக - புகழுக்காக் காட்டிக்கொடுப்பவர்கள் இன்று சமுதாயத்தில் பெருகியுள்ளனர். நூற்றுக்குத் தொண்ணூறுபேர் இத்தகையோரே. இவர்கள் திருந்தவேண்டும்; கீழறுப்புவேலை செய்வதைக் கைவிட வேண்டும் என்னும் 'திருப்பத்தை' எதிர்நோக்கியே சா.ஆ. அன்பானந்தன் இந்நாடகத்தைப் படைத்துள்ளார்.

இராவணன் இணையற்ற பெருவீரன் என விளக்கவேண்டி இன்றியமையா நிகழ்ச்சியில் மாற்றமொன்றைச் செய்துள்ளார். இதற்குக் காரணம் திராவிடக் கழகத்தின் ஈடுபாடே. இராவணன் பிறன்மனை நயந்தான் எனக் கூறுவது வான்மீகியின் இராமாயணம். கம்பரின் இராமகாதையிலும் இராவணனின் அழிவுக்குப் பிறன்மனை நயந்த பெருங்குற்றமே ஏதுவாகிறது. இதனை அப்படியே மாற்றியுள்ளார் அன்பானந்தன்.

"சீதைமோகம் என்னைச் சிதைக்கவில்லை.
எனக்கிருக்கிறாள் இனியவள் மண்டோதரி,
எழிலரசி தாயிமாலினி, இன்னும் உள்ளனர்
பலர். நினைத்தால் ஈடற்ற அழகியர்களை
நான் அடைய முடியும். தேவலோக மாதரே எனக்குப்
பணிசெய்துகிடக்கத் தவங்கிடக்கிறார்கள்.
அப்படிப்பட்ட எனக்கு இந்தப் பஞ்சப்பயல்களின்
பத்தினியா வேண்டும்?" 12

இராவணனின் இப்பேச்சிலிருந்து அவன் பிறன்மனை நயக்கவில்லை எனத் தெளிவாகப் புரிந்துகொள்ளலாம். இராவணனின் மாட்சியைக் காட்டுவதில் சா.ஆ. அன்பானந்தன் பாரதிதாசன் அடிச்சுவட்டையே பின்பற்றுகிறார். பாவேந்தரைப் போன்றே சீர்த்ருத்த வேட்கையும், தமிழ்ச் சமுதாய அக்கறையும், பார்ப்பனீய வெறுப்பும் அன்பானந்தத்திடமும் அமைந்துள்ளது. பஞ்சப்பயல்கள், அரையாடைப் பரதேசிகள், மரவுரிப் புழுக்கள், ஆண்டிகள், பஞ்சவடிப்பதர்கள் என்ற சொல்லாட்சிகளின் வழி ஆரிய எதிர்ப்பைப் புலப்படுத்தியுள்ளார் அன்பானந்தன்.

'சத்தியப்பேரொளி' என்னும் நாடகம் புத்தர்பிரானின் வாழ்க்கையை அடியொற்றி எழுதப்பட்டது. புத்தரின் முதுமைக்கால வாழ்க்கை நிகழ்ச்சிகளுள் ஒன்றிரண்டை மட்டும் கருவாகக் கொண்டு படைத்துள்ளார் சா.ஆ. அன்பானந்தன். 'குசி' நகர நிகழ்ச்சிகளுக்கும் புத்தரின் நிர்வாண நிலைக்கும் உள்ள தொடர்பைக் காட்டுகிறார் ஆசிரியர். புத்தசமயக் கோட்பாடுகளை எளிய முறையில் விளக்கிச் செல்கிறார் ஆசிரியர்.

மனிதமனம் தூய்மையடைய ஒரே வழி ஆசையைத் துறப்பதுதான். ஆசையைத் துறந்து அன்பைப்பெருக்க வழி காட்டுகிறார் புத்தர் பெருமான்.

"உலகில் தோன்றிய ஒவ்வொன்றுக்கும் மாற்று
உண்டு. அப்படியிருக்க ஆசையை எரிக்கவா
மார்க்கம் இல்லை. நுட்ப இதய பீடத்தில்
பாறைகளைப் போன்ற முரட்டு நினைப்புகளைச்
சேர்க்காதீர்கள். மலரொத்த அன்பை ஏற்றி
வையுங்கள். அன்பின் ஒளிஉள்ளவர்கள்
கருணையுள்ளவர்களாக இருப்பார்கள்.
கருணையுள்ள மனிதர்கள் மற்றவர்களோடு
பகிர்ந்து கொள்ளும் மனநிலையைப் பெற்றிருப்பார்கள்.
அங்கே அன்பின் ஆட்சி நடக்கும் போது
ஆசையின் குறும்புகள் தானே மறைந்துவிடும்" 13

அன்பும் கருணையும் பெருகும்போது மனிதமனங்கள் தூய்மையடைகின்றன; மனிதநேயம் மலர்கிறது என்ற புத்தர்பெருமானின் அறிவுரை இன்றைய உலகியலுக்கு மிகவும் இன்றியமையாததாகும்.

இன்றைய உலகில் போலிகள் மிகுந்துவருகின்றனர். புத்தர் பெருமான் போலிகளுக்கும் ஞானிகளுக்கும் வேறுபாடு காட்டுகிறார்.

"அடுத்தவரைக் காட்டித் தன்னைக் காத்துக்
கொள்பவன் போலி. தன்னை வைத்து
உண்மையை நிலைநாட்டுபவன்தான் ஞானி" 14

நாடகங்களின் மொழிநடை:

சா.ஆ. அன்பானந்தத்தின் மொழிநடை உயிரோட்டமானது. "ஒரு கலைப்படைப்பின் உயிரோட்டமான பகுதியே நடை" 15 என அறிஞர் பிளேட்டோ கூறியுள்ளமை அன்பானந்தத்தின் நாடகங்களுக்குப்

பொருந்துவதாம். கவிதைநடை, பேச்சு மொழிநடை, வருணனை நடை எனப் பல விதமான நடையைக் கையாளுகிறார் அன்பானந்தன்.

### பாத்திர எண்ணிக்கை:

நாடகப்பாத்திரங்கள் குறைவான எண்ணிக்கையில் அமைந்துள்ளன.வானொலி நாடகங்களும், குறுநாடகமும் இத்தொகுப்பில் அமைந்துள்ளன. ஆகவே பாத்திர எண்ணிக்கை குறைவாக இருப்பினும் பாத்திரப்படைப்பு நிறைவாக உள்ளது.

### நாடகக்கட்டுக்கோப்பு:

"வெறும் செங்கல்லையோ, கருங்கல்லையோ அடுக்கி வைப்பது வேறு; அவற்றைக் கொண்டு கட்டடம் கட்டுவது வேறு. அது போலக் கதை வேறு; கதைக்கோப்பு வேறு" 16 என நாடகக்கட்டுக்கோப்பு பற்றி விளக்குவர் தெ. பொ.மீ. அன்பானந்தன் தெளிவான கட்டுக்கோப்புடன் சிக்கலில்லாத சாதாரணக் கதையமைப்பைக் கையாண்டுள்ளார்.

### நாவலாசிரியர் - அன்பானந்தன்:

மலாயா வரலாற்றின் இருண்டகாலமாகக் கருதப்படுவது சப்பானியராட்சிக்காலமாகும். இக்கொடியகாலம் வரலாற்றின் கறைபடிந்த ஓர் ஏடு. சப்பானியர்கள் சயாம் மரண இரயில் பாதை அமைக்கக் குடும்பத்தலைவர்களை இழுத்துச்சென்றனர். இத்த கையவர்களுள் மாரிமுத்தும் ஒருவன். இவனைப் பற்றிய கதையை மரவள்ளிக்கிழங்கு என்ற நாவலாக்கியுள்ளார் அன்பானந்தன்.

மாரிமுத்து தன் மனைவி சீனியம்மாளுடனும், ஒரே மகன் கண்ணனுடனும் மகிழ்ச்சியாக வாழ்ந்துவருகிறான். இவ்வேளையில் சப்பானியரால் சயாமுக்குக் கொண்டு செல்லப்படுகிறான். மாரிமுத்துவின் நண்பனான சிங்காரம் சீனியம் மாளுக்கு உதவுகிறான். ஊரார் சீனியம்மாளையும் மாரிமுத்து வையும் இணைத்து இக்கதை பேசுகின்றனர். மாரிமுத்து மொழிபெயர்ப்பாளனாக உயர்கிறான். தனக்கு இன்னா செய்தார்க்கும் இனியவே செய்கிறான். மீண்டும் தோட்டத்திற்கு வந்ததும் உயிர் நண்பனான சிங்காரத்தை ஐயுறுகிறான். சிங்காரம் பிரிகின்றான்.

### கருப்பொருள்:

அகிலன் தம்முடைய மதிப்புரையில் குறிப்பிட்டது போல 'ஈவிரக்கமற்ற அந்தக் கொடுங்கோல் வரலாற்றின் சிறுபகுதியை வெளிச்சமிட்டுக் காட்டுகிறது மரவள்ளிக்கிழங்கு என்னும் நாவல். மரணரயில்பாதை அமைப்பதற்காகச் சென்று மீண்டவர் ஒருசிலரின் அனுபவங்களைக் கேட்டறிந்து கற்பனையையும் விரவி ஆழம், அழுத்தம்

ஆகியவற்றுடன் இணைத்து அழகிய கலைப்படைப்பாக உருவாக்கியுள்ளார் சா.ஆ. அன்பானந்தன்.

கருப்பொருளின் வெற்றிக்குப் பின்னணி சிறப்பாக அமைவதும் ஒரு காரணமாகும். தோட்டப்புறமக்களின் பழக்க வழக்கம், தோட்டப்புற நடைமுறை, தோட்டமக்களின் பேச்சு வழக்கு ஆகியவற்றைச் சரியானமுறையில் படம் பிடித்துள்ளார் அன்பானந்தன்.

## தமிழ்ச்சமுதாயத்தின் பிரதிபலிப்பு:

தமிழ்ச்சமுதாயத்தின்பால் அன்பானந்தன் கொண்ட அக்கறையும், ஆர்வமும் இக்குறுநாவலில் தெற்றெனப் புலனாகின்றன. தமிழ்ச் சமுதாயத்தினர் பிறரை அணுகும் முறைகள் பற்றிச் சீனியம்மாளின் தந்தை மருது கருத்துரைக்கிறார் 17. தமிழினத்தைத் தமிழினமே காட்டிக்கொடுப்பது என்னும் இழிபண்பு தமிழர் வரலாற்றில் கறையாகப் படிந்துபோன ஒன்று. எட்டப்பனுடைய காலத்திற்கும் முன்னரே தோன்றிய இக்கறை இன்னும் இருந்து கொண்டுதான் வருகின்றது. இக்கறை நீங்க வேண்டும்-நீக்கப்படவேண்டுமென்பது அன்பானந்தனின் உள்ளக் கிடக்கை. குருத்தோ முருகப்பன் பற்றிக் கூறும் போது, "ஜப்பானியன் ஒன்று சொன்னால் இவர் மூன்று செய்தார்" 18 என்ற வரிகள் கருத்தோ முருகப்பனின் பண்பினை வெளிப்படுத்துகின்றன. இத்தகு பண்புக்குறைபாடு கொண்ட அவன் "எறும்புக்கு வால் குழைக்கும் இதுகளிடம் வேறு எதனை எதிர்பார்க்க முடியும்" 19 எனத் தன்னினத்தாரை இழிவாக எண்ணுகிறான். ஜப்பானியர் பெயரைச் சொல்லி இவன் செய்யும் அதிகாரத்தைக் கீழ்க்கண்டபகுதி காட்டுகிறது.

> "உண்மையா ஒழைக்கணும். எதுத்துப் பேசக்கூடாது.
> இட்டவேலைய மறுக்கக்கூடாது. கொடுத்தத
> திங்கணும். கூடுதலா எதுவும் எதிர்பார்க்க
> கூடாது. மணியடிச்சதும் வரிசையா போயி நின்னு
> போடுறத வாங்கித்திங்க வேண்டியதுதான்.
> தெரியுதா? அரப்புறம் நீங்க திரும்பிப்போய் உங்க
> பெண்சாதி பிள்ளை குட்டிகளை, தாய்தகப்பன்களைப்
> பார்க்க முடியாது" 20

ஒரு மனிதனின் துயர் கண்டு மற்றொருவன் இரங்க வேண்டும்; இயன்றால் அவனுக்கு உதவவேண்டும். ஆயின் தோட்டப்புற மக்களில் பெரும்பாலோருக்கு இரங்கும் பண்போ அல்லது உதவும் பண்போ இருப்பதில்லை. வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுதல் போல நொந்தவர்

உள்ளத்தை மேலும் நோகடிப்பது பலருக்குக் கைவரப்பெற்ற கலையாகும். இவ்வாறு பழிதூற்றும் இழிபண்புடையாரை "எரியும் பிணத்திடம் கடன்கேட்கும் இதயங்கள்" 21 எனக் கூறுவர் சா.ஆ அன்பானந்தன். நன்றிகெட்டவனாக செய்ந்நன்றி கொன்றவனாக மாரிமுத்துவும் மாறித் தோட்டப்புற மக்களில் ஒருவனாகக் கலக்கிறான். பாத்திரங்களின் பண்புகள் வழியே தோட்டப்புற மக்களிடம் காணப்படும் குறைகளைப் புலப்படுத்துகிறார். இழிகுணங்கள்யாவும் நீங்கவேண்டும் என்பதே ஆசிரியரின் நோக்கமாகும்.

### பாத்திரப்படைப்பு:

இக்குறுநாவலில் மாரிமுத்துவின் உயிர்நண்பனான சிங்காரம் சிறப்புறப் படைக்கப்பட்டிருக்கிறான். மாரிமுத்து குறுநாவலில் தலைவனாகப் படைக்கப்பட்டிருப்பினும் அவன் சிங்காரத்தைப் போல வாசகர் நெஞ்சில் உயர்ந்த இடத்தைப் பெறமுடிவதில்லை. மாரிமுத்துவும் தன்னுடன் மரணரயில் பாதைக்காக உழைக்க வந்தோருக்கு எண்ணற்ற உதவிகள் செய்கிறான். இன்னா செய்தார்க்கும் இனியவே செய்கிறான். குருத்தோ முருகப்பன் பல தீமைகள் புரிந் திருந்தும் அவன் இறுதியில் நாடு திரும்ப ஏற்பாடு செய்கிறான் மாரிமுத்து. மாரிமுத்து செய்த உதவிகளை மிகவும் அழகுறக் கீழ்க் கண்டவாறு கூறுவர் சா.ஆ. அன்பானந்தன்.

> "கனலைப் பொழியும்போது நீரின் தேவையும்,
> குளிர்ச்சியின் அருமையும் தெரிந்தது. நிலம்
> வெடித்து, பயிர்காய்ந்து, வயிறு ஒட்டி,
> நாக்கு வறண்டிருக்கும்போது வானம்
> மாரியைத் தூவினால் ஏற்படும் நம்பிக்கையும்
> உயிர்ப்பார்வமும் மாரிமுத்துவால் எல்லார்க்கும்
> கிடைக்கப் பெற்றன." 22

சீனியம்மாள், அவள் தந்தை மருது மற்றும் ஜப்பானிய அதிகாரிகள் ஆகிய பாத்திரங்கள் தேவையான முறையிலேயே படைக்கப்பட்டுள்ளன.

### மொழிநடை:

எவ்வித இலக்கியப் படைப்பாயினும் மொழி நடை அதற்கு உயிர் ப்பாற்றலைக் கொடுக்கின்றது. இதனை மூதறிஞர் வ.சுப. மாணிக்கனார் சிறப்புறக் கிளப்பர் .

"நடையழகு இல்லா இலக்கியம் நிறவண்ணமில்லாச்
சோலையையும், மெய்ப்பாடில்லா நடிகனையும்,
வெள்ளாடை உடுத்திய பெண்ணையும் ஒக்கும்" 23

இக்கருத்துக்கியையவே சா.ஆ.அன்பானந்தனின் மொழி நடையும் அமைகின்றது. தோட்டப்புற வாழ்வு ரப்பர்மரத்தை அடிப்படையாகக் கொண்டு அமைவது. ஆகவே இம்மக்களின் வாழ்வை விளக்கும் போது தோட்டப்புறச் சூழலை அடியொற்றியே விளக்குவர்.

அன்புப்பிணைப்பால் கட்டுண்டிருந்த மாரிமுத்துவையும் சீனியம்மாளையும் ஜப்பானியர்கள் பிரித்தனர். மாரிமுத்துவின் பிரிவால் சீனியம்மா கண்ணீர் வடிக்கிறாள். இதனை,

"வெட்டிய மரத்தில் வழிந்தோடும் கித்தாப்பாலைப்
போல" 24

என்ற உவமை வழியே பொருத்தமுற வருணிப்பர் ஆசிரியர். தோட்டப்புறப்பெண்கள் சீனியம்மாள், சிங்காரம் ஆகிய இருவரையும் இணைத்து அவதூறு பேசுகின்றனர். இந்நிலையும்

"தீயில் வெந்து உருகிக்கொண்டிருக்கிற மங்குப்
பாலை முகத்தில் விட்டெறிந்தாற்போல அந்த
மங்கம்மாக்களும் முத்தம்மாக்களும் பழிச்சொற்களைச்
சீனி-சிங்காரம் மீது வீசினர்" 25

என அழகுறத் தோட்டப்புறக்காட்சி ஒன்றினை உவமை கூறுவதன் வழி விளக்கப்படுகிறது.

சீனியம்மாளின் மனம் தூய்மையானது. ஊர் மக்கள் பழிதூற்றுவது பொருத்தமில்லை எனக் குறிப்பதாக,

"சீனியம்மாள் மனத்தில் ஓடுகிற அன்புப்பால்
வெள்ளையாகவே ஓடுவதால், அது நேராகச் சரியான
கோட்டில் ஓடுவதால் அது திரியாமலிருக்கிறது" 26

என மீண்டும் ரப்பர் பாலையே உவமை கூறுவர்.

சா. ஆ. அன்பானந்தன் நகைச்சுவையுணர்வு மிக்கவர். ஆகவே அவருடைய இலக்கியப் படைப்புகளிலும் அவ்வுணர்வு வெளிப்படுகின்றது.

"தாமோஜா எனும் சித்திரபுத்திரன் பட்டியலை
நீட்டிப் பிடித்தான். எமகணம் குருத்தோ

முருகப்பன் பெயர் விவரப்படி ஆட்களைக்
கீழே அனுப்பினான்" 27

தலைப்புப்பொருத்தம்:

இந்நாவலின் தலைப்பு குறியீடாக அமைந்துள்ளது. சா. ஆ அன்பானந்தனின் தலைப்புகள் பெரும்பாலும் குறியீடுகளாகவே அமைந்துள்ளன. சான்றாகச் சில நாடகங்களின் தலைப்புகளைக் கூறலாம். 'பட்டிக்காட்டுத் தவளையும் பட்டணத்துத் தவளையும்' 'உறங்காப்புலி', 'வான்கோழி', 'வேரும்நீரும்' ஆகிய தலைப்புகள் குறியீடுகளாக அமைந்தவை. இவற்றுள் 'பட்டிக்காட்டுத் தவளையும் பட்டணத்துத் தவளையும்' என்ற தலைப்பு, பாரதிதாசனின் நாடகமான 'வீட்டுக்கோழியும் காட்டுக்கோழியும்' என்னும் தலைப்பின் சாயலைக் கொண்டிலங்குகிறது.

தோட்டப்புறங்களில் அரிசி கிடைக்காத காலத்தில் மர வள்ளிக்கிழங்கே உணவாகப் பயன்பட்டது. அரிசி வந்த பிறகு மக்கள் மரவள்ளிக்கிழங்கை மறந்துவிடுவர். அது போன்றே மாரிமுத்து மரணரயில் பாதையமைக்க அழைத்துச் செல்லப்பட்டபோது சிங்காரம் மாரிமுத்துவின் மனைவி சீனியம்மாளையும், மகன் கண்ணனையும் கண்ணின்மணி போலக் காக்கிறான். மாரிமுத்துவின் பிரிவுக்காலத்தில் மரவள்ளிக்கிழங்கு போல அவன் குடும்பத்திற்குச் சிங்காரம் உதவினான் மாரிமுத்துவின் வரவு, மரவள்ளிக்கிழங்கை உதறிவிட்டு அரிசியைப் பயன்படுத்துவது போலச் சிங்காரத்தைப் பிரித்தது. மரவள்ளிக்கிழங்கு என்னும் குறியீடு சிங்காரத்தையே குறிப்ப தாகும். பாத்திரப்பெயரால் அமையும் நாவல்கள் சிறப்பாக அமைவது பொதுவழக்கு. அவ்வாறே சிங்காரத்தின் பண்பைக் குறியீடாக உணர்த்தும் இந்நாவலும் சிறப்பாக அமைந்துள்ளது.

நயனங்கள் படைத்த நற்கவிஞர் அன்பானந்தன்:

சமூகக்கலைமாமணி சா.ஆ.அன்பானந்தன் மலையகக் கவிஞர்களுள் தனிச்சிறப்பிடம் பெற்றவர். இதற்குதக்க சான்று 'நயனங்கள்' என்னும் கவிதைதொகுப்பு நூல். நூலின் தலைப்பு சமூகக் கலைமாமணியின் ஆளு மைக்குத் தக்கதோர் எடுத்துக்காட்டாகும். நயனங்கள் என்னும் சொல் லுக்குக் கண்கள் என்னும் பொருளுண்டு. மனிதன் உலகக்காட்சிகளைக் கண்களின் துணைகொண்டே காண்கிறான். கண்களைக் கொண்டு ஒரு வரின் பண்புகளையும் எளிதில் அறிந்துகொள்ளலாம். சான்றாகப் புத்தர் பெருமானின் கண்கள் அருளை வெளிப்படுத்துகின்றன அல்லவா? அது போலச் சா.ஆ அன்பாந்தனின் சமூக உணர்வை-சமூக அக்கறையை வெளிக்காட்டும் கண்களாக நயனங்களைக் கூறலாம். மேலும் சா.ஆ அன்பானந்தன் எத்தகைய தமிழ்ச்சமுதாயத்தைக் காணவிழைந்தார் என்பதைக் காட்டும் கண்களாக இந்த 'நயனங்கள்' என்னும் நூல் அமைகிறது.

நயனங்களின் பாடுபொருள்

கவிதையில் இரு வகை உண்டு. ஒன்று தன்னுணர்ச்சிப் பாடல் ; மற்றொன்று புறநிலைப்பாடல். "ஒரு கவிஞன் தன்னுள் நோக்கி, உள்ளுணர்வு எய்தித் தன் அனுபவங்கள், கருத்துகள், உணர்ச்சிகள் ஆகியவற்றினின்றும் பாடலை உருவாக்குகிறான். இது தன் னுணர்ச்சிப் பாடல் அல்லது தன் விளக்கப்பாடல் எனப்படும். இதனை அகநிலைப் பாடல் என்றும் கூறலாம். மற்றொன்று கவிஞன் தன்னுள் நோக்காமல் புறநிலையில் நின்று, உலகின் செயல்கள், வல்லுணர்ச்சிகள் போன்ற வற்றோடு கலந்து அவற்றினின்றும் தான் நுணுகிக்காண் பனவற்றைப் பாடலாகப் படைக்கிறான். இங்ஙனம் அவன் படைக்கும்போது அப்பாடல் களிடத்துத் தன் தனித்தன்மையைச் சிறிதும் கலப்பதில்லை. இதனைத் தன்னுணர்ச்சியற்ற பாடல் அல்லது புறநிலைப் பாடல் எனலாம்" 28 என விளக்குவர் அறிஞர் தா.ஏ.ஞானமூர்த்தி இவ்வி ருவகையுள், தன்னுணர்ச்சிப்பாடல்களின் தொகுப்பாக இலங்கு கிறது நயனங்கள் என்னும் நூல்.

மொழி, நாடு, இயற்கை, தத்துவம், இளைஞர், பெண்கள், சமுதாயம் எனப் பல தரப்பட்ட பாடுபொருள்களை நயனங்கள் கொண் டிலங்குகிறது. தமிழ் மொழியைப் பாடும் கவிதைகளில் கவிஞரின் தமிழுணர்வு நிரம்பி வழிகின்ற நிலையைக் காணலாம். தமிழை 'ஆவியாக' மதிக்கும் அன்பானந்தன் தன்னைக் கவிஞனாக்குமாறு தமிழ்த்தாயிடம் வரம் வேண்டுகிறார் . தமிழ்ச் சமுதாயத்தைச் சீர்படுத்த விழையும் அவரின் வேட்கை கீழ்வரும் பகுதிகளில் தெற்றெனப் புலனா கிறது.

"மண்ணிதில் செவிடராய் மடமெனும் ஊனராய்  
இன்னும் இருக்கிறார் இவர்வழி திறக்கேவ  
கனற்கவி பாடுவேன் கலையெழில் கூட்டுவேன்  
புனற்புவி பாயவே புதுநலம் தேடுவேன்  
தினமவர் பீடையைத் தீயினில் பொசுக்கவே  
எனைக்கவி ஆக்குவாய் என்னருந் தாயே" 29

மலையகத் தமிழர் கள் தாயாம் தமிழை மதித்தால்தான் தரணியில் உயரமுடியும். இவ்வெண்ணத்தின் அடிப்படையில் கொண்டா டப்படுவதே தமிழர் திருநாள் என்னும் தமிழ்த்திருநாள். தமிழன் உயர்வு தமிழின் உயர் வில்தான் அடங்கியுள்ளது. இதனை

"தமிழர்க் கோரடையாளம் தமிழன்றி வேறில்லை  
தமிழன்றித் தமிழர்க்கு வாழ்வில்லை வளமில்லை

அமிழ்தென்றும் தமிழொன்றே அதுநந்தம் உயிரென்றே
நிமிர்ந்தேற்ற வாய்க்கின்ற தொருநாளு மிந்நாளே" 30

எனப் பாடுவர். தமிழுணாவு பொங்கியெழும் அன்பானந்தனின் கவிதைகளைப் பாராட்டும் சுரதா அன்பானந்தத்தின் தமிழ்ப் பெருக் கைப் பொருத்தமுற மதிப்பிட்டுள்ளார் .

"விருந்தமிழ்தம் என்றாலும் தமிழை யன்றி
வேறெதையும் விரும்பாத அன்பா னந்தன்
வருங்காலப் பெருங்கவிஞர் என்று ரைப்பேன்
வளர்புகழுக் கிந்நூலே சாட்சி என்பேன்" 31

நாட்டுப்பற்றைப் புதிய கோணத்தில் வெளியிடுகிறார் கவிஞர் ரப்பர் மரம் கொண்ட நாட்டுப்பற்றைப் பாடுவதன் மூலம் மக்களுக்கு உணாத்த விழைந்த செய்தியைச் சிறப்பாக வெளியிட்டுள்ளர் கவிஞர் இக்கவிதை, மரத்திற்கு இருக்கும் நாட்டுப்பற்று மக்களுக்கு இருக்க வேண்டாவா? என நம்மை எண்ணத் தூண்டுகிறது.

"நின்னமண்ணு காத்தமண்ணு - நாங்க
நிலைச்ச மண்ணு உழைச்சமண்ணு
என்னதாங்க ஆனாலும் - நாங்க
இங்கதாங்க உரமாவோம்" 32

உழைத்துப் பொருள் திரட்டிக்கொண்டு தமிழ்நாட்டிற்கே மீண்டுசெல்லும் நாடோடித் தமிழர் களை எள்ளி நகையாடும் வண்ணம், கிழரப்பர் மரம் பேசுவதாகப் பாடியுள்ளார் கவிஞர். மரத்திற்கு இருக்கும் பற்றுக்கூட மனிதனுக்கு இல்லையே என்ற ஏக்கம் இக்கவிதையில் தொனிக்கிறதன்றோ? தேசியத்தலைவாகளான துங்கு அப்துல் ரகுமானையும், துன் அப்துல் ரசாக்கையும் சிறப்புறப் பாடியுள்ளமை கவிஞரின் நாட்டுப்பற்றைக் காட்டுவதாம்.

கவிதையில் இடபெறும் கற்பனையைத் திறனிகள் பல்வேறு கோணங்களிலும் விளக்குவர். வின்செஸ்டர் என்பர் "கவிஞர் அல்லது இலக்கியப்படைப்பாளர் படிப்பேர் மனக்கண்முன் தன் அனுபவத்தைப் படைத்துக்காட்டும் திறமே கற்பனை எனப்படும்" 33 என விளக்கம் தருவர் இக்கற்பனை கவிஞரின் அனுபவங்களை எவ்வித மாற்றமும் இன்றிக் கூறுவதாகவும் (imagination), கவிஞனின் புதுமைகளைப் புகுத்துவதாகவும் (fancy) இருவகையாக அமையும் '34. இவற்றுள் இரண்டாவதாக் கூறப்பட்ட மனப்படைப்பே கவிஞரின் ஆளுமையை வெளிப் படுத்தும். இவ்வடிப்படையில் சா.ஆ அன்பானந்தனின் மனப்

படைப்பை வெளிப்படுத்துமாறு 'மீனும் சினையும்', 'புதுக்கவிதை' 'நிலா' 'போரக்களம்', 'மின்மினிப்பூச்சி' ஆகிய கவிதைகள் அமைகின்றன. இயற்கையைப் பாடுபொருளாகக் கொண்ட கவிதைகளாகும் இவை.

தத்துவத்தைப் பாடுபொருளாகக் கொண்ட கவிதைகள் ஒன்பது இந்நூலில் அடங்கியுள்ளன. தத்துவம் பாடுபொருளாக அமைந்தாலும் தமிழ்ச்சமுதாயம் மேம்படுவதற்கான சிந்தனைகளையே கொண்டிலங்குகின்றன இக்கவிதைகள்.

இளையர்கள் நாட்டின் எதிர்காலச் சிற்பிகள். ஆகலின் இளையர்க்கென ஏழு கவிதைகளைப் பாடியுள்ளார். இவற்றுள் சமுதாய உணர்வு, மொழியுணர்வு ஆகியவற்றை ஊட்டும் கவிதைகள் சில. மேலும் இளைஞர்களின் ஆற்றலை உணர்த்தி அவர்களின் பொறுப்புணர்வு என்ன என்பதனையும் நினைவுபடுத்துகிறார் கவிஞர்.

சமூகக்கலை மாமணியின் சமூக அக்கறையை எதிரொலிப் பவை 32 கவிதைகள். சமுதாயம் பற்றியும், சமுதாயநலனொன்றே குறிக்கோளாய் உழைத்த தமிழவேள் கோ.சாரங்கபாணி அவர்களையும், தொழிலாளர்,எழுத்தாளர் முதலிய சமுதாய அங்கத்தினர்களையும், சமுதாயத்தின் ஒரு கூறாக இலங்கும் சமயத்தினையும் பாடு பொருளாக்கியுள்ளார். தனிக்கவிதைகளில் சமுதாய உணர்வுடன் பாடிய கவிஞர் பாவியங்களிலும் அவ்வுணர்வு நிரம்பி வழியுமாறு பாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது. முன்னர்க் குறிப்பிட்டது போலச் சமூகநயனங்களாக இக்கவிதைத் தொகுப்பு இலங்குகிறது. சமுதாயநலனே இக்கவிதைகளின் அடிநாதம். இது பல்வேறு கோணங்களில், வடிவங்களில் வெளிப்பட்டுள்ளது.

**சா. ஆ. அன்பானந்தனின் கவித்திறன்:**

"கவிதை அனைத்து அறிவின் மூச்சும் நுட்பமும் ஆகும்" 35 என்பர் வோர்ட்ஸ்வொர்த் என்னும் ஆங்கிலக் கவிஞர். சா. ஆ. அன்பானந்தனின் கவிதைகளில் காணப்படும் உள்ளுணர்வு கவிஞர் வோர்ட்ஸ்வொர்த் கூறியது போல நுட்பமாகவும் உயிர் மூச்சாகவும் இலங்குகிறது. கவிஞனின் ஆற்றல் உலகில் உள்ள மற்ற எல்லா ஆற்றல்களினும் மேம்பட்டது என்ற தன்னம்பிக் கையுடனும், பெருமிதத்துடனும் 'கவிஞன் உள்ளம்' என்ற கவிதையைப் பாடியுள்ளார். 'அடுத்து காட்டும் பளிங்கு போல்' கவிஞனுடைய ஆற்றலைப் புலப்படுத்துகிறது 'கவிஞன் உள்ளம்'. இயற்கைப் பொருட்களான கடல், அலை, வானம், கதிரவன், நிலவு, காற்று, மலை ஆகிய அனைத்தினும் கவிஞனே ஆற்றலுடையவன். இதனை,

"எல்லாம் நானே படைக்கின்றேன்
எண்ணும் எழுத்தும் என்பின்னே
வல்லான் என்போன் யாரிங்கே
வாட்கவி கொண்டேன் வாமுன்னே" 36

எனப் பாடியுள்ளார். இக்கவிதையில், பாரதி; பாரதிதாசன் ஆகியோரிடம் அமைந்திருந்த பெருமித உணர்வைக்காணலாம்.

'நான் கவிஞனானால்' என்னும் கவிதையில் தமிழக, மலையகக் கவிதைப் பரம்பரையை நினைவுகூர்கிறார். தமிழ்ச்சமு தாயத்தின் எழுச்சிக்காகப் பாக்களிசைத்த பாவலர் மத்தியில் தாமும் ஒருவராகி,

"தென்றமிழ் மக்களைக் கன்றிடச் செய்பவர்
அன்றிலைப் போலவே அலைந்திடச் செய்தவர்
அன்னவர் கொடுமனம் அழிந்திடப் பாடுவேன்
தமிழனுக் கிங்கே தகுதிகள் இலையெனில்
தமிழ்க்கவி யாகநான் தோன்றவே மாட்டேன்" 37

எனச் சூளுரைக்கிறார். இப்பகுதியில்

வீழ்ச்சியுற்ற தமிழகத்தில் எழுச்சி வேண்டும்
விசையொடிந்த தேகத்தில் வன்மை வேண்டும்
காற்சிந்தை மறச்செயல்கள் மிகவும் வேண்டும்" 38

என்னும் பாவேந்தரின் விண்ணப்பமே எதிரொலிக்கிறது. கவிதை உணர்ச்சி மொழி. இவ்வாறே சா.ஆ.அன்பானந்தனின் கவிதை களும் விழுமிய உணர்ச்சி செறிந்தவை. உணர்ச்சிகளால் தாம் வாழ்க்கை மதிப்பிடப்பெறுகிறது; அல்லது உணர்ச்சிகளா லேயே வாழ்க்கை அமைகிறது. நம் வாழ்வுக்குத் தேவைய்ான பொது உண்மைகள் நம்மைக் கவர்வதில்லை. ஆயின் அவை உணர்ச்சி களோடு சொல்லப்படும்போது நம் உள்ளத்தைத் தொடுகின்றன. ஆகவேதான் வாழ்க்கையின் சிறந்த நோக்கங் களைக் கவிதை யிலேதான் தக்கவாறு விளக்கமுடியும் என்பர் திறனிகள். சி.டி. வின்செஸ்டர் என்னும் திறனி சிறந்த கவிஞர்களைப் பற்றிக் கீழ்க்கண்டவாறு விளக்குவர்.

"சிறந்த கவிஞர்கள் ஒரு விதத்தில் மெய்யுணர்வாளர்கள்.
அவர்களின் கவிதைகள்வழி வாழ்வின்
பொருளை அறிகிறோம்; வாழ்வின் உண்மைச்
சிக்கல்களைத் தெரிந்து கொள்ளுகிறோம். இம்மெய்-
யுணர்வும், வாழ்க்கையை விளக்கும் உயர்தரக்

கவிதையின் ஆற்றலும் கவிதையின் உணர்ச்சிப்
பண்பின் நேர்முக விளைவாகும்" 39

இக்கருத்துக்கியையக் கவிஞர் அன்பானந்தத்தின் கவிதைகள் அமைந்துள்ளன. இக்கருத்தைக் கவிஞனைப் பற்றிய கவிதைகள் வலியுறுத்துவனவாம்.

**கற்பனை நயமிக்க கன்னற்கவிதைகள் :**

கவிஞர் அன்பானந்தன் கற்பனையுடன் பாடுபொருளைக் கையாண்ட முறை முன்னர் விளக்கப்பட்டது. ஆயின், கவிஞரின் வெளி யீட்டுத்திறனிலும் கற்பனைப் பாங்கு விரவியுள்ளமைக்கும் அக்க விதைகளே சான்றாகும். உலகத்தைப் 'புதுக்கவிதையாக 'உவமித் துள்ளார் கவிஞர். வானத்து விண்மீன்களை நிலவும் கதிரும் கூடிக்களித்தமையால் பிறந்தவை எனப் பலவாறாகக் கற்பனை செய்து பாடுவார்.

"உன்னைக் கதிராளன்
ஊடிக் கலந்ததினால்
வண்ணச் சினையுற்றாய்
வல்லான் திருவன்றோ"40

நிலவைப் பற்றிப் பாடும்போது பாவலர் பலரும் தங்கப்பந்து, வெள்ளித்தட்டு என்று கற்பனை செய்துள்ளனர். ஆயின் அன்பானந்தன்' ஆப்பமாகக் காண்கிறார். இக்கற்பனை நாட்டுப் புறப் பாடலொன்றைத் தழுவியது. வானமகள் வைத்தவண்ணப் பொட்டோ! என வியப்பர். பேராசிரியர் சுந்தரம்பிள்ளை மனோன்மணீய நாடகத்தின் தமிழ் வாழ்த்துப் பகுதியில் தமிழ்மொழியைத் திலகமாகக் கண்டவர்.41 ஆயின் அன்பானந்தனோ நிலாவைப் பொட்டாக-திலகமாகக் காண்கிறார்.

"பட்டம்மாப் பாட்டியவள்
சுட்டுவைத்த ஆப்பமோ
பட்டழகி வானமகள்
பொட்டழகோ வண்ணநிலா" 42

இவ்வாறே 'போர்க்களம்' என்னும் கவிதையும் கற்பனை நயம் செறிந்தது. இக்கவிதை fancy எனப்படும் 'மனப்படைப்புக்' கற்பனை வகையைச் சார்ந்தது. இதனைப் பற்றி விளக்குகையில் மேனாட்டுத்திறனி ஒருவர்,

"மனப்படைப்புக்கான பொருள்கள் தற்செயலாக
இணைக்கப்படுகின்றன. இவ்வாறு இணைக்கப்-

படுங்கால் வியப்பான, விளையாட்டுத்தனமான, நகைப்பிற்குரிய, வேடிக்கையான விளைவுகள் உண்டாகும். அல்லது இரங்கத்தக்கதாயும் அமையும். எண்ணங்களையும் படிமங்களையும் மனத்தில் உண்டாக்கி அவற்றை மிக எளிதாக இணைப்பதை ஒட்டி மனப்படைப்பு அமைகிறது. அதன் மதிப்பும் இதைப்பொறுத்து ஏற்படுகிறது." 43

கதிரவனைப் போர்வீரனாகவும், வானத்தை வெள்ளைப் புழுதி கொண்டதாகவும், வெண்ணெய் திரண்டதாகவும் கற்பனை செய்து பாடியிருப்பது கற்பனை நயம் மிக்கது; கற்பார்க்குக் களிப்பு நல்குவது.

"பெண்ணைக் கொடுக்க மறுத்ததனால் ஒளி
கண்ணை எரித்துக் கிளம்பினனோ
பொன்னை நிகர்த்த முகத்தினளை - இருள்
பெட்டிப் பொருளெனப் பூட்டினனோ" 44

மின்மினிப்பூச்சி என்னும் கவிதை கருத்துவிளக்கக் கற்பனை யாக அமைவதாகும். மண்ணின் இருளை நீக்கும் வண்ணமதி யாய் மின்மினிப்பூச்சி தன்னைக் கருதிக்கொள்கிறது. அவ்வாறு மீ எண்ணம் கொண்டதனால் ஒளிந்து வேறு திரிகிறது. இக்காட்சியைக் கண்ணுற்ற கவிஞர்,

"சின்னச் சின்ன மனங்களும
பென்னம் பெரிய தலைவராய்
எண்ணங் கொண்டு நெளிவதை
இன்னே காட்டும் விளக்கமே" 45

எனப் பாடுவர். இக்கவிதை ஓசைநயம் மிக்கதுமாகும்.

மனிதன் ஆறறிவு படைத்தவன். பகுத்தறியும் பண்பினால் பாரிலுள்ள படைப்புகளிலெல்லாம் உயர்ந்தவனாகக் கருதப் பட்டான். ஆயின் வஞ்சக எண்ணங்கள், கயமைக்குணங்கள் ஆகியவை அவனிடம் குடிகொண்டதால் அவன் தாழ்ந்தவனான். இதனால் பயனற்றவனான். பட்டமரம் அழிவுக்குப் பின்னரும் பயன்படுகிறது. ஆயின் பாழும் மனிதனோ?...... ஒன்றுக்கும் உதவுவதில்லை. இக்கருத்து பழமையான கருத்துத்தான். ஆயின் உரையாடல் வடிவில் சமூகச் சிந்தனையுடன் இக்கவிதையைப் படைத்திருப்பது பாராட்டிற்குரியது.

பல கவிதைகள் புரட்சிக்கவிஞர் பாரதிதாசனின் கவிதைகளைப் போல வேகமானவை; விவேகமானவை .சோம்பியிருக்கும் தமிழ்ச்

சமுதாயத்தைத் துடிப்புடன் எழச்செய்யும் ஆற்றல் படைத்தவை. அணிவகுப்பு, நெருப்பென விளங்கிடு புதுக்கடாவையம் இளைய சமூகமே, நெருப்புத் துளிகளே, எனப் பல கவிதைகள் நம்மைக் கிளர்ந்தெழச் செய்யும் ஆற்றலுடையவை. பெரும்பாலான கவிதைகள் விளியாக அமைந்து தமிழ்ச் சமூதாயத்தை விழிப்புடன் செயலாற்ற விண்ணப்பிக்கின்றன.

சா.ஆ. அன்பானந்தன் நகைச்சுவை உணர்வு மிக்கவர். ஆதலின் அவருடைய படைப்புகளில் இயல்பான நகைச் சுவையினைக் (வகைகளைக்) காணலாம். இன்று பலர் (இளையர்) காதலிக்கத் தெரிந்திலர். அவர்கள் பெண்களைக் காதலிப்பதை விட்டுவிட்டு வேறு எதனையோ காதலிக்கின்றனர். 'சொல்லித் தெரிவதில்லை மன்மத தக்கலை' என்னும் இக்காதற்கலையைக் கலைநயத்துடன், இன்னதெனக் கற்பிக்கிறார் அன்பானந்தன்.

"கண்டவுடன் எழுவதல்ல காதல்-அன்பு
கலந்தபின்னர் எழுவதுதான் காதல்
கண்ணடிக்கப் பிறப்பதல்ல காதல்-எண்ணம்
கலந்தபின்னர் பிறப்பதுதான் காதல்.
உடையைக்கண் டெழுவதல்ல காதல்-தூய
உள்ளந்தொட் டெழுவதுவே காதல்
உடலைக்கண் டெழுவதல்ல காதல்-என்றும்
உயிருடனே கலப்பதுதான் காதல்" 46

காதலைக் கடைச்சரக்காகக் காணும் கொச்சை மனங்களைக் கேலிசெய்வதாக எள்ளிநகையாடுவர் கவிஞர். அரசியல் நாகரிகத்தை நையாண்டி செய்வதனைக் 'குறிக்கோள்' என்னும் கவிதை காட்டுகிறது.

ஒருவரை இழிவுபடுத்தும்போதும் நகை பிறக்கும். சாதாரண மனிதரினின்றும் கீழானநிலைக்கு இழிவுபடுத்தும்போது · ஆறறிவுடைய மனிதன் இவ்வாறு அறியாமையில் உழலும் போது ஒரு வித ஏளன உணர்வு பிறக்கும். 'இருண்டவீடு' என்னும் காப்பியத்தில் பாவேந்தர் இவ் ஏளன உணர்வைப் பாடியுள்ளார். ஆகவே அறியாமை காரணமாக நகை பிறக்கிறது. இதனை ஆங்கிலத்தில் என்பர். இழிவுபடுத்துவதனால் நகைச்சுவையைத் தோற்றுவிக்கும் கவிதைகளாக'பதவி', 'நாய்க்கோர் இரங்கல்' ஆகியவை திகழ்கின்றன. 'நாய்' என்பது குறியீடாக அமைகிறது. கீழான பண்புகள் கொண்ட மனிதனை 'நாய்' என உலகியலில் கூறும் வழக்கினை அடியொற்றியே கீழோரை 'நாய்' என்னும் குறியீட்டினால் சுட்டுகிறார் அன்பானந்தன்.

கவிஞரின் உவமைத்திறனுக்கு ஒப்பற்ற சான்றாவது 'அவனும் ரப்பர்' என்னும் கவிதை. தன்னையழித்துக்கொண்டு பிறரை வாழவைக்கும் ரப்பர் மரத்துக்குப் பொருத்தமான உவமை தோட்டப்புறத்தமிழனே எனத் துணிந்து, அழகுறப் பாடியுள்ளார் கவிஞர். இவ்வுவமை கவிஞரின் ஆளுமையை அளக்க உதவுவதாம்.

"தங்கடமை முடித்துவிட்டுத் தனையழிக்கக் கொடுத்து
விட்டுச் சாய்தல் போல
செங்குருதி நீராக்கி செம்புடலை உரமாக்கிச்
சாய்ந்து போக
அங்கிருந்து வந்தானோ? அவனுக்கும் ரப்பருக்கும்
மாற்றம் காணேன்" 47

தமிழர்கள் ஒப்பந்தக் கூலிகளாய் அழைத்துவரப்பட்டு மலேசிய நாட்டின் வளத்திற்கு உரமானவர்கள். அவர்கள் சிந்திய செங்குருதியால் மலையகமண் செம்மண்ணானது. (செம்மண்- சிவந்தமண்; வளமான மண்ணுமாகும்) தமிழர்களின் இவ்வுழைப் புத்திறனை 'அவனுக்கும் ரப்பருக்கும் மாற்றம் காணேன்' என அழுத்தமுற, அழகுறக் கூறியுள்ளார் கவிஞர். இவ்வுவமை,

"ஒரு நாட்டின், ஒரு குறிப்பிட்ட காலத்தின் உள்ளீடான
வரலாறு, எண்ணங்கள், உணர்ச்சிகள் ஆகியவற்றைக்
கவிதை வாயிலாகத்தான் அறியமுடியும்" 48

என்னும் கருத்தை அரண்செய்கிறது.

அன்பானந்தன் கவிதைகள் எளியவை ; இனியவை. சிறிய சிறிய சொற்கள் மூலம் பெரிய - ஆற்றல் மிக்க கருத்துகளைச் சொல்வதில் வல்லவர் அன்பானந்தன். இச்சிறிய- எளிய சொல்லாட்சிகளால் பள்ளி மாணவரும் பயிலத்தக்க எளிமையுடன் இவர் கவிதைகள் திகழ்கின்றன. பேச்சுவழக்கிலும் கவிஞர் கவிதையைப் படைத்துள்ளமைக்கு 'வெள்ளம் வரவேணுமுங்க' என்னும் கவிதை சான்றாகிறது. சஞ்சியிலே வந்த பாட்டாளி ஒருவரின் சொந்தவாழ்வைக் கூறும் சோகக்கவிதை இது. இக்கவிதையை சா. ஆ அன்பானந்தனின் சுயவரலாறாகக் கொள் ளுதற்கும் இடமுண்டு. ஏனெனில் அன்பானந்தனின் தந்தைபெயரும் சாமிநாதன் என்பதாகும். இப்பெயரொற் றுமையினால் இக்கவிதையை அன்பானந்தனின் சுயவரலாற்றாகக் கூறலாம். தமிழர் நிலை மாறிப் புதிய நிலை உருவாகவேண்டும் என்பதனை 'வெள்ளம்' என்னும் குறியீட்டால் புலப்படுத்துகிறார். ஆறுவிடு தூது, வீறு பெற்ற மகளிர் கும்மி, பாவியங்கள் ஆகியவை வெவ்வேறு இலக்கிய வடிவங்கள்.

"எழுத்தாளன்' என்ற கவிதையில் இலட்சியஎழுத்தாளனை இனங்காட்டுகிறார் கவிஞர்.

"பணமென்னும் பாவைவிழி மாறும்
பழகாத நெஞ்சத்தை வென்றே
இனங்காக்க மொழிகாக்க ஞால
எழிற்காக்க உயிலெழுதுவானே
. . . . . . . . . . . . . . . . . . . .
. . . . . . . . . . . . . . . . . . . .
ஆள்கின்ற கொள்கையிலே ஆவி
ஆழ்த்திட்ட எழுத்தாள வீரன்" 49

இவ்வரிகள் சா.ஆ.அன்பானந்தனுக்குச் செவ்வையாய்ப் பொருந்துவன.

"அந்த வழியினில் உலக நாதனும்
சந்தனம் போற்கவி காரைக் கிழாரும்
முத்துப் போல்கவி முத்தைய னாரும்
கத்துங் கடலாம் காபெரு மாளும்
முழக்கும் முரசும் சங்குதிரு வரசும்
வழங்கும் கவிதைகள் வண்ண மலேசிய
வாழ்வைத் துலக்கும் வலிமை உடையன
. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .
. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .
அன்னவ ரோடு சின்னவன் யானும்
முன்னெழுந் தொருகவி யாகிடு வேனே"50

எனக் கவிஞர் அடக்கத்துடனும், அமைதியுடனும் கூறினாலும் 'நயனங்கள்' என்னும் இக்கவிதைத்தொகுப்பின் வழி அன்பானந்தனின் அளப்பரும் சமூகப் பற்றும், அடங்காக் (சொல்லில்) கவியாற்றலும், தூய நெஞ்சும், தொண்டுள்ளமும், மொழித்திறமும் செவ்விதின் வெளிப்படுகின்றன. துணிவு கொண்ட நற்கவியாய் மலேசியத் தமிழிலக்கிய உலகில் என்றென்றும் வாழும் மங்காப்பெருமை இவருக்குண்டு.

**சா-ஆ. அன்பானந்தனின் கட்டுரை வன்மை:**

மலேசியத் தமிழ் இலக்கிய வளர்ச்சியில் கட்டுரை இலக்கிய வகையும் தளர்நடையிட்டு நடைபழகும் குழந்தையின் நடையை ஒத்ததாகவே விளங்கிற்று. தமிழ்க்காவலரும், புதிய சமுதாயம் என்னும் இதழின் ஆசிரியருமான திரு. முருகு சுப்பிரமணியனும் கட்டுரை

இலக்கிய வளர்ச்சியினைப் பற்றி இதே கருத்துடையவர். ஆகவின் அவ்வறிஞரின் கூற்று கீழ்கண்டாங்கு அமைகிறது.

> "கதை, கவிதை ஆகியவற்றைப் போன்று இலக்கியத்தின்
> ஒரு கூறான கட்டுரை இங்கு அத்துணை
> வளர்ச்சி அடையவில்லை என்பதை இலக்கிய
> ஆய்வாளர்களில் பெரும்பாலோர் ஒப்புவர்.
> தவிரவும், கதை - கவிதைகள் நூல் வடிவம்
> பெற்றுவரும் அளவுக்குக் கட்டுரைகள் நூல்
> வடிவம் பெறுகின்றன என்றும் கூறமுடியாது"51

இக்குறையினை ஓரளவு போக்க முனைந்துள்ளது சுங்கைவே சுபாங் இளைஞர் மணிமன்றம். சமூகக்கலைமாமணி சா. ஆ. அன்பானந்தனின் கட்டுரைகள் சிலவற்றைத் தொகுத்து நூலுருப்பெறச் செய்துள்ளது. தமிழ்ச்சமுதாய எழுச்சிக்காகத் திரு. அன்பானந்தன் பல்லாற்றானும் பாங்குறப் பணியாற்றிய பான்மையை 'நான்யார்?' என்னும் கட்டுரைத்தொகுப்பு சிறப்புற விளக்குகிறது.

நான் யார்? என்னும் கட்டுரைத் தொகுப்பில் ஆறு கட்டுரைகள் அமைந்துள்ளன. தமிழ்ச்சமுதாயம் எவ்வெத் துறைகளில் சிந்திக்க வேண்டும்? எவ்வாறு செயல்பட வேண்டும்? என்ற எண்ணங்களை இவ் ஆறு கட்டுரைகளிலும் வெளிப்படுத் தியுள்ளார் சா. ஆ. அன்பானந்தன்.

முதற்கட்டுரையாக அமைவது 'பிறமொழிப்பயிற்சி' என்னும் கட்டுரையாகும். மலையகத்தில் வாழும் தமிழர்களில் பெரும் பாலோர் பிறமொழிப்பயிற்சி பெறவேண்டும்; இப்பயிற்சி ஒன்றினால்தான் செம்மாந்த இலக்கியங்கள் கொண்ட செந்தமிழைப் பாரறியச் செய்யமுடியும் என நம்புகிறார் அன்பானந்தன். இதற்கு அரணாகப் பாரதி, பாரதிதாசன் ஆகியோரின் கனவுகளை மேற்கோள் காட்டுவர்.

மலையகத்தைப் பொறுத்தவரை இனிய நம் தமிழ்மொழியை 'கூலிக்காரன் மொழியாகவே' மற்ற இனத்தார் காண்கின்றனரே தவிர அதன் உண்மை வளத்தை- உயரிய நிலையை அறிந்தாரில்லை. 'சொல்லில் உயர்வு தமிழ்ச்சொல்லே' என்பதைத், தமிழைப் பழிக்கும்'பாமரர்களிடம்' அறிவுறுத்தப் பிறமொழிப் பயிற்சி இன்றி யமையாதது; நம் இலக்கியங்களின் பெருமையை ஆங்கிலேயர்களுக்கு அறிவுறுத்திய ஜி. யூ. போப், ஏ.கே. ராமானுஜம் ஆகிய இவர்களை முன்மாதிரியாகக் கொண்டு பிறமொழியில் தமிழிலக்கியங்களை மொழிபெயர்க்கவேண்டும். இதனை,

"இந்நாட்டிலும் நமது அரும் இலக்கியங்களை
நமது அருநெறி வளர்த்த பெரியோர்களை, கவிமக்களை
தேசியமொழிதெரிந்தோர் அறிமுகப்படுத்த வேண்டும்.
இப்போதைக்கு இப்பணி மிகவும் நலம் பயக்கும்.
மலாய்க்கார அன்பர்கள் நம்மைப்பற்றி, நம்
இலக்கியங்கள் பற்றி, நம் கவிஞர்களைப் பற்றி
அறிந்திட அவாவுடையவர்களாக இருக்கின்றனர்.
என்பதும் புலனாகின்றது. இந்தச் சூழ்நிலையைப்
பயன்படுத்தித் தேசியமொழியிலும், தேசிய
மொழி இலக்கியங்களைத் தமிழிலும் மொழிபெயர்த்துக்
கொடுப்பது மிகவும் பயனுடையதாக இருக்கும் "52

என்பர் அன்பானந்தன். இக்கருத்தினை வலியுறுத்துவதற்கு மற்றொரு முக்கியக் காரணம் உண்டு. தமிழர்கள் பலர் மலேசியக் குடிமக்களாயிருந்தும் தேசியமொழியைக் கற்பதும் இல்லை; பேசுவதும் இல்லை; தம் பிள்ளைகளை ஊக்குவிப்பதும் இல்லை. தேசியமொழித் தேர்ச்சி இன்மையினால் தமிழர்கள் இழந்த வாய்ப்புகள் பலப்பல. ஆகலின் தமிழர்கள் தேசியமொழியை நன் முறையில் கற்கவேண்டும் என்னும் நோக்குடன் அன்பானந்தன் பிறமொழிப்பயிற்சியை அதிகமாக வலியுறுத்திருக்க இடமுண்டு. ஏனெனில் மலேசியத்தமிழ்ப் படைப்புகளில் அவ்வப்போது இப்பிரச்சினை எதிரொலிப்பதைக் காணலாம்.

"தாயெழிற் றமிழை என்றன்
தமிழரின் கவிதை தன்னை
ஆயிரம் மொழியிற் காண
இப்புவி அவாவிற் றென்ற
தோயுறும் மதுவின் ஆறு
தொடர்ந் தென்றன் செவியில்வந்து
பாயுநாள் எந்த நாளோ
ஆரிதைப் பகர்வார் இங்கு" 53

என்னும் பாவேந்தரின் வேட்கை சா.ஆ. ஆன்பானந்தனின் முதற்கட்டுரையில் ஒலிக்கிறது. 'நான் யார்' எனத் தாமே வினவிக் கொள்ளும் அன்பானந்தனை மொழிப்பற்று மிக்கவராக -மொழியின் வளர்ச்சிக்கு ஆக்ககரமான அறிவுரை கூறுபவராக இனங்காட்டுகிறது முதற்கட்டுரை.

'பொதுவாழ்வில் இளைஞர் கடமை' என்னும் கட்டுரை இளைஞர்களின் கடமையை வலியுறுத்துவதாக மட்டும் அமையாமல், இளைஞர்களின் ஆற்றலை உணர்த்தி, அவர்களைப் பொது வாழ்வில் நாட்டங்கொள்ளச் செய்யும் கட்டுரையாகவும் அமைகிறது. கவிஞர் அன்பானந்தனின் சோர்விலாச் சொல் வன்மைக்கு இக்கட்டுரை ஓர் உரைகல் ஆகும். தொண்டர்கள் அடிக்கடி 'நேற்று நான் யார்? இன்று நான் யார்? என்பதைச் சிந்திக்க வேண்டுமென நினைவூட்டுகிறார். இக்கட்டுரையின் வாயிலாக நான் யார்? என்னும் வினாவிற்குக் கரவற்ற, தூயஉள்ளம் கொண்ட தொண்டராகச் 'சமூகக்கலைமாமணி' அறிமுகமாகிறார்.

'திருநாள் சிந்தனைகள்' என்பது மூன்றாம் கட்டுரை. பொது வாழ்வு பற்றிச் சிந்திக்கும் போது 'நான்' என்னும் தன்முனைப்பை நீக்கி நாம் எனப் பொதுமையுணர்வுடன் ஒன்றுபடவேண்டும். இதற்கு வழிவகுப்பது தமிழர் திருநாள். நான், நாம் ஆகிய இரண்டிற்குமிடையே உள்ள வேறு பாட்டைக் கருத்தாழத்துடன் விளக்குகிறார் அன் பானந்தன்.

" 'நான்' என்பவனை விட நாம் என்பவனே
ஆற்றல் உள்ளவன். நான் என்பவன் காண்பது
ஒரு நாளைய வாழ்வு. நாம் என்பவன்
காண்பது நிரந்தர வாழ்வு" 54

இக்கட்டுரையில் குறள்வழிச்சிந்தனைகளைத் திருநாள் சிந்தனை களாகத் தருகின்றார் அன்பானந்தன். ஆசிரியரின் நடைநலத்துக்கு இக் கட்டுரை நற்சான்றாம். உருவக அழகு செறிவுற அமைந்துள்ள இக்கட்டுரை,

"பொதுவாழ்க்கை ஒரு புனிதப்பயணம். அதிலே
கரவுக்கு இடமே இல்லை. கடமைக்கே முதலிடம்.
கைம்மாறு அதன் போர்வையல்ல/sic/யன்று செய்வதும்
மறப்பதும் அதன் தத்துவங்கள்" 55

என்னும் சிந்தனையை வழங்குகிறது. தொண்டுலகிற்கு வருவோர் இச்சிந்தனையைத் தங்கள் சிந்தையில் தேக்கினால் தமிழர் வாழ்வில் ஒவ்வொருநாளும் திருநாளேயாம்!

இளைஞர்களை நம்பியே எதிர்காலச் சமுதாயம் இருக்கின்றது என்பதனை வாய்ப்புக் கிட்டிய இடத்திலெல்லாம் வலியுறுத்து கிறார்.சா.ஆ. அன்பானந்தன். கண்ணாடிப்பாத்திரம் போன்று

கவனமாகக் கவனிக்கப்பட வேண்டியவர்கள் இளைஞர்கள். இவர்கள், கீழறுப்பு வேலைகளைச் செய்வோரிடம் பலியாகிவிடக்கூடாது.

"உள்நாட்டுத் தலைவர்களைப் பறவைகளுக்கு ஒப்பிட்டால், கீழறுப்புவாதிகளை எலிகளுக்கும் இன்னபிற பயிரழிக்கும் பூச்சிகளுக்கும் ஒப்பிடலாம். பறவைகளைக் கவணெறிந்து துரத்திக்கொண்டே இருக்கலாம். வேரை அறுக்கும் எலிகளை விரட்ட அண்ட முடியாத தடுப்பு மருந்துகளைத் தெளிக்க வேண்டும். இல்லாவிட்டால் பலனை உழவன் அனுபவிக்க முடியாது. வந்துபோகும் தலைவர்களும், கீழறுப்புச் சக்திகளும் அனுபவித்துக் கொண்டுபோய்விடுவர். பயிர்களும் வீணாகிவிடும்" 56

அரசியலுக்குச் சரியான விளக்கத்தை வான்புகழ் வள்ளுவத்தின் வழிநின்று விளக்கிய அன்பானந்தன், அரசியலில் பங்கேற்கும் அருகதை உடையவர் யார்? அரசியலில் இறங்கக்கூடாதவர் யார்? என்றும் அழகுற விளக்குவர்.

"புனிதர்கள்தாம் அரசியலில் அரங்கேறவேண்டும். புரட்டர்கள் அரசியலில் அனுமதிக்கப்படக்கூடாது. புடம்போட்ட தங்கங்கள் தாம் அங்கே அமர வேண்டும். மாற்றுக்குறைந்த பித்தளைகள் வரவேற்கப்படக்கூடாது." 57

திருநாள் சிந்தனைகளின் வழி, 'நான் யார்'? என்னும் அன்பானந்தனின் வினாவிற்குத் தூயஉள்ளம்; அன்புள்ளம், பெரியஉள்ளம் கொண்ட புனிதர்தாம் சா.ஆ. அன்பானந்தன் எனத் துணிந்து விடையிறுக்கலாம்.

'மலேசியாவில் தமிழ் நாடகம்' என்னும் நான்காம் கட்டுரை சா.ஆ. அன்பானந்தனின் அறிவாற்றலுக்கும், ஆய்வுத் திறத்துக்கும் கட்டியம் கூறுவதாகும். மலேசியத் தமிழ் நாடகத்துறையின் தோற்றம், நாடகத்துறையின் வளர்ச்சி, இத்துறை எதிர்நோக்கிய சிக்கல்கள், நாடகக்கலைஞர்கள், தமிழக நாடகத்துறையின் செல்வாக்கு ஆகிய பல கோணங்களில், பல செய்திகளை ஆய்வுக்கண்ணோட்டத்துடன்

கூறியுள்ளார். அமரர் ஆழி அருள்தாசனின் நாடகப்பணியை உளந் திறந்து பாராட்டியுள்ளார் ஆசிரியர். சிங்கையில் பல நாடக மன்றங்கள் சிறப்பாக இயங்கி வந்த செய்தியையும் சுட்ட மறந்தாரில்லை. மேடை நாடகம் பற்றி மட்டும் கூறாது வானொலி, தொலைக் காட்சி நாடகங்களைப் பற்றியும் இக்கட்டுரையில் கூறியுள்ளமையால் இது மலேசிய நாடகத்துறை பற்றி அறியவிழைவார்க்கு முழுமையாகப் பயன்தரவல்ல கட்டுரையாகும்.

'மனம் எனும் விளக்கு' என்னும் ஐந்தாம் கட்டுரை உருவகத் தலைப்புடையது. மனம் தூய்மையாக இருக்குமாயின் அதுவே இறைவன் உறையுமிடம் என்பதனைப் பக்தி இலக்கியங்களை மேற்கோள் காட்டி விளக்கியுள்ளார் ஆசிரியர். ஒருவனின் பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் மனமே காரணமாக உள்ளதனைச் சால்புற விளக்கி யுள்ளார். நான் யார்? என்னும் அன்பானந்தனின் வினாவிற்கு அவர் சிறந்த இலக்கியப் புலமையாளர் என விடையிறுக்குமாறு இக்கட்டுரை அமைந்துள்ளது.

'நான் யார்'? என்னும் கட்டுரை இறுதியாக அமைவது. இஃது அன்பானந்தனின் கோட்பாடுகளை உறுதியுடன் விளக்குவதாகும். தனிமனிதன், குடும்பம், சமுதாயம், நாடு, மொழி என ஒவ்வொரு துறையிலும் ஒவ்வொருவரும் ஆற்றவேண்டிய பணிகளை - இப்ப ணிகளை ஆற்ற வேண்டிய முறைகளை - ஒவ்வொரு துறைக்கும் உள்ள பிணைப்பை மிக அழகாக விளக்கியுள்ளார் அன்பானந்தன். அன்பானந் தனின் விழுமிய கொள்கையாக அமைந்துள்ள "நாம் பொய்; சேவையே மெய்" என்னும் ஒப்பற்ற திருவாசகம் இக்கட்டுரையில் பன்முறை ஒலிக்கின்றது. தமிழ்ச்சமுதாயத்திற்கு அன்பானந்தன் அறிவுறுத்தும் உயரிய உண்மையாக,

> " 'நான்' என்னும் நான் நிச்சயம் அழிந்து விடுவேன்!
> ஆனால் 'நான்' புரியும் சேவைகளோ என்றென்றும்
> அழியாமல் நிற்கும்" 58

என்னும் பகுதி அமைகிறது.

சுருங்கக்கூறின் சா.ஆ. அன்பானந்தனின் கலைபயில் தெளி வையும், கட்டுரைவன்மையையும், சமூக அக்கறையையும் இக்கட்டுரை நூல் தெள்ளிதின் விளக்குகின்றது. ஆசிரியரின் ஆளுமை, அவர்தம் நோக்கம், கட்டுரைப்பொருளைப் பற்றிய ஆசிரியரின் கருத்து, வாழ்வைப் பற்றி அவர் கொண்டிருந்த கருத்து, பொருள் விளக்கம் (exposition), சான்று காட்டி விளக்குதல் (illustration),

தெளிவுபடக்கூறுதல் (clarity) முதலிய கட்டுரை இலக்கியக் கூறுகள் இத்தொகுப்பில் செவ்வையாய்ப் பொருந்தியுள.

அன்பானந்தன் - சிறுகதை எழுத்தாளர்:

'காலத்தின் விளக்கு' என்னும் பெயருடைய சிறுகதைத் தொகுப்பு சா.ஆ. அன்பானந்தன் சிறந்த சிறுகதை எழுத்தாளர் என்பதற்குத் தக்கதொரு சான்றாகும். பொங்கிவழியும் சா.ஆ. அன்பானந்தனின் சமுதாய உணர்வினை இத்தொகுப்பு நன்முறையில் வெளிப்படுத்தி யுள்ளது. மலேசியத் தமிழ்ச் சமூகத்துடன் இரண்டறக் கலந்துவிட்ட சிறுகதைத் துறையில் அன்பானந்தனின் பங்கு அளப்பரியது. எண்ணற்ற சிறுகதைகளை அவர் எழுதியிருப்பினும் பதினைந்து கதைகளை மட்டும் தொகுத்து நூலாக வெளியிட்டுள்ளனர் பத்துமலைத் தமிழ் இளைஞர் மணிமன்றத்தினர்.

எவ்வகைப் படைப்பிலக்கியமாயினும் அதன் ஆன்மாவாகத் திகழ்வது உள்ளடக்கமே. சிறந்த சிறுகதை எழுத்தாளரான அகிலன் உள்ளடக்கத்திற்கு முதலிடம் தரும் காந்தியக்கொள்கை உடையவர். அன்னார் கீழ்க்கண்டவாறு கருத்துரைப்பர்.

"உருவ அமைதி எனும் கலைக்கட்டுக்கோப்பின்
புற அழகைவிட உள்ளடக்கம் என்னும்
கருத்தழகுக்கு முதலிடம் தரவேண்டும் என்பது
காந்தியக்கலைக்கொள்கை, . . . . . .
. . . . . கலைப்படைப்பின் உருவம், உத்தி,
வெளிப்பூச்சு பற்றி மட்டுமே மிகுதியாகப் பேசும்
(முன்னாள்) எழுத்தாளர்கள் அதன் ஆன்மாவான
உள்ளடக்கம் பற்றி மூச்சு விடுவதில்லை" 59

அகிலனின் இக்கருத்துக்கியையச் சமுதாயச் சிக்கல்களையே தம் கதைகளுக்கு உள்ளடக்கமாகத் தேர்ந்தெடுத்துள்ளார் சா.ஆ. அன்பானந்தன். இத்தொகுப்பில் உள்ள பதினைந்து கதைகளுள் இரண்டாவது கதையைத் தவிர (நாற்பத்து நான்கு கோடிக் குண்டுகள்) எஞ்சியவை அனைத்தும் மலேசியத் தமிழ்ச் சமுதாயத்தினையே களமாகக் கொண்டு பிறந்தவை. சமுதாயம் எதிர்நோக்கும் சிக்கல் களையே மையமாகக் கொண்டவை.

'நாற்பத்து நான்கு கோடிக் குண்டுகள்,' இந்திய தேசத்தந்தையான மகாத்மா காந்தியடிகள் சுட்டுக்கொல்லப்பட்ட நிகழ்ச்சியை மையமாகக் கொண்டு கற்பனையாகப் பின்னப்பட்ட கதை. இது சா.ஆ. அன்பானந்தனின் காந்தியப்பற்றைக் காட்டுகின்றது.

மலேசியத் தமிழ்ச் சமுதாயம் பற்றிய பல்வேறு கதைகளும் அச்சமுதாயம் எதிர்நோக்கிய பல்வேறு பிரச்னைகளையே பிரதிப லிக்கின்றன. தோட்டப்புறங்களையே நம்பி ஆண்டாண்டுக் காலமாக வாழ்ந்துவரும் தோட்டப்புற மக்களைத் 'தோட்டத் துண்டாடல்' எவ்வாறு பாதித்தது என்பதனைக் 'காலத்தின் விளக்கு' என்னும் கதை தெளிவுறக் காட்டுகின்றது. எழுத்தாளர்களுள் சிலர் சமுதாயச் சிக்கல்களைக் காட்டியதோடு அமைந்து விடுவர்; சிலர் சிக்கல்களுக்குத் தீர்வும் கூறுவர். இவ்விருவகையினருள்ளும் சா.ஆ. அன்பானந்தன் இரண்டாம் பிரிவினர் என்பதைக் காலத்தின் விளக்கு என்னும் முதற்கதை காட்டுகிறது. பால்மரம் சீவுவது, செம்பனைத்தோட்டங் களில் வேலைசெய்வது, செடியடிப்பது எனத் தோட்டப்புற வேலைகளை மட்டுமே நம்பி, உழைத்து வாழும் தோட்டப்புற மக்கள் தோட்டத்துண் டாடலால் பாதிக்கப்படும் அவலத்தை மட்டும் காட்டாது அதற்குரிய தீர்வுகள் இரண்டினை ஆசிரியர் இக்கதையில் வெளிப்படுத்தியுள்ளார்.

1. தோட்டத் துண்டாடலைத் தவிர்த்துத்
   தோட்டத் தொழிலாளியைத் தோட்ட
   முதலாளியாக்கும் கூட்டுறவுத்திட்டம்.
2. தோட்டப்புற வேலைகளைத் தவிர எஞ்சிய
   வேலைகளைச் செய்யவும் தோட்டத்
   தொழிலாளிகள் தம்மை ஆயத்தப்படுத்திக்
   கொள்ளவேண்டும்.

இவ்விரு தீர்வுகளும் நிரந்தரமான, துல்லியமான தீர்வுகள். இவற்றைக் காலத்தின் விளக்கு செவ்வையாய்க் காட்டுகிறது. தோட்டப்புறத் தமிழ்ச்சமுதாயத்திற்கு எதிர்காலவாழ்வை நிச்சயமானதாக ஆக்கிக் கொள்ள ஒளிகாட்டும் 'காலத்தின் விளக்கு' எச்சரிக்கை விளக்காகவும் அமைகிறது. காலத்தின் விளக்கு சா. ஆ. அன்பானந்தனின் சமூகப் பொறுப்புணர்வையும் காட்டுகிறது.

எழுத்தாளரின் பொறுப்புணர்வு என்ன? என்பதனை விளக்குவது உணர்ச்சிக்கதை. எழுத்தாளன் சமூகப்பொறுப் புணர்வோடு செயல்பட வேண்டியதன் அவசியத்தை அழகுறச் சித்திரிப்பது உணர்ச்சிக்கதை. எழுதுகோல் மூலம் மக்கள் மனங்களில் நச்சுவிதைகளை விதைக்கக் கூடாது. சமுதாய மேம்பாடு கருதி ஆக்ககரமான வழிகளில் எழுது கோல் இயங்கவேண்டும் என்ற உண்மைகளை உணர்த்த 'உணர்ச் சிக்கதை' நல்ல கருவி. பாலியல் கதைகளை எழுதி 'மட்டரகமான' உணர்ச்சிகளைத் தூண்டிவிடும் எழுத்தாளர் களுக்குச் சாட்டையடி கொடுப்பது போன்று அமைகிறது 'உணர்ச்சிக்கதை'. பக்கத்துவீட்டு

இளைஞனின் உணர்வுகளைத் தூண்டிய ‘எழுத்தாளர் பேனா’ அவ்விளைஞனின் உணர்வு களுக்குத் தன் மனைவியே பலியாவதனைக் காண்கிறார். பாலுணர்வினைத் தூண்டும் உணர்ச்சிக்கதைக்கு இலக்கியவட்டம் வழங்கும் பாராட்டு, சா.ஆ. அன்பானந்தனின் எள்ளலுக்கு (நையாண்டிக்கு) நல்ல சான்று. நல்ல கதை எழுதுவது கயிற்றின் மேல் நடக்கும் வித்தை; இஃது எல்லோருக்கும் எளிதில் கைவரப்பெறாது; அவ்வாறு கைவரப்பெற்ற எழுத்தாளர்கள் விழலுக்கு நீர்பாய்ச்சி மாயக்கூடாது என்ற உண்மைகளை நகைச்சுவையோடு காட்டியுள்ளார் சா. ஆ. அன்பானந்தன்.

தமிழ்ச்சமுதாயத்தில் மலிந்துள்ள மூடநம்பிக்கைகள் அச்சமு தாயத்தின் முன்னேற்றத்திற்கு முட்டுகட்டைகளாக விளங்குவதனை மையமாகக்கொண்டு தடங்கல் என்ற சிறுகதை எழுதப்பட்டுள்ளது. அறிவுக்குப் பொருந்தாத, போலிச் சடங்கு களையும், பொருளற்ற போலி வழக்குகளையும் பக்தியின் பெயரால் பின்பற்றிக் கண்மூடித்தனமாகச் சமுதாயம் செயல்படுவதனைத் தடங்கல் என்னும் கதை விவரிக்கின்றது. முதிய தலைமுறை மட்டுமின்றி இளைய தலைமுறையும் மூட நம்பிக்கைகளில் மூழ்கிக்கிடப்பதனை முழுமூச்சோடு சாடுகிறார். சா.ஆ. அன்பானந்தன் பகுத்தறிவு இயக்கத்தைச் சேர்ந்தவர் என்ற காரணத்திற்காக மட்டும் மூடநம்பிக்கைகளைச் சாடுகிறார் என்று கூறுவது அறிவுடைமையன்று. அறிவாராய்ச்சியின் துணை கொண்டு மூடநம்பிக்கைகள் பொய்யானவை; போலியானவை என்பதனை அன்பானந்தன் விளக்கி உள்ளார். கறும்பூனை எலி யொன்றைத் துரத்திக்கொண்டுசென்ற நிகழ்ச்சியின் வாயிலாக, வாழ்க்கைத் தேவைகளும், குடும்பகடமைகளும் எதிர்ப்படும்போது மூடநம் பிக்கைகள் முடமாகிவிடுகின்றன என்பதனை அழகுறக் கலைநயத்துடன் சித்திரித்துள்ளார். அறிவியல் வளர்ந்துள்ள இக்காலத்திலும் போலிச் சடங்குகளில் மூழ்கிப்போய், முன்னேறும் வாய்ப்பைக் கைநழுவவிடுவது பொருந்தாது என்ற படிப்பினையை இக்கதையின் வழி கூறியுள்ளார் ஆசிரியர்.

சமுதாயத்தில் காணப்படும் ஏழை-பணக்காரன் வேறு பாட்டைக் காட்டுவது இடைவேளி என்னும் கதை. பொருளாதார ஏற்றத்தாழ்வை மையமாய்க் கொண்டு இக்கதையில் சந்தைக்குச் செல்லும் நிகழ்ச்சி ஒன்றே இடம்பெறுகிறது. இக்கதையில்

சித்திரித்துள்ளார். அறிவியல் வளர்ந்துள்ள இக்காலத்திலும் போலிச் சடங்குகளில் மூழ்கிப்போய், முன்னேறும் வாய்ப்பைக் கைநழுவவிடுவது பொருந்தாது என்ற படிப்பினையை இக்கதையின்

வழி கூறியுள்ளார் ஆசிரியர். சமுதாயத்தில் காணப்படும் ஏழை-பணக்காரன் வேறுபாட்டைக் காட்டுவது இடைவேளி என்னும் கதை. பொருளாதார ஏற்றத்தாழ்வை மையமாய்க் கொண்டு இக்கதையில் சந்தைக்குச் செல்லும் நிகழ்ச்சி ஒன்றே இடம்பெறுகிறது. இக்கதையில் காசிம் சுபோ என்ற ஆயிரம் வெள்ளிச் சம்பளக்காரரும், யாக்கோப் ரஷீது என்ற நூற்றிருபது வெள்ளிச் சம்பளக்கார்ரும் சந்தைக்குச் செல்லும் நிகழ்ச்சியின் வாயிலாகப் பொருளாதார இடைவெளி சிறப்புறச் சித்திரிக்கப்பட்டுள்ளது.

காசிம்சுபோ தான் வளர்க்கும் பூனைக்கும் மீனுக்கும் வாங்கிய அவித்த மீனையும் கீரையையும்விடத் தரங்குறைந்த கீரையையும் மீனையும் தன் குடும்பத்துக்காக வாங்குகிறான் யாக்கோப் ரஷீது. நடைமுறை வாழ்வில் உள்ள இவ்விடைவேளி தூர்க்கப்பட வேண்டும் என்ற ஆசிரியரின் எதிர்பார்ப்பும் இக்கதையில் எதிரொலிக்கிறது.

நிர்வாகிகளுக்கொரு நியதி; தொழிலாளிகளுக்கு ஒரு நியதி என்ற மனப்பாங்கு மாறவேண்டும்;. வேலை நேரத்தில் சொந்த வேலைகளைச் செய்வது போன்ற ஒழுங்கீனங்கள் களையப்பட வேண்டும் ஆகிய கருத்துகளை இக்கதை வலியுறுத்துகிறது.

தாங்குநிலம் எனற கதையின் வழியே தோட்டத் துண்டாடலின் கொடுமை சித்திரிக் கப்படுறது. ரப்பர்த் தோட்ட வேலைகளை மட்டும் நம்பித் தமிழ்ச்சமுதாயம் வாழக்கூடாது என்ற எச்சரிக்கை இக்கதை யிலும் ஒலிக்கிறது. தமிழ்ச்சமுதாயத்தின் உழைப்பு சுரண்டப்படு வதனை,

> “அந்தத் தோட்டத்துமண், ஈயக்கப்பலால் உழப்-
> பட்டு, உள்ள செல்வ வளமெல்லாம் சுத்தமாகக்
> கழுவப்பட்டு வெறும் வெள்ளை மணலாக
> விடப்பட்டது தெரிகிறது. இருந்தும் ஒரு
> சமுதாயம் வீடுகட்டி வாழத் தன்னையே
> இன்னும் ‘தாங்குநிலமாக’ வழங்கிக்கொண்டிருக்கக்
> காண்கிறபோது”60

என வேதனை தோய்ந்த நெஞ்சுடன் வெளிப்படுத்தி உள்ளார் ஆசிரியர்.

ஓடும்பிள்ளையான மாடசாமியின் வாழ்க்கையையும், அவன் தந்தையான கோவிந்தனின் ஒடும்பிள்ளைத் தொழிலைப் பற்றியும், தோட்டப்புற வாழ்வோடு ஒன்றிப் போய்விட்ட மாடசாமியின் மனித நேயத்தையும் இக்கதை சிறப்புற விவரிக்கிறது. இக்கதையில்

ஓடும்பிள்ளையான மாடசாமியின் பண்புநலங்கள் விவரிக்கப் படுகின்றன. கதை நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றும் மாடசாமியின் பண்புகளை விளக்கும் வகையிலேயே அமைந் துள்ளன. ஆகவே ஓடும்பிள்ளை என்ற கதை பண்புநலக் கதையாகும். இக்கதையின் கரு கனமானதில்லை என்றாலும் தோட்டப்புறவாழ்வில் இன்பம், துன்பம் அனைத்திலும் பங்கு பெறும் ஓடும்பிள்ளையை ஊராருக்கு ஓடும்பிள்ளையாகத் தகவல் தெரிவித்தவன்-தன் சொந்தத் தந்தையின் இறப்பையும் தெரிவிக்க வேண்டிய அவலத்தை அழகுறச் சித்திரிக்கிறது. மனிதநேயம், உற்றுழி உதவும் உயரிய உள்ளம், கடமை உணர்வு, இரக்கம் என அனைத்துப் பண்புகளும் கொண்ட மாடசாமி பாத்திரம் மறக்க இயலாப் பாத்திரமாகும்.

நாளைக்குத்தான் பேர் வைக்கப்போகிறார்களே என்ற கதையில் இருதயநோயாளி ஒருவரின் மனஉணர்வுகளை மிக அழகாகச், சமூகப் பிரக்ஞையுடன் வெளியிட்டுள்ளார் சா. ஆ. அன்பானந்தன். இருதய நோயாளி ஒருவர் மற்றொரு நோயாளியின் சிக்கலான நிலை கண்டு, துன்புற்று இறுதியில் இறந்தும் விடுகிறார். இக்கதையினை ஆழ்ந்து படிக்குங்கால் முதியோர்களின் பிரச்னையை முதுமைக்காலத்தில் பொருளா தாரச் சிக்கலோடு உடல்நோயும் வருத்தும் விதத்தை அறிந்து கொள்கிறோம். முதியவர்களின் பிரச்னையை,

> "குழந்தையைக் கொஞ்சுகிற மனங்கள் கிழங்களைக்
> கொஞ்சுவதில்லையே - ஏன் அந்த வேறுபாடுதான் இதற்கும்
> தொடர்பு போலும்! வார்டில் பதிந்து விட்டுவிடுதல்
> என்பது இயல்பானது. ஆனால் அந்தப் பெரியவர்
> படும் வேதனையைக் கொண்டு கவனித்தால்
> தள்ளி விட்டுப் போய்விட்டார்களோ என்றுதான்
> எண்ணத் தோன்றுகிறது."61

என்று விளக்குகிறார் ஆசிரியர். சொந்தங்களைச் சுமையாகக் கருதும் மனநிலை இப்பகுதியின் மூலம் தெரியவருகிறது. கடமையுணர்வை மறந்து முதியோர்களைச் சுமையாகக் கருதும் உள்ளங்கள் நடைமுறை வாழ்வில் பெருகிவருவதை எண்ண இப்பிரச்னையின் தீவிரம் தெரியவரும்.

இக்கதையில் மனோநிலைச் சித்திரிப்பு மிகவும் சிறப்பாக அமைகிறது. ஓர் இருதய நோயாளியின் உயிர்ப் போராட்டத்தைக் காணும் மற்றோர் இருதய நோயாளியின் மனநிலை எவ்வாறிருக்கும்? என்பதை ஆசிரியர்

செவ்வையாய்ச் சித்திரித் துள்ளார். வருணனை நடை இக்கதையில் சிறந்துள்ளது.

அன்பானந்தனுக்கே உரிய எள்ளல்நடை இக்கதையில் அழகுற வெளிப்படுகிறது.

> "அதிலும் நான் வந்த இனமிருக்கிறதே, கஞ்சிக்கு வழியில்லையானாலும் கட்டுப்பாடின்றிப் பன்றிக் குட்டிகளை ஈன்று கொட்டிவிடும் இனமாயிற்றே! காமசூத்திரம் படைத்தளித்த பரம்பரைக்கே கட்டுப்பாடு என்றால் அந்த ரதிமன்மதன் கதையே எரிந்து போகட்டும்"62

பிறந்தநாள் விழாக்காலங்களில் மேனாட்டுநாகரிகமோகம் மேலோங்கி வருவதைக் கீழ்க்கண்டவாறு எள்ளி நகையாடுவர் ஆசிரியர்.

> "ஏற்கெனவே மகன் பிறந்த நாளைக் கொண்டாடத் திட்டமுண்டு . . . . . . . . அது வட்டத்திலிருக்கும் 'ஆண்டிகளை' எல்லாம் வரவழைக்க வேண்டும். 'ஆண்டி' என்றதும் நீங்கள் 'ஆண்டிப் பண்டாரங்களை' என்று நினைத்து விடாதீர்கள்." மாமி என்பவர்களைக் குழந்தைகள் ஆங்கிலப் பாணியில் ஓரேயடியாக ஆண்டிகளாகத் தான் அழைக்கிறார்கள்." 63

சா.ஆ. அன்பானந்தனின் மொழியுணர்வு இக்கதையில் தெற்றெனப் புலனாகிறது. "தாய்மொழியே படித்தறியாத சில ஜென்மங்கள் தேசியமொழியைப் பேசக்கூடத் தெரிந்திருக்கவில்லை' என்னும் வரிகளின் மூலம் தமிழ்ச்சமுதாயத்தின் மொழியுணர்வு எத்தகையது! என இனங்காட்டுவர்.

பாத்திரமே கதை கூறும் அகநோக்குநிலை உத்தி இக் கதையில் பயன்பட்டுள்ளது.

இருட்டுக்குள் இருக்கிறார்கள் என்னும் கதை சிவப்பு அடையாள அட்டை பெற்றவர்களின் துயரத்தைக் காட்டும் சொல்லோவியமாகும். ராமசாமி - நாகம்மாள் இணையர் சிவப்பு அடையாள அட்டை உடையவர்கள். இவர்களின் வாழ்க்கைப் பிரச்னையை ஆசிரியர் கீழ்க்கண்டவாறு வருணிப்பர்.

> "ஒரு கொன்ட்ரேட்டில் முயன்று பார்த்ததற்கு அங்கேயும் 'டேஞ்சர்' சிரிப்புத்தான். நீலம் இருந்தாலல்லவா

வேலை சிரிக்கும்?
ஒரு பெட்ரோல் ஸ்டேஷனில் வேலைக்கு முயன்று
பார்த்தானாம் . . . . . . . . "சிவப்பைக் காட்டுகிறாய்;
அனுப்பிவிட்டானாம்.
அட, அவன்தான் அப்படி என்றால் அவன் மனைவி
நாகம்மாவாவது நீலம் பூத்திருந்தாளா? அது
கூட இல்லை. அவளும் இந்த நாட்டுக்கு
ஒரு டேஞ்சர்தானாம்"64

மலேசிய மண்ணிலேயே பிறந்திருந்தாலும் அறியாமையால் குடியுரிமை பெறத் தவறிய இந்தியர்களின் எண்ணிக்கை மிகவும் அதிகமாகும். இருட்டுக்குள் இருக்கும் இச்சமுதாயத்தினர்க்காக ஆசிரியர் இக்கதையில் இரத்தக்கண்ணீர் வடித்துள்ளார். சிவப்பு அடையாளக் கார்டு பெற்ற கணவனின் அனுமதியோடு அவன் மனைவி சிவப்பு விளக்கு வாழ்க்கை நடத்துகிறாள். இவ் வவலத்தைக் களையத் தலைவர்கள் முயல வேண்டும். இஃது அரசியல்தலைவர்களின் தலையாய கடமை என்பதை நயமாக - நாசூக்காக வெளிப்படுத்துகிறார்.

"என் தலைவர்கள் இருட்டுக்குள் இருக்கிறார்கள்" 65

என்று ஆசிரியர் கூர்மையான தொடரைக் கொண்டு கதையை முடிக்கிறார். சமுதாயம் அறியாமை இருட்டில் ஆழ்ந்து தத்தளிக்க, அந்த அவலத் தைப் போக்க வேண்டிய அரசியல் தலைவர்களும் வேண்டுமென்றே இவ்வ வலநிலையை அறியாது உள்ளனர். இருட்டிலிருந்து மக்களை வெளிச்சத்திற்குக் கொண்டு வரவேண்டிய தலைவர்களே இருட்டில் இருந்தால் என்னாவது? எனச் சிந்திக்க வைக்கிறார் ஆசிரியர். ஆசிரியரின் சொற்கள் கூரிய அம்பினைப் போல் ஆற்றலுடன் பாய்கின்றன.

உடல் ஊனமுற்றோரின் வாழ்க்கைச் சிக்கல்களை உணர்த்தும் கதை ஏணிக்கோடு. நொண்டிச் சின்னம்மா கதையின் தலைவி. பால்வெட்டுத் தொழிலாளியான அவளை மணக்க முன்வந்த இளைஞனும் பின்வாங்குகிறான். அவள் கற்பொழுக்கத்தை ஐயுற்று அவ்விளைஞன் அவளை ஏற்றுக்கொள்ள மறுக்கிறான். வாழ்க்கை என்ற ஏணிக்கோடு இறுதிவரை சின்னம்மாவுக்கு எட்டவில்லை. சின்னம்மா போன்ற பெண்களின் வாழ்க்கையின் முடிவுதான் என்ன? இதனைக் குறியீடாகக் காட்டியுள்ளார் சா.ஆ. அன்பானந்தன்.

"சில நாட்கள் கழிந்தன. பதினோராம்
நம்பர் வெட்டுக் கிழமரங்களை அழிக்கப்

பாஷாணம் தெளிக்கப்பட்டது. அவற்றோடு வெட்டப்படாத அந்தத் தனிமரமும் பாஷாணத்தை ஏற்றுக் கொண்டது". 66

பாஷாணத்துக்குப் பலியான தனிமரம் சின்னம்மாவைக் குறிக்கும் குறியீடாகும். நொண்டிச் சின்னம்மாவும் சமுதாயம் என்ற நிரையிலே சேராத தனிமரமாகி இறப்புக்கு (தற்கொலைக்கு) உள்ளாகிறாள். இத்தகு அவல முடிவு நடப்பியலில் காணப்படும் நிதர்சனமான உண்மையாகும். குறியீட்டு உத்தியும் உருவக நடையும் இக்கதைக்கு அணி சேர்ப்பன. சான்றாக அமைகிறது கீழ்க்கண்ட பகுதி.

"ஊனம் என்னும் மீனாக்கொடியும், ஏழ்மை என்னும் கோரைப்புறகளும் தாம் அவளைச் சூழ்ந்திருக்கின்றன. ஆதரவு என்னும் நிரையில் அமையாமல் இருப்பதால் கவனிக்கப்படாமல் இருப்பதும் இயல்பாகிவிட்டது." 67

நொண்டிச் சின்னம்மாக்களை வாழவைக்காத சமுதாயத்தை ஆசிரியர் வினாக்கணைகளால் சுடுகிறார். 'நிலவில் களங்கம் உண்டு. ஆயின் அதற்காக அதனை அனுபவிக்காமல் இருக்கிறோமா?' என ஆசிரியர் வினவுவது நியாயமானதே! மேலும் சமுதாயம் பரந்த சிந்தனையின்றி முடமாகிப்போனதை, 'கால் முடமானவளை மனத்தில் முடமானவன் சபித்துவிட்டுப் போனான்' எனக் கூறியுள்ளமை நயமுடையது. ஆசிரியரின் சமுதாயஉணர்வுக்குச் சான்றாக அமைவது.

சட்டத்திற்கு என்ற சிறுகதை குடியுரிமையின் அவசியத்தையும், தேசியமொழியின் அவசியத்தையும் உணர்ந்து நடக்கவேண்டியது தமிழர்களின் பொறுப்பு என்பதைக் கூறும் கதையாகும். இப் பிரச்னையின் தீவிரம் கருதியே இக்கதையினைப் படைத்துள்ளார் ஆசிரியர். முன்னரே இச்சிக்கலை மையமாகக் கொண்ட கதை யொன்றை ஆசிரியர் படைத்திருப்பினும், சமுதாயம் இச்சிக்கலால் எவ்வாறு பாதிக்கப்பட்டது என்பதை இக்கதை வலியுறுத்துகிறது.

சத்தியம் சாகிறது என்னும் கதை அரசாங்க அலுவலகங்களில் நடக்கும் ஊழலை அம்பலப்படுத்துகிறது. ஆயின் இக்கதையில் ஆசிரியர் "இக்கதை தந்தித்துறை இலாகா சம்பந்தப்பட்ட கற்பனைக் கதை. இது /sic/ இஃது ஒரு தொழில் முறைக் கதையாக எழுதப்பட்டுள்ளது" 68 எனக் குறிப்பும் தருகிறார். தலைப்பே கதையின் போக்கை வெளிப்படையாகக் காட்டுகிறது.. இக்கதையை முடிக்கும்போது ஆசிரியர் நயமுற,

"அன்புமணி நிமிர்ந்து பார்த்தான். தலைக்கு மேலே பிரேம் போடப்பட்டிருந்த ருக்குன் நெகாரா கோட்பாடுகள் ஆடிக்கொண்டிருந்தன " 69

என்று முடிப்பர். பொதுவாக அன்பானந்தன் கதைகளில் ஓர்மை பொருந்தியிருப்பினும் தொழில்முறைக் கதையான இக்கதையில் இவ் ஓாமை சிறப்புற அமைந்துள்ளது.

தொழில்முறைக் கதையாதலால் இத்தொழிலுக்குரிய கலைச் சொற்களை ஆசிரியர் நயம்படக் கையாண்டுள்ளார். சா. ஆ. அன்பானந்தன் இத்துறையில் பல ஆண்டுகள் பணிபுரிந்தவர்; ஆகவே கலைச்சொற்களைப் பயன்படுத்தும் முறையில் அவருடைய அனுப வமுத்திரையைக் காணலாம். சான்றாக,

"அன்புமணி இத்தனை முக்கியத்துவம் பெற அவனிடம் தனிச்சிறப்பு எதுவும் இல்லை. அவனிடம் உள்ள ஒரே குணம் பெயருக்கேற்றாற்போல் எல்லாருடனும் அன்புடன் பழகுவது ஒன்றுதான். அதனால் எது-வானாலும் ஹன்ட்ரட்வே (நூறு வயர்கள்) வயரைப் போல் அன்புமணியைப் பின்னிக்கொள்வது அவனோடு டெலிகம்சில் வேலை பாாப்பவாகளின் இயல்பு" 70

என்னும் பகுதி அமைகிறது.

சமுதாயத்தலைவாகள் சமுதாய மேம்பாட்டுக்காக உழைத்துத் தம் உயிரையும் தியாகம் செய்கின்றனா. பொதுநலத்திற்காகப் பாடுபட்ட தன்னலமில்லாத் தலைவாகளின் குடும்பங்கள், அத்தலைவர்களின் மறைவுக்குப் பின்னாத் தேடுவாரற்று விடப்படுகின்றன. இத்தகு குடும்பம் ஒன்று தெரு விளக்கில் சித்திரிக்கப்படுகின்றது. இக்கதையின் வாயிலாக,

"சமுதாயத் தொண்டர்களை காப்பாத்துற பொறுப்பினைச் சமுதாயம் ஏத்துக்கணும்" 71

என்னும் கருத்து வலியுறுத்தப்படுகிறது.

தலைவர் உயிருடனிருக்கையில் திருவிளக்காகப் பொலிந்த அக்குடும்பம் தலைவர் மறைவுக்குப் பின் தெருவிளக்காக மாறுகிறது. தெருவிளக்கு என்று அக்குடும்பத்தை வருணிப் பதற்கும், இக்கதையின் தலைப்புப் பொருத்தத்திற்கும் கீழ்க்கண்ட பகுதி விளக்கமளிக்கிறது.

"இந்தக் கம்பத்து விளக்கு ஒளிவீசுது.
பக்கமெல்லாம் வெளிச்சம். ஆனா

கம்பத்துக்குக் கீழே இருட்டு; அது மாதிரி
என் புருஷன் ஊருக்குப் பாடுபட்டாரு.
வீட்டுக்குப் பாடுபடல்ல" 72

இச்சிறுகதையை நாடகவடிவில் எழுதியுள்ளார். காட்சிப் பகுப்புகளும், மேடைவிளக்கக் குறிப்புகளும் நாடகத்தைப் போன்றே இக்கதையில் அமைந்துள்ளன. முழுமையும் நாடகப் போக்கில் அமைக்காமல் நாடகக் கூறுகளைச் சிறுகதையில் புகுத்தியுள்ளார் ஆசிரியர். ஆகவே புதுமை புகுத்தவேண்டும் என்ற எண்ணத்தில் அன்பானந்தன் நாடகக்கூறுகளைச் சிறு கதையில் புகுத்தியுள்ளார் என்றே கூறவேண்டும்.

தம் சமுதாயக் கண்ணோட்டத்தின் பிரதிபலிப்பைக் கதையின் முடிவில், முத்தாய்ப்பு வைத்தது போன்று காட்டியுள்ளார் ஆசிரிய ர் இம்முடிவு மனிதாபிமானக் கண்ணோட்டத்தையும் தெள்ளிதின் புலப்படுத்துகிறது.

"தாயன்பை இழந்து நிரந்தர அனாதைகளாகி
விட்டதாகக் கருதிய இச்சிறுவர்களும் தீயில்
விழுந்த புள்ளெனத் துடித்தனர். முடிவின்றிக்
கதறும் அந்த எதிர்கால இளந்தலைவர்களை,
தொண்டுள்ளமேற்ற நன்றிக்கரங்கள் ஆதரவோடு
பற்றின்" 73

சமுதாயத்திற்குப் பாடுபட்ட தன்னலமில்லாத் தலைவாகளை மறந்து, அவாகளின் குடும்பங்கள் வாழ்க்கைச் சுமையில் அழுந்தித் தத்தளிக்கும்போது அவாகளுக்கு ,உதவாச்சமுதாயத்தின் நன்றிகெட்ட இழிகுணத்தை மட்டும் அன்பானந்தன் காட்டியிருந்தால் அது சிறக்காது. ஒருவிதத் தப்பியோடும் தன்மையாகவே அமைந்திருக்கும். ஆயின் சிறாாகளுக்கு ஆதரவு தருவதாகப் படைத்திருப்பது மனிதமதிப்புகளை (human values) ஆசிரியர்எங்ஙனம் மதிக்கிறார் என்பதனையும், சமூக மதிப் பீடுகளை (social values) எங்ஙனம் கையாள்கிறார் என்பதனையும் செவ்வையாய் விளக்குகிறது.

ஓட்டம் என்ற கதை இராமசாமி என்ற தொழிலாளியின் குடிப்பழக்கத்தைச் சித்திரித்துக்காட்டுகிறது. மனைவி, மக்களை விட மதுவின்பால் அதிக அக்கறை கொண்ட ஒருவனின் ஓட்டத்தைக் காட்டுகிறது. கதை, ஓட்டத்துக்குள்ளேயே சொல்லப்பட்டுவிடுகிறது. குடித்துச் சீரழியும் இராமசாமி போன்றவாகளையும், வேம்பு போன்

றவாகளையும் எள்ளி நகையாடுகிறர் அன்பானந்தன். வேம்புவை 'வெள்ளை மாளிகையின் மாண்பு மிகு அதிபர் 'சம்சிங்' பட்டம் பெற்ற வேம்பு வந்தார். என நையாண்டியாக அறிமுகம் செய்கிறார் கதைத்தலைப்பு பொருத்தமுற அமைந்திருப்பினும், இக்கதையில் சமுதாயப் பிரச்னைக்குரிய (குடிப்பழக்கம்) தீாவு கூறப்படவில்லை.

திருவாளர் பிரகாசம் என்ற கதை ஏழைக்கொரு நீதி செல்வாக்கொரு நீதி என்ற மனப்போக்குடைய, உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் நடிப்புடைய பிரகாசம் என்பவரைக் காட்டிச் சமுதாயத்திற்கு அறிவு கொளுத்தும் கதையாகும். தோட்டத் தொழிலாளியான கிழவன், திருவாளர் பிரகாசம் போன்றவாகளுக்கு,

"கித்தாமரம் எங்கியோ இருந்து வந்துச்சாம்.
அங்கியா திரும்பிப்போகுது? இங்கேயே
விறகாகுது; இல்லாட்டி மக்குது. அது மாதிரி
நாங்களும் கித்தா மரங்க தானே . . . . . . .
ஆனா நீங்களா மருந்தடிச்சி சாகடிச்சுடாதீங்க" 74

எனச் சாட்டையடி கொடுக்கிறான். நாட்டுவிசுவாசம் பற்றி நாப்பிளக்கப் பேசும் திருவாளர் பிரகாசம் கொண்ட விசுவாசம் எத்தகையது? உண்மையில் அவர்நாட்டு விசுவாசம் கொண்டவரா? சொல்லொன்று செயலொன்றுடைய இவரா மக்கள் தொண்டர்? தன் இனத்தாரிடம் அன்பும் அக்கறையும் இல்லாத இவரா மக்கள் தொண்டர்? திருவாளர் பிரகாசம் போன்றவாகளின் முகமூடியைக் கிழித்தெறிகிறர் ஆசிரியர் கிழவனின் மூலமாக. மேலும் தன் இனத்தாரை மதிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும் என்ற படிப்பினையைக் கிழவன் மூலமாக,

"ஐயோ ! நீங்க ஒரு தமிழன்.. நான் ஒரு தமிழன்.
எங்குறைய ஒரு சீன மலாய்க்காரனா
கேக்கப் போறான? சொல்லுங்க சாமி !
நீங்களே எங்களத் தாள்வுப்படுத்தினா
மத்த சீன மலாய்க்காரன் மதிப்பானா சாமி" 75

என ஊட்டுகிறார். இது நியாயமான கேள்விதானே? பிரகாசம் போன்ற போலித் தலைவர்களைத் தூக்கி எறியவேண்டும். பாரதி கூறியது போன்று "பாதகம் செய்பவரைக் கண்டால் பயங்கொள்ளாது மோதி மிதித்து அவர் முகத்தில் உமிழ்ந்து; 76 விடுகின்றார் கிழவர் .

சமுதாயத்தின் குறைகளைச் சுட்டிக்காட்டி, சமுதாயத்துக்குக் கேடு செய்யும் தீயவாகளைப் படைத்துக் காட்டி, தாம் காண விழையும் சமுதாயம் உருவாதற்குரிய வழிகளையும் சுட்டிக்காட்டித் தம் சமுதாய அக்கறையை, சமுதாயப்பற்றை வெளியிட்டுள்ளார்சா. ஆ. அன் பானந்தன். சமுதாய நலமே அன்பானந்தனின் உயிர் மூச்சு என்பதைக் காலத்தின் விளக்கு தெற்றெனப் புலப்படுத்துகின்றது.

## அன்புவின் நாடகங்கள்

# கையெழுத்துப் படிகளைக் கொண்டு உருவாக்கப்பட்ட பட்டியல்

## வானொலி நாடகங்கள்:

### I தொடர்நாடகங்கள்

1. பொன்னான பூமி (3-9-72)
2. நிலத்திட்டம் (13-8-72)
3. குடும்பநலத்திட்டம்
4. நம்ம பழம் நல்ல பழம்
5. வளர் ச்சிக்கு வழி

### II குறுநாடகங்கள்

(சிந்தாமணித் தோட்டத்திலே இன்று - பொதுத்தலைப்பு)

6. கோவிலன் சரித்திரம்
7. துன்பம் ஒன்று
8. மாணிக்கம்
9. நமதுநாடு
10. வீரத்தமிழன்
11. கலகம் கந்தசாமி
12. பட்டணத்துக்காதல்
13. ஓடும்பிள்ளை
14. அறியாப்பொண்ணு
15. கித்தாமரக் காட்டிலே
16. அறுபதுகாசு
17. பெரிய கங்காணி
18. ஒரு வெள்ளி
19. அன்புக்குப் பேதமில்லை
20. போய் பொன்னுசாமி
21. மொய்யோமொய்

## III நகைச்சுவை நாடகங்கள்

22. வான்கோழி
23. காகிதப் பூக்கலைஞன்'
24. ஹம்பக் ஆறுமுகம்
25. பட்டிக்காட்டுத்தவளையும் பட்டணத்துத்தவளையும்
26. தீபாவளி - முதள்நாள் ரகளை.

## IV. ரிடீப்யூசன் நாடகங்கள்

27 செல்வம் (24. 4. 65 )
28. கரிகாலன் (? . 3 . 66 )

## V. சிறப்பு நாடகங்கள்

29. வேரும் நீரும்
30. ( தலைப்பு இல்லை ) சேக்கிழார் பற்றிய இலக்கிய நாடகம்
31. மணியோசை
32. சரவணப்பொய்கை
33. நாட்டுப்பற்று

## VI . கலப்படம் - நாடகங்கள்

34. நாடும் வீடும் ஒண்ணு ( 11. 2 . 67 )
35. ஒருவனுக்கு ஒருத்தி
36. இங்கேயும் அங்கேயும்
37. பவளக்கொடி
38. அடல்ட்ஸ் ஒன்லி
39. நல்லவர் நாலுபேர்
40. மளிகைக்கடை மாரிசாமி
41. கோலிவதை ( 30 . 7'. 72 )
42. டீஸ்டால் முத்துசாமி ( 1 . 10 . 72 )
43. மங்கை மாருதம் - இசை நாடகம் (18 . 2 . 66 )
44. கனவிலே காதல்
45. கலைஞர் கனகாம்பரம்

## VII. சமூக நாடகங்கள்

46. உறங்காப் புலி (4 . 11 . 65 )
47. காத்தான்
48. மருமகள்
49. பாகப்பிரிவினை
50. வாத்தியார் மகள்

## VIII. தாளிகைகளில் வெளிவந்தவை

51. திருவாளர் கறுப்பண்ணன் (நகைச்சுவை) முத்தமிழ், செப்டம்பர் 1972.
52. சமர்ப்பனம் (சை. பீர்முகமதுவின் கதையை நாடக மாக்கியுள்ளார்) தமிழ்முரசு, 23 . 8 . 70
53. நாடும் வீடும் ஒண்ணுதான் (நகைச்சுவை) - முத்தமிழ், ஜீன் 1971.
54. தெருவிளக்கு - முத்தமிழ் - ஆண்டு இல்லை.
55. மதிப்பு - புதிய சமுதாயம், 25 . 5 . 77

## IX நடைச்சித்திரம் (7 . 6 . 62)

அன்புவின் கட்டுரைகள்

1. மலேசியத் தமிழ்க்கலைஞர்கள், முத்தமிழ் - ஆண்டு இல்லை,
2. மலேசியாவில் தமிழ்மணம்", 1972 (நான்காம் ஆண்டு மலர்)
3. ஆழியின் நாடகங்கள் (தொடர்)

## மேற்கோள் விளக்கம்

1. சா.ஆ. அன்பானந்தன், 'இதயநாதம்'-திருப்பம் நாடகத்தொகுப்பின் முன்னுரை.
2. அவ்வை தி.க. சண்முகம், நாடகக்கலை, ப-143.
3. கூ.வ. எழிலரசு, பாரதிதாசன் நாடகத்திறன், ப-61 (மேற்கோளாகக் கையாளப்பட்டுள்ளது.
4. சா.ஆ. அன்பானந்தன், திருப்பம், ப-23.
5. நான்மணிக்கடிகை, செய்யுள் -11.
6. சா.ஆ. அன்பானந்தன், திருப்பம், ப-47.
7. மேலது, ப-95.
8. மேலது, ப-95.

9. கோவூர்க்கிழார், புறநானூறு, பாடல் - 45 (வையாபுரிப்பிள்ளை பதிப்பு, ப-62)

10. அறிஞர் அண்ணாதுரை, நாடகத்தில் மறுமலர்ச்சி, ப-8.

11. சா.ஆ.. அன்பானந்தன், திருப்பம், ப-89.

12. மேலது, ப-76.

13. மேலது, ப-123.

14. மேலது, ப-130.

15. சு. பாலச்சந்திரன், இலக்கியத் திறனாய்வு, ப-123.

16. தெ.பொ. மீனாட்சிசுந்தரம், "காப்பிய நாடகங்களின் புதுப்போக்கு", நாடகச்செல்வம், சிறப்புமலர் (கோவை 1971), ப-55.

17 சா.ஆ. அன்பானந்தன், மரவள்ளிக்கிழங்கு, ப-18.

18. மேலது, ப-23.

19. மேலது, ப-24.

20. மேலது, ப-24.

21. மேலது, ப-46.

22. மேலது, ப-33.

23. வ.சுப. மாணிக்கம், வள்ளுவம் (ஏழாம் பதிப்பு), ப-284.

24. சா.ஆ. அன்பானந்தன், மரவள்ளிக்கிழங்கு, ப-11.

25. மேலது, ப-46.

26. மேலது, ப-64.

27. மேலது, ப-38.

28. தா.ஏ. ஞானமூர்த்தி, இலக்கியத் திறனாய்வியல், ப-236.

29. சா.ஆ. அன்பானந்தன், நயனங்கள், ப-11.

30. மேலது, ப-13.

31. மேலது, கவிஞர் சுரதாவின் அணிந்துரை.

32. மேலது, ப-17.

33. C.T. Winchester, some principles of literary criticism, P-118.

34. B. Prasad, An introduction to English Criticism, P-178

35. தா.ஏ. ஞானமூர்த்தி, இலக்கியத்திறனாய்வியல், ப-221.

36. சா.ஆ. அன்பானந்தன், நயனங்கள், ப-23

37. மேலது, ப-71

38. பாரதிதாசன், பாரதிதாசன் கவிதைகள் - முதற்றொகுதி, ப-174.

39. C.T. Winchester, Some principles of literary criticism p.246.

"Great poets have always something of the seer. In their pages we read the meaning of life, and discover its real issues. Now this wisdom, the power of genuine poetry to interpret life, is the direct result of its emotional character.

40. சா.ஆ. அன்பானந்தன், நயனங்கள், ப-24.

41. பேராசிரியர் பெ. சுந்தரம்பிள்ளை, மனோன்மணீயம், பாயிரம், தமிழ்வாழ்த்து, ப-25

42. சா.ஆ. அன்பானந்தன், நயனங்கள், ப-26.

43. Quoted by william K Wimsalt Jr and Cleanth Brooks, "Literary criticism-a short history" p-386.

44. சா.ஆ. அன்பானந்தன், நயனங்கள், ப-27.

45. மேலது, ப-30.

46. மேலது, ப-57.

47. மேலது, ப-73.

48. C.T. Winchester, some principles of literary criticism, p-247

" The inner history of any age, the record of its deepest currents of thought and feeling is always best read in its poetry"

49. சா.ஆ. அன்பானந்தன், நயனங்கள், ப-78.

50. மேலது, ப-70.

51. முருகு சுப்பிரமணியம், நான் யார்? நூலின் வாழ்த்துரை.

52. சா.ஆ. அன்பானந்தன், நான் யார்?, ப-10.

53. பாரத்தாசன், பாரதிதாசன் கவிதைகள் - முதற்றொகுதி, ப 97.

54. சா.ஆ. அன்பானந்தன், நான் யார்?, ப-20.

55. மேலது, ப-23.

56. மேலது, ப-27.

57. மேலது, ப-30.

58. மேலது, ப-69.

59. அகிலன், எரிமலை, முன்னுரை, ப-5.

60. சா.ஆ. அன்பானந்தன், காலத்தின் விளக்கு, ப-50.

61. மேலது, ப-63.

62. மேலது, ப-67.

63. மேலது, ப-68.

64. `மேலது, ப-77.

65. மேலது, ப-81..

66. மேலது, ப-91..

67. மேலது, ப-84.

68. மேலது, ப-113.

69. மேலது.

70. மேலது, ப-100.

71. மேலது, ப-117

72. மேலது, ப-122.

73. மேலது, ப-123.

74. மேலது, ப-134.

75. மேலது, ப-131.

76. சுப்பிரமணிய பாரதியார், பாரதியார் கவிதைகள், பாப்பாப்பாட்டு, ப-175.

# 3. அருங்கலைக்கோர் ஆழி அருள்தாசன்

## அறிமுகம் :

மலேசியத் தமிழ் நாடக உலகிற்குப் பொற்காலத்தை உருவாக்கித் தந்தவர் அமரர் ஆழி அருள்தாசன். நாடகப் பணிக்கெனத் தம்மையே அர்ப்பணித்துக்கொண்ட அரும் பண்பாளர். நாடகம் எழுதுதல், இயக்குதல், நடிப்பு, நாடகமன்றம் அமைத்தல் என ஒல்லும்வழியான் ஓவாப்பணிசெய்து உயர்ந்தவர். மலேசியத் தமிழ் நாடக உலகின் முடிசூடாமன்னனாக விளங்கிய இவர் நினைவு நன்றியுடைய ஒவ்வொருவர் நெஞ்சைவிட்டும் அகலாது. 'மலேசியத் தமிழ் நாடக உலகின் தந்தை' எனப் பாராட்டப்பட்ட இவரின் பணி அளப்பரியது.

## பிறப்பும் வளர்ப்பும் :

தமிழகத்தில் தஞ்சைமாநிலம் வயல்வளத்திற்குத் தக்க உதாரணமாவது; பொன் விளையும் பூமி எனப் போற்றப்படுவது. 'சோழநாடு சோறுடைத்து' என்பது முதுமொழி. சோற்றுக்கவலை இல்லாத காரணத்தால் அம்மாநிலம் அருங்கலைகளின் பிறப்பிடமாகத் திகழ்ந்தது. புகழ்மணக்கும் தஞ்சை மண்ணில் நாகப்பட்டினத்திற்கு அருகே உள்ள ஆழியூருக்கு அருள்தாசனால் பெருமை உண்டானது. சிலர் பிறந்த மண்ணின் பெருமையை உலகிற்கு உணர்த்துவர்; சிலரால் பிறந்த மண்ணின் பெருமை பறிபோகும். அமரர் ஆழிஅருள்தாசன் முதற்பிரிவைச் சார்ந்தவர்; பிறந்தமண் மீது பெரும்பிடிப்புக்கொண்ட அவர் அதனை அடை மொழியாக்கித் தன் பெயருடன் இணைத்துக் கொண்டார். ஆகவே மலேசியத் தமிழ் இலக்கிய வரலாற்றில் அருள் தாசனை ஈன்ற ஆழியூருக்கும் இடமுண்டு.

*15. 7 . 1932* இல் அருள்தாசன் பிறந்தார். பள்ளிக்கல்வி முடிந்ததும் சென்னைக் கிறித்தவக் கல்லூரியில் கல்விபயின்ற காலத்தில் இவர் வாழ்வில் திருப்புமுனை ஏற்பட்டது. அவ்வேளையில் அழகுதமிழால் பல மக்களின் இதயங்களைத் தம் வசப்படுத்திக் கொண்டிருந்தது திராவிட முன்னேற்றக் கழகம். இக்கழகத்தின் சீர்திருத்தக் கொள்கை களினால் கவரப்பட்ட ஆழிஅருள்தாசன் திராவிட முன்னேற்றக் கழகத்தின் இளைஞர் அணியில் சேர்ந்து கழகப்பணியைக் களைப் பின்றிச் செய்தார். தி. மு. க. நடத்திய நாடகங்களில் இவர் பங்கு கொண்டவர்.

கழகப்பணியில் ஈடுபட்ட அருள்தாசனின் கவனத்தைக் கலைக்க இவருடைய பெற்றோர் இவரை மலேசியாவிற்கு அனுப்பிவைத்தனர்.; கல்வியும் தடைப்பட்டது. *1950* ஆம் ஆண்டில் மலேசியா வந்து சேர்ந்தார்.

நாடக ஈடுபாடு :

பிள்ளைப்பருவத்திலேயே நாடகத்தின்பால் பெரும்பற்றுக் கொண்டிருந்தார். நாடகங்களைப் பார்த்துவிட்டு வந்து தாமும் நடிப்பது; அறிஞர் அண்ணாதுரையின் நட்பு; கிறித்தவக் கல்லூரியில் நாடகங்களை எழுதி அரங்கேற்றியது ஆகிய செயல்கள் அருள்தாசனின் நாடக ஆர்வத்தைப் பிரதிப் பலிப்பவையாகும். தமிழகத்தில் இவர் பெற்ற அனுபவங்களே மலேசியாவில் தமிழ் நாடகத்துறையை வளர்க்க 'வேரும் நீரும்' ஆயின.

மலேசியத் தமிழ்நாடகத்துறையின் நிலை

ஆழி அருள்தாசனின் மேடைநாடகப்பணியை ஆராயுமுன் அவர்காலத் தமிழ்நாடகத்துறையின் நிலையை அறிந்துகொள்வது அவசியமாகும். பெருஞ்சிக்கல்கள் கொண்ட மேடைநாடகத் துறையை வளப்படுத்திய ஆழி அருள்தாசனின் பணி எத்தகு சூழலில் உருவானது; எவ்வாறு வளர்ந்தது என்பதை அறியும் வேளையில் தான் அவரின் பங்கையும் பணியையும் சரியாக மதிப்பிடமுடியும்.

மலேசிய நாடகத்துறை, பொழுதுபோக்காக நடத்தப்பட்ட தெருக்கூத்துகளின் செல்வாக்கினால் ஈர்க்கப்பட்டிருந்தது. ஆகவே கலைநுட்பங்கள் பற்றிய அக்கறை இல்லாதிருந்தது. நாடகங்களை நடத்தவேண்டும் என்ற ஆர்வப்பெருக்கு இருந்தது. ஆயின் அதனைச் செயற்படுத்தத்தக்க நாடகஅரங்குகள் இல. பொருளாதாரச் சிக்கல்கள், தகுந்த தொழில்நுட்பக் கலைஞர்கள், நாடகத்துறை அனுபவம் பெற்ற இயக்குநர்கள் இல்லாத சூழ்நிலையில் நாடகத்துறையை வளர்க்கப் புறப்பட்டார் ஆழி அருள்தாசன். இவர் நடந்துசென்ற பாதை சோதனைகள் பலவற்றைத் தந்த பாதை. ஆயின் ஆழிஅருள்தாசன் அச்சோதனைகளைக் கடந்து சாதனைகள் பல படைத்தார்.

முதல்நாடகம்:

அத்திபூத்தாற்போல ஆண்டுக்கு ஒன்று அல்லது இரண்டு என மேடை நாடகங்கள் வெளிவந்த காலத்தில் மேடைநாடகங்களைத் தொடர்ந்து வீறுநடையிடச் செய்த பெருமை ஆழிஅருள்தாசனுக்கு உண்டு. இவரின் முதல்நாடகம் 'வெண்ணிலா' என்பதாகும். வெண்ணிலவின் அழகும், தண்மையும் காண்பார் உள்ளத்தைப் பிணிப்பது போல 'வெண்ணிலா' நாடகமும் ஏராளமான நாடகச்சுவைஞர்களை ஈர்த்தது.

சூழ்நிலையால் கற்பழிக்கப்பட்ட பெண் ஒருத்தியின் வாழ்க்கை முன்னேற்றத்தை விவரிப்பது வெண்ணிலா நாடகம். பெண்ணுரிமை

மதிக்கப்படாத சூழல் கற்பழிக்கப்பட்ட பெண் தன்னைத் தனிமைப்படுத்திக் கொள்ளாமல் வாழ்க்கையில் முன்னேறித் திருமணம் செய்து கொள்வதாகப் படைப்பது புரட்சிமிக்க செயலாகும். இப்புரட்சியையே ஆழிஅருள்தாசன் உருவாக்கினார். பிற்போக்கு வாதிகளின் கண்டனத்துக்கும் எதிர்ப்புக்கும் இந்நாடகக்கருப்பொருள் உள்ளாயிற்று. ஒலி ஒளி மாற்றங்கள், நடிப்புத்திறம் என ஒவ்வோரு கோணத்திலும் புதுமைப்பொலிவை ஊட்டினார் ஆழி. ஆகலின் இந்நாடகம் வெற்றிபெற்றது. சீர்திருத்த எண்ணங்கொண்ட ஆழியின் இந்நாடகம் நாடகத்துறையைச் சீர்திருத்த எழுந்தது மட்டுமின்றி மலேசியத் தமிழ்ச்சமுதாயத்தையும் சீர்படுத்த முனைந்தது. தமிழகத்தின் ஆதரவிலேயே தமிழ்நாடகங்களை நடத்திக்கொண்டிருந்த மலேசிய மேடைநாடகத்துறையில் உள்நாட்டிலும் நல்லநாடகங்களைப் படைக்கக்கூடிய ஆற்றலுடையவர்கள் இருக்கின்றனர் என உணர்த்தினார் ஆழிஅருள்தாசன். மேடைநாடகத்துறையின் முதற்படியில் தக்க கவனத்தோடு காலடி வைத்த ஆழி பலபடிகளைக் கடந்து சென்றதில் வியப்பில்லை யல்லவா?

### ஆழி- ஒரு நடிகர்:

ஆழிஅருள்தாசன் நாடகஇயக்குநராக அறிமுகமாகுமுன் மலேசியத் தமிழ் நாடகத்துறைக்கு ஒரு நடிகராக அறிமுகமானார். இவர் பல ஓரங்கநாடகங்கள், குறுநாடகங்கள் ஆகியவற்றில் நடித்தார். 'செந்தாமரை' என்னும் ஓரங்கநாடகம் குறிப்பிடத் தக்கது. இவர் நடித்த குறுநாடகங்களுள் 'ரத்தக்கண்ணீர்', சூழ்நிலை, வேதனை உள்ளம், மலர்ந்த வாழ்வு, மறுமலர்ச்சி ஆகியவை குறிப்பிட்டுச் சொல்லத் தக்கவை.

### நாடக எழுத்தாளர்:

மலேசியத் தமிழ் மேடை நாடகங்கள் பலவற்றை ஆழி எழுதி மேடையேற்றியுள்ளார். அவர் பல்வேறுவகையான கருப்பொருள்களை மையமாய்க்கொண்டு பல நாடகங்களை எழுதியுள்ளார். அவர் எழுதிய நாடகங்கள் கீழே வரிசைப் படுத்தித் தரப்பட்டுள்ளன.

| எண் | நாடகத்தின் பெயர் | மேடை ஏறிய ஆண்டு |
|---|---|---|
| 1. | வெண்ணிலா | 1953 |
| 2. | ஜீவஜோதி | 1958 |
| 3. | யார் குற்றவாளி | 1960 |
| 4. | மின்னொளி | 1962 |

| | | |
|---|---|---|
| 5. | நினைவுச்சின்னம் | 1963 |
| 6. | வாடாமலர் | 1964 |
| 7. | உயிரோவியம் | 1965 |
| 8. | ஒரேகுரல் | 1966 |
| 9. | நள்ளிரவில் | 1970-1972 |
| 10. | கடாரம் | 1972 |
| 11. | முல்லைத்தேர் | 1978 |

**நாடகக்கருப்பொருள்:**

ஆழி அருள்தாசன் எழுதிய நாடகங்களின் கருப் பொருள்களை மூன்று பிரிவுகளுக்குள் அடக்கலாம். அவை வருமாறு:

1. சமூகம்
2. வரலாறு
3. இலக்கியம்

**சமூகச்சிக்கல்கள்:**

மனிதனுக்கும் சமூகத்துக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. சமூகத்தின் ஒரு கூறாகவே மனிதன் இலங்குகிறான். இம்மனி தனைப் பற்றிப்பேசும் படைப்பிலக்கியங்கள் மனிதனுக்கும் சமூகத்துக்கும் உள்ள தொடர்பைச் சித்திரித்துக் காட்டுகின்றன. இத்தொடர்பைப் பற்றி அகிலன் கூறும் விளக்கம் இவண் சிந்திக்கத்தக்கது.

> "மனிதனுக்கும் சமுதாயத்துக்கும் உள்ள உறவு இருவகையானது. சமுதாயம் என்ற பெருவெள்ளத்தில் கலந்து மறைந்து தன்னையே முற்றிலும் அதில் இழந்துவிடும் சிறுதுளியான மனிதன் ஒருவகைப்பட்டவன். சமுதாயத்தின் பழக்கவழக்கங்கள், நன்மைதீமைகளுக்கு உடன்படும் கோவலன் போன்றோா் சமுதாயப்பெருவெள்ளத்தின் சிறுதுளிகள். மாறாக, சமுதாயப் பெருவெள்ளத்தின் போக்கையே மாற்றியமைக்கும் வல்லமை பெற்றவர்கள் அதன் திசை திருப்பத்துக்கும் காரணமாகிறார்கள்" 1

எனச் சமுதாயத்தோடு ஒன்றிப்போகும் நிலையையும், முரண்படும் நிலையையும் விளக்கிக் கூறுவர் அகிலன். இவ்விரு நிலைகளையும்

ஆழியின் நாடகங்களில் காணலாம். சமுதாய அவலங்களையும், சமுதாயக்குறைகளையும் காட்டவேண்டியதன் தேவையை அவர் கீழ்க் கண்டாங்கு வெளியிட்டுள்ளார்.

"நாட்டுக்கடன் உணர்ச்சி, இன, மொழிவளர்ச்சி,
கலைத்திறன் எழுச்சி மேலோங்க எம்மாலான
முயற்சி இது. பல்லினத்தின் பிரதிபலிப்பு
வண்ணமும், அவர்தம் எண்ணத்தின் தண்மை
நல்மணமும், அதன்வழிப் பெருகும் மாந்தரின் மகரந்தமும்
ஒன்றித்த கலவையைக் கற்பனை வடிவில் காணின்
மக்களும் மலரும் ஒன்றெனப்படுவர். இவ்விழுமிய
நிதியை அழிவுக்குள்ளாக்க மலரிலே புழுக்களும்,
மக்களிலே புல்லுருவிகளும் மலிந்திருத்தல் கண்கூடு.
மலரைக் காக்க அரணாவது போல், மக்களைக்
காத்திட நல்லறம் அரணாக எம் நாடகம் வழுவாது
செயல்படுமாக" 2

என்ற பகுதி ஆழியின் நல்விழைவை எதிரொலிக்கிறது. இவ்விழைவின் அடிப்படையிலேயே அவருடைய நாடகக்கருக்கள் அமைந்தன.

'வெண்ணிலா' நாடகம் முன்னர்க் குறிப்பிட்டவாறு சமுதாயப் பெருவெள்ளத்தைத் திசை திருப்ப முயன்ற நாடகம் ஆகும். கற்பழிக் கப்பட்ட பெண்ணை ஒதுக்கிவிடுவது சமுதாயப் பெருவெள்ளத்தின் போக்கு. ஆயின் இந்நாடகத்தில் சமுதாயப் பெருவெள்ளத்தை எதிர்த்து நீச்சலிட்டு ஒரு பெண் அதனை ஒதுக்கிவிடுகிறாள். புரட்சியும் புதுமையும் கலந்த பெண்ணொருத்தியைப் படைத்துக்காட்டிக் கற்பழிக்கப்பட்ட (வஞ்சனையால்) பெண்களுக்கு வாழ வழிகாட்டினார் ஆழி. இந்நாடகம் சமூகச் சீர்திருத்தத்திற்கு நல்ல வழிகாட்டி.

'ஜீவஜோதி' என்னும் நாடகம் பணம்படைத்தவர்கள் தங்கள் பணத்தையும் செல்வாக்கையும் பயன்படுத்தி நல்லோர் வாழ்வைச் சீர்குலைப்பதைச் சித்திரிக்கிறது. ஓவியக்கலைஞனான ஜீவன், பணக்காரர் மகன் சந்திரனால் கண்பார்வையை இழக்கிறான். பார்வையிழந்த ஜீவன் ஆசிரமத்தில் சேர்க்கப் படுகிறான். அவன் ஆத்மானந்தர், ஜோதி ஆகிய நல்லவர்களின் முயற்சியால் மீணடும் கண்பார்வை பெறுகிறான். ஜீவனுக்கும் ஜோதிக்கும் இடையே காதல் மலர்கிறது. ஆசிரமத்தின் பாதுகாவலராகச் சந்திரன் பொறுப் பேற்கிறான். ஆசிரமப் பெண்களைத்தன் காம இச்சைககுப்

பலியாக்குகிறான். ஜோதியை அடைய ஜீவன் தடையாக இருக்கிறான் என்பதற்காக அவனைக் குடிகாரனாக் குகிறான். ஜோதியைக் கற்பழிக்க முயல்கின்ற தருணத்தில் ஜோதியோ மயங்கி வீழ்கின்றாள். இவ்வேளையில் தன் தந்தையின் மரணக் கடிதத்தைப் படித்துத்திருந்து கிறான். பணம்படுத்தும் பாட்டை ஜீவஜோதி சிறப்புறச் சித்திரிக்கிறது.

சமுதாயத்தில் உள்ள குறைபாடுகளை-சமுதாய ஊனங்களை வெளிச்சமிட்டுக் காட்டுவது 'யார் குற்றவாளி' என்னும் நாடகம். இந்நாடகப் பாத்திரங்கள் அனைத்துமே குற்றம் புரிகின்றன. நாடகத்தின் இறுதிக்காட்சியில் நீதிமன்றக் காட்சி அமைகிறது. இக்காட்சியில் வழக்கிலே தீர்ப்புக் கூறவேண்டிய நீதிபதிகூடக் குற்றவாளியென்ற உண்மை வெளிப்படுகிறது. இந்நாடகத்தில், சமுதாயத்திலே யார் குற்றம் புரிந்தாலும் அவர்கள் குற்றவாளி களே; படித்தவர்கள்-படியாதவர்கள், நல்லவர்கள்- தீயவர்கள், செல்வர்கள்-ஏழைகள் என அனைத்துப் பிரிவிகளிலும் குற்றவாளிகள் இருக்கின்றனர் என இனங்காட்டி யுள்ளார் ஆழி.

நாடகக்கலையை மையமாய்க்கொண்டு 'மின்னொளி' என்ற நாடகத்தைப் படைத்துள்ளார் ஆசிரியர். தமிழருக்கெனத் தனி நாடக மண்டபம் வேண்டும் என்னும் வேட்கையை வெளிக்காட்டுகிறது மின்னொளி. நாடகஅரங்கமொன்று நிறுவப்பட்டு விழா எடுப்பதால் இந்நாடகத்தில் ஆழி அமைத்த காட்சியும் இக்கருத்தையே வலியுறுத்து கிறது. நாடகம் நடத்த அரங்கின்றிக்கலை தழைக்க இயலாததைக் கண்கூடாகக் கண்டவரன்றோ ஆழி?

'நினைவுச்சின்னம்' சமகாலப் பிரச்னை ஒன்றுக்கு எழுப்பபட்ட நினைவுச்சின்னமாகும். நாட்டுப்பற்றை ஊட்டும் வகையில் இந்நாடகத்தின் கரு அமைந்துள்ளது. 1963,64 ஆம் ஆண்டுகளில் இந்தோனேசியா மலேசியநாட்டின் ஒரு பகுதியைத் தனதாக்கிக்கொள்ள முயன்றதை மலேசியர்கள் மறநதிருக்கமாட்டார்கள். இம்முயற்சி ஓர் அரசியல் சிக்கலாகும். இவ் வரசியல் சிக்கலைக் கருவாக்கி, மலேசிய இந்தியர்கள் இந் நாட்டின்பால் கொண்ட விசுவாசத்தை-வெளிக்காட்டி உள்ளார் ஆழி. இந்நாடகத்தின் கரு, சிக்கல் நிறைந்த சமூகத்தைப் புரிந்து கொள்ளவும் அச்சிக்கல் எவ்வாறு கால்கொண்டது என்பதை விளக்கிக்காட்டவும் பயன்படுவதாகும். இதனால் ஆழி அருள்தாசன் நாடகக்கலையை மக்களுக்கு அறிவூட்டும் சாதன மாகவும் பயன்படுத்தியுள்ளார். என அறியலாம். சமகால அரசியல் பிரச் னையைத் துணிவோடு கையாண்ட ஆழியின் முயிற்சி பாரட்டுக்குரியது. இவ்வாறு சமகால அரசியல் பிரச்சனைகளை மையமாய்க்கொண்டு

படைப்பிலக்கியங்களைப் படைப்பது மலேசியத் தமிழ் இலக்கியத் துறையில் மிக அரிதாகக் காணப்படுவதே. அரசியலைக் கண்டு வெறுக்கும் பலர் இலக்கியத்திலும் அரசியலா என முகஞ்சுளிக்கலாம். ஆனால் இவ்வரசியலைப் படைப்பிலக்கியங்களில் காட்டுவது எப்படிப்பட்டது என்பதை மேனாட்டறிஞர் மிக அழகிய உவமை வாயி லாக விளக்கிக் காட்டுவர் .

> "ஒரு நல்ல இசை நிகழ்ச்சியின் மத்தியில் துப்பாக்கயின்
> வெடிச்சப்தம் எவ்வாறு கடுமையான்தாக இருக்குமோ
> அதுபோலத்தான் இலக்கியத்தில் அரசியல் இடம்
> பெறுவதும்"3

இவ்வுவமை அரசியலை அப்படியே கலைவடிவமாக்கிக் காட்டாத இலக்கியங்களுக்கு வேண்டுமாயின் பொருந்தி வரலாம். ஆயின் அரசிய லையும் கலையம்சமாக்கி நயத்துடன் வெளியிடும் இலக்கி யங்களுக்கு இக்கூற்று எங்ஙன் பொருந்தும்?

மேலும் ஓரின மக்களின் சமூக, அரசியல் வரலாற்றை ஆராய்வதற்கு அவ்வின மக்களின் இலக்கியங்கள் பெருமளவில் துணைபுரிகின்றன. இக்கருத்தினை அடிப்படையாய்க் கொண்டு நோக்க இலக்கியங்களில் அரசியல் இடம் பெறுவது தவறான ஒன்றல்லவே? இவ்வடிப்படையில் ஆழி 'நினைவுச் சின்னம்' நாடகத்தை உருவாக்கி யிருக்கலாம்.

'வாடாமலர் 'என்னும் நாடகம் சற்று மாறுபட்ட நாடகமாகும். மூன்று பருவங்களைக் கடந்தபின் அண்ணன்- தங்கை உறவு கொண்டவர்க்கிடையில் காதல் மலர் வதாய்த்திகிலூட்டும் முறையில் காட்டியுள்ளனர். நல்ல கொள்கைகள் அழிவதில்லை; அவை என்றுமே வாடாமலாகள் என்ற கருத்தை இந்நாடகம் விளக்குகிறது.

'உயிரோவியம்' என்னும் நாடகம், பணத்திற்கும் காமத்திற்கும் அடிமையாகி அல்லவை செய்யும் மக்களை நீதியும் நியாயமும் தண்டிக் காதுவிடுவதில்லை என்னும் கருத்தைக் கூறுவதாகும்.

'ஒரே குரல்' என்னும் நாடகம் தமிழ்ப்பண்பாட்டிற்கு ஒவ்வாத கருப்பொருளைக் கொண்டதாகும். தன்னுடைய வளாப்புமகளையே கற்பழிக்கின்ற ஒரு தந்தையை- காமுகனைப் பற்றிய கதையைக்கொண்டு விளங்குவது இந்நாடகம்.

'நள்ளிரவில்' ஒரு மர்மநாடகமாகும். தவறான வழியில் செல்லும் தன் மனைவியைக் கொன்றுவிடுகிறான் கணவன். அவளைக் கொன்ற

அந்த நினைவு ஒவ்வொரு நள்ளிரவிலும் தொடர அடுக்கடுக்காகப் பல கொலைகளை நள்ளிரவிலேயே செய்கிறான். இந்நாடகம் உளவியலும் மர் மமும் இணைந்த கலவையாகும்.

### வரலாறு - கருப்பொருள் :

பல நாடகங்களில் சமூகப் பின்னணியைச் சிறப்பாக வெளிப் படுத்திய 'ஆழி', 'கடாரம்' என்னும் நாடகத்தில் வரலாற்றைப் பின்னணி யாக்கியுள்ளார். மலர்யத் தீபகற்பக் கூட்டத்துள் ஒன்று கடாரம். இது கடற்கொள்ளையாகளின் தொல்லைகளுக்கு உள்ளானது. எனவே பல கலவரங்கள் உண்டாயின. இந்நாட்டு மன்னனாகிய மாறன் சோழ அரசின் உதவியை நாடுகிறான். கடாரத்தில் ஏற்பட்ட கலவரத்தை அடக்கச் சோழன் தன் மகன் இராசராசனையும், வேங்கி நாட்டு இளவலையும் அனுப்பிவைக்கிறான். கலவரம் அடக்கப்பட்டு வெற்றியும் கிட்டுகிறது. இதன் மூலம் இருநாடுகளுக்கு இடையே நேசமும், மணப் பிணைப்பும் உண்டாகின்றன. கடாரத்து இளவரசரும், தளபதியும் அயல் நாட்டர் தலையீடு கடாரத்துக்கே அவமானம் எனக் கருதுகின்றனர். இவர்கள் தங்கள் போராட்டத்தை எவ்வாறு நடத்தினர் என விளக்குகிறது இந்நாடகம்.

இந்நாடகம் முழுவதும் உண்மை வரலாற்றைக் குறிப்பிடவில்லை. இக்கதையில் இடம்பெறும் நிகழ்ச்சிகளுள் பல கற்பனையானவை. வரலாறும் கற்பனையும் 'உணவில் உப்ப மைவது போல' அளவுடன் கலந்துள்ளமை போற்றுதற்குரியது.

### இலக்கியம் - கருப்பொருள் :

முல்லைக்குத் தேர்தந்த பாரிவள்ளலைப் போற்றும் புறநானூறு என்னும் இலக்கியம். முல்லைக்குத் தேரிந்த நிகழ்ச்சியை மையமாகக் கொண்டு படைக்கப்பட்ட 'முல்லைத்தேர் என்னும் இந்நாடகம் பாரியின் பண்புநலங்கள், பாரிக்கும் கபிலர்க்கும் இடையே நிலவிய நட்புரிமை ஆகியவற்றைச் சிறப்புறச் சித்திரிக்கின்றது. முழுமையும் இலக்கியச் சான்றுகளை ஆதாரமாகக் கொண்டு பின்னப்பட்ட இந்நாடகம் சமகாலச் சமுதாயத்துக்கும் அறிவுகொளுத்துகிறது. சமூகத்தில் பாரியைப் போன்ற தலைவாகளும், கபிலா, ஔவையார் போன்ற மொழித் தொண்டாகளும் நிறைய வேண்டும் என்ற ஆழியின் எதிர் பார்ப்பையும் இந்நாடகம் நன்கு விளக்குவதாகும்.

ஓவியம் வல்லான் ஒருவன் அற்புதமான காட்சிகளை அழகிய வண்ண ஓவியங்களாகத் தீட்டுவது போலச் சமூகச் சிக்கல்களை, இலக்கியக் காட்சிகளை, வரலாற்று நிகழ்ச்சிகளை நன்முறையில் நாடகக் கருப்பொருளாக்கியுள்ளார் ஆழி அருள்தாசன். கருப்பொருளை

ஆளுந்திறத்துடன் ஏனைய கூறு களான உரையாடல், பாத்திரப்படைப்பு போன்றவையும் ஆழி நல்ல நாடக ஆசிரியர் என்பதற்குக் கட்டியம் கூறும்.

உரையாடல்

நாடகங்களில் இடம்பெறும் உரையாடல் நாடகம் காண்போரைக் கவர்ந்திழுக்கக்கூடியதாய், உணர்ச்சியூட்ட வல்லதாய், நாடகச் சுவைஞர்களை நாடகத்தோடு ஐக்கியப் படுத்துவதாய் அமைய வேண்டும். நாடகத்தில் இடம் பெறும் உரையாடல் பற்றித் திறனாய்வாளர் பலவாறு கருதுவர்.

"நாடகத்தின் உரையாடல், சிக்கனம்; பொருத்ததும்;
ஓட்டம்; ஆக்கத்திறன் ஆகிய பண்புகள் கொண்டதாய்
இருத்தல் வேண்டும்" 4

"செயற்கையாக அமைக்கப்படும் உரையாடல்
இயற்கையைகத் தோன்றவேண்டும். உண்மை வாழ்வில்
இரு நண்பர்களிடையே நிகழும் உரையாடல்
இலக்கியமாக மதிக்கப்படுவதில்லை. ஆனால் அது
நாடகத்தில் அமைக்கப்படுமானால் அதனை இலக்கிய
மாக மதிக்கிறோம். நாடக ஆசிரியரின் திறனால் அவ்வுரை
யாடல் இலக்கியப் பண்பினைப் பெறுகிறது". 4a

ஆழி அருள்தாசனின் நாடகங்களில் வசனங்கள் தூய தமிழில் அமைந்திருந்தன. சான்றாக, 'நினைவுச் சின்னம்' நாடகத்தின் இருபத்தெட்டாம் காட்சி ஆழியின் மொழித்திறத்துக்குச் சான்று பகரும். இரு நண்பர்கள் (முத்து, மாணிக்கம்) பேசிக்கொண்டிருப்பதாக அமைந்த அக்காட்சியில் மாணிக்கம் கீழ்க்கண்டவாறு பேசுகிறான்.

"அய்யோ நண்பா, தியாகச் சின்னம் சமைக்கச்
சென்ற நீ உன் உறுப்பைப் பின்னப்படுத்தி-
பின்னடைந்த நம் மக்களின் நீங்கா நினைவுச்
சின்னமாகி விட்டாய். சொந்த விழைவைச்
சிந்திக்காப் பெருந்தகையே ! இந்த இனத்தின்
சார்பில் உன் சேவைக்குச் சிரந்தாழ்த்தி
வணங்குகிறேன்." 5

முல்லைத் தேர் இலக்கிய நாடகமாயினும் எளிய நடையில் இனிய வசனங்களைப் படைத்தார் ஆழி. அவருடைய நாடக வெற்றிக்கு உரையாடலும் ஒரு காரணமாயிற்று எனல் மிகையாகாது.

பாடல்கள் :

நாடகத்தினிடையே பாடல்கள் இடம்பெறுவது தமிழ் நாடகவுலகின் பொதுவழக்காம். இயற்றமிழ், இசைத்தமிழ், கூத்துத்தமிழ் என முத்தமிழும் முழங்கும் கலை நாடகக்கலை. ஆதலின் நாடகத்தில் பாடல்களும் நடனங்களும் பண்டைக் காலந்தொட்டே இடம்பெற்றன. ஆழியின் நாடகங்களில் சொற்சுவையும் பொருட்சுவையும் மலிந்த பாடல்கள் இடம்பெற்றன. இவை அவருடைய இலக்கியப்புலமைக்குச் சான்றாவன.

இவர் நாடகத்தில் இடம்பெறும் பாடல்களைத் தொகுத்துப் புத்தகவடிவில் வெளியிட்டார். வாடாமலர் நாடகத்தின் எட்டுப் பாடல்களும் நூலுருப்பெற்றன. நாடக அரங்கேற்றத்துக்கு முன் இந்நூல் வழங்கப்பட்டது. இது, தமிழகத்தில் திரைப்பட அரங்குகளில் இவ்வாறு ஒரு படத்தில் இடம்பெறும் பாடல்களைத் தொகுத்து நூலாக்கித் திரைப்படம் காண வருவோருக்கு வழங்கும் பழக்கத்தை ஒத்தது. இது விளம்பர நோக்கோடு செய்யப்பட்டது. இத்தகையதொரு விளம்பரத்தை ஆழியும் பின்பற்றினார்.

ஏறத்தாழ எண்பது பாடல்கள் ஆழியின் கைவண்ணத்தில் உருவானவை. இவை நாடகக்கதைப்போக்கிற்கு இயையவும், பாத்திரப்படைப்பிற்கேற்பவும், கருத்துவிளக்கக் கருவியாகவும் அமைந்தன.

நாடகத்தலைப்புகள்:

நாடகத்தலைப்புகள் நாடகச்சுவைஞர்களைக் கவர்ந் திழுக்கும் வகையில் சிறப்பான முறையில் அமையுமாறு செய்தார் ஆழி. ஆழியின் தனித்திறம் அவர் பாத்திரங்களுக்குப் பெயர் கொடுக்கும் முறையிலிருந்து அறியவரும். பாத்திரங்களின் பெயர்கள் அவைகளின் பண்பிற்கியைய அமையுமாறு அறிஞர் மு. வரதராசனார் அமைப்பார். சான்றாக அவருடைய கயமை நாவலில் இடம்பெறும் பாத்திரங் களையும்; அல்லி, நெஞ்சில் ஒரு முள் ஆகிய புதினங்களில் இடம்பெறும் அறவாழி பாத்திரத்தையும் சொல்லலாம். இப்போக்கினை ஆழியும் பின்பற்றினார்.

ஜீவஜோதி என்ற நாடகத்தில் இடம்பெறும் அம்பலம், கருணாகரர், ஜீவன், ஆத்மானந்தர், குணவதி, ஜோதி ஆகிய

பாத்திரங்கள் பண்புகளுக்கியையப் படைக்கப்பட்டுள்ளன. யார் குற்றவாளி என்னும் நாடகத்தில் இடம்பெறும் பாத்திரங்களான திருமுகம், ஆணவம், தயாளம், காந்தம், வசீகரம், அதிமதுரம் என்பனவும் இத்தகையனவே.

ஒரே மாதிரியான போக்கைப் பாத்திரங்களுக்குப் பெயர் சூட்டுகையில் பின்பற்றவில்லை ஆழி. சான்றாக மின்னொளி என்ற நாடதகத்தில் மின்னல் வானத்தில் தோன்றுவதைக் கருத்தில் கொண்டு, வானோடு தொடர்புடைய பெயர்களையே பாத்திரப்பெயர்களாக் கியுள்ளார். ஆதவன், அம்பரம், கார்மேகம், கோதண்டம் ஆகிய பெயர்க ளைச் சான்றாகக் கூறலாம்.

நினைவுச்சின்னம் நாடகத்தில் விலைமதிக்க இயலா நவரத் தினங்களைப் பாத்திரங்களுக்குப் பெயர்களாக்கியுள்ளது போல உலோகத்தின் பெயரையும் சூட்டியுள்ளார். மாணிக்கம், முத்து, ரத்தினம் ஆகிய பெயர்கள் நவரத்தினங்களை நினைவூட்டக் காரீயம் உலோகத்தை நினைவுபடுத்துகிறது. நாகம் என்ற பாத்திரத்தின் பெயர் பாம்பையும், கற்பகம் என்ற பெயர் நினைத்ததையெல்லாம் தரும் தேவதாருவான கற்பக மரத்தையும் குறிப்பதை உய்த்துணரலாம்.

நாடகத்தலைப்பிற்கேற்பப் பாத்திரப்பெயர்கள் அமைவதை வாடாமலர் என்ற நாடகத்திலும் காணலாம். கத்தரி, வேம்பு, வில்வம், செவ்வந்தி, தும்பை என மலர்களின் பெயர்களாகவும், அனைத்து மலர்களின் கலவையைக் கதம்பம் என்றும் குறித்துள்ளார். ஒரே குரல் என்னும் நாடகத்தில் குரலோடு தொடர்புடைய இராகங்கள் (பண்கள்) பாத்திரப்பெயர்களாக உள்ளன. சான்றாகப் பூபாளம், மோகனம், முகாரி, பைரவி, பரிவாதம் ஆகியவற்றைக் கூறலாம்.

நள்ளிரவில் என்ற நாடகத்தில் ஆடல்பாடலுடன் தொடர்புடைய பெயர்கள் பாத்திரப்பெயர்களாகியுள்ளன. பாவம், பாசுரம், நவநீதி, அபிநயம், சாதனம், சாரிகை ஆகியவை பாடற்கலை, ஆடற்கலையுடன் தொடர்புடையவை.

உயிரோவியம் என்ற நாடகத்தில் இலக்கியப் பெயர்கள் பாத்திரப் பெயர்களாகியுள்ளன. அருன், கபிலன், பாண்டு, செந்தூரம் ஆகியவை இலக்கியங்களில் பயின்றுவரும் சொற்களும் பெயர்களுமாம். ஆழியின் இலக்கியநெஞ்சில் இலக்கியங்கள் உயிரோவியமாகக் கலந்த காரணத்தால் இவ்வாறு பெயர் சூட்டியிருக்கலாம் என எண்ணத் தோன்றுகிறது.

ஆழி அருள்தாசனின் பாத்திரப்பெயர்சூட்டும் முறைக்கு இரு நோக்கங்கள் இருந்ததாக அறிகிறோம்.

"1. நாடகத்தைப் பார்ப்பவர்கள் தங்கள் குழந்தைகளுக்கு அப்பெயர்களைச் சூட்டவேண்டும்.

2. இப்பெயர்களின் வழி ஒவ்வொரு பாத்திரத்தின் தன்மைகள் சுயமாக வெளிப்படுதல். "6

## அரங்கப்புதுமையும் ஆழிஅருள்தாசனும்:

ஆழியின் நாடகங்கள் வெற்றியடைய அரங்கஅமைப்பும் ஒரு காரணம் எனச் சாற்றுதல் தவறில்லை. அரங்க அமைப்பின் இன்றிய மையாமையை அவர் தன் நண்பர்கள் பலரிடமும் வலியுறுத்தியதுண்டு.

> "நடிப்பைப் பகுதி நேரமாகக் கொண்டிருக்கும் மேடை நடிகர்களிடம் நடிப்புத்திறனை எதிர்பார்க்க முடியாது. இந்நிலையில் ஒரு நாடகத்தின் வெற்றிக்கு நடிகர்களின் நடிப்பு ஐம்பது விழுக்காடு தான் பங்காற்றுகிறது. முழுஅளவு வெற்றியைப் பெற நாம் அரங்க அமைப்பில் மிகுந்த கவனம் செலுத்தவேண்டும்" 7

இந்நோக்கத்துடனேயே ஆழியின் அரங்கங்கள் அமைக்கப் பட்டன. சில சான்றுகள் வருமாறு;

## வியக்கவைக்கும் காட்சிகள்:

நாடகமேடையில் மாடிவீடு, நீரூற்று ஆகியவற்றை அமைப்பது அத்துணை எளியசெயலன்று. ஆயின் ஆழி சிரமம் பாராது இவற்றை மேடையில் அமைத்துக்காட்டி 'உயிரோவியம்' என்னும் நாடகத்தை வெற்றிப் படைப்பாக்கினார். இரண்டுமாடிகளை அமைத்து, மேல்மாடியில் நிற்கவும், நடந்துகொண்டே பேசவும், மாடிப்படியில் இறங்கிவருவது போலவும் காட்சிகளை அமைத்து நாடகச் சுவைஞர்களை மகிழ்ச்சியுறச் செய்தார். ஆழி அமைத்த நீரூற்றுக் காட்சி நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது. ஒரு மலையை மேடையில் உருவாக்கி அதில் நீர் ஓடுமாறு செய்தார். அவ்வாறு வழிந்துவரும் நீரை 'மோட்டார் பம்ப்' வழி கவனமாக மீண்டும் மலையுச்சிக்குக் கொண்டுசென்று ஓடவிட்டார்.

**உண்மைக்காட்சிகள்:**

நாடகத்தில் இடம்பெறும் திருமணக்காட்சிகள் நேரில் திருமணத்தைக் காண்பதாக அமையுமாறு செய்தார். மணவறை, வாழைப்பந்தல் ஆகிய கூறுகள் உண்மையிலேயே அமைக்கப்பட்டன. இதனால் நாடகமேடையில் திருமணக்காட்சியைக் காணும் உணர்வின்றி உண்மையில் நடக்கும் திருமணத்திற்கு வந்ததாகவே நேயர்கள் மகிழ்ந்தனர்.

**காட்சிமாற்றங்கள்:**

காட்சிமாற்றங்களைக் கணநேரத்தில் செய்துமுடிக்கும் வல்லமை ஆழியிடம் அமைந்திருந்தது. சில நிமிடங்களிலேயே வியத்தகு காட்சிகள் மேடையில் அமைக்கப்பட்டன. பூந்தோட்டம் அமைக்க எண்பதுக்கும் மேற்பட்ட பூச்செடிகள், மரக்கிளைகளைப் பயன்படுத்தினார் ஆழி. சில காட்சிகளில் உண்மையில் ஊஞ்சலை மேடையில் அமைத்துக் கலைஞர்களை ஊஞ்சலாடுமாறு செய்தார். மோட்டார் சைக்கிளை மேடையில் வலம் வருமாறு செய்தார். இத்தகு காட்சிகள் இன்றைய நிலையில் மிகவும் சாதாரணமாகத் தோன்றலாம். ஆயின் ஆழியின் காலகட்டத்தில் (ஐம்பது, அறுபதுகளில்) இவை அசாதாரணமானவையே.

மலேசியத் தமிழ் நாடகத்துறைக்கும், நாடகக்கலைஞர் களுக்கும் 'கடாரம்' நாடகத்தின் வழி நல்ல மதிப்பை ஏற்படுத்தித் தந்தவர் ஆழிஅருள்தாசனாவார். கடாரம், உயிரோவியம் ஆகிய இரு நாடகங்களைத் தமிழகத்தில் வெற்றிகரமாக மேடையேற்றினார். அவ்வேளையில் நாடகக் காட்சியமைப்பைத் தமிழகப் பத்திரிகைகள் வெகுவாகப் பாராட்டின. அவற்றை இவண் நினைவுப்படுத்தல் தக்கதாகும்.

தினமணி கடாரம், உயிரோவியம் ஆகிய நாடகங்களைப் பற்றி, "கடல்கடந்த (கலை) படையெடுப்பு" எனத்தலையங்க மிட்டுக் கிழ்க்கண்டவாறு பாராட்டியுள்ளது.

> "பழைய சீன்களையும் செட்டுகளையும் பார்த்து
> அலுத்த நமக்குப் புதிய சீன்களையும் செட்டுகளையும்
> பார்க்கும்போது மகிழ்ச்சி ஏற்படுக்கிறது.
> உடைகளுக்கும் சீன்களுக்கும் ஏராளமாகச்
> செலவிட்டுள்ளனர். கலாச்சாரத்துக்கும் காலத்துக்கும்
> ஒப்ப உடைகளைத் தைத்துள்ளனர். உடைவாள்,
> இசை, காட்சி அமைப்பு ஆகியவை சோழ,
> கடார நாட்டிற்கு வேறுபட்டிருந்ததைச் சிறப்பாகக்

காட்டியுள்ளனர். . . . . . . . . . . . . . . . . . . . .

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

கடாரத்தில். . . . . . . . . . . . . . . . . . . . . . . .
அந்தப்புரம், குகைக்காட்சி, உயிரோவியத்தில்
சிறைக்காட்சி, பாண்டுவின் பங்களா ஆகியவை
செட்டுகளில் குறிப்பிடத்தக்கவை" 8

தினமணியைப் போன்றே ஆங்கில நாளேடான ஹிந்து பத்திரிகையும் மனமாரப் பாராட்டுகின்றது. அப் பாராட்டுரை கீழ்வருமாறு:

"The members of the malaysia Tamizhar kalai Manram of kuala Lumpur, on a visit to India, put on boards a scintillating historical extra ravganza under the title 'Kadaram' at Raja Annamalai Hall on January 11 under the auspieces of the Madras Social and cultural Academy. <u>With technical excellence matching that of any group and a magnificient range of scenes and situations, the play was remarkably realistic</u> 9

முத்தமிழ்க் கலாவித்துவரத்தினங்கள் என்னும் சிறப்புப்பெயர் பெற்ற டி.கே.எஸ். சகோதரர்களுள் ஒருவரான டி.கே. பகவதி ஆழியின் முயற்சி கண்டு வியக்கின்றமையைக் கீழ்க்காணும் பகுதி தெளிவுபடுத்து கின்றது.

"இப்போதெல்லாம் நாங்களே இப்படிப் பெரிய பெரிய
பொருட்களையெல்லாம் போட்டு நாடகம்
நடத்தத் தயங்குகிறோம். ஆனால் ஆழி அவர்கள்
மலேசியாவிலிருந்து இவ்வளவு பெரிய செட்டுக்களைக்
கப்பலேற்றி இங்கு கொண்டு வந்து நாடகம்
நடத்துகிறார் என்றால் அது பெரிய முயற்சி" 10

ஓர் அரங்கம்

'ஒரே குரல்' நாடகத்தில் ஒரே ஒரு படுதாவையும் ஓர் அரங்க அமைப்பையும் கையாண்டுள்ளார் ஆழி. மேடையின் ஒரு பகுதியில்

மாடிவீட்டையும், மற்றொரு பகுதியில் குடிசையையும் அமைத்து இரண்டுக்கும் நடுவே நடமாடும் தேநீர்க்கடையையும் காட்டினார் ஆழி. இம்மூன்று இடங்களிலும் கதை நடப்பதாகக் கதைத்திட்டத்தை அமைத்தார் ஆழி. இது மலேசிய நாடகத் துறையில் இற்றைநாள் வரை கையாளப்படாத புதுமை.

**காட்சிப்புதுமையில் கடாரம்:**

கடாரம் ஆறு அங்கங்களைக் கொண்ட நாடகமாகும். ஒவ்வொரு காட்சியும் கலைஞர்களை மெய்சிலிர்க்க வைத்தவை. சான்றாகக் கப்பல் எரியும் காட்சி, மாடியிலிருந்து பெண் இறங்கி வரும் காட்சி, குகையில் நடைபெறும் சண்டைக்காட்சி ஆகியவற்றைக் கூறலாம்.

**திரைச்சீலைகளில் புதுமை:**

திரைச்சீலைகளைப் 'படுதா' என்று சொல்வர். ஆழியின் தனித்தன்மையை அளவிட இத்திரைச்சீலைகளின் புதிய பரிமாணமும் ஒரு கருவியாகும். ஆழி அருள்தாசனுடன் நாடகத்துறையில் ஒன்றிணைந்து பணியாற்றிய மெ. அறிவானந்தன் ஆழியின் புதிய உத்தியைக் கீழ்க்கண்டவாறு விவரிக்கின்றார்.

> "எடுத்துக்காட்டாகப் படுதாவில் ஒரு கதவுப்படம்
> இருக்கவேண்டுமேயானால் அதில் கதவை வரையாமல்
> அவ்விடத்தில் நுணுக்கமாக ஓட்டை செய்யப்படும்.
> நடிகர்கள் அதன் வழியே வந்து செல்வர்.
> நாடகம் பார்ப்பவர்கள் மேடையின் பின்னால்
> ஒரு படுதா கட்டப்பட்டிருப்பதை உணரமாட்டார்கள்
> இஃது அருமையான உத்தியாகும்"

நாடகமேடையில் படுதாக்களைத் தவிர்த்து இரு பக்கங்களிலும் பக்கவாட்டு மறைப்புகள் (side screens) பக்கவாட்டுத்திரைகள் அமைக்கப்படுவது உண்டு. இது பொதுவாக நாடகமேடைகளில் பின்பற்றப்படும் வழக்கமே. ஆயின் ஆழி அருள்தாசன் இம்மறைப்புகள் இல்லாமலேயே நாடகமொன்றை மேடையேற்றினார் என்று ந. கிருஷ்ணமூர்த்தி கூறுவர். 12 கடாரம் நாடகத்தில் இப்புதுமையை ஆழி புகுத்தினார் என்பதை அந்நாடகத்தைக் கண்டு களித்த பெருமக்கள் நன்கறிவர்.

கடாரம் நாடகத்தில் நீளப்படுதாக்களை ஆழி பயன் படுத்தினார். மறைப்புகளின்றி நீளத்திரைச்சீலைகளைப் பயன் படுத்துவது அரிய செயலாகும். காட்சியமைப்பு, காடசி மாற்றம் ஆகியவற்றையும்

கவனமாகச் செயல்படுத்தவேண்டிய நிலையை நீள்திரைச்சீலைகள் உருவாக்குகின்றன. கடாரம் நாடகத்தில் இத்தகு படுதாக்களுக்கு மட்டும் பத்தாயிரம் (10,000) வெள்ளி செலவழித்தார் ஆழி. 13

ஆழி திரைச்சீலைகளில்கையாண்ட புதுமைகளை மெ. அறிவானந்தன்,

> "முக்கூற்றுப் பரிமாணத்தில் (three dimensional) படுதாக்களைத் தயாரிக்கின்ற அரிய உத்திகளை அறிமுகப்படுத்தியவர் ஆழி அருள்தாசன். பல நாடகங்களுக்கு முன்னுதாரணமாக அவருடைய நாடகங்கள் திகழ்ந்தன" 14

எனப் பாராட்டுவர்.

## சிறப்பு மலர்கள்:

ஆழி அருள்தாசன் ஒவ்வொரு நாடகத்தையும் மேடை ஏற்றும்போது அந்நாடகங்களுக்குச் சிறப்பு மலர்களை வெளியிட்டார். அவர் நாடகங்களைப் பற்றிய செய்திகள் அனைத்தையும் அச்சிறப்புமலர்களில் குறிப்பிடத் தவறவில்லை. ஆழி எழுதிய நாடகங்களின் கையெழுத்துப் படிகள் காணாமற் போனவேளையிலுங்கூட, அவருடைய நாடகங்களைப் பற்றிய ஆய்வுக்குத் துணை நின்றவை அச்சிறப்புமலர்களேயாம். சான்றாக நாடகத்தயாரிப்பாளர் என்ற முறையில் (கலை மன்றத்தின் தலைவர் என்ற முறையில்) ஆழியின் செய்தி, வாழ்த்துச் செய்திகள், நாடகத்திற்குத்தலைமை தாங்கியோர், நாடகக்கலைஞர்களின் பெயர்ப்பட்டியல் ஆகியவற்றை அச்சிறப்பு மலர்கள் கொண்டுள்ளன.

சிறப்புமலர்களை உருவாக்கும் பொறுப்பினைச் சில கலைஞர்களிடம் ஒப்படைத்தார் ஆழி. இவர்களுள் முன்னாள் 'மயில்' வார இதழின் ஆசிரியர் ந. கிருஷ்ணமூர்த்தியும் ஒருவராவார். நாடகத்தின் கருப்பொருளுக்கேற்பச் சிறப்பு மலர்களின் முகப்புகள் அமைந்திருந்தன என்பது குறிப்பிடத்தக்க செய்தியாகும்.

நாடகப்பணியை நிறைவாகவும் நிரம்பவும் செய்த ஆழி அவர்கள் நாடகச்சிறப்புமலர்களில் அந்நாடகங்களின் கதைச்சுருக்கங்களையும் வெளியிட்டிருப்பாராயின் அவை ஆய்வாளர்களுக்கு உறுதுணை பயக்கும். இது ஒரு சிறுகுறை எனினும் ஆய்வாளர்களுக்குப் பேரிழப்பாகும்.

**ஆழி-கலைக்காவலர்:**

மலேசியத் தமிழ் நாடக வரலாற்றில் மலேசியத் தமிழர் கலைமன்றத்தின் பணிமறவாது குறிப்பிட வேண்டிய ஒன்றாகும். மலேசியாவில் தமிழ் நாடக மன்றங்கள் பல தோன்றின. ஆயின் அவை 'மழையில் பூத்த காளான்களைப் போல' மறைந்தும் போயின. மலேசியத் தமிழர் கலைமன்றமே நாடகக்கலையை வளர்க்கும் நோக்கோடு சிறப்பான முறையில் பல நாடகங்களை வெற்றிகரமாக மேடையேற்றி நிலையான புகழை - தக்க இடத்தைப் பெற்றது.

ஆழி அருள்தாசனின் 'வெண்ணிலா', 'ஜீவஜோதி' ஆகிய நாடகங்களைத் துய்த்த மலேசியத் தமிழர் கலைமன்றத்தினர் ஆழிஅருள்தாசனின் ஆற்றலில் பரிபூரணமான நம்பிக்கை வைத்து அவரைத் தலைவராகத் தேர்ந்தெடுத்தனர். 1960இல் பதிவு செய்யப்பட்ட இம்மன்றத்தின் தலைவராக ஆழி அருள்தாசன் பதினாறு ஆண்டுகள் செவ்வையாய்ப் பணிபுரிந்தார். இறக்கும்வரை ஆழி இம்மன்றத்தின் தலைவராக மட்டுமின்றிக் காவலராகவும் பணிபுரிந்தார். ஒருவரே தொடர்ந்து பதினாறு ஆண்டுகள் தலைமைத்துவம் வகிக்கிறார் என்றால் அவருடைய திறமையும் ஆற்றலும் நன்முறையில் பயன்படுத்தப் பட்டுள்ளது என்பதன்றோ பொருள்? ஆழியின் நீண்ட தலைமைத் துவமே மலேசியத் தமிழர் கலைமன்றத்துக்கு நீங்காத புகழைத் தேடித்தந்துள்ளது.

ஆழியின் தலைமைத்துவத்தில் மொத்தம் ஒன்பது நாடகங்கள் அரங்கேறின. இந்நாடகங்கள் அனைத்தும் நாடகநேயர்களின் விருப்பத்திற்கிணங்கப் பன்முறை, பல இடங்களில் அரங்கேற்றப்பட்டன. ஒரு நாடகத்தை மேடையில் நடத்திய பின்னர் மூடுவிழாக் கண்ட பல நாடகமன்றங்களுக்கு மத்தியில், இந்நாடகமன்றத்தினர் தொடர்ந்து பல இடங்களில் பல நாடகங்களை அரங்கேற்றிய செயல் ஆழியின் ஆற்றலுக்கும், ஒப்பற்ற திறமைக்கும் உயரிய சான்றாகும்.

ஆழியின் தலைமைத்துவத்தில் இந்நாடகமன்றத்தில் கட்டொ ழுங்கு பேணப்பட்டது. 'ஆண்டுக்கொரு நாடகம் என்ற குறிக்கோளோடு செயல்பட்டார் ஆழி. இக்குறிக்கோளில் வெற்றியும் பெற்றார். தொடக்கத்தில் 'மலாயாக் கூட்டரசுத் தமிழர் கலைமன்றம்' என்ற பெயரில் இயங்கிய இம்மன்றம் 1971 இல் 'மலேசியத் தமிழர் கலைமன்றம்' எனப் பெயர் மாற்றங்கண்டது இவண் நினையத் தக்கது. ஆழியின் தலைமைத்துவத்தை ரெ. சண்முகம் கீழ்க்கண்டாங்கு பாராட்டியுள்ளார்.

"ஆண்டுதோறும் ஒரு நாடகத்தை அரங்கேற்றுவது
என்பது எளிதானதல்ல. செட்டிங்குகளிலும்,

ஆடை அணிகலன்களிலும், விளக்கொளியிலும்
பெரும் சாதனைகளைச் செய்து காட்டியவர்
ஆழி அவர்கள். அவர்களிடமிருந்து ஒப்புயர்வற்ற
தன்மை, கட்டுக்கோப்பு, கலைஞர்களை மதித்துக்
கலையை மேலானதாகப் போற்றுதல், எடுத்த செயலை
எப்பாடு பட்டாவது முடித்தல் முதலியனவற்றைக்
குறிப்பிடலாம். ஆழி பெரிய
சாதனையாளர் என்பதில் ஐயமில்லை" 15

கலைக்காவலராம் ஆழியைச் சாதனையாளராகக் காணும் ரெ. சண்முகத்தின் கூற்று, உண்மையே!; வெறும் புகழ்ச்சியில்லை.

கலையைச் சமுதாய வளர்ச்சிக்குப் பயன்படுத்துவது தொன்று தொட்டுவரும் வழக்காகும். ஆழியும் நாடகக்கலையைக் கலைக்காக மட்டுமின்றி சமுதாய வளர்ச்சிக்கும் பயன்படுத்தினார். இதற்கு 'உயிரோவியம்' என்ற நாடகத்தைச் சான்றாகக் கூறலாம். ஏழைச்சிறார் களுக்குப் பள்ளிப்பாட நூல்கள் வழங்கும் நிதிதிரட்ட உயிரோவியம் நாடகத்தைச் செந்தூல், செயின்ட் வின்சென்ட் பால் (St. Vinent Paul Society) அமைப்பினர் நடத்த ஏற்பாடு செய்தனர். இந்நாடகத்திற்குத் தலைமை வகித்த சிலாங்கூர் மாநில முன்னாள் மந்திரி புசார் டத்தோஹாருண் ஹாஜி இட்ரிஸ் பாராட்டினார்.

"இம்மன்றத்தினரின் நடவடிக்கைகளைப் பார்க்கின்ற
வேளையில் இவர்கள் நாடகக்கலையில் மட்டும்
ஈடுபடாது இக்கலையின் வாயிலாக நாட்டின்
தற்காப்புநிதிக்கு நன்கொடை வழங்கியும், பள்ளி
மாணவர்களுக்காகவும், வேறு சில
அமைப்புகளுக்காகவும் இலவசமாக நாடகத்தையும்
நடத்துகின்றனர். அத்தகைய ஒரு முயற்சியைத்
தான் நான் நாட்டின் மேம்பாட்டில்பண்பாடுகளின்
பங்கு என்று வலியுறுத்துவது" 16

இதனால் நாடகக்கலையைப் பொதுவாழ்வுக்கு அல்லது பொதுச்சேவைக்குக் கருவியாக்கிய ஆழியின் அருளுள்ளத்தை அறிகிறோம்.

**கலைப்பாலம் கண்ட சிற்பி:**

கலைஞர்கள் எந்நாட்டிற்கும் பொதுவானவர்கள். ஏனெனில் இக்கலைஞர்களால் பல்வேறு நாடுகளுக்குமிடையே நல்லுறவுப்பாலம் அமைக்கப்படுகிறது. கலைஞர்களின் நல்லுறவுப் பாலம், பண்பாட்டுப்

பரிவர்த்தனை செய்துகொள்ள விழையும் நாடுகளுக்கிடையே பண்பாட்டுப் பாலமாகக் · கலைப்பாலமாக அமையக் காண்கிறோம். இவ்வகையில் மலேசியத் தமிழர் கலைமன்றம் தமிழகத்திற்குக் கலைப்பயணம் மேற்கொண்டது. மலேசியத் திருநாட்டின் பண்பாட்டினைத் தமிழகமக்களுக்கு எடுத்தியம்புவதையும், தமிழகத்தின் கலை நுணுக்கங்களைக் கற்றுக்கொள்ளுவதையும் நோக்கமாகக் கொண்ட இக்கலைக்குழு தமிழகத்திற்கு 1974 சனவரி முதல்வாரத்தில் பயணம் மேற்கொண்டது.

கபாலீசுவரர் கான சபா, சென்னை சமூகக் கலாச்சார சங்கத்தினரும் மலேசியத் தமிழர் கலைமன்றக் குழுவைச் சிறப்புற வரவேற்றனர். சிறந்த நாடகநடிகராக விளங்கிய நடிகர் திலகம் சிவாஜி கணேசன், மக்கள் திலகம் எம்.ஜி. ராமச்சந்திரன் ஆகிய புகழ்மிக்க கலைஞர்கள் ஆழிஅருள்தாசன் குழுவினரை வரவேற்றுப் பெருமை அளித்தனர்.

சென்னை அண்ணாமலை மன்றத்தில் சனவரித் திங்கள் 10,11,12 ஆகிய நாள்களில் 'கடாரம்' நாடகம் மேடையேற்றப்பட்டது. சனவரி 13 ஆம் நாளன்று 'உயிரோவியம்' நாடகம் அரங்கேறியது. சென்னை தவிரத் திருப்பத்தூர், புதுக்கோட்டை ஆகிய இடங்களிலும் இந்நாடகங்களின் சில காட்சிகளை நடித்துக் காட்டினர் என்பது இவண் நினையத்தகும்.

தமிழகத்தில் மட்டுமின்றிச் சிங்கப்பூர்க் குடியரசிலும் ஆழி அருள்தாசன் கடாரம்,உயிரோவியம் ஆகிய நாடகங்களை நடத்தியமையை எஸ். எஸ். சர்மா நினைவுகூர்வர்.

"அந்த நாட்களில் சுங்குரும்பை, இரத்தப்
பாஞ்சானிலிருந்துவந்து
அநேக நாடகங்களைச் சிங்கப்பூரில்
நடத்தினார்கள். அந்தக் கலைப்பாலத்தைக் காலஞ்
சென்ற ஆழிஅருள்தாஸ் தமது 'உயிரோவியம்',
'கடாரம்' போன்ற நாடகங்களைக் குடியரசில்
நடத்தி நல்ல இணைப்பை ஏற்படுத்தினார்"

நாடகங்களை வெளிநாட்டில் அரங்கேற்றுவது அத்துணை எளியதன்று. நாடகப் பொருட்கள் மற்றும் தளவாடங்களைக் கொண்டு செல்வதும், கலைஞர்களை அழைத்துச் செல்வதும் சிரமமான செயலாகும். பொருட்செலவும் இதனால் அதிகரிக்கும் என்பது யாவரும் அறிந்ததே. ஆயினும் இத்துணை இன்னல்களையும் பொருட்படுத்தாது அவர் கலைப்பாலம் சமைத்தது எண்ணியெண்ணி வியக்கத்தக்கது! ஆழி

அருள்தாசனின் இச்சாதனையைக் கவியரசு கண்ணதாசன் மலேசியத் தமிழர் கலைமன்றத்திற்கு வாசித்தளித்த பாராட்டுப்பாமலரில் போற்றியுள்ளார். அப்பாராட்டுக்கவிதை வருமாறு:

"அலையுலாம் கடலைத் தாண்டி
ஆர்வத்தின் வடிவம் ஓங்கி
கலையினால் தமிழ்நா டென்னும்
கன்னியை வெல்லப் போந்த
மலையக இளைஞர் தம்மை
வருகென வரவேற் கின்றோம்
விலைமதிப் பில்லா உங்கள்
வியன்கலை வெல்க! வெல்க!
முத்தமிழ் பிறந்த காலம்
முழுமுதற் கடவுள் செய்த
தத்துவம் பிறந்த காலம்
தரணியின் நிலங்கள் தோறும்
வித்தகர் தம்மைத் தந்து
வியன்கலை வளரச் செய்த
நித்தியத் தமிழர் தம்மில்
நீங்களும் ஒருவ ரன்றோ!
நகரத்துச் சபைகள் கூடி
நல்கிடும் வரவேற் போடு
ககனத்தில்புகழை ஏற்றும்
கடாரம் அரங்கே றட்டும்
சிகரத்தில் உம்மை ஏற்ற
செந்தமிழ் நண்பர் கோடி
பகரவோர் வார்த்தை யன்றி
பளிங்குபோல் விளங்கி வாழ்க! 18

இப்பாராட்டுரை சென்னை நகர சபாக்களின் சார்பில் வழங்கப்பட்டது. கண்ணதாசனின் கருத்தோவியம் இது.

**கலைஞரை உருவாக்கிய கலைஞர்:**

நல்ல கலைஞன் திறமான படைப்புகளை உருவாக்குவான்; நல்லவற்றைப் பாராட்டுவான். மற்றோரின் முயற்சிக்கு ஊக்கமும் ஆக்கமும் கொடுப்பான். இத்தகு உயர்குணங்கள் கொண்ட நற்கலைஞர் ஆழி. பாம்பின்கால் பாம்பறியுமாப் போலத் திறமை உள்ளவர்களை

இனங்கண்டு அவர்களிடம் உள்ள கலைத் திறமைகளை ஆழி வெளிக் கொணர்ந்தார். ஆகவே நல்ல கலைஞர்கள் பலரை ஆழி கலையுலகுக்கு அறிமுகப்படுத்தினார். இவர் அறிமுகப்படுத்திய கலைஞர்கள் பலர் ஆழி அருள்தாசனை மானசீகக்குருவாகக் கொண்டனர். இவர்களுள் மனு இராமலிங்கம், பி.எஸ். வெங்கடேசன், என். அரங்நாதன், என். கோவிந்தசாமி, பி.திரேசா, கே. எஸ். மணியம், எம்.எஸ். மணியம், எம்.கே. அமீது, ந. கிருஷ்ணமூர்த்தி, அருள்தாஸ், அந்தோனிசாமி, எம். வேணுகோபால், லோகா நாயுடு, பி. மணியரசு, கலியபெருமாள், ரோஸ்லின், தி.ப. செழியன், மிட்லண்ட்ஸ் ராமசாமி, சச்சிதானந்தம், பெரியநாயகம், பைசோன் ஆழி அருள்தாசன் எனப் பல கலைஞர்கள் ஆழியால் அறிமுக மானவர்கள். இக்கலைஞர்களுள் நடிகர்கள், பாடலா சிரியர்கள், நாடக ஆசிரியர்கள், இயக்குநர்கள் எனப்பலரும் அடங்குவர்.

ஆழி கடைப்பிடித்த கட்டொழுங்கே அவருடைய கலைப் பயணத்திற்கு வெற்றியை அளித்தது. நாடகநடிகர்களைக் கூத்தாடிகள் என்றும்,. ஒழுக்கக்குறைபாடுடையவர்கள் என்றும் கருதுவது தமிழர்க்குப் புதியதன்று. ஆயின் இந்நிலையை மாற்ற ஆழி அரும்பாடுபட்டார். அவர் ஒழுக்கசீலராய் விளங்கியதோடன்றி மற்றோரையும் அவ்வாறே ஊக்கினார். சுருங்கக்கூறின் கலைஞர்களுக்கு கௌரவத்தை உருவாக்கித் தந்தவர் ஆழி எனல் மிகையன்று.

தவறுகளைச் சுட்டிக்காட்டி ஆழி அவர்களைத் திருத்தும் பாணியே வேடிக்கையானது. மன்றத்தில் ஒழுக்கம் தவறியவர்களை நாடகங்களில் பாத்திரங்களாக உலவவிட்டு அவர்களைக் கேலி செய்வது ஆழியின் வழக்கம். இதனால் குற்றம் புரிந்தால் ஆழியின் நாடகங்களில் பாத்திரங்களாகச் சித்திரிக்கப்பட்டு விடுவோமோ என்ற அச்ச உணர்வு நாடகமன்ற உறுப்பினர்களிடம் நிலவியது. ஆழியின் இவ்வணுகுமுறை தவறு செய்பவர்களைத் திருத்துவதற்கு நன்முறையாம். இதனால் ஒழுக்கத்தை உயிரினும் மேலாக மதிக்கும் விழுமிய பண்பை ஆழி வளர்த்தார் என்று கூறுவது பொருத்தமுடையதே.

நாடக ஒத்திகை, பயிற்சி ஆகியவைகளுக்கு உரிய நேரத்தில் உறுப்பினர்களை வருமாறு பணிப்பது ஆழியின் வழக்கம். காலந்த வறாமை அவருக்கு மிகுந்த பயனைத்தந்தது. வாழ்வில் காலந்தவறாமை யைக் கடைப்பிடித்த அவர் நாடகவாழ்விலும் அதனைப் பின்பற்றினார். அவருடைய நாடகங்கள் காலந்தாழ்த்தாமல் குறித்த நேரப்படி அரங்கேற்றப்பட்டன என்பதைத் அனைவரும் அறிவர்.

நாடகமன்றத் தலைவராக விளங்கிய ஆழி, மன்ற உறுப்பினர் களைத் தம் குடும்பத்தினராகவே மதித்தார். தம்முடைய குழுவில்

இருப்பவர்களிடமும், பிற குழுக்களைச் சார்ந்தவர்களிடம் அவர் பழகிய விதம் அவரைச் சிறந்த பண்பாளராக-அன்புதாசனாக - அருள்தாசனாக உயர்த்தியது. 'பூவோடு சேர்ந்த நாரும் மணம் பெறுவது போல' இவருடன் சேர்ந்தோரும் உயர்ந்தனர். இவர் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ உருவாக்கிய கலைஞர்கள் இவரைத் தந்தையாக மதித்தனர். இதனை எம்.எஸ். மணியம் அவர்களின் கூற்று மெய்ப்பிக்கிறது.

> "எங்களுக்கெல்லாம் தந்தையாக நின்று வழிகாட்டியவர்;
> இன்று எங்கள் நெஞ்சில்வீற்றிருப்பவர் ஆழி
> அருள்தாசனேயாவார். அவரை நாடகத்தந்தை என்று
> அழைப்பதில் பெருமை கொள்கிறோம்" 19

முடிவுரை:

நாடக எழுத்தாளராக, இயக்குநராக, நடிகராக, இலக்கிய வாதியாக, பாடலாசிரியராக, நாடகமன்றத் தலைவராகப் பல்லாற் றானும் பணியாற்றிய அமரர் ஆழி அருள்தாசனின் மறைவு குறித்து (புதிய சமுதாயம் என்ற இதழில்) சோ. பரஞ்சோதி 'ஓயாத கலையாழி ஓய்ந்தது' என்ற கட்டுரையில் ஆழியின் அரும்பணிகளையும், அர்ப்பணிப்பு உணர்வையும் காட்டியுள்ளார். நாடகக் கலையின் வளர்ச்சிக்குச் சொத்து சுகங்களைக்கூட அர்ப்பணித்த ஆழியின் ஆவியும், 'முல்லைத்தேர்' நாடகவுலகில் ஓடுவதற்கு முன்னர்ப் பிரிந்தது. வெண்ணிலாவில் தொடங்கிய ஆழியின் நாடகப்பயணம் முல்லைத் தேரில் முடிவுற்றது.

## மேற்கோள் விளக்கம்


1. தி. பாக்கியமுத்து (ப.ஆ)., இன்றையத் தமிழ் இலக்கியத்தில் மனிதன், "மனிதனுக்கும் சமுதாயத்திற்கும் உள்ள உறவு" அகிலனின் கட்டுரை, ப-24
2. ஆழி அருள்தாசஜ். வாடாமலர் நாடகச்சிறப்பு மலரின் முன்னுரை.
3. டாக்டர் இரா. தண்டாயுதம், நாவல் வளம், ப-161
4. டாக்டர் தா.ஏ. ஞானமூர்த்தி, இலக்கியத் திறனாய்வியல், ப-282

4a மேலது, ப-284

5. நினைவுச்சின்ன நாடகச் சிறப்புமலர்.

6. முன்னாள் மயில் ஆசிரியர் ந. கிருஷ்ணமூர்த்தி, நேர்காணல், 22.10.88.

7. மேலது.

8. தினமணி (தமிழகம்), "கடல் கடந்த படையெடுப்பு", 17.1.74

9. The Hindu (Tamil Nadu), Kadaram - review, 18.1.74 (Friday issue)

10. டிகே. பகவதி, கடாரம் நாடக அரங்கேற்றத்தில் கூறிய கருத்து

11. மெ. அறிவானந்தன், நேர்காணல், 20.7.88.

12. ந. கிருஷ்ணமூர்த்தி, நேர்காணல், 16.3.89.

13. மேலது.

14. மெ. அறிவானந்தன், நேர்காணல், 20.7.88.

15. ரெ. சண்முகம், நேர்காணல், 1.9.88.

16. உயிரோவியம், சிறப்புமலர்.

17. எஸ்.எஸ். சர்மா, "சிங்கப்பூரில் தமிழ் நாடகங்கள்" (கட்டுரை) சிங்கப்பூரில் தமிழும் தமிழிலக்கியமும், ப-38.

18. இல.செ. கந்தசாமி, நேர்காணல்.

19. எம்.எஸ். மணியம், நேர்காணல், 10.1.89.

## 4. பைந்தமிழ்ப் பற்றாளர் பைரோஜி நாராயணன்

நாட்டிற்கு அணிகலன், பாமரர்களின் பல்கலைக்கழகம் என்று வருணிக்கப்படும் நாடகக்கலையின் வளர்ச்சிக்கு வானொலி, தொலைக்காட்சி ஆகிய ஊடகங்கள் வழி பணியாற்றியவர் பைரோஜிநாராயணன். மலையகத்தில் கதைவகுப்பு நடத்திய கந்தசாமி வாத்தியாருக்குத் தக்க துணையாக நின்ற 'வானம்பாடியார்' பைரோஜிநாராயணனே. ஆகவே மலையகச் சிறுகதை வளர்ச்சியிலும் பைரோஜி நாராயணனுக்குக் கணிசமான பங்குண்டு.

### பிறப்பு:

தமிழகத்தில், திருச்சிமாவட்டத்தில் காவிரிக்கரை என்னும் கிராமத்தில் பிறந்தார் பைரோஜிநாராயணன். 1920 ஆம் ஆண்டு பிறந்த இவர் தன்னுடைய பன்னிரண்டாம் அகவை வரை அக்கிராமத்திலேயே கல்வி கற்றார்.

### மலேசிய வருகை:

பைரோஜிநாராயணனின் தந்தை பை. கி. சீனிவாச ஐயங்கார் தமிழ்நேசன் நாளிதழின் துணையாசிரியராகப் பணியாற்ற மலையகம் வந்தார். 1940 இல் தந்தையுடன் தனயனும் இந்நாட்டிற்கு வந்தார்.

### தமிழ்நேசனில் பணி:

தந்தை பணியாற்றும் தமிழ்நேசன் நாளிதழிலேயே பைரோஜி அச்சுக்கோப்பவராகத் தொழிலைத் தொடங்கினார். ஆதிநாகப்பன் தமிழ்நேசனின் ஆசிரியராகப் பணியாற்றிய அச்சமயத்தில் படிப் படியாகப் பைரோஜி பல பணிகளைப் பெற்று நேசன் ஞாயிறு பதிப்பின் பொறுப்பாளராகப் பணிபுரிந்தார்.

தமிழ்நேசனில் பைரோஜி பணியாற்றிய வேளையில் கந்தசாமி வாத்தியார் என்னும் புனைபெயரில் கதைவகுப்பு நடத்துவதற்கு எண்ணங்கொண்டார் சுப. நாராயணன். சிறுகதை எழுத்தாளர்கள் அதிக அளவில் உருவானதோடன்றி மலேசிய மண்ணில் சிறுகதைஇலக்கியம் தரமுடைய இலக்கியவகையாக வளர்வதற்கு இவ்வகுப்பு பயன்பட்டது. பைரோஜி நாராயணன் வானம்பாடியார் என்ற புனைபெயருடன் சுப. நாராயணனுக்கு உறுதுணையாக நின்றார். சுப. நாராயணன் பைரோஜியைப் பற்றிக் கீழ்க்கண்டவாறு கருத்துரைக்கிறார். வானம் பாடியைக் கேளுங்கள் என்னும் வினா - விடைப்பகுதி தமிழ்நேசனில் வெளிவந்தது. அதனைக் கூர்ந்து கவனித்த சுப. நாராயணன்,

"தம் போக்கு, சிந்தனை, ரசனை ஆகியவற்றுக்கு
ஏற்ப ஒருவர் உள்ளாரே என வியந்து ஒரு
ரசிகராக பைரோஜியைச் சந்தித்ததாக"1

திரு. ந. பாலபாஸ்கரன் உரைக்கிறார்.

பைரோஜி நாராயணன் சில சிறுகதைகளையும் எழுதியுள்ளார். கவிஞன் வாழ்க்கையில் (தமிழ்ச்சுடர், மார்ச் 1948) உப்பில்லாத சமுதாயம் (தமிழ்நேசன் 1949, நவம்பர் 27) வாடகைக் கற்பனை (தமிழ்நேசன்,1950 ஜனவரி 8) சித்தப்பிரமை (தமிழ்நேசன் 1050 ஏப்ரல் 2) ஆகியவை தமிழ்நேசனில் வெளிவந்த படைப்புகளாகும்.

**பத்திரிகைப்பணி :**

தமிழ்நேசனில் பணியாற்றிய பைரோஜியின் அனுபவம் அவருக்குச் 'சங்கமணி' என்னும் வாரஇதழின் ஆசிரியர் பொறுப்பைப் பெற்றுத் தந்தது. இப்பணி 1952 முதல் 1959 வரை நீடித்தது. சங்கமணி என்னும் வாரஇதழ் தேசியத் தோட்டத் தொழிலாளர் சங்கத்தால் வெளியிடப்பட்டது.

**வானொலிப்பணி:**

கோலாலும்பூரில் இயங்கிவந்த தனியார் நிறுவனமான ரெடிஃபிஷன் (ரெடிபூசன்) பைரோஜி நாராயணனை நாடக உலகிற்கு அறிமுகம் செய்துவைத்தது இந்நிறுவனத்தின் இந்திய ஒலிபரப்புப் பகுதியின் தலைவரான ரோச் என்பவர் பைரோஜிநாராயணனை அறிமுகப்படுத்தினார். இந்நிறுவனத் தின் வழியே 1953 முதல் 1959 வரையிலான காலகட்டத்தில் பைரோஜி எழுதிய நாடகங்கள் பல. பல நாடகங்களை எழுதிய சிறப்புக்குரியவர் என்றாலும், பெரும்பாலும் இந்திய மண்ணில் - தமிழ்மண்ணில் வழங்கிவந்த கதைகளையே நாடகமாக்கினார். ஏற்க்கனவே கிடைத்த கதைத்திட்டத்தினை வைத்துக்கொண்டு வசனங்களை மட்டும் புதிதாக எழுவது புதுமையானதன்று; ஆசிரியரின் சுயசிந்தனையை வெளிக்காட்டும் கருவியுமன்று. அவ்வாறாயின் பைரொஜி நாராயணன் எவ்வாறு புகழ்பெற்றார்? என்ற கேள்வியும் பிறக்கிறது.

பைரொஜி ரெடிஃஷனில் வெளியிட்ட முதல் நாடகமே தழுவல் நாடகம் என்பது நாம் மனங்கொள்ள வேண்டிய செய்தியாகும். புகழ்பெற்ற இந்தி எழுத்தாளராகிய திரு, டனிலாம் பிராஸ்கி எனிபாரின் 'வேசியின் இதயம்' என்ற கதையை நாடகமாக்கியதோடன்றித் தலைப்பை மட்டும் சிறிதே மாற்றி 'வேசியின் உள்ளம்' என்றமைத்திருந்தார். 'காப்பிரைட்' சட்டங்கள் எழுத்தாளர்களைப் பாதுகாக்காதவரை இத்தகு தழுவல்களுக்கும், இரவல்களுக்கும் பஞ்சமில்லை என்பதை பைரோஜி நாராயணனின் நாடகப்பணி வாயிலாக அறிகிறோம்.

பைரோஜி, பல இந்தியக் கருப்பொருள்களை மையமாகக் கொண்டு வரலாற்று நாடகங்களைப் படைத்துள்ளார். கல்கியின் 'சிவகாமியின் சபதம்' என்னும் வரலாற்றுப் புதினத்தை பைரோஜி 'சிவகாமியின் செல்வன்' என நாடகமாக்கினார். அனார்கலி, விஜயோதையம், சோழன் கரிகாலன், நாயக்கர் வரளாற்றைப் பின்னணியாகக் கொண்ட 'திலகம்' அசோகச் சக்கரவர்த்தியின் மைந்தனாம் மகேந்திரனைப் பற்றிய 'மகேந்திரன்', அக்பர் சக்கரவர்த்தியின் வரலாற்றை மையமாகக் கொண்ட 'நீலநிலா' ஆகிய நாடகங்கள் இந்தியப் பின்புலம் கொண்டவை. இத்தகு இந்திய வரலாற்றை மலேசியத் தமிழர்களுக்கு அறிமுகப்படுத்தினார் என்ற பெருமையை மட்டும் இந்நாடகங்களின் வழி பைரோஜி பெற்றார்.

இலக்கிய நாடகங்களுக்கும் இந்தியமொழிக் கதைகளையே தேர்ந்தெடுத்தார் பைரோஜி. கலைக்கனவு, கிருஷ்ணகுமாரி, பிரம்மச் சாரி, இசைவாணர் தான்சேன், காதம்பரி ஆகிய இலக்கிய நாடகங்கள் இந்திய இலக்கியப் பின்னணி கொண்டவை.

ஆய்வுக்கண்ணோட்டத்துடன் பைரோஜியின் நாடகக்கருப் பொருள்களை அணுகினால் அவை தழுவல் அல்லது இரவல் என்றே வகைப்படுத்தத்தக்கவை. ஆயினும் இதற்கோர் அமைதியை வலிந்து கூற வாய்ப்புண்டு. இந்நாடகங்களை எழுதியபோது பைரோஜி ஓர் இந்தியக் குடிமகன் என்பதனாலும் மலேசிய மக்களுக்கு அந்நாட்டின் பெருமைகளையும் வரலாற்றுச் செய்திகளையும், இலக்கியக் கருவூலங் களையும் அறிவிக்க வேண்டும் என்ற காரணத்தினாலும், மொழிப்பற்றை ஊட்ட வேண்டும் என்ற விழைவாலும் அவர் இந்தியக் கருப் பொருள் களைக் கையாண்டார்.

### சிங்கப்பூரில் வானொலிப் பணி:

சிங்கை வானொலியில் பகுதிநேர எழுத்தாளராகவும் நடிகராகவும் 1959 முதல் 62 வரை பணியாற்றினார். சிங்கை வானொலியில் இவர் பல தொடர் நாடகங்களை எழுதினார். 'ரங்கன் வீட்டு ரகளை' என்ற நாடகம், 'துப்பறியும் துறை' ; பூச்செண்டு, 'இலக்கியச்சோலை' ஆகியவை 52 வாரங்களுக்கு ஒலியேறின. பூச்செண்டு, இலக்கியச்சோலை என்பன கவிஞர் ந. பழனிவேலுவின் தயாரிப்பில் மலர்ந்தவை.

### மலேசிய வானொலிப்பணி:

மலேசிய வானொலியின் இந்தியப்பகுதித் தலைவரான ஆர். பாலகிருஷ்ணன் மலேசிய வானொலியின் தமிழ்ப் பிரிவைத் திறம்பட வளர்த்தவர். இவர் பைரோஜி நாராயணனுக்கு 1962 ஆம் ஆண்டு நவம்பர் மாதந் தொடங்கிப் பகுதிநேர ஊழியராகப் பணிபுரிய

வாய்ப்பளித்தார். இவர் வானொலி நாடகத்தில் நடித்ததுடனன்றிச் செய்திகள் வாசிப்பது, நிகழ்ச்சி அறிவிப்பு, நேர்முகப்பேட்டிகள் எடுப்பது ஆகிய வேலைகளையும் செய்தார். 1962 இல் தொடங்கிய இவருடைய வானொலிப்பணி 1988 ஆம் ஆண்டின் இறுதிவரை ஏறத்தாழக் கால் நூற்றாண்டு நீடித்தது. வானொலியில் பணிபுரிந்த காலத்தில் பல தழுவல் நாடகங்களை எழுதினார்.

## 1960 களில் எழுதிய நாடகங்கள்:

பாசக்குரல் (கர்ணன் பற்றிய நாடகம்), செழுங்கொடி (சீவகன் பற்றியது) விகாவித்தகர் (துரோணர் பற்றியது) குமரகுருபரர், சேக்கிழார், மலைமுகடு (குண்டலகேசியை அடியொற்றியது) கிளியோபாத்ரா, ரஸ்புத்தின், திரைகடல் செல்வன் (பல்லவர் பற்றியது) நிறைமதி (மணிமேகலை பற்றியது), அழியா அழகு (வடமொழிநாடகாசிரியன் உபகுப்தன் பற்றியது) தேவி (சத்தியஜித்ராயின் திரைப்படத்தை அடியோற்றியது) மெய்ப் பொருள் (நாயன்மார் வாழ்வு பற்றியது) ஜெங்கீஸ்கான் (மங்கோலிய நாட்டுப் பேரரசன் ஒருவனைப் பற்றிய கதை) கர்ணசபதம் (வடநாட்டுக் கலைஞன் ஒருவனைப் பற்றியது) யசோதா (புத்தரின் மனைவி பற்றியது) மன்னனின் மனைவி, மணிக்கொடி, உயிருக்குயிர், திருப்பணி ஆகிய வரலாற்று நாடகங் களையும் பைரோஜி எழுதினார். பணமிழைத்தபடை என்னும் பெயரில்சிலப்பதிகாரத்தின் கானல் வரியை நாடகமாக்கினார். தழுவல்கதைகளையே நாடகமாக்கிக் கொண்டிருந்த பைரோஜி நாராயணனின் சிந்தனையில் கற்பனை மின்னல் அவ்வப்போது தோன்றியது போலும்! அதன் விளைவாகக் 'காலைவண்ணம்' என்றொரு கற்பனை நாடகத்தை எழுதியிருக்கிறார். பைரோஜிக்கு சமூகப்பிரக்ஞையும் உண்டென் பதற்குச் சான்றாக 'ஒருமைக்கு ஓர் உயிர்' என்ற நாடகம் அமைகிறது.

## 1970 களில் எழுதிய நாடகங்கள் :

இந்தியப் பின்னணியைக் கொண்ட கதைகளை நாடகமாக்கிய போக்கு இக்காலகட்டத்திலும் காணப்படுகிறது. சான்றாக அரசநீதி (மனுநீதிச்சோழன் பற்றியது) கருணைவாசகன் (புத்தர் பற்றியது), தீச்சுடர், கரிகாற்சோழன், மதுரகவி, திருமுடித் தாமரை, சிற்பத்தீவு ஆகியவற்றைக் கூறலாம். பைரோஜியின் சிந்தனை இக்காலகட்டதில் சற்றே விசாலப் பட்டிருக்கின்றது. ஆகவே ஏழு சமூக நாடங்களை எழுதியுள்ளார். பிறந்தநாள் பரிசு, புதிய சமுதாயம், கானல் கண்ணப்பா, தங்கரதம், இன்சூரன்ஸ், ஒரு கம்போங் நகரமாகிறது, உளம் போல் ஓர் இல்லம் ஆகிய நாடகங்கள் சமூகப்பின்னணி கொண்டவை. ஆயினும் இக்காலகட் டத்தில் பைரோஜியின் பழமைப்பிடிப்பு மேலோங்கி

நிற்பதை 'நெப்போலியன்', நீரோ மன்னனின் வரலாற்றைத் தாங்கிய 'எரி கொண்ட இசை' ஆகிய நாடகங்கள் மூலமாகவும் அறிகிறோம்.

## 1980-களில் எழுதிய நாடகங்கள் :

வானொலி நாடகப் பிரிவிலிருந்து வேறொரு பிரிவுக்கு பைரோஜி மாற்றப்பட்ட காரணத்தால் ஒரு சில நாடகங்களையே எழுதினார் கல்கியின் சபதம், ஒலிம்பிக் திருவிழா ஆகிய இரு வரலாற்று நாடகங்களும் ஏற்கெனவே உள்ள கதைத்திட்டமாகிய 'எலும்புக்கூட்டின்' மேல் 'பூச்சு வேலை' செய்யப்பட்டவைகளே! ஆயின் ஓர் இல்லம் பள்ளியாகிறது', 'சலங்கையா அரங்கமா' ஆகிய இரு நாடகங்களும் சமூகப் பிரச்சனைகளைத் தாங்கி வந்தவை.

சமூகத்தை மறந்த எழுத்தாளனின் படைப்புகள் நடைப்பிணம் போல்பவை. எழுத்தாளனின் படைப்புகள் சமூகப் புண்களை - சமூக அவலங்களை - சமூக ஊழல்களை எடுத்துக் காட்ட வேண்டும். இயன்றவரை இவற்றை அகற்றவும் உதவ வேண்டும். இவ்வடிப் படையிலே பைரோஜி நாராயணனின் ஓரிரு நாடகங்களே வெற்றியடைந்தன. காலத்தின் தேவைக்கேற்ற கருப்பொருள்களை ஓரிரு நாடகங்களிலே கையாண்டுள்ளார். 'ஜனரஞ்சகப் புகழ் பெற்ற' பைரோஜியின் சமூக உணர்வுக்குப் பதச்சோறாக அமைவன ஓரிரு நாடகங்களே. 'ஓர் இல்லம் பள்ளியாகிறது' என்ற நாடகம் தேசிய மொழியான மலாய்மொழியின் இன்றியமையாமையை விளக்கும் நாடகமாகும்.

தமிழாகள் தேசிய மொழியில் சிறப்புத் தேர்ச்சி பெறாமல் இழந்த நன்மைகள் பலப்பல. ஆகவே தமிழாகளிடம் தேசிய மொழியின் இன்றியமையாமையை வலியுறுத்த 'ஓர் இல்லம் பள்ளியாகிறது' என்னும் நாடகத்தை எழுதினார் .பைரோஜி. இந்நாடகத்தில் தேசியமொழிப் புலமை கொண்ட வேலய்யா மூலம் அவன் குடும்ப உறுப்பினாகள் அனைவரும் மலாய் மொழியின் இன்றியமையாமையை உணர்ந்து மொழியைக் கற்கின்றனர். தேசிய மொழிப்பற்று என்னும் கருவைக் கொண்ட இந்நாடகம் பிரச்சார நோக்குடனும், கொச்சைத்தன்மை கலந்த உரையாடல்களைக் கொண்டும் படைக்கப்பட்டது.

## தொலைக்காட்சி நாடக நடிகர் :

வானொலி நாடக நடிகராக மட்டுமன்றித் தொலைக்காட்சி நாடகங்களிலும் பைரோஜி நடித்துள்ளார் .

## நாடக நூல் வெளியிட்டவர் :

வானொலியில் ஒலிபரப்பான 'மாலதி' என்னும் நாடகத்தைச் சிங்கை மகாத்மா பதிப்பகத்தார் வெளி யிட்டுள்ளனர். மாலதி, சீதா இருவரும் தோழிகள்; முரளி, ராஜ் இருவரும் தோழாகள். நான்கு பாத்திரங்களே இந்நாடகத்தில் இடம் பெறுகின்றன.

விதவை மறுமணத்தைக் கருவாக கொண்ட இந்நாடகம் சிக்கலில்லாத, எளிய, சாதாரணமான கதையமைப்பைக் கொண்டது. இந்நாடகம் ஒலிபரப்பான, நூல் வடிவில் வெளிவந்த காலத்தில் இப்பிரச்னை (விதவை மறுமணம்) சமூகத்தில் பரவலாகப் பரபரப்பாகப் பேசப்பட்ட பிரச்னை ஆகும். இதற்குப் பாவேந்தர் பாரதிதாசனும், பகுத்தறிவுக் கொள்கைகளை வலியுறுத்தி வந்த திராவிட இயக்கத்தாரும் காரணமாவா. ஆகவே பைரோஜியும் இப்பிரச்சனையை அடிப் படையாக வைத்தே நாடகத்தை எழுதியுள்ளார். ஆயின் முழு மையாக இதனைக் காட்டத்தவறி விட்டார் .

முரளிக்கும் ராஜுக்கும் இடையே நிலவும் நட்பு வள்ளு வப்பெருமான் கூறியாங்கு 'அக நக நட்பது நட்பு' என்றமைவது.. மாலதியும் சீதாவும் நெருங்கிய, உண்மையான நட்புடையோரே. 'உயிர் காப்பான் தோழன்' என்ற பழமொழிக்கு ஒப்ப அமையும் நட்பே இக்கதை வளாச்சிக்குக் காரணமாகிறது.

தனக்குரிய வாழ்க்கைத்துணைவியைத் தோந்தெடுக்கும் பொறுப்பை ராஜ் முரளியிடம் ஒப்படைக்கிறான். உயிர்நண்பனின் கருத் துப்படி மாலதியை மணக்கிறான். இடையில் மணமான ஓராண்டிற்குள் ராஜ் மாரடைப்பால் இறக்கிறான். மாலதியின் தோழி சீதா ராஜின் மனைவியான மாலதியை மணம்புரிந்துகொள்ளுமாறு வேண்டுகிறாள். முரளியும் அதற்கு இசைகிறான். திருமண வாழ்வில் முரளியைப் புரிந்து கொள்ள இயலாமல், அனுசரித்துப் போகமுடியாமல் (விவாகரத்து) மணவிலக்கு கோருகிறாள். ஒருவனுக்கு ஒருத்தி என்ற இலட்சியத்தை மாலதி இழக்க விரும்பாமல் மனத்தளவிலே ராஜின் மனைவியாகவே காலங்கழிக்கிறாள்.

இந்நாடகக் கதையமைப்பைக் கூர்ந்து கவனிக்கும்போது விதவை மறுமணத்திற்கு ஆதரவு தருவதாகப் படைத்த ஆசிரியர் அதனை வெற்றிபெற்றதாகக் காட்டாமல் பழமைப்பிடிப்பினால் உந்தப்பட்டுப் பின்வாங்குகிறார். ஆகவேதான் ஒருவனுக்கு ஒருத்தி என்ற கொள்கைப் பிடிப்புடனே மாலதியை உலவவிடுகிறார். புதுமையைப் புகுத்த வேண்டும் எனத் துணிந்த பைரோஜி சமுதாய எதிாப்புகளுக்கு

ஆளாவோம் என்றஞ்சிப் புரட்சிக்கருத்தை வெற்றி பெறச் செய்வதில் தவறி விட்டார். இதற்கு இவரின் பழமைப்பற்று காரணமாக இருக்கலாம். இப்பற்றினாலேயே பல வரலாற்று, இலக்கியக் கருப் பொருள்களைக் கையாண்டார் பைரோஜி நாராயணன் எனத் துணியலாம்.

மாலதி நாடக அமைப்பு ஓரளவு செவ்வையாக அமையக் காண்கிறோம். நாடக முன்னம் அல்லது நாடகக்குறிப்பு முரண் என்று கூறப்படும் உத்தியினால் நாடகக்கதைப்போக்கை அறிந்து கொள்ள இயலுகிறது. நாடகத்தின் முதற் காட்சியிலேயே மாலதி சீதாவிற்குப் பதிலிறுக்கும்போது "உன்னோட இந்த அலங்கார சிங்காரமெல்லாம் எனக்கு நடக்காத இதுவரைக்கும் வெறும் அமங்களமாத்தான் \sic\ இருந்திருக்கிறேன்" *32* என்பன போன்ற உரையாடல்களை நாடகக் குறிப்பு முரண்கள் எனக் கூறலாம். இந்நாடகத்தின் திருப்பு முனையாகவும் இத்தகு முரண்களில் ஒன்று அமைகிறது.

பைரோஜி நாராயணன் மலையக எழுத்தாளாகளுள் மூத்த பரம்பரையைச் சாாந்தவா். நாடகம், சிறுகதை, திறனாய்வு எனப்பல துறைகளிலும் இயன்ற பணிகளைச் செய்து வருபவர். ஆயின் இவரு டைய படைப்புகள் நூல் வடிவில் வெளிவரவில்லை. ஆகவே இவருடைய பங்கும் பணியும் மலையகத் தமிழ் இலக்கியத்தை எவ்வாறு வளப்படுத்தின என்பதைத் துணியுமாறில்லை. ஆயினும் மலேசிய நாடகத்துறையைப் பொறுத்தவரை இவர் ஒரு தழுவல் நாடகாசிரியர் என்பது யாரும் மறுக்வியலா உண்மையாகும். சா.ஆ. அன்பானந்தன் போன்றோரால் 'வல்லமை மிக்க எழுத்தாளர் ' என்று போற்றப்பட்டவர். நாடக அரங்குகள், பயிற்சி வகுப்புகள், கருத்தரங்குகள், பத்திரிகைப்பணி எனப்பல வாயில்களின் வழி பைரோஜி நாராயணனின் இலக்கியப்பணி தொடர் ந்தது. மேலும், கலைமலர் என்ற பத்திரிகையில் பணியாற்றியும், தீபம் (தமிழ்நாடு) இலக்கிய இதழின் மலேசியப்பிரதிநிதியாக (சிங்கை உட்பட) இலக்கியங்களைப் பரப்பி ஒல்லும் வகையான் ஓவாப்பணி புரிந்தார். எனினும் இவை 'காற்றில் கரைந்த கற்பூரங்களாகி' விடுவதில் பொருளில்லை. பைபோஜியின் படைப்புகள் நூலுருப் பெறவேண்டும் என்பது இலக்கிய ஆர்வலர்களின் பேரவாவும் ஆகும்.

## மேற்கோள் விளக்கம்

*1. ந. பாலபாஸ்கரன், 'கதை வகுப்பு ஓர் ஆராய்ச்சி' ப.63.*

*2. பைரோஜி நாராயணன், மாலதி, காட்சி 1, ப–8.*

## 5. நற்றமிழ் வளர்த்த நகரத்தார்

நகரத்தார் என்பதனை நகரத்தில் வாழும் மக்களைக் குறிப்பதாகப் -பொதுப்பெயராகப் பலரும் எண்ணுவர். ஆயின் நகரத்தர் என்னும் பெயர்சிறப்புப்பெயராகச் செட்டியர் இனத்தைக் குறிக்கிறது. இதனை நாட்டார் – நகரத்தாா என்னும் வழக்கும் புலப்படுத்துகிறது. செட்டி மக்கள் வாழும் நாடு செட்டிநாடு என்றழைக்கப்படுகிறது. செட்டி நாட்டுக்கும் செந்தமிழுக்கும் நெருங்கிய உறவுண்டு. செட்டி நாடென்னும் செந் தமிழ்நிலம் பாண்டித்தமிழின் மணமும், பாரி வண்மையும் கொண்டது. ஆகலின் செட்டிநாடு சீர் மலிந்த பகுதியாயிற்று.

### `நகரத்தார் –பெயர்க்காரணம் :

நகரத்தார் என்னும் சிறப்புப்பெயர் செட்டியார்களை மட்டும் குறிப்பதற்கு அறிஞர்கள் பல காரணங்களைக் கூறுவர். காவிரிப் பூம்பட்டினம் என்ற நகரத்திலிருந்து வந்தவர்; ஆதலின் நகரத்தார் என்றழைக்கப்பட்டனர். இக்காரணம் நகரத்தார் வரலாற்றோடு தொடர்புடையது. நகரத்தார் என்ற பெயர்க் காரணம் பற்றி அறிஞர் எஸ். சந்திரசேகர் கீழ்க்கண்டவாறு கருத்துரைப்பர்.

> "நகரம் என்னும் சொல் பழந்தமிழில் வாணிப
> மையமாக அல்லது வாணிப கிராமமாக விளங்கிய
> இடத்தைக் குறித்தது. தென்னிந்திய வரலாற்றில்
> சோழர்காலத்தில் (கி. பி. 846 - கி.பி 1279)
> இச்சொல்லாட்சி வாணிபநாட்டங் கொண்ட
> அர்ப்பணிப்புத்தன்மை கொண்ட குறிக்கோள்
> மாந்தரைக் குறித்தது. ஆகவே நகரத்தார் என்பது
> வாணிபத்தொடர்புடையாரைப் பொதுவாகக்
> குறித்தது" 1

எனக் கிளப்பர். இக்கருத்து திரு. பி. வி. என். நாயுடு என்பாரின் கூற்றைத் தழுவியதாம்.

> "நகரம் என்னும் சொல் மக்கள் கூடிவாழும்
> பகுதியைச் சுட்டுவது. நகரம் என்னும் சொல்
> ஆங்கிலத்தில் உள்ள township என்னும்
> பொருளையே தருகிறது. சமுதாய நோக்கங்க-
> ளுக்காக நகரத்தார் என்றழைக்கப்படும்

செட்டியார் இனம் ஒன்பது நகரங்களாக
வகைப்படுத்தப்பட்டது. ஒவ்வோரு நகரத்தின்
தலைமையில் ஒவ்வோரு கோயிலும் அமைந்ததே" 2

நாயுடு அவர்களின் இக்கருத்து நகரத்தார் வரலாற்றோடும், சமூக அமைப்போடும் தொடர்புடையதாகும். 'நகரகா' என்னும் வட சொல்லும் நகரவாசிகளையே சுட்டுவது இங்கு நினையத்தகும்.3

பழந்தமிழிலக்கியங்களில் 'நகர்' என்ற சொல் அரண்மனை அல்லது பரந்த வீட்டைக் குறிப்பதாகும். அறைகள் அதிகம் கொண்டதும், வசதிகள் அனைத்தும் மிக்க அரண்மனை போன்ற வீடுகளில் வாழ்ந்தோரை நகரத்தார் என்றழைத்ததில் வியப்பில்லையல்லவா? நகரத்தாரை 'நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள்' என்றழைப்பதும் அவர்களின் வீட்டமைப்பைக் கருத்திற்கொண்டேயாம். இது மட்டுமின்றி இங்கு மற்றொரு கருத்தும் நினையத்தக்கது. கோட்டை என்பது நாட்டினைப் பாதுகாக்கும் அரண்களில் ஒன்று. ஆகவே கோட்டையை அரண் என்றழைப்பர். நாட்டிற்கு அமையும் பலவித அரண்களுள், பொருள்செயல்வகைகளுள் ஒன்றான வாணிகமும் ஓர் அரணாகும். ஆகவேதான் வான்புகழ் வள்ளுவர் அரண் என்னும் அதிகாரத்தில்,

"ஆற்று பவர்க்கும் அரண்பொருள் அஞ்சித்தற்
போற்று பவர்க்கும் பொருள்" 3அ

எனக்கூறினர். அரண் என்னும் அதிகாரத்தை அடுத்துப் பொருள் செயல்வகை என்னும் அதிகாரத்தை வள்ளுவர் வைத்ததும் இக்கருத்துப் பற்றியேயாம். இதனைப் பரிமேலழகர் தெளிவுற விளக்குவர்.

"இனிப் பெரும்பான்மையும் நாட்டானும்
அரணானும் ஆக்கவும் காக்கவும் படுவதாய
பொருளைச் செய்தலின் திறம் இவ்வதிகாரத்தாற்
கூறுகின்றார்" 3ஆ

மேற்கூறப்பட்ட கருத்துகளால் நாட்டுக்கு வாணிகமும் கோட்டையைப் போலப் பாதுகாப்புத் தரும் என அறிகிறோம். ஆகவே இத்தகு வாணிகத்துறையில் தலைநின்ற செட்டியார்கள் நாட்டுக்குக் கோட்டையைப் போன்று பொருளாதாரப் பாதுகாப்பை வழங்கினர். வாணிகத்துறையில் வளப்பமடையாத நாடு சிறந்த, வளமுடைய நாடாகக் கருதப்படுவதில்லை. இஃது உலகறிந்த உண்மை. இதனை உளங்கொண்டு நோக்க 'நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள்' என்னும் சொற்றொடரின் பொருள் மேலும் விளக்கமடைகின்றது.;

வாணிகத்துறையில் கோட்டையாகிய விளங்கிய இவர்களை நாட்டுக் கோட்டைச் செட்டியார்கள் என்றழைத்ததன் காரணமும் அறிய வருகின்றது. இக்கருத்தினைப் பொருளாதாரத் துறையில் நகரத்தார்கள் ஆற்றிய பங்கும் பணியும் பற்றிய ஆய்வுகள் உறுதிப்படுத்துகின்றன.

## செட்டியார்கள் பெயர்க் காரணம்

செட்டி என்னும் சொல் வாணிகம் செய்வோரைக் குறிப்பதாகவே தென்னிந்தியமொழிகள் பலவற்றிலும், அவற்றின் கிளைமொழிகளிலும் வழங்கிவருகிறது. இச்சொல்லின் தோற்றம் பற்றிப் பல கருத்துவேறுபாடு களும் ஐயப்பாடுகளும் நிலவி வருகின்றன. செட்டி என்னுஞ்சொல் 'எட்டி'என்ற சொல்லினின்று பிறந்திருக்கலாம் என அறிஞர்கள் கருதுகின்றனர். இச்சொல் சோழர்காலத்திலும் பிற்காலப் பாண்டியர் காலத்திலும் இவ்வாறு தோன்றியிருக்க வாய்ப்புண்டு. எடுத்துக்காட்டாக 'எட்டி சாயலன்' என்னும் வணிகன் சிலப்பதிகாரத்தும், 'எட்டிகுமரன்' என்னும் வணிகன் மணிமேகலையிலும் குறிப்பிடப்படுகின்றான். இப்பெயர்களை நோக்க 'எட்டி' என்னும் சொல் வாணிபத் தொடர்புடையோருக்கு வழங்கிவந்ததைக் கூறலாம்.

'செட்டு' என்னுஞ்சொல் சிக்கனம் என்ற பொருளில் வழங்கி வருவதைப் பலரும் அறிவர்.அன்றாட வாழ்வில்.. பொருளைச் செலவிடுவதில் அக்கறையுடனும் கவனத்துடனும், எண்ணிப்பார்த்துச் செலவிடும் பண்புடையவர் செட்டியார்கள் ஆதலின் 'செட்டி' என்ற சொல் 'செட்டு' என்னும் சொல்லினின்று பிறந்தது எனத் துணிவோர் பலர். கவியோகி சுத்தானந்தரும் இக்கருத்தினரே என்பதனைக் கீழ்க்கண்ட பாடல் தெளிவுபடுத்துகிறது.

> "வீட்டினிற் செட்டாக வாழ்ந்திடுவார் - ஏதும்
> வீணின்றி மிக்கக் கணக்கிடுவார்
> நாட்டிற்குத் தாராள மாய்க்கொடுப்பார் - இவர்
> நல்ல பொதுநல ஊழியரே"4

செட்டு என்னுஞ் சொல் வாணிகத்தில் ஈட்டப்படும் இலாபத்தின் எல்லையைக் குறிப்பதாகும். தமிழில் வழங்கும் இச்சொல் இலாபத்தை அடிப்படையாகக் கொண்டு தொழில் புரியும் மக்களுக்கு வழங்கப் பட்டது. என்பர் சிலர். 5 ஆயின் இக்கருத்து ஒரோவழிதான் ஏற்பு டையது. செட்டி எனுஞ்சொல், இலாபத்தைக் குறிக்கோளாகக் கொண்டு வாணிகஞ்செய்வாரைக் குறித்தது. வாணிகத்தில் இலாபம் ஈட்ட விழை வது 'செட்டு' பெற எண்ணுவது செட்டியார்களுக்கு மட்டுமின்றி எல்லா வணிகர்க்கும் பொருந்துவதன்றோ? ஆகலின்

செட்டிமக்கள் என்பது வாணிகஞ் செய்த பிரிவினரைக் குறிக்கும் எனக் கோடலே சாலப்பொருந்தும்.

திரு. சந்திரசேகர் அவர்கள் 'செட்டிறை' என்னுஞ்சொல் ஒரு விதமான சுங்கவரி அல்லது இறக்குமதி வரியைக் குறிப்பதாகும். ஆகவே 'செட்டிறை' என்னுஞ் சொல்லினின்று செட்டி என்னுஞ்சொல் தோன்றி, இச்சொல் இவ்வரியோடு தொடர்புடைய வணிகரினத்தைக் குறித்தது என்பர். 6

வடமொழியில் 'சிரேஷ்டி' என்ற சொல்லினின்று செட்டி என்ற சொல் பிறந்திருக்க வாய்ப்புண்டு எனவும் திரு. சந்திரசேகர் கூறுவர். 'சிரேஷ்டா' என்ற சொல்லுக்குச் சிறந்த, இன்றியமையாத எனும் பொருள்கள் உண்டு. இன்றுங்கூட இப்பெயர் மிகப் புகழ்பெற்ற குடும்பத்தாருக்குரியதாக இருப்பது கவனிக்கத்தக்கது என்றும் சந்திரசேகர் கூறுவர். திரு. சந்திரசேகர் தம் கருத்துக்கு அரணாக, மறைந்த முன்னாள் பிரதமர் ஜவகர்லால் நேருவின் கூற்றை ஆதார மாகக் காட்டுவர்.

> "ஜவகர்லால்நேரு வேறொரு சூழலில் எழுதும்-
> போது தமிழகத்தின் செட்டிகள் மிகப்
> பழங்காலத்தொட்டே வாணிபத்திலும், தொழிலும்,
> (வட்டித்தொழிலும்) தலைவர்களாக விளங்கி
> வந்துள்ளனர். செட்டி என்ற சொல்
> சிரேஷ்டி என்ற வடசொல்லினின்று தோன்றி
> வணிகரினத்தில் தலைமை வாய்ந்தோரைக்
> குறித்தது. மற்றொரு பொதுப்பெயரான 'சேட்'
> என்பது சிரேஷ்டியிலிருந்து தோன்றியது.
> தமிழகத்தின் செட்டிகள் தென்னிந்தியாவில் மட்டுமின்றிப்
> பர்மா முழுவதும் பரவி வாழ்ந்து இன்றியமையா
> இடம் வகித்துள்ளனர்" 7

மேற்கூறிய கருத்துகளை உளங்கொண்டு நோக்குங்கால் 'செட்டி' என்ற சொல் 'சிரேஷ்டி' என்ற வடசொல்லினின்று தோன்றியது என்பது, வடமொழிமாட்டு மிகுந்த விருப்பமுடையார் கூற்றாகவே தெரிகின்றது. ஆயினும் வடமொழியிலும் இச்சொல் வாணிகம் செய் வோரைக் குறித்தது என்ற கருத்து இவண் நினையத்தகும்.

தமிழில், செட்டாக வாழ்பவர் செட்டியார் என்பது அத்துணைப் பொருத்தமாகத் தோன்றவில்லை. செட்டாக வாழ்பவரின் திருமணம்

போன்ற பெரிய நிகழ்ச்சிகளிலும், ஏனைய மங்கல நிகழ்ச்சிகளிலும் 'செட்டு' எங்கே சென்றது? மேற்கூறிய நிகழ்ச்சிகளில் பணத்தை வாரி இறைத்துச் செலவுசெய்வதை நோக்க, செட்டாக வாழ்பவர் செட்டியார் என்ற கருத்து ஏற்புடையதன்று.

சங்க இலக்கியங்களின் மூலம் வணிகச்சாத்தினர்க்கு· வணிகர்களுக்கு எட்டி, காவிதி ஆகிய பட்டங்கள் வழங் கப்பட்டன என்றறிகிறோம். சிலப்பதிகாரம் காட்டும் எட்டி சாயலனும், மணி மேகலை மொழியும் எட்டிகுமரனும் இத்தகு விருது பெற்றோ ரேயாவர். ஆகலின் 'எட்டி' என்ற சொல் மருவி நாளடைவில் 'செட்டி' என்று வழங்கியிருக்கவேண்டும் எனக் கோடலே பொருந்துவதாகும். மொழிவளர்ச்சியில், மக்கள் பேச்சுவழக்கில் இத்தகு மாற்றங்கள் தவிர்க்கமுடியாதவை. இச்சொல்பற்றிய ஆராய்ச்சியில் கருத்துரைக்க வேண்டுவது மொழியியலார் கடனாம்.

செட்டி எப்போது செட்டியார் ஆனார்? என்ற வினாவும் எழுவது இயல்பே. ஆர் என்னும் விகுதி சிறப்புக் கருதிச் சொல்லப்பட்டது. ஆர் என்னும் பின்னொட்டு மரியாதை கருதி வழங்கப்படுவது யாவரும் அறிந்ததே. ஆகலின் 'செட்டி' என்னுஞ் சொல் 'செட்டியார்' ஆயிற்று. ஆயினும் இம்மாற்றம் பழைய வழக்கா என்று ஆராயுமிடத்து, அறிஞர் திரு. சந்திரசேகர் அவர்களின் கருத்துப்படி, அரை நூற்றாண்டுகட்கு முற்பட்டதாகவே இருந்திருக்க வேண்டும். சாசனம், பட்டயம் ஆகியவற்றில் இந்நூற்றாண்டின் முதற்பகுதியில் 'செட்டி' என்ற சொல்லே கையாளப்பட்டுள்ளது. இம்மாதிரி 'ஆர்' என்னும் பின்னொட்டு தெலுங்கு போன்ற தென்திராவிட மொழிகளிலும் மரியாதைக்குரியதாக வழங்கி வருகின்றது. சான்றாக ரெட்டிகாரு, நாயுடுகாரு, செட்டிகாரு ஆகிய தெலுங்குச் சொற்களைக் கூறலாம். எனவே 'ஆர்' என்னும் பெருமைக்குரிய அல்லது சிறப்புக்குரிய பின்னொட்டு செட்டி என்ற சொல்லுடன் இணைந்து செட்டியார் ஆயிற்று; செட்டியாரினமும் பெருமைக்குரியதாயிற்று.

### செந்தமிழ்ப்பற்றும் செட்டியார்களும்:

நகரத்தார் இனம் பழஞ்சிறப்புடைய இனமாக விளங்கியது போன்றே இவர்களின் பைந்தமிழ்ப்பற்றும் தொன்மை மிக்கது. 'யாதும் ஊரே யாவருங் கேளிர்' என்று பரந்த மனப்பாங்குடன் பாடல் பாடிய கணியன் பூங்குன்றனார் செட்டிநாட்டுப் புலவரே என்பது அறிஞர் பலரின் முடிந்த முடிபு. பொதுமைக்குரல் எழுப்பிய புலவரை ஓரினத்தைச் சேர்ந்தவர் எனக் குறுகிய எல்லைக்குள் அடக்கிப்பார்ப்பது பொருந்தாது; ஆயினும் தமிழினத்தின் மாண்புக்கும், புதுமைச்

சிந்தனைக்கும் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே 'பூபாளம் இசைத்த' புலவர் நகரத்தார் இனத்தில் பிறந்தவர் என்று கூறும்வேளையில் இனத்திற்கும் பெருமை சேர்கிறது. அறிவுடைச் சான்றோர்கள் பொதுவுடைமையானவர் என்பதில் இருவேறு கருத்துகள் இல.

பூங்குன்றம் என்ற பகுதி பூங்குன்றநாடு எனக் கல்வெட்டுகளில் குறிக்கப்பட்டுள்ளது. இப்பகுதி செட்டிநாட்டுப் பகுதியில் உள்ள 96 ஊர்களில் 'மகிபாலன் பட்டி' என்றழைக் கப்படுவதாகும். பண்டிதமணி மு.கதிரேசன் செட்டியார், மூதறிஞர் செம்மல் வ.சுப. மாணிக்கனார் ஆகிய சான்றோர்கள் இப்புண்ணியபூமியில் பிறந்தனர்.

ஒக்கூர் மாசாத்தியார் என்ற பெண்பாற்புலவரும் செட்டிநாட்டி னரே. நகரக்கோயில்கள் ஒன்பதுள் இளையாத் தங்குடிக் கோயில் என்றொரு பிரிவு உண்டு. இதன் உட்பிரிவினுள் 'ஒக்கூருடையார்' என்றொரு பிரிவும் உண்டு. இவ்வொக்கூரில் பிறந்த பெண்பாற் புலவரே ஒக்கூர் மாசாத்தியார். நன்றியுணர்வு மிக்க இப்புலவரின் பாடல்கள் புறநானூற்றில் அமைந்துள. ஒக்கூரில் பிறந்த காரணத்தோடு மட்டுமன்றி அப்புலவரின் பெயரும் அவர் நகரத்தார் குலத்தினரே என்பதனை மெய்ப்பிக்கும். நகரத்தார் பெருமக்கள் சாத்தப்பன், சாத்தம்மை எனப் பெயர்வைக்கும் வழக்குடையவர்கள்.

சங்க காலத்திற்குப் பிறகு தோன்றிய பக்தி இயக்க காலத்திலும் பட்டினத்தடிகள், காரைக்காலம்மையார் போன்ற புலவர் பெரு மக்களைக் காண்கிறோம். இப்பட்டினத்தடிகள் நகரத்தார் என்பதற்கு இளையாற்றங்குடிக் கோவிலின் ஒரு பிரிவான 'பட்டினசாமி வகுப்பே' தக்க சான்றாகும். "அரிசியோ நானிடுவேன் ஆத்தாள் தனக்கு வரிசையிட்டுப் பார்த்து மகிழாமல்" எனப் பட்டினத்தடிகள் பாடி யுள்ளார். வரிசை, ஆத்தாள் என்ற சொல்லாட்சிகள் இவண் கவனிக்கத்தக்கன. தாயாரை 'ஆத்தாள்' என்றழைப்பது செட்டிநாட்டு மரபு. மங்கலநிகழ்ச்சியாயினும், துன்ப நிகழ்ச்சியாயினும் தாய் வீட்டிலிருந்து சீர்வரிசையை வரிசையாகக் கொண்டுசென்று •பரப்பும் பழக்கம் உண்டு. இத்தகு நகரத்தார் பழக்கவழக்கங்களைப் பட்டி னத்தடிகள் பாடியுள்ளமையால் பட்டினத்தடிகள் செட்டிநாட்டுப் புலவரே எனத் துணியலாம்.

சிற்றிலக்கியக்காலம் என்று கூறப்படும் இடைக்காலத்திலும் பல செட்டிநாட்டுப் புலவர்கள் தமிழுக்குச் சிறப்பான தொண்டாற் றியுள்ளனர். பாடுவார் முத்தப்ப செட்டியார், காரைக்குடி சொக்கலிங்கஐயா, வயிநாகரம் அ. இராமநாதன் ஆகிய முதுபெரும் புலவர்களும் நகரத்தாரே.

இருபதாம் நூற்றாண்டில் பாரதி, பாரதிதாசனுக்குப் பிறகு தமிழ்க்கவிதைமரபைத் தழைக்கச்செய்த கவிஞர் பரம்பரையில் கவிஞர் கண்ணதாசனுக்குச் சிறப்பிடம் உண்டு. இவர் முத்தையா என்னும் இயற்பெயர் கொண்டவர். இன்றும் செட்டியார் சமூகத்தைச் சேர்ந்த பற்பல பேராசிரியர்கள் தமிழ்ப்பணி யாற்றிவருவதை நாம் காணலாம். பதிப்பகங்கள் அமைத்துத் தமிழ்நூல்களை வெளியிட்டும் தமிழ்த் தொண்டாற்றி வருகின்றனர் நகரத்தார் பெருமக்கள். தமிழ்நூல்களை வெளியிடுவோர்க்கு விளம்பரம் இல்லாமல் பொருளுதவியும் செய்து வருகின்றனர் செட்டியார்கள்.

இதுகாறும் நாம் கண்ட தமிழ்த் தொண்டர்களை நினைவு கூர்கையில், செந்தமிழ்ப்பற்றுமிக்க செட்டியார்களின் தமிழ்ப்பணியைத் திரு. சந்திரசேகர் அவர்கள் சாசனங்களின் துணைகொண்டு நிறுவுவதும் கருதத்தக்கது.

"The contribution of the Nagarathar community to the growth of Tamil language and literature is attested to in one of the sasanas. There are references to the Nagarathar's love for poet Tirvalluvar's (circa first century A.D.) famous book Tirukkural and the saint Tirumular's (circa fifth century A.D) saivite work Tirumantiramalai. The sasanas also bear evidence to the rich patronage extended by the Nagarathar community to Tamil poets and writers in general. For example, a golden anklet was bestowed upon Avvai, the celebrated Tamil poetess; the community also constructed a temple in memory of Kamban, the renowned author of the Tamil Ramayana" 8

தாம் வாழும் இடங்களிலெல்லாம் தமிழையும் சமயத்தையும் நகரத்தார் பேணிவருவது பெருந்தொண்டாகும். செட்டிநாட்டில் மட்டுமின்றிச் சென்றவிடமெல்லாம் செந்தமிழைத் தழைக்கச் செய்தனர் செட்டிமக்கள். திரை கடலோடியும் திரவியம் தேடச் சென்ற நகரத்தார் பெருமக்கள் பர்மா, மலாயா, இலங்கை, இந்தோனேசியா ஆகிய பல நாடுகளுக்கும் சென்றனர். இவர்கள் வெறுங் கையோடு செல்லவில்லை. பெரும் பணம் கொண்டுசென்று அதனை முதலீடுசெய்து பொருளீட்டி நாட்டுக்கு நலஞ்சேர்த்தனர். நகரத்தாரின் வட்டித்தொழில் பல நாடுகளை வளம்பெறச் செய்தமையைப் பல அறிஞர்களும், ஆராய்ச்சியாளர்களும் கட்டுரைகளாக வடித்துள்ளனர்.

வட்டித்தொழில் வாழ்க்கைத்தொழிலாக அமைந்தாலும் பணம் ஒன்றே குறிக்கோளாக அமையவில்லை அவர்களுக்கு! தேடிக்குவித்த திரவியங்கள் பலப்பல; ஆனாலும் வாழ்க்கைக்கு வேண்டிய

நல்லொழுக்கம், நற்பண்புகள் அனைத்தையும் மறந்தாரில்லை. நாட்டுணர்வும், மொழியுணர்வும், சமயஉணர்வும் சாலப் பெற்றவர்கள் நகரத்தார். சென்றவிடமெல்லாம் செந்தமிழ் வளர்த்த சீராளர் நகரத்தார். கன்னித்தமிழுக்குக் கவின்மிகு தொண்டாற்றிய இவர்திறம் கட்டுரைக் குகும் தகையதன்று. இவ்வடிப்படையில் மலையகத்தில் மாண்புறு தமிழ்த் தொண்டாற்றிய நல்லோர் பலரைப் பற்றிய செய்திகளைத் தருகின்றது இக்கட்டுரை.

## பி.என்.எம். முத்துப்பழநியப்பசெட்டியார்:

மலாயாவின் தோற்றம் என்னும் அரிய ஆய்வுநூலை, வரலாற்று நூலை எழுதிய ஆன்றோர் இவர். சுங்கைரம்பை எனப்படும் சுங்குரும் பைப் பகுதியைச் சார்ந்தவர் இவர்.

மலாயாவின்தோற்றம் என்னும் நூல் இவ்வான்றோரின் கடும் உழைப்பினால் மலாய் நாட்டின் மாண்பை எடுத்துரைக்கும் ஏற்றமிகு நோக்கோடு எழுதப்பட்டதாகும். மக்களின் ஒருமைப்பாடு, ஆங்கில அரசின் திறம், அரசியலமைப்பு, இயற்கை எழில், இந்தியர்களின் தொடர்பு, செல்வத்தின் வளம், செட்டியார்களின் சிறப்பு, தக்காரின் வாழ்க்கை ஆகிய இவற்றைச் சீர்மலிந்த தமிழில் திறம்படச் சித்திரித் துள்ளார் இவ்வறிஞர். ஆராய்ச்சிக் கண்ணோட்டத்துடன் எழுதப்பட்ட இந்நூலில் உள்ள செய்திகள் அனைத்தும் உயரிய உண்மையான வரலாற்றுச் சான்றுகளாம். 1938 இல் வெளிவந்த ஒப்புயர்வுற்ற வரலாற்று நூலாகும்.

நூலின் ஒவ்வொரு கட்டுரையைத் தொடங்கும் போதும் வெண்பாவோடு தொடங்குகிறார் ஆசிரியர். இக்கவிதைகளைத் 'தமிழறம் பேணுந் தகைமையாளர் என்னுஞ் சிறப்புப்பெற்ற மலாக்கா அருணாசலஞ்செட்டியார் இயற்றினார். இச்செய்தியை நூலின் முன்னுரையில் நூலாசிரியர் திறந்த உள்ளமொடு நேர்மையாகக் கிளப்பர். நூலாசிரியர் ஆய்வறம் பேணிய அறிஞர் என்பதனை இப்பகுதி காட்டுகிறது. நூலின் மேற்கோள்கள் பொருத்தமுறக் கையாளப்பட்டுள. இனிய, எளிய, தமிழ் நடையில் நூலை ஆக்கியுள்ளார் ஆசிரியர். நூலின் முன்னுரையில் ஆசிரியர், சுவாமி அற்புதானந்தா, மலாக்கா அருணா சலஞ்செட்டியார் ஆகியோரின் உதவியை அழகிய உருவக நடையில் காட்டுவர்.

> "மலாயாவின் தோற்றமாகிய மரத்தைப் பெருந்தருவாக
> வளர்த்து, பல கிளை, மலர், பிஞ்சு, காய், கனிகளாக்கி,
> அக்கனியின் இரசத்தை நாம் அனைவரும்அருந்தும்
> வண்ணம் செய்தார்." 9

சங்கஇலக்கியங்கள், சிலப்பதிகாரம், மணிமேகலை திருக்குறள் ஆகிய இலக்கியங்களிலிருந்து பல மேற்கோள்கள் காட்டப்பட்டுள. இவை நூலாசிரியரின் இலக்கியப்பயிற்சியைத் தெளிவுபடுத்தும். கவிதைகளில் தற்குறிப்பேற்ற அணியைப் பயன்படுத்துவர் கவிஞர். ஆயின் நூலாசிரியரோ உரைநடையிலும் இவ்வணியைக் கையாண்டுள்ளமை பாராட்டுக்கு உரியது. 'பினாங்கு ஆலயங்களின் பெருமை' என்ற கட்டுரையில் தண்ணீர்மலையின் காட்சிகளை வருணிக்கும் வேளையில் தற்குறிப்பேற்ற அணி செவ்வையாகப் பயன்படுத்தப் பட்டுள்ளது. கார்த்திகேயனின் கருணைவெள்ளத்தில் ஆழ்ந்த அன்பர்கள் கொடுக்கும் பழங்களுக்காகச் சோலைகளில் உள்ள குரங்குகள் அப்பழங்களைப் பறித்துக்கொண்டும், சண்டையிட்டுக் கொண்டும் மரக்கிளைகளில் தாவும் காட்சியை,

> "உலக மக்களில் நல்லோர் கூட்டுறவும் நற்பழக்க
> மும் இல்லாதவர்கள், ஒன்றுபட்டு வாழாதவர்களின்
> திறத்தையும், தான் ஒருவன் வாழ்ந்தால்
> போதும் என்று எண்ணிக் கிடைத்தவற்றைப்
> பற்றிக்கொண்டு இல்லத்தை அடையும் ஒருவரின்
> செய்கையையும், எளியாரை வலியார் வாட்ட
> நினைக்கின்ற கூற்றையும் பார்ப்பது போல
> இருக்கும்" 10

என வருணிக்கிறார்.

நகைச்சுவை நயம்பட எழுதியுள்ள போக்கும் இந்நூலில் அமைந்துள்ளது. 'செட்டியார்களும் சீர்திருத்தமும்' என்ற கட்டுரையில் மேனாட்டு நாகரிகமோகம் தந்த அவமானத்தை நகைப்பு ஏற்படும் வகையில் எழுதியுள்ளார். 11

ஆய்வறிஞர்களைப் போலக் 'குணம்நாடி, குற்றமும் நாடி அவற்றுள் மிகைநாடி மிக்கக்கொளல்' என்னும் வள்ளுவனின் அடிச்சுவட்டில் நூலாசிரியர் தம் கருத்துகளை நடுவுநிலையோடு கூறியுள்ளார். நூலாசிரியர் செட்டியார் சமூகத்தைச் சேர்ந்த வராயினும் தம் சமூகத்திடம் இன்னும் சீர்திருத்த உணர்வுகள் முழுவளர்ச்சி பெறவில்லை என்ற கருத்தைக் கீழ்க்கண்டவாறு கூறுகிறார்.

> "ஆகவே சீர்திருத்தங்களையும் படிப்படியாகத் தான்
> புகுத்தவேண்டும் என்பது பலரது நோக்கம். அதைப்
> பலரும் பின்பற்றுவதால் இப்போது இயன்றஅளவு
> சீர்திருத்தத்தில் சிறந்துள்ள செட்டியார்கள்

சமூகம் இன்னுஞ் சின்னாளில் அதிகம் சிறந்து
விளங்கும் என்பதில் ஐயமில்லை" 12

மலாக்கா அருணாசலம் செட்டியார் போன்ற பெரியோர்களின் வரலாற்றையும் இவண் காட்டியுள்ளார். இதனால் நாட்டுக்குழைத்த நல்லவர்களின் வரலாற்றையும் இந்நூல் பேசுகிறது. புள்ளிவிவரங் களோடு பல .செய்திகளைப் பொருத்தமுறத் தந்துள்ளர் நூலாசிரியர்.

'செட்டியார் காந்தி' என்ற சிறப்புப்பெயர் நூலாசிரியருக்கு உண்டு. மகாத்மா காந்தியடிகளைப் போன்றே உருவத் தோற்றமும் உயர்பண்புகளும் உடையவராதலின் மக்கள் இவரைச் செட்டியார் காந்தி என்றே சிறப்பித்தனர். இந்நூலாசிரியரின் அரும்பண்பு பற்றியும், அரும்பணி பற்றியும் நூலின் முகப்பில் அமைந்துள்ள சிறப்புரை தெளிவாக விளக்குகிறது.

"மனத்தூய்மை, வினைத்தூய்மை, மாறில் வாய்மை,
செயல்வன்மை என்ற சீரிய ஒழுக்கங்களைப்
பெற்றிருக்கும் ஸ்ரீமான் செட்டியார் மலாய்நாட்டில்
நல்லனுபவமும், நல்லறிவுமுடைய அறிவாளர்.
அறம் உடலாயும், அறிவு உள்ளமாயும், அன்பு
உயிராயும் பொருந்தியுருக்கப் பெற்றவர் என்பதை
இவருடன் பழகிய யாவரும் அறிஞர். தாய்மொழி
அபிவிருத்தியிலும், தன் சமூகத்தினரின் மேன்மையிலும்
இவர் ஆர்வம் கொண்டிருப்பதனாலாயே
பெரும் சிரமத்திலும், பொருட்செலவிலும், நிகரற்ற
உழைப்பிலும் நிலைபடும் அறிய செய்கையாக
/sic/ நிலைபடும் அரிய செய்கையாக இந்நூலின்
ஆக்கியோனாக முற்படும் நீர்மையையும் நேர்மையையும்
கொண்டனர்" 13

மலாய நாட்டின் வரலாறு பற்றிப் பல நூல்கள் ஆங்கில மொழியில் எழுதப்பட்டுள்ளன. ஆயின் தமிழில் மலாயாவைப் பற்றி எழுதப்பட்ட நூல்கள் அனைத்துக்கும் (ஒரு சிலவே) இந்நூலே தோற்றுவா யாக-அடிப்படையாக அமைந்திருக்கிறது. மலாயாவின் தோற்றம் என்ற இந்நூலில் கூறப்பட்டிருக்கும் தரவுகள் மற்றும் செய்திகள் போல நடுநிலைமையுடனோ, மெய்ம்மையுடனோ மற்ற நூல்களின் செய்திகள் முழுவதுமாக அமையவில்லை என்பதும் கருதத்தக்கது. ஆகலின் செய்ந்நன்றிமறவாச் செம்மல் உள்ளமொடு முத்துப்பழநி

யப்பசெட்டியார் (ஜே.பி) அவர்கள் எழுதிய 'மலாயாவின் தோற்றம்' என்ற இந்நூல் நாட்டு வரலாறாக மட்டுமின்றி, மொழி வரலாறாக, இனவரலாறாகத் திகழ்வதும் இவண் உன்னத்தக்கது. ஆகவே மலேசிய இந்தியர்களின் மலேசியத் தமிழர்களின் வரலாற்றில் இந்நூல் 'துருவநட்சத்திரமாக' ஒளிரும் பெற்றியது.

### மலாக்கா உ.அரு. அருணாசலஞ்செட்டியார்:

மலையகத் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு வித்திட்ட ஆன்ற தமிழ்ச்சான்றோருள் மலாக்கா அருணாசலஞ்செட்டியாரும் ஒருவர்.

### பிறப்பும் வளர்ப்பும்:

தமிழகத்தின் புதுக்கோட்டை மாவட்டம் வரலாற்றில் குறிப் பிடத்தக்கது. புகழ்பெற்ற பகுதியாக விளங்கியது போன்று கறைபட்ட பகுதியாகவும் இது விளங்கிற்று. இம்மாவட்டத்தில் செட்டிமக்கள் நிறைந்து வாழ்வது கடியாபட்டி என்னும் ஊர். இதற்கு விசுவநாதபுரம் என்றொரு பெயரும் உண்டு. மலாக்கா அருணாசலஞ்செட்டியாரை இவ்வுலகுக்குத் தந்து பெருமை கொண்டது விசுவநாதபுரம். உத்தமன் செட்டியாரும் தெய்வானை ஆச்சியும் இவரின் பெற்றோர் ஆவர். 1901 ஆம் ஆண்டு பிறந்தார் அருணாசலஞ்செட்டியார். கல்விகேள்விகளில் சிறந்து விளங்கிய அருணாசலனாரின் அறிவுத்திறம் 'விளையும் பயிர் முளையிலே தெரியும்' என்பதற்கிணங்க இளமைப் பருவத்திலேயே தெரிந்தது.

செட்டியார் குல வழக்கப்படிப் பன்னிரண்டாம் அகவையில் 'கைபழக' பர்மாவுக்கு அனுப்பப்பட்டார். இவர்தம் தாய்மாமன்க ளுக்கும் இவ்வட்டிக்கடையில் பங்கு இருந்தது. பர்மா சென்ற அருணாசலனார் பர்மிய மொழியைக் கற்றார். முதல் உலகப்போர் நடந்தவேளையில் தாயகம் வந்து திருமணம் புரிந்துகொண்டார். பின்னர் 1919 இல் தம் தமையனாருடன் வாணிபத்தின் பொருட்டு மலாக்கா வந்தார். முதல்மனைவி இறக்கவே 1925 இல் தம் தமையனாருடன் வாணிகத்தின் பொருட்டு மலாக்கா வந்தார். முதல் மனைவி இறக்கவே 1925 இல் மறுமணம் புரிந்துகொண்டார்.

மலாக்காவில் க.வீ.அழ. கடைக்கு மேலதிகாரியாகப் பணியாற்றினார். 1929 வரை இப்பணியில் நீடித்தார். 1930 இல் பாண்டிச்சேரியைச் சேர்ந்த காரைக்கால் பகுதியில் துணிக்கடை ஒன்றை நிறுவித் தொழில் புரிந்துவந்தார். இக்காலத்தில் அருணாசலனார் தமிழில் சிறந்த புலமை பெறும்பொருட்டுக் கற்றார். சைவசித்தாந்த வித்தியாசிரமத்தில் சேர்ந்து அதன் வளர்ச்சிக்குப் பாடுபட்டார். பல இடங்களுக்கும் சென்று சொற்பொழிவாற்றினார். கல்வித்திறம்,

கேட்டார்ப் பிணிக்கும் சொற்பொழிவுத்திறம், தமிழ்த்திறம் ஆகியவை கண்டு காரரைக்கால் சைவசித்தாந்த வித்தியாச்சிரம விழாவில் இவருக்கு "தமிழறம் பேணுந் தகைமை' என்ற சிறப்புப்பெயர் வழங்கப்பட்டது. சைவசித்தாந்தம், தமிழிலக்கியம் இவற்றில் மட்டு மின்றி அரசியல் துறையிலும் ஆற்றல்மிக்க பேச்சாளராக விளங்கினார். இவருக்கு வழங்கப்பட்ட உபசாரப்பத்திரம் ஒன்றில் இச்செய்தி குறிக்கப்பட்டி ருக்கிறது.

"அரசியல் மிகத்தேர்ந்தோர் அறிவியலை
உணரார்கள் அதிலுந் தேர்ந்தோர்
உரைசெய்யும் ஞானவியல் உணரார்கள்
உலகநிலை இவ்வா றாக
பரசுதல்செய் பலவகையும் சிறப்புறவே
பயின்றதுடன் பயிற்றும் சான்றோய்
அரசத்தின் கிருபையினால் அனைத்தின்பம்
அடைந்துபுகழ் எய்தி வாழ்க" 14

மகாத்மா காந்தியடிகள் தமிழகப்பயணம் மேற்கொண்ட வேளையில் 1927இல் கடியாபட்டிக்கு வருகை புரியுமாறு செய்தார். மீண்டும் காந்தியடிகள் 1934இல் தென்னிந்தியப் பயணம் செய்தபோது காரைக்காலில் அவரை வரவேற்றதோடு அமையாமல், அப் பெருங்கூட்டத்தில் அடிகளின் முன்னிலையில் பேசும் பெரும்பேறும் பெற்றவர். ஜவகர்லால் நேரு, டாக்டர் இராஜேந்திரபிரசாத் போன்ற தலைவர்களை வரவேற்கக் கடல் அலையெனத் திரண்டிருந்த மக்கள் கூட்டம் இவரின் நாநலத்தில் கட்டுண்டிருந்ததனை விரிவாகப் போற்றுவர் முத்துப்பழநியப்ப செட்டியார். வள்ளுவம் கூறும் நாநலம் இவரிடம் நன்கு அமைந்திருந்தது.

"நாநலம் என்னும் நலனுடைமை அந்நலம்
யாநலத்து உள்ளதூஉம் அன்று" 15

மீண்டும் 1934இல் மலாக்காவுக்குப் புறப்பட்டுவந்து ஆயுள் காப்புறுதித்தொழிலை நடத்தியதாக பெ.நா.மு. முத்துப் பழனியப்பன் கூறுவர். 16 ஆயின் மலாக்கா அருணாசலம் செட்டியாரின் புதல்வர் திரு. நாகப்பன் 1934இல் மலாக்காவுக்கு வந்து துணிவியாபாரத்தையும் மளிகை வியாபாரத்தையும் தொடங்கியதாகக் கிளப்பர். 17 இவர் தொழிலைக் தொடங் கினாலும் தொடர்ந்து நடத்த இயலாமல் பொதுத்தொண்டில் கொண்டநாட்டம் தடுத்தது. ஆகலின் தொழிலைக் கவனிக்க நிர்வாகியைப் பணிக்கு அமர்த்திவிட்டு முழுநேரப் பொதுத் தொண்டராகச் சேவைசெய்தார். இக்காலகட்டத்தில்தான் 'தமிழ்க்

கொடி' என்னும் மாத இதழைத் தொடங்கினார். இருவாரங் களுக்கொருமுறை இவ்விதழ் வெளிவந்தது. இவ் விதழினால்தான் தமிழ்மொழியின் மீதும் தமிழ் இலக்கியங்களின் மீதும் மக்களுக்குச் சிறிது ஆர்வம் தோன்றியது என்றால் மிகையாகாது. 17 ஆ

மலாக்காவில் வாழ்ந்த நகரத்தார் இளைஞர்களை ஒன்றுபடுத்தித் 'தனவைசியர் இளைஞர் சபை' என்ற அமைப்பை உருவாக்கினார். இவர்களுக்குத் தமிழறிவை ஊட்டியதோடன்றி நாடகஈடுபாட்டையும் ஊட்டினார். 1937-38ஆம் ஆண்டுகளில் "உத்தமநாதன் அல்லது சத்தியபுரி ஜமீன்தார்" என்னும் நாடகத்தை உருவாக்கி மலாக்காவில் மேடையேற்றினார். இதனைத் தொடர்ந்து 1939, 1940 ஆண்டுகளில் "காரைக்காலம்மையார்", "இந்திரா B.A.," ஆகிய நாடகங்களை உருவாக்கி இவற்றைக் கோலாலம்பூர், மலாக்கா ஆகிய இரு நகரங்களிலும் மேடையேற்றினார். இந்நாடகங்களில் பெண்வேடங் களையும் ஆண்களே ஏற்று நடித்தனர்.

1941–இல் இரண்டாம் உலகப்போர் மூளவே அருணசாலனாரின் தொண்டுகள் தடைப்பட்டன. சப்பானியர் ஆட்சிக்காலத்தில் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸின் இந்திய தேசிய ராணுவம் அமைக்கப்பட்டது. மலாக்காவில் இந்திய சமுதாயத்தின் பிரதிநிதியாக அருணாசலனார் பங்கேற்றார். அருணாசல- னாருக்குத் துணையாக வழக்கறிஞர் எஸ். சண்முகம் என்பவர் நியமிக்கப்பட்டார். சப்பானியர் ஆட்சி முடிந்ததும் அருணா சலனாரின் தமிழ்ப்பணி மீண்டும் தொடர்ந்தது. மலாயா முழுவதும் பயணஞ்செய்து இலக்கியச்சொற்பொழிவுகளை நிகழ்த்தி வந்தார். மக்களுக்கு இலக்கிய அறிவூட்டவே எண்ணருஞ் சொற்பொழிவுகள் ஆற்றினார் .

## தமிழ்ப்பண்ணையில் தமிழ் வளர்த்தவர் :

அருணாசலனார் தமிழ்ப்பண்ணை என்னும் அமைப்பின் மூலம் தமிழ்மொழி வகுப்புகள், தமிழிலக்கிய வகுப்புகள் ஆகியவற்றை நடத்திவந்தார். ஆண்டுதோறும் கோலாலம்பூரில் தமிழ்க்கலை மாநாடு ஒன்றினை இடையறாது நடத்தினார். 1957 இல் தேசிய அளவில் சிறுகதைப்போட்டி நடத்திப் பவுன் பரிசுகளை வழங்கியது தமிழ்ப்பண்ணை. தமிழ்ப்பண்ணையின் வாயிலாகச் சில நூல்கள் வெளிவந்தன. ஆயின் இன்னின்ன நூல்கள் என்பது அறியுமாறில்லை. அருணாசலனாரின் அருந்தமிழ்ப் பணிக்கு உறுதுணையாக நின்றவர் சைவப்பெரியார் கா. இராமநாதன் ஆவார் .

அருணாசலனார் சில நூல்களையும் எழுதியதாக அறிகிறோம். முன்னாக் குறிப்பிட்ட நாடகங்களின் வழி அவர் நாடகாசிரியர் என

அறியலாம். அருணாசலனார் நல்ல கவிஞர் என்பதற்குச் சான்றாகப் "பினாங்குத் தண்ணீர் மாமலை ஸ்ரீதண்டாயுதபணி அருட்பாடற் றிரட்டு" என்னும் நூல் அமைகிறது.

சமூகத்தொண்டராக, அரசியல் தொண்டராக தமிழ்த் தொண்டராகப் பல்லாற்றானும் தொண்டு செய்தவர் அருணாசலனார் மற்றதுறைகளில் அவர் சேவை செய்திருப்பினும் அவருடைய தமிழ்த்தொண்டே வையம் புகழும் பெற்றியது. அதனாலன்றோ,

"தாய்நாடுந் தென்மொழியும் தானோங்கத் தொண்டாற்றும்
நேயனரு ணாசலமும் நேர்குணமும் - வாய்மையுஞ்சேர்
இல்லாளுஞ் சேய்சுற்றம் யாவருமே என்றென்றும்
நல்லாராய் வாழ்ந்திடுவர் நன்று" 18

என்று வாழ்த்துவர் பி. திருநாவுக்கரசு என்பார். தமிழறிவை ஊட்டியும், தமிழ் கற்பித்தும், தமிழ்கற்பாருக்குத் 'திருவள்ளுவர் நூல் நிலையம்' நிறுவியும், தமிழ் இதழ் தொடங்கியும், தமிழ்ப்பண்ணை என்னும் சங்கம் அமைத்தும், தமிழ் நூல்களை அச்சிட்டும், தமிழ் நாடகக்கலையின்பால் ஈடுபாடு கொண்டு நாடகநூல்களை வெளியிட்டும் ஒல்லும் வகையெல்லாம் உயர் பணி செய்த மலாக்கா அருணாசலஞ் செட்டி யாரின் தமிழ்ப்பணி மலையகத்தமிழ் இலக்கிய வரலாற்றில் என்றென்றும் நிலைபெற்று வாழும் என்பது வெள்ளிடைமலை.

**சுப. நாராயணன்:**

மலையகத் தமிழ் இலக்கிய வளாச்சியில் - குறிப்பாக எழுத்தாளர்களை உருவாக்கிய ஏற்றமிகு பணியில் அறிஞர் சுப. நாராயணனை மறக்க இயலாது. தமிழறிஞாகளுள் 'குன்றென நின்ற' பெருமைகொண்ட அறிஞர் மு. வரதராசனார்சுப. நாராயணனை அறிஞராய்க் கண்டவர். ஆதலின் 'அறிஞர் சுப. நாராயணன்' என்றே அழைக்கலானார்.

மலேசியத்தமிழ் இலக்கியவுலகு 'கந்தசாமி வாத்தியாராக' அறிஞர் சுப. நாராயணனை நன்கறியும். இவர் சீர்மிக்க செட்டி நாட்டின் கல்லுப்பட்டியைச் சேர்தவார் தமிழ் கூறும் நல்லுலகு இவரை ஓர் எழுத்தாளராக நன்கறியும். தி.ஜ.ர.'சக்தி' இதழை விட்டு விலகி 'மஞ்சரி' இதழின் ஆசிரியராகப் பொறுப்பேற்றார் ஆகலின் சக்தி இதழின் ஆசிரியராகும் வாய்ப்பு இவருக்குக் கிடைத்தது. 1948 இல் சக்தியின் 'சக்திமிக்க' எழுத்தாளராக - ஆசிரியராக ஆனார் .

'ஆரியப்புல்லுருவி', 'மதம் பிடித்த மடாதிபதிகள்' ஆகியவை சுப. நா. வின் கைவண்ணத்தால் மிளிர் ந்த கட்டுரை நூல்கள். 'கவிதை

கலை- விமர்சனம்' என்னும் திறனாய்வு நூலையும் திறம்பட எழுதியவர் சுப. நா. இவர் 'கற்பளித்த கன்னி' என்னும் நாவலையும் எழுதியுள்ளார்.

கொஞ்சுதமிழ் மட்டுமின்றிக் குவலயமார் ஆங்கிலமும், பேசரிய பிரெஞ்சும் இவரிடம் கொஞ்சி விளையாடின. மும்மொழிப்புலமை கொண்ட முத்தமிழ் வல்லாராம் சுப. நா, மலேசியத் தமிழ் இலக்கிய உலகு என்ற ஆலமரம் உருவாக வித்தாகத் திகழ்ந்தார். சுப. நா. வின் முயற்சிகள் தாம் மலேசியத் தமிழ் மாளிகையின் அடிக்கற்கள். இம்மாளிகையில் அகோரநாத் பண்டிதராகவும், பிடாரிக்கண்ணு வாகவும், பஸ்மாசுரப் பாவலராகவும் கற்பனை அவதாரங்களில் உலவியவர் இவர்

கவிதை, கட்டுரை, சிறுகதை, நெடுங்கதை எனப் படைப் பிலக்கியத்தின் ஒவ்வொரு துறையும் செழிக்கப்பயிற்சி கொடுத்த பண்பாளர் சுப. நா. கதை வகுப்பு என்பது, சுப. நா. தமிழ்நேசனில் நடத்திய பயிற்சிப்பட்டறையாகும். இப்பட்டறையில் உருவாக்கப்பட்ட புடம்போடப்பட்ட எழுத்தாளாகள் பலர். சுருங்கச் சொல்லின் மலேசியத் தமிழ் எழுத்தாளர்பரம்பரை உதயமானது கந்தசாமி வாத்தியாரின் கதைவகுப்பினால்தான். *26.11.1950* முதல் *19.8.1951* வரை - ஒன்பது மாதகாலம் கதைவகுப்பு நடந்தது. குறைவான காலத்தில் நிறைவான செயற்றிறத்துடன் கதை வகுப்பு நடந்தது. தமிழ்நாட்டு எழுத்தாளர்களையே அதுகாறும் வாழ்வித்து வந்த மலேசியத் தமிழ்ப் பத்திரிகைகளில் மலையக எழுத்தாளர்களின் படைப்புகளை வெளியிட ஏற்பாடு செய்தார் மலையக எழுத்தாளர்களுக்குச் சுப. நா. கொடுத்த ஊக்கமும் ஆக்கமும் என்றென்றும் நினையற்பாலன.

கதைவகுப்பு ஏன் தோன்றியது? இதனைப் பற்றி ந.பாலபாஸ்கரன்,

> "தமிழகச் செல்வாக்கிற்கு இரையாகாத,
> இந்நாட்டையே எப்பொழுதும் நினைத்து
> ஓர் எழுத்தாளர் பரம்பரையை உருவாக்க
> வேண்டும் என்ற உறுதியுடன் இம்முயறசி
> அரும்பியது" 19

எனக் காரணங்காட்டுவர். கதை வகுப்பு பிறந்த சூழலை விவரித்து எழுதுகையில் இவ்வகுப்பின் மூலவரான சுப. நா. கீழ்க்கண்டவாறு குறிப்பர்.

“மலாயாவில் தமிழ் எழுத்தாளர் இல்லையென்ற கருத்துப்பட முன்னாள் தமிழ்நேசன் ஆசிரியர் ஆதி. நாகப்பன் 1949 வாக்கில் தலையங்கம் எழுதினார். அவர் லண்டன் சென்ற பிறகு நானும் வானம்பாடியும் சேர்ந்து 1950 - 51 ல் எழுத்தாளர் வகுப்பு நடத்தி ம்ணியான எழுத்தாளர்களை நாட்டுக்கு அறிமுகப்படுத்தினோம்.
வகுப்பு தொடங்கியபொழுது தமிழ் முரசு தலையங்கம் எழுதி மலாயாவில் எழுத்தாளர் இல்லையென்ற கருத்துபட்ட நையாண்டி செய்தது. 20

சுப. நா. குறிப்பிட்டவாறு எழுத்தாளர் வகுப்பாகத்தான் இஃது இயங்கிவந்துள்ளது. கதை, கவிதை, கட்டுரை என எல்லா இலக்கியவடிவங்களையும் உருவாக்கப் பயிற்சி கொடுக்கப்பட்டது. பெயர்தான் கதைவகுப்பு என்றிறிருந்தது. ஆயின் இலக்கணம், மொழிபெயர்ப்பு, நாடகம் ஆகிய அனைத்துக்கும் இவ்வகுப்பில் இடமளிக்கப்பட்டது. பள்ளிகளில் வகுப்பு நடத்துவது போன்றே இங்கும் நடத்தப்பட்டது. தேர்வு வைத்துச் சான்றிதழும் வழங்கினர். கதைவகுப்பின் செயற்பாட்டை,

“பத்திரிகைக்கு வரும் எழுத்துப்படிகளை ஆராய்ந்து திறனாய்வு செய்வதே இவ்வகுப்பின் முக்கிய நோக்கம். சரளமான பேச்சுநடையில் இக்குறிப்புகளைச் சொன்னதன் மூலம் கதைவகுப்பு, பேரார்வத்தை எழுப்பியது. புதிதாக எழுதத்தொடங்கிய பலருக்கும், அவ்வப்போது எழுதிய பலருக்கும் இது உற்சாகம் கொடுத்து /sic/ இஃது உற்சாகம் கொடுத்துக் கதைக்கலையின் கூறுகளை விளக்கியது. இதில்பங்கெடுத்த பலர் இன்றும் தேர்ந்த எழுத்தாளராக உலவுகின்றனர். வகுப்பின் முன்னேற்றத்தை அறியவிரும்பி சுப. நாராயணன் ஒரு தேர்வையும் நடத்தினார். இத்தேர்வு முடிவுகளின்படி கலந்துகொண்டோர், ‘மேதை’ ; ‘தேர்ந்த’ ; ‘சிறந்த’ ; ‘நல்ல’ ; ‘ஆர்வ’ எழுத்தாளர்கள் என ஐவகைப் பிரிவில் வகுக்கப்பட்டனர்.” 21

விளக்குவர் ந. சுப்பிரமணியன்.

சிறுகதை இலக்கணத்தை அகோரநாத்பண்டிதர் விளக்கினார்; பிடாரிக்கண்ணு விமர்சகர் எழுத்துத்திருட்டை அம்பலப்படுத்தினார். இவ்வகுப்பில் எழுதுபவரின் 'பஞ்ச லட்சணம்' இணைக்கப் படவேண்டும் என்ற விதியும் இருந்தது. எழுதுபவரின் பெயர், படிப்பு, வயது, தொழில், எழுத்தனுபவம் ஆகிய ஐந்து அம்சங்களையும் எழுதுபவர் குறிப்பி ட்டனர். குறை கண்ட இடத்து நேரடியாக, யாருக்கும், எதற்கும் அஞ்சாமல் துணிந்து சொல்லும் திறம்பெற்றவர் சுப.நா. ஒரு திறனிக்குள்ள நடுவுநிலைமையும் துணிவும் அவரிடம் இருந்தது.

கருத்துத்திருட்டை (கதைத்திருட்டை) வனமையாகச் சாடியவர் சுப.நா. இதற்குக் கீழ்க்கண்ட பகுதியே சான்றாக அமைகிறது. *(18.2.1951)* இல் சந்தேகம் என்னும் கதையை இருவர் ஒருவரையொருவர் அறியாமலேயே ஒரே புத்தகத்திலிருந்து பெயர்த்தெழுதிக் கதைவகுப் பிற்கு அனுப்பினர். இதன் விளை வினைக் கீழே காண்க.

> "கதை எழுதிப் பெயர் சம்பாதிக்கவேண்டும் என்ற
> நோக்கம் நல்லதுதான். ஆனால் இந்தமாதிரிக்
> கபோதித்தனமாக இருவரும் ஒரே புத்தகத்தைப்
> பார்த்து அதிலிருந்து ஒரு கதையைத் திருடிச்
> சிறிதும் மாற்றமின்றி அனுப்புவது, அயோக்கியத்தனமன்றி
> வேறென்ன ? எங்கள் கதைவகுப்பையே அவமதிக்கும்
> போக்கில் உள்ள இந்தக் கெட்ட செயலை இனியாவது
> அத்தோழர்கள் செய்யாதிருப்பார்களாக! பரம்பரைத்
> திருட்டுப் பிண்டங்கள் செய்யவேண்டிய இழிசெயலன்றோ
> இது! மாரீசத்தனம் செய்ய எண்ணும் பலருக்கும்
> இது ஒரு /sic/ இஃது ஒரு நல்ல படிப்பினையாய்
> இருக்கட்டும்." 22

இராமாயணம் அறிந்தோர் மாரீசனை அறிவர். மாயமான் வடிவெடுத்துச் சீதையை மயங்கச்செய்தவன். இத்தகு மாரீசனை எழுத்துத்திருட்டுக்கு உவமிப்பது அன்றையத் தமிழக எழுத்தாளர்களின் பாணியாகும். இதனைச் சுப.நா. அவர்கள் பயன்படுத்தியதிலிருந்து கதைத்திருட்டை அவர் எவ்வளவு வேகத்துடன் சாடினார் என்பது தெரியவரும்!

கதைத்திருடர்களை அவர் தண்டித்த முறை புதுமையானது. ஒரு சமயம் பதினேழு அகவையுடைய ச.ப. ராஜா என்பவர் ஒரு திருட்டு நாடகத்தை எழுதியனுப்பினார். கந்தசாமி வாத்தியாரும் இந்நாடகத்தைப் பாராட்டிப் பிரசுரித்தும் விட்டார். ஆயின் மா. இராமையா, மு. அப்துல் மஜீது, கே. ராஜா ஆகிய. மூவரும் நாடகத்திருட்டை அம்பலப்படுத்தினர். பின் கந்தசாமி வாத்தியார் கீழ்க்கண்டவாறு புதிய தண்டனையை அறிமுகப்படுத்தினார்.

> "ச.ப. ராஜாவுக்கு இலக்கியத் தீவாந்தர சிட்சை
> விதிக்கிறேன். இலக்கியச் சட்டப்படி கொலைத்
> தண்டனை கொடுக்கவேண்டும். வயதுவராததால்
> அனுதாபங்காட்டி இந்த சிட்சை விதித்துள்ளேன்.
> இலக்கியப்போலீஸ் இன்ஸ்பெக்டர்களாகிய
> மூன்று தம்பிகளையும் ஸம்பூர்ண ஸந்தோஷத்துடன்
> பாராட்டி ஆசீர்வதிக்கிறேன் . . . . . ச.ப. ராஜா
> அடுத்தபடி அனுப்பியுள்ள தொடர்கதை இந்தக்
> கணமே தீக்கிரையாக்கப்படும்" 23

நேர்மையான உள்ளம் கொண்டவர் சுப. நா. ஆதலின் தாம் ச.ப. ராஜாவுக்கு வழங்கிய புகழுரைகள் அனைத்தும் நாடக எழுத்தாளரான சிங்கைதாசனுக்குச் சமர்ப்பிக்கப்படுவதாகவும் தெரிவித்துக்கொண்டார்.

நகைச்சுவை உணர்வுடைய சுப. நா. கதை வகுப்பைக் கவர்ச்சி மிக்க வகையில் நடத்திவந்தார். சான்றாகக் கதைத் திருட்டை அவர் அம்பலப்படுத்திய முறை புதுமையானதாக அமைந்திருந்தது.

மாரீச மர்த்தனம்

மாரீசன் - எஸ்.பி. நாதன், துரோலாக்.

மாரீசம் - தந்தையும் தனயனும்

போலீஸ் - கா. பெருமாள், ரிங்லட்

தண்டனை - சட்டப்படி ஆறுமாத அச்சுலகப் பிரஷ்டம். ஆனால் போகிறது என்று மன்னிப்பு தரப்படுகிறது, திருந்தவும்" 24

கதைவகுப்பு ஏற்படுத்திய உணர்வின் ஆற்றலைக் கண்டு கு. அழகிரிசாமி மலைத்துப் போனார். 1952 இல் மலேசியா வந்தபோது அவர் தெரிவித்த கருத்து கதைவகுப்பின் வெற்றியை உறுதிப்படுத்துகிறது.

> "தமிழ்நேசன் பத்திரிகையின் ஞாயிறு பதிப்பைத் தயாரிக்கும் முழுப்பொறுப்பும் என்னுடையதாயிற்று. இந்நாட்டு எடுத்தாளர்கள் எழுதியனுப்பிய சிறுகதைகள் என்று நூறு நூற்றைம்பது கதைகளைக் கொண்ட ஒரு கட்டு என்னிடம் கொடுக்கப்பட்டபோது என்னால் நம்பவே முடியவில்லை. இந்நாட்டில் கதை எழுதக்கூடியவர்கள் இத்தனைபேர் இருக்கிறார்களா என்று நான் ஆச்சரியப்பட்டேன். நான் மலாயாவில் போய் இறங்கியபோது அங்கே கதை எழுதுகிறவர் ஒருவர் இருப்பார் என்றே நான் நினைக்கவில்லை. எதிர்பாராத ஆச்சரியத்துடனும், மகிழ்ச்சியுடனும் கதைக்கட்டைப் பிரித்து வாசிக்க ஆரம்பித்தேன் நூற்றைம்பது கதைகளில் ஐந்தாறைப் பிரசுரத்துக்குத் தேர்ந்தெடுத்தேன். வாராவாரம் மலாயாத் தமிழ் எழுத்தாளர்களின் கதைகளை வெளியிட்டு வந்தேன்" 25

சுப. நாராயணன் எந்நோக்கத்துடன் கதைவகுப்பைத் தொடங்கினாரோ அந்நோக்கம் நல்லமுறையில் வெற்றிபெற்றது என்பதை கு. அழகிரிசாமியின் கூற்று வெளிப்படுத்துகின்றது அல்லவா? இது சுப. நாவின் சாதனையன்றோ?

கதைவகுப்பின் சாதனை பற்றி மா. இராமையாவும் மலேசியத் தமிழ் இலக்கியவரலாற்றில் பெருமைப்படுவதைக் காணலாம். 'சி. கமலநாதன் கதைவகுப்பைப் 'பாலபாடம்' எனப் போற்றுவதும் இவண் நினையத்தக்கது. சிறுகதை எழுத்தாளர்களுள் ஒருவரான சை. பீர்முகம்மது,

> "இங்கே ரப்பர்க்கன்றைக் கொண்டுவந்து நட்டு இந்த நாட்டின் பொருளாதாரத்துக்கு வளம் சேர்த்த நீட்லி பிரபுவுக்கு நாம் எந்த மரியாதையும் நன்றியும் செய்வோமோஅதே மாற்றுக்குறையா நன்றியையும் மரியாதையையும்தமிழ்ச்சிறுகதையை இங்கே விதைக்க முயற்சிகள்எடுத்துக்கொண்ட திரு. சுப. நாராயணனுக்கும்திரு. பைரோஜி

நாராயணனுக்கும் சொல்லவேண்டும்.
தமிழ்ச்சிறுகதையின் முனைகள்மழுங்கலாக
இருந்த நேரத்தில் இருவரும் அதன்
முனைகளைக்கூர்மையாக்கினார்கள்" 26

என்று மனமாரப் போற்றுவர்.

மலேசியத் தமிழர்கள் விமர்சனக்கலை பற்றிய அறிவு பெறவும் வழிகாட்டினார் அறிஞர் சுப.நா. மக்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக எளிய பேச்சுத்தமிழ் நடையைக் கையாண்டார். ஆயினும் இவருடைய விமர்சனப் பார்வை விமர்சனத்தின் எல்லைகளை உள்ளடக்கியிருந்தது. குறை, நிறைகளைச் சுட்டிக்காட்டி, ஊக்கம் கொடுத்துச் சிறுகதைத்துறையை மலேசியத் தமிழன்னையின் 'செல்லக் குழந்தையாக' ஆக்கினார் சுப.நா. தமிழ்முரசின் 'ரசனைவகுப்பு' விமர்சனக்கலைக்கு வித்தாகும்!

சொல்லுதல் யார்க்கும் எளிது; ஆயின் சொல்லிய வண்ணம் செயல்படுவது அரிது. மலேசியாவில் தமிழிலக்கியங்கள் பெருக வேண்டும் என்னும் வேணவாக் கொண்ட வித்தகர் சுப.நா. சொல்லிய தோடமையாது படைப்பிலக்கியங்கள் பெருகவும் தாமே முன் மாதிரியாய்ச் செயலாற்றினார். மலேசிய வானொலியில் சுப.நா. படைத்த நாடகங்கள் பலப்பல. நுண்மாண் நுழைபுலம் பெற்றவராதலின் சுப.நா. ஆய்வு முயற்சிகளிலும் ஈடுபட்டார். இவருடைய 'கம்பராமாயண ஆராய்ச்சி' என்னும் ஆய்வுக்கட்டுரை தமிழ்முரசில் வெளிவந்தது. 'பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ்மொழியிற் பெயர்த்தலும்' ஒப்பற்ற தமிழ்ப்பணியே! 'சீனமும் சீனமக்களும்' என்னும் நூல் சுப.நா.வின் மொழிபெயர்ப்புத் திறமைக்குத் தகுந்த சான்றாகும்.

மொழியை ஒரு நாணயமாகக் கருதினால் அந்நாணயத்தின் ஒருபுறம் இலக்கியம்; மற்றொருபுறம் இலக்கணம். இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் இயம்பலே தொன்றுதொட்டு வரும் மரபு. இவ்வகையில் இலக்கியப்புலமை உடையார்க்கு இலக்கணப் புலமையும் இருப்பது வியப்பன்று. இத்தகையோருள் சுப.நா.வும் ஒருவர். மொழியைப் பிழையறப் பேசவும், எழுதவும் தமிழர் ஒவ்வொருவரும் அறிந்திருத்தல் வேண்டும் என்பது சுப. நா. வின் பேரவா. 'நெற்றிக்கண் திறப்பினும் குற்றம் குற்றமே' என்ற அடிப்படையில் - நக்கீரப் பார்வையுடன் குற்றங் களை - குறைகளைச் சுட்டிக்காட்டினார். 1950 களிலேயே தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்திற்குக் குரல் கொடுத்தவர் சுப.நா. தமிழ் எழுத்துச்

சீர்திருத்தம் பற்றிய நூல் (பெயர் அறியுமாறில்லை) சுப.நா. வின் முயற்சிகளுள் குறிப்பிடத்தக்க ஒன்று.

மலேசிய அரசின் பதிவுத்துறையில் பணியாற்றிய சுப.நா. தம்முடைய தொழிலோடு அமையாது தமிழ்வேட்கையால் பணிகள் பல புரிந்தார். 'தமிழுக்குத் தொண்டு செய்வோன் சாவதில்லை' என்றாற் போலத் தமிழுணர்வு உள்ள ஒவ்வொரு நெஞ்சத்திலும் சுப.நா. வாழ்ந்து கொண்டிருக்கிறார். தமிழ் இலக்கிய முன்னோடியாய் - மூலவராய்ப் படைப்பிலக்கியத்தின் பல்வேறு துறைகளிலும் சுப.நா. புரிந்த தொண்டு மலேசியத் தமிழ் இலக்கிய வரலாற்றில் பொன்னெழுத்துகளால் பொறிக்கப்பட வேண்டியதாகும்.

## முத்தமிழ் வித்தகர் முருகு சுப்பிரமணியன்:

பரந்து, விரிந்திருக்கும் பாருலகைத் தொடர்பு கொள்ளக் கூடியவகையில் நெருங்கச் செய்வன பத்திரிகைகள். அறிவியலின் வளர்ச்சியால் கனிந்த இப்பத்திரிகைப்பெண்ணின் பெருமை களைப் பாவேந்தர்,

"காரிருள் அகத்தில் நல்ல
கதிரொளி நீதான்! இந்தப்
பாரிடைத் துயில்வோர் கண்ணிற்
பாய்ந்திடும் எழுச்சி நீதான்!
ஊரினை நாட்டை இந்த
உலகினை ஒனறு சேர்க்கப்
பேறி வாளர் நெஞ்சிற்
பிறந்த பத்திரிகைப் பெண்ணே" 27

எனப் போற்றிப்பாடுவர். இப்பத்திரிகைத்துறையின் மூலம் மலேசிய, சிங்கப்பூர் மக்களுக்கு அறிமுகமாகி, அவர்களின் அன்பு இதயங்களில் ஏற்றமுடன் விற்றிருப்பவர் அமரர். முத்தமிழ்வித்தகர் முருகுசுப் பிரமணியன்.

## பிறப்பும் வளர்ப்பும்:

செந்தமிழ் வழங்கும் செட்டிநாட்டில் 'கோனாபட்டு' என்னும் சிறு கிராமம் கல்வெட்டுகளில் இடம்பெற்ற அரும்பெருமை கொண்டது. இக்கிராமமே முத்தமிழ் வித்தகராம் முருகுவைத் தமிழ் இலக்கிய உலகிற்குத் தந்தது. முருகப்பன்-சிவகாமி இணையர் பெற்ற ஒப்பற்ற ஒரே பிள்ளை முருகுசுப்பிரமணியன் ஆவார். 5.10.1924 இல் இவர் பிறந்தார்.

எழுத்தார்வம்:

திருச்சி அர்ச். சூசையப்பர் உயர்நிலைப் பள்ளியில் 1939 ஆம் ஆண்டு ஐந்தாம் படிவத்தில் படித்துக் கொண்டிருந்தபொழுதே இவருடைய எழுத்தார்வம் பிறங்கி ஒளிவிடத் தொடங்கியது. முருகுவின் கட்டுரையை அவருடைய தமிழாசிரியர் மற்ற மாணவர்களுக்குக் காட்டிக் 'கட்டுரை என்பது இவ்வாறு அமைய வேண்டும்' எனப் போற்றி விளக்கினார். முருகுவிடம் அமைந்திருந்த எழுத்தாற்றலை அவருடைய ஆசானே மேன்மேலும் வளரச் செய்தார்; தூண்டு கோலானார். முருகுவிடம் ஆற்றலிருப்பதைச் சுட்டிக்காட்டி நிறைய எழுதுமாறு பணித்தார்.

'இளந்தமிழன்' உதயம்:

1942 இல் முதல் பல்கலைக்கழக வகுப்போடு படிப்பு முடிந்தது. திருச்சியில் பள்ளியில் படிக்கும்போதே முருகுவிடம் பத்திரிகை ஆர்வம் மிளிர்ந்தது. 'இளந்தமிழன்' என்னும் பெயரில் மாதமிருமுறை கையெழுத்துப் பத்ரிகையை வெளியிட்டார். அறிஞர் பார்வையினை 'இளந்தமிழன் ' பிணித்தான்.

இளந்தமிழனால் கவரப்பட்டு அதில் கட்டுரை எழுதியவர் பலர். அவர்களுள் குறிப்பிடத்தக்கவர் சர்.சி.வி. ராமனின் துணைவியார் திருமதி. லோகசுந்தரி ஆவார். இளந்தமிழன் "அச்சுத்தேர் ஏறித் தமிழுலகில் வலம் வரவேண்டும்" என்று கரந்தைத் தமிழ்ச்சங்க ஏடான தமிழ்ப்பொழில் தன் மதிப்புரையில் வாழ்த்திற்று. ஆயின் இளந்தமிழன் மூன்றாண்டுகட்குப்பின் அச்சூர்தி ஏறாமலேயே நின்றான்.

இளந்தமிழனில் முருகு என்னும் புனைபெயரில் எழுதிவந்தார். இளந்தமிழனின் ஆசிரியர் முருகு என்னும் பெயரோடு வெளிவந்தது இப்பத்திரிகை. இப்பெயரே இவருடைய இயற்பெயரோடிணைந்து 'முருகுசுப்பிரமணியன்' என நிலைத்துவிட்டது. இளந்தமிழனில் 'கண்ணாடி' என்னும் கவிதையை முருகு 1942 இல் எழுதி வெளியிட்டார். இக்கவிதை முருகின் புலமையைக் காட்டும் கண்ணாடியாய் இலங்குகிறது. அக்கவிதை கண்ணாடியின் பல்வேறு பயன்களையும் எளிய தமிழில் இனிதுற இயம்புகிறது.

"மூக்கி லணிவதுங் கண்ணாடி
முகத்தைப் பார்க்கவுங் கண்ணாடி
காப்பி குடிக்கவுங் கண்ணாடி
கடியாரத் துள்ளதுங் கண்ணாடி
படத்தை மறைக்கவுங் கண்ணாடி

பாங்காய்ச் சீவவும் கண்ணாடி
நிலையில் வைக்கவும் கண்ணாடி
நெடுகப் பதிக்கவும் கண்ணாடி
விளக்கைச் சுற்றியும் கண்ணாடி
வீட்டுச் சுவற்றிலும் கண்ணாடி
சாளரம் அமைக்கவும் கண்ணாடி
தள்ளுங் கதவிலுங் கண்ணாடி
மேசை விரிப்புங் கண்ணாடி
மெதுவாய் வைப்பதுங் கண்ணாடி
ஊடே பார்க்கவும் கண்ணாடி
உடைந்து போவதுங் கண்ணாடி
மண்ணா லானதுங் கண்ணாடி
மதிக்கப் படுவதுங் கண்ணாடி
எங்கே பார்த்தாலுங் கண்ணாடி
எண்ணில் உலகமே கண்ணாடி" 28

இக்கவிதை நீண்ட கவிதையாக அமைந்திருப்பதனைத் தவிர, மற்றவகையில் பார்க்கும்போது சிறுவர்களுக்கு ஏற்ற எளிய, இனிய கவிதையாக அமைந்துள்ளது.

தம் எழுத்தார்வத்தைப் பெருக்கிய புலவர் பெருமக்களை முருகு நன்றிப்பெருக்குடன் நினைவுகூர்கிறார். முருகுவின் மலரும் நினைவு களைக் கீழே காண்க:

"மற்றும், மூன்று பெரியார்களை நான் குறிப்பிட
வேண்டும். புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்,
பன்மொழிப்புலவர் அப்பாதுரை, கோநகர்ப்
புலவர் வித்வான் விசு, திருநாவுக்கரசு ஆகிய மூவரும்
என்னுள்ளே தமிழுணர்வு, இலக்கிய ஆர்வம்,
எழுத்தாற்றல் ஆகியவை வளர்வதற்குப்
பெருந்துணை புரிந்தனர் என்பதனை நன்றியுடன்
குறிப்பிடுகிறேன்" 29

என முருகுவே கூறியுள்ளார்.

இலக்கியத்தின் பல்வேறு துறைகளிலும் விற்பன்னராக விளங்கியவர் முருகு. தொடக்ககாலத்தில் கவிதைத்துறையில் பேரார்வம் காட்டிய முருகு, தம் கவிதைத்துறை ஈடுபாட்டைப் பற்றிக்

கீழ்க்கண்டவாறு கருத்துரைக்கிறார்.

> "கவிதையே எனக்கு மிகவும் பிடித்த இலக்கிய வடிவம். ஆரம்பத்தில் எழுத்துத்துறையில் அடியெடுத்துவைத்த நேரத்தில் கவிதைகளையும் நான் எழுதியதுண்டு. பாரதிதாசனையும் பாரதியாரையும் ஈடுபட்டுப் படிக்கத் தொடங்கிய பிறகு என்னுடைய கவிதை ஆக்கத்தில் எனக்குள்ள நம்பிக்கை குறைந்து நான் கவிதை எழுதுவதை நிறுத்திக் கொண்டேன்" 30

இப்பகுதியிலிருந்து முருகுவின் நேர்மையுள்ளமும், அடக்கமும் தெள்ளிதின் புலனாகின்றன. ஒரு கவிதை எழுதியதும் 'எனக்குப் பாவேந்தரிடம் ஈடுபாடு; நான் அவருடைய பரம்பரைக் கவிஞர்' என்றெல்லாம் கவிஞர்கள் போலிப்புகழ்தேடும் இன்றைய உலகில் முருகுவின் கூற்று தெரிந்ததையும்கூடத் தெரியாது போலப் பேசும் முருகுவின் தன்னடக்கத்தையன்றோ காட்டுகிறது? அவர் ஆன்றவிந் தடங்கிய கொள்கைச் சான்றோர் என்பதையல்லவா இந்நிகழ்ச்சி புலப்படுத்துகிறது!

## 'குமரனும்' கொஞ்சுதமிழ்ப்பணியும்:

சீர்திருத்தச்செம்மலும், பெருந்தமிழறிஞருமான சொ. முருகப்பாவின் பத்திரிகை குமரன். இது காரைக்குடியிலிருந்து வெளிவந்தது. இது வார இதழாக வெளிவந்தது. இவ்விதழில் 1944 ஆம் ஆண்டு துணையாசிரியராகவும், நிர்வாகியாகவும் பணியாற்றினார் முருகு. பத்திரிகைத்துறையில் பரந்த அனுபவம் பெறுதற்கு உறுதிமிக்க அடித் தளத்தை இட்டவன் 'குமரன்' என்பர் முருகு.

## பொன்னி'யும் பொங்கிவரு தமிழ்ப்பணியும்:

தமிழ் இதழியல் துறையிலே பொன்னி ஒரு காவியம். தமிழிதழ்களை நடத்தத் தயங்கிய நாற்பதுகளில் பெருந்துணிவோடு 'பொன்னி' என்னும் இலக்கியஇதழைத் தொடங்கினார் முருகு. 1947 ஆம் ஆண்டு, விடுதலை பெற்ற இந்தியாவில், தமிழர்திருநாளன்று (பொங்கல்) வெளிவந்தாள் 'பொன்னி'. பல இளம் எழுத்தாளர்களையும் கவிஞர்களையும் தமிழ் இலக்கிய உலகிற்கு அறிமுகப் படுத்திய பெருமை பொன்னியையே சாரும். பொன்னி முதலில் புதுக்கோட்டையிலிருந்தும், பின்னர்ச் சென்னையிலிருந்தும் வெளி வந்தாள். முதலில் மாதமொருமுறை இலக்கிய நெஞ்சங்களைச் சந்தித்த பொன்னி, பின்னர் மாதமிருமுறை தமிழன்பர்களுக்கு இலக்கிய விருந்தளித்தாள்.

பொன்னி இதழில் தமிழறிஞர்கள் பலரும், சமூகத் தலைவர்களும், புகழ்மிக்க எழுத்தாளர் பலரும் எழுதியுள்ளனர். பெரியார் ஈ. வே. ரா, அறிஞர் அண்ணாதுரை, கலைஞர் கருணாநிதி போன்ற அரசியல் - சமூகத்தலைவர்களும்; பாவேந்தர் பாரதிதாசன், கண்ணதாசன், சுப. நாராயணன், இளவழகனார், கா.* அப்பாதுரை (பன்மொழிப் புலவர்) என்.வி. நடராசன், க. அன்பழகன், விசு திருநாவுக்கரசு முதலிய தமிழறிஞர்களும் பொன்னியில் எழுதியுள்ளனர். இவர்களின் இலக்கியப்பணி தொடர்வதற்கும், பெருகுவதற்கும் பொன்னியே வாய்ப்பளித்தார். அகிலன், சுகி, இராதாமணாளன், இளமைப்பித்தன், மா. இளஞ்செழியன், நாரணதுரைக்கண்ணன், நாரா. நாச்சியப்பன், கோவை இளஞ்சேரன், கண. இராமநாதன் முதலிய எழுத்தாளர்களும் பொன்னிக்கு மெருகூட்டியுள்ளனர்.

பொன்னியின் இலக்கியமணம் அகிலனைப்பெருவியப்புக்கு உள்ளாக்கிற்று. சென்னையிலிருந்துகொண்டு இதழைச் சிறப்பாகக் கொண்டு வர இயலா நிலையில், அச்சுவசதிகளோ, சிறந்த ஓவியர்களோ, இதழை வெளிக்கொண்டுவரத் தேவைப்படும் பிற வசதிகளோ இல்லாத புதுக்கோட்டையிலிருந்து இப்படிப்பட்ட இதழை எவ்வாறு கொண்டுவர இயலுகிறது? என அகிலன் வியப் படைந்துள்ளார். மேலும் பொன்னியின் தனித்தன்மையை வெகு வாகப் பாராட்டியுமுள்ளர்.

"பொன்னியில் நான் கண்ட ஒரு முக்கியமான
சிறப்பு அதன் தனித்தன்மை கொண்ட போக்காகும்.
ஒரு வகைத் தனித்தன்மையின் முத்திரை-
stamp of individuality · அதில் இருந்தது.
சென்னையிலிருந்து வந்த எந்தப் பிரபலமான
பத்திரிகையைப் போலவும் அது இல்லை. எதையும்
அது பின்பற்றவில்லை. இளம் எழுத்தாளர்கள்
சிலரையும் புதிய கவிஞர்கள் சிலரையும் அது
துணிந்து அறிமுகம் செய்திருந்தது" 31

பத்திரிகைகள் வாணிக நோக்குடன் வெளிவரும்போது அவை தரத்தில் குறைந்து விடுவது இயல்பு. ஆயின் பொன்னி இலக்கிய இதழாகத் தான் கொண்ட இலக்கினில் ஒரு சிறிதும் பிறழாது இலக்கிய இதழாக (குறிக்கோள் இதழாக) வெற்றி நடையிட்டது. பொருளாதார நோக்கில் பொன்னி பல நெருக்கடிகளை முருகுவிற்குத் தந்தாள். ஆனால் முருகுவின் இலட்சியப்பிடிப்பு உடும்புப் பிடியாய் அமையவே

முருகுவின் போராட்டமே வெற்றியடைந்தது. இலக்கிய வளர்ச்சி கருதி முருகு அடைந்த சோதனைகளெல்லாம் அவரைச் சாதனைவீரராகவே மாற்றின. முருகு நடத்திய பொன்னி இதழைத் தமிழகத்தின் கலைமகள் இதழோடு ஒப்பிட்டும், அதனை விட உயர்த்தியும் பேசிய எழுத்தாளர் களின் கூற்றுகளே பொன்னிக்குச் சூட்டப்பட்ட புகழ் மாலைகளாகும்.

### மலேசியாவில் மணக்கும் தமிழ்ப்பணி:

உலகில் தமிழில் தோன்றிய தாளிகைகளுள் சுதேசமித்திரனை அடுத்துத் தோன்றிய பெருமை கொண்டது 'தமிழ்நேசன்' நாளிதழே! சீர்பெற்ற இந்நாளிதழின் துணை ஆசிரியராகப் (13.7.1953 இல்) பணியேற்றார் முருகு. இப்பணி 1954 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் வரை நீடித்தது. பின், இவ்வாண்டு நவம்பர் முதல் தமிழ்முரசு' நாளிதழில் துணையாசிரியராகப் பணியாற்றினார். முரசுவில் முருகுவின் தமிழ்ப்பணி ஏறத்தாழ எட்டாண்டுகள் நீடித்தது.

1962 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் தமிழ்நேசனின் தலைமை ஆசிரியராகப் பொறுப்பேற்று மீண்டும் மலேசியாவுக்கு வந்தார். தமிழ்நேசன் மூலம் மலேசியத் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்த முருகுவை வானளாவப் புகழினும் வார்த்தைகள் கிடையா. சுருங்கக்கூறின் தலைவனின் அன்பைப் போற்றும் குறுந்தொகைத் தலைவி ஒருத்தியின் கூற்றே முருகுவின் மலேசியத் தமிழ் இலக்கியப் பணிக்கும் பொருந்துவதாம்.

"நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று
நீரினும் ஆரள வின்றே சாரற்
கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தே னிழைக்கு நாடனொடு நட்பே" 32

மலேசியத்தமிழ் இலக்கியத்துக்கும் முருகுவுக்கும் உள்ள நட்பை விளக்கும் வகையில் குறுந்தொகைப் பாடலின் முதலிரு வரி களைக் கூறலாம்.

எழுத்தாளர்களுக்கு ஊக்கமும் உற்சாகமும் வழங்கும் பணியை மலேசியாவில் தமிழ் நேசனிலும் தொடங்கினார். இதன் மூலம் மலேசியாவில் தமிழ் இலக்கியம் வளர்வதற்கு முருகுவே வழிகோலினார். தமிழ்நேசனில் 'பவுன்பரிசுத்திட்டத்தை' அறிமுகப் படுத்தினார். இப்பரிசுத்திட்டம் எழுத்தாளர்களிடையே ஒரு புத்துணர்ச்சியை ஏற்படுத்தியது.

மண்மணம் கமழும் மலேசியத் தமிழ்ச் சிறுகதைகள் வெளி வருவதற்கு முற்றிலுமாகத் தம் நல்லாதரவை வழங்கியவர்

முருகுவேயாவார். தமிழ்ச்சமுதாயம் விழிப்புணர்ச்சியைப் பெற வேண்டும் என்ற நன்னோக்கில் சமுதாயப் பிரச்னைகளைக் கருவாகக் கொண்டு கதைகள் படைப்பதை ஊக்குவித்தார். மலேசியத் தோட்டப் புறங்களில் வாழும் மக்களில் பெரும் பாலோர் உழைத்துப் பெறும் பொருளை ஒழுங்காகப் பேணிச் சேமித்து வைக்காததனால் நிரந்தரக் கடனாளிகளாக வாழ்ந்துவருகின்றனர். இச்சிக்கல் முருகு காலத்தில் இன்னும் தீவிரமடைந்திருந்தது. மது அருந்துதல், குழந்தைகளின் கல்வி பற்றியோ, எதிர்காலம் பற்றியோ திட்டமிட்டு வாழாமை ஆகிய பிரச்னைகள் இவர்களிடம் குடி கொண்டிருந்தன. இந்நிலையை மாற்றிப் புதிய எழுச்சியை உருவாக்கவேண்டும் என்ற நோக்கில் பவுன்பரிசுக் கதைகள் அமைந்தன.

மலேசியத் தமிழ்ச் சமுதாயத்தின் விடிவுக்கும், இலக்கியங் களுக்கும் உள்ள தொடர்பைச் சுட்டிக்காட்டி, முருகுவின் இலக்கியப் பணி எவ்வாறு அமைந்தது என மதிப்பிடும் அகிலன் கீழ்க்கண்ட வாறு கருத்துரைப்பர்.

> "இவர்களுக்கெல்லாம் (மலேசியத் தமிழ்ச்சமுதாயத்
> தினருக்கு) புறவாழ்க்கைச் சட்டங்கள் மட்டிலுமே
> துணைபுரிய மாட்டா. மனிதனின் அகம் வளர்ந்தாக
> வேண்டும். அறிவிலும் பண்பாட்டிலும் நம்மவர்
> சிறந்து விளங்கவேண்டும். அந்தச் சிறப்பைத்
> தருவதில் மொழிக்கும் இலக்கியத்துக்கும்
> பெரும்பங்கு உண்டு. ஆகவேதான் மொழிக்கும்
> இலக்கியத்துக்கும் உழைப்பவர்களை நாம்
> போற்றுகிறோம். இலக்கியப் புரவலராக ஒரு கால்
> நூற்றாண்டுக் காலத்துக்குமேல் இடைவிடாது
> உழைத்து வருபவர் முருகு. அவர் நம் பாராட்டுதலுக்கு
> உரியவர்" 33

எழுத்தாளர் சங்கத்தின் தலைவராகப் பல ஆண்டுகள் சேவை செய்த முருகு உண்மையான இலக்கியவளர்ச்சியைக் கருத்தில் கொண்டு பல நல்ல செயல்திட்டங்களை நடத்தினார். நூல்வெளியீடு, கருத்தரங்குகள் முதலியவை முருகுவின் ஆக்ககரமான இலக்கியச் சேவைக்குச் சான்றாவன. எழுத்தாளர் சங்கத்தின் மூலமாகத் திரு. ரெ. கார்த்திகேசு அவர்கள் அகிலனை மலையகத்துக்கு அழைக்க

முழுமுயற்சிகள் எடுத்துக்கொண்ட போது அம்முயற்சிக்குப் பேராதரவு நல்கினார் முருகு. இந்நிகழ்ச்சியின் மூலம் இலக்கிய வளர்ச்சிக்கு உழைப்பவர்களுக்கு ஊக்கமும் உற்சாகமும் அளிக்கும் உயர்ந்த உள்ள முடையார் முருகு என்பதனை அறியலாம். இந்நாட்டு எழுத்தாளர் களுக்குத் தக்க பயிற்சிபெறுவதற்குரிய வாய்ப்பாக அகிலனின் வருகை அமைந்தது.

மலையக எழுத்தாளருடைய படைப்புகளுக்குத் தமிழக அரசு பரிசளித்து அங்கீகாரம் வழங்கவேண்டும் என்னும் வேண்டுகோளை விடுத்தவர் முருகுவேயாவர். இர.ந. வீரப்பன் அவர்களின் உலகத் தமிழர் என்னும் நூலுக்குத் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் பரிசு கிடைத்ததை மலையகத் தமிழ் மக்கள் மறந்திருக்க முடியாது. முருகுவின் கோரிக்கை நிறைவேறியதை யன்றோ இச்செயல் காட்டுகிறது?

பத்திரிகை சமுதாயத்தின் குரலாக ஒலிக்கும் சாதனம். இதனை நன்குணர்ந்தவர் முருகு ஆதலின் தமிழ்நேசனைச் சமுதாயத்தின் குரலாக ஒலிக்கச்செய்தார். பத்திரிகைத் துறையினரையும் மக்களையும் இணைத்த பாலமே முருகு!

## தமிழ்நேசன் வழியே சமுதாயப்பணி:

பலரும் நினைப்பது போல முருகுவின் சமுதாயப் பணி சிங்கப்பூரில் தொடங்கியது அன்று. தமிழகத்தில் அவர் வாழ்ந்த பொழுது திராவிடக் கழகத்திலும், பின்னர்த் திராவிட முன்னேற்றக் கழகத்திலும் முக்கியப் பொறுப்பேற்றிருந்தார். முருகுவின் முட்டுப் பாடில்லாத சமுதாயப்பணியைப் பாராட்டும் ஆழிஅருள் தாசனின் சொற்கள் இவண் நினையத்தக்கவை.

> "பேரறிஞர் அண்ணா அவர்களின பாசறையில்
> தோற்றமுற்று, பெருந்தலைவர் தமிழவேள்
> கோ. சாரங்கபாணி அவர்களால் ஏற்றமுற்று,
> இன்று சமுதாய நல்லுணர்வு கொண்ட
> தொண்டர்களின் நெஞ்சங்களில் தலைவராய்ப்
> பரிணமிக்கும் முருகு அவர்கள், வாழும்
> நாளிலேயே வாழ்த்துப்பெறும் வாய்மைமிக்க
> விழுமியோர் ஆவார்" 34

முருகு தமிழகத்தில் தொடங்கிய சமுதாயப்பணி மிகச் சிறிதே. ஆயினும் அவரின் பணி ஏற்றம் பெற்றது கோ. சாவினாற்றான். முத்தமிழ் வித்தகரும் முறையோடு இதனை நினைவுகூர்கிறார்.

"தமிழ்முரசு இதழில் துணையாசிரியராக ஏழாண்டு காலம் பணியாற்றியபோது தமிழவேள் தலைமையின்கீழ் பத்திரிகைத்துறையில் முதிர்ந்த அனுபவம் பெற்றதோடு சமுதாயப் பொதுவாழ்விலும் என்னை ஈடுபடுத்திக் கொள்கிற பரந்தவாய்ப்பும் எனக்குக் கிட்டிற்று. சிங்கப்பூரிலும் மலேசியாவிலும் வாழ்கின்ற தமிழ்ச்சமுதாயத்தின் பிரச்னைகளையும் மனத்தில் கொள்வதற்குத் தமிழவேள் நல்கிய இந்த வாய்ப்பு எனக்குப் பெரிதும் பயன்பட்டது. சமுதாயத்தின் பல்வேறு பிரிவினரோடு நேருக்கு நேர் பழகுவதற்கும், எண்ணற்ற ஊர்களில் பல்வேறு கூட்டங்களில் பங்கு கொள்வதற்கும் இது /sic/ இஃது எனக்கு வாய்ப்பை வழங்கியது" 35

தமிழவேளின் பொதுவாழ்க்கைப் பயணத்தின் தொடர்ச்சியாக முருகு அவர்களின் பணியைக் கூறுவது மிகையன்று.

அநீதி கண்டு அடர்த்தெழும் உள்ளம் படைத்தவர் முருகு. சுயநலமின்றி - ஒருதலைப்பட்சமின்றி நீதி தெரிவிப்பதிலும், நீதிக்குக் குரல்கொடுப்பதிலும் முன் நிற்பவர் முருகுவேயாவார். மலேசியத் திருநாட்டின் பெரிய இயக்கங்களான ம.இ.கா, தேசியத் தோட்டத் தொழிலாளர் சங்கம், தேசிய நிலநிதிக் கூட்டுறவு சங்கம், தமிழ் இளைஞர் மணிமன்றப் பேரவை ஆகிய முக்கிய அமைப்பு களுக்கும் முருகுவின் சமுதாயச் சிந்தனை பக்கபலமாகப் பயன்பட்டுள்ளது.

முருகு தமிழ்நேசன் மூலமாகத் திரட்டிக் கொடுத்துள்ள நிதிகள் மலைக்கத்தக்கவை! சிங்கப்பூர் ஜெகதாம்பாள் நிதி, செல்வி கிருஷ்ணவேணி நிதி, சனநாயகக் காப்பு நிதி எனப் பல நிதிகளைத் தமிழ்நேசன் மூலமாகத் திரட்டித் தமிழ்ச் சமுதாயத்துக்கும், அரசிற்கும் உதவியதை யாரும் மறக்கமுடியாது.

முருகு கணக்கிலடங்காப் பொதுநிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு சமுதாயப்பணியைச் செவ்வனே செய்துள்ளார். தமிழர்திருநாள் கூட்டங்கள், தலைவாகளின் பிறந்தநாள் கூட்டங்கள் கருத்தரங்குகள், கவியரங்குகள் ஆகியவை சமுதாயப் பணியின் களங்களாக முருகுவுக்கு அமைந்தன.

### சமுதாயப்பணியின் சிகரம்:

தமிழர் நலத்தில் - தமிழர் நல்வாழ்வில் என்றென்றும் அக்கறை காட்டியவர் முருகு. தமிழினத்தின் கல்வி வளர்ச்சியில் அவர் அதிகக்கவனம் செலுத்தினார். இதற்குக் கட்டியம் கூறுவது 'தமிழ்ப்பள்ளி மாணவர் கல்வி நிதி". ஒரு கோடி வெள்ளி நிதி திரட்டத் திட்டமிட்டார் முருகு.

### சிங்கையில் சீர்மிகு தமிழ்ப்பணி:

குமரன் இதழில் 'வெண்பாப் போட்டி' என்றோர் அங்கத்தைத் தொடங்கிக் கவிஞர்களிடையே புத்தெழுச்சியைக் கொணர்ந்தது போன்றே தமிழ்முரசு இதழிலும் வெண்பாப் போட்டியை நடத்தினர். மலேசியாவில் கவிஞர்கள் பல்குவதற்கு இப்போட்டியே காரணம் எனத் துணியலாம், தமிழ்முரசு நாளிதழில் 'கவிதைப் பக்கம்' என்றோர் அங்கமும் மலரும் கவிஞர்களுக்கு வாய்ப்பளித்தது.

புதிய எழுத்தாளர்களுக்கு முருகு என்றுமே ஊக்கம் தந்ததுண்டு. சிங்கையிலும் 'எழுத்தாளர் அறிமுகம்' என்ற பெயரில் பல இளம்-புதிய எழுத்தாளர்களைத் தமிழ்முரசு வாயிலக அறிமுகப்படுத்தினார். இதனால் எழுத்தாளர் பலர் நற்பலன் அடைந்தனர்.

ரேடியோ, கலாச்சாரம் ஆகிய பிறமொழிச்சொற்களை ரசிகமணி டி.கே.சி. அவர்கள் வானொலி, பண்பாடு என அழகுதமிழில் மொழிபெயர்ப்புச் செய்தார். இதனைத் தமிழகத்துத் தமிழறிஞர்கள் பலரும் அறிவர். இச்சொற்களை மலையக, சிங்கைத் தமிழர்கள் அறியுமாறு தமிழ்முரசில் முருகு பயன்படுத்தினார். 'ரேடியோ நிகழ்ச்சி' என்னும் பகுதி முருகுவின் வருகைக்குப் பின் 'வானொலி நிகழ்ச்சி' என்று எளிய, இனிய தமிழில் அச்சானதது.

தமிழ்முரசு நாளிதழில் "தமிழரின் அடிப்படைக் குறைகள்" என்னும் தலைப்புடைய முருகுவின் கட்டுரை ஞாயிறு முரசில் வெளிவந்தது. தமிழ்ச் சமுதாயத்தினரின் குறைகளைத் துணிவுடன் சுட்டிக்காட்டி மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தினார் முருகு.

### நுவலரும் நூலாசிரியர் முருகு:

முருகு நல்ல எழுத்தாற்றல் உடையவர் என்பதனாலன்றோ பத்திரிகைப் பொறுப்புகள் தாமாக அவரைத் தேடி, நாடி வந்தன? பத்திரிகை ஆசிரியராக விளங்கியதுடன் அன்றி முருகு அவர்கள் தேர்ந்த நூலாசிரியராகவும் விளங்கினார். நீதிவெண்பாவின் நெறிமுறைகள், தமிழ்கூறு நல்லுலகம் ஆகிய இரு நூல்கள் மட்டுமே இன்று அரிதின் கிடைப்பன.

'நீதிவெண்பாவின் நெறிமுறைகள்' என்னும் நூல் நீதிவெண்பா என்னும் அற இலக்கியம் பற்றிய கட்டுரைகளின் தொகுப்பாகும். சிங்கப்பூர் வானொலியின் பள்ளிக்கூட ஒலிபரப்பில் நீதிஇலக்கியம் பற்றிய கட்டுரைகளைத் தொடர்ச் சியாகப் படைத்தார் முருகு. இக்கட்டுரைகள் தமிழ்முரசிலும் தமிழகத்தில் கண்ணதாசன் நடத்திய 'தென்றல்' இதழிலும் வெளிவந்து தென்றலாக இன்பம் பயந்தன.

சென்னையில் 1968 இல் நடந்த இரண்டாம் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டினைப் பற்றி எழுதிய கட்டுரைகள் 'தமிழ்கூறு நல்லுலகம்' என்னும் பெயரில் நூலாக வெளிவந்துள. முருகு இருப துக்கும் மேற்பட்ட நூல்கள் எழுதியிருப்பதாகப் பரிதா மணாளன் குறிப்பிட்டுள்ளார். 36

**கன்னற்கட்டுரையாளர் முருகு:**

பயண இலக்கியத் துறை மலையகத்தில் செழித்து வளர்ந்திட ஆக்கங்கொடுத்தவர் முருகு.

"சென்றிடுவீர் எட்டுத்திக்கும் கலைச்
செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்" 37

என்பது பாரதியாரின் வேண்டுகோள். இதற்குச் செயலுருவம் கொடுத்தவர் முருகு ஆவார். இவர் சென்றுவந்த நாடுகள் பல. சீனா, ரசியா, பிரிட்டன், தைவான், சுவிட்சர்லாந்து, இத்தாலி, சப்பான், கம்போடியா, வியட்னாம், இந்தோனேசியா, அல்சீரியா, எகிப்து முத லான நாடுகளுக்குச் சென்றுள்ளார் முருகு. இந்நாடுகளில் இவர் பெற்ற அனுபவங்களைத் தம் பயணக்கட்டுரைகளின் வழியே தமிழ்ச்சமுதா யனத்தினருடன் பகிர்ந்து கொண்டுள்ளார்.

பேரரசர் தம்பதிகளுடன் சப்பானுக்கும், பிரதமர் துன்ரசாக் அவர்களுடன் சீனாவிற்கும் சென்று வந்துள்ளார் முருகு. இது தமிழ்ப்பத்திரிகைத்துறைக்கும்- மலேசியா வாழ் தமிழ்ச்சமுதாயத் தினருக்கும் ஏற்றந்தரும் நிகழ்ச்சியெனில் .மிகையன்று.

முருகு அவர்களின் எண்ணற்ற கட்டுரைகள் நூலுருப்பெறாமல் உள்ளன. தமிழுணர்வு மிக்க மொழி அமைப்புகள், சமூக அமைப்புகள் அல்லது பதிப்பகத்தார் முருகுவின் கட்டுரைகளை நூலுருவாக்க வேண்டும். இச்செய லொன்றே முருகுவின் இலக்கியச்சேவைக்கு மலே சியத் தமிழர்கள் செய்யும் கைம்மாறாகும்.

நூற்கொடை வழங்கிய நுண்ணறிவாளர்:

முருகுவின் பெயரால் இயங்கும் நூலகங்களும் மலேசியாவில் உள்ளன. பல அரிய நூல்களை முருகு இந்நூலகங்களுக்கு வழங்கியுள்ளார். தமிழ்ச் சமுதாயத்தின் கல்வி மேம்பாட்டில் கருத்தூன்றிய முருகு, தொட்டனைத்தூறும் மணற்கேணி போல அறிவு ஊற்றெடுப்பதற்காக வழங்கிய நூற்கொடை சீரிய கல்விப்பணியன்றோ? இந்தோனேசியாவில் மேடான் என்னுமிடத்தில் 'முருகு சுப்பிரமணியன் நூலகம்' பல ஆன்டுகளாக இயங்கி வருகிறது. கோலாலம்பூரில் கம்போங் பிரம்பாங் என்னும் இடத்தில் 'முருகுநூலகம்' 1976 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. தமிழகத்தில் வாழ்ந்த போது முருகு அவர்கள் இளம் பருவத்தில் பழநியாண்டவர் வாசகசாலை நடத்தியதனை நினைவுகூர்வர் வித்வான் விசு. திருநாவுக்கரசு. 38

புதிய சாதனையாளர்:

பொறுப்புணர்வு மிக்க பத்திரிகையாளரான முருகு பத்திரிகை உலகில் சிறந்த சாதனையாளராகவும் போற்றப்படுகிறார். கல்வித் தகுதியை மட்டும் கொண்டு ஒருவர் நாளிதழின் ஆசிரியராகிட இயலாது; சமுதாயத்தொடர்பு இன்றியமையாது வேண்டபடுவதாம். இளமை முதலே சமுதாயத்தொடர்பு மிக்கவர் முருகு ஆதலால் நாளிதழ்த்துறையில் அவர் சாதனைகள் பல புரிந்தார்.

"அஞ்சுவது அஞ்சாமை பேதமை அஞ்சுவது
அஞ்சல் அறிவார் தொழில்" 39

என்னும் குறளுக்கு இலக்கியமாய் இலங்கிச் சமுதாயத்தின் கருத்துகளை அஞ்சாமையோடு வெளியிட்டார். முருகு தனிமனிதச் செல்வாக்குக்கு வளைந்து கொடுத்ததேயில்லை. எந்தச் சமுதாயத் தலைவரோடும் தொடர்புகொண்டு உரிமையோடு கருத்துத் தெரிவிக்கும் மாண்பினர் முருகு.

பத்திரிகை ஆசிரியர்களுக்குத் தொலைநோக்கும் மிகவும் வேண்டப்படுவதொன்றாம். தூரநோக்கினை அடையப் பல வழிகளைக் கையாண்டார் முருகு. அவற்றைக் குறுகிய நோக்க முடையவர்கள் குறைகூறி உள்ளனர். பாராட்டுரைகளைப் பெற்றதைப் போலவே முருகு அவர்கள் பழிப்புரைகளையும் பெற்றுள்ளார். பத்திரிகைத்துறையில் ஈடுபட்டோருக்குச் சந்தனமும் பூசப்பெறும்; சேறும் வாரியிறைக்கப்படும். பாராட்டுரை வழங்கப்பட்டவிடத்துத், தருக்கியோ, செருக்கியோ நில்லாத அவர், பழிப்புரை கூறப்பட்டவிடத்துத் துவண்டோ, சோர்ந்தோ நின்றாரிலர்

"போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரீத்
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து சொல்வேன்
ஏற்றதொரு கருத்தை எனது உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன்; எவர்வரினும், நில்லேன் ! அஞ்சேன்" 40

என்ற மனநிலையே அவருக்கு இருந்தது.

## சமயப்பணியும் தமிழ்நேசனும்:

முருகு அவர்கள் திராவிடக் கழகத்தில் இருந்தவராயினும், புரட்சிக்கவி பாவேந்தரிடம் அளவிறந்த அன்புடையார் ஆயினும் சமயத்தையும் தமிழ்நேசன் வழியே மக்களிடையே பரப்பினார். தமிழ்நேசன் ஞாயிறு மலரில் 'சைவவிளக்கம்' என்ற பகுதியைத் தொடங்கிச் சைவசித்தாந்த விற்பன்னரும், வித்தகருமான முரு.பழ. இரத்தினம் செட்டியார் அவர்களை எழுதுமாறு கேட்டுக் கொண்டார் முருகு. இதனால் சைவம் மலேசியாவின் மூலை முடுக்குகளிலெல்லாம் பரவிற்று. எளிய, இனிய நடையில் எழுதிய இரத்தினம் செட்டியாரும், மேற்படி செட்டியார் அவர்களை எழுதத்துண்டிய முருகு அவர்களும் மலையகத் தமிழிலக்கிய வரலாற்றில் இடம்பெறத்தக்கோராவர். இவண் சைவசித்தாந்த வித்தகர் கூறும் உண்மை மனங்கொளத்தக்கதாகும்.

"தமிழ்நாட்டில் தமிழ் இலக்கியம் பயின்றவர்களிடையே
கூடச் சைவசித்தாந்தம் பற்றிப் பேசுவோர்
குறைவு. மலேசியாவில் சித்தாந்த முழக்கம்
செய்த ஒரே பத்திரிகை 'தமிழ்நேசன்' தான்.
முருகு அவர்கள் செய்து வருகிற பணிகள்
பலவற்றுள் இச்சமயப்பணியும் இடம்பெற்றிருப்பது
குறிப்பிடத்தக்கதாகும்" 41

## முருகுவும் முத்தான தலையங்கங்களும்:

பத்திரிகைத்துறையில் தலையங்கங்கள் தலையாய இடம்பெறுகின்றன. தலையங்கங்கள் எழுதுதற்கு முன் அத்தலையங்கம் தொடர்பான செய்திகளை முழுமையாகத் தெரிந்து கொண்டு ஆய்வுக்கண்ணோட்டத்துடன் அதனை அணுகுவது முருகு அவர்களின் வழக்கம்.

"தேரான் தெளிவும் தெளிந்தார்கண் ஐயுறலும்
தீரா இடும்பை தரும்" 42

என்னும் வள்ளுவபபெருமானின் வாக்கினை அவர் பின்பற்றினார் என்பதில் தவறில்லை. பொறுப்புமிக்க பத்திரிகை ஆசிரியரின் திறமை அப்பத்திரிகையின் தலையங்கங்களிலிருந்தே தெரியவரும். இக்கூற்று முருகுவைப் பொறுத்தவரை முற்றிலும் உண்மை. இவருடைய தலையங்கங்கள் மூலம் எழுச்சியும் உற்சாகமும் பெற்றனர் மக்கள், அரசியர்வாதிகள் ஆகியோர்.

## பல்துறைப் பகுதிகள்:

பல்துறை அறிஞர்களையும் மக்களையும் பாலமாக இணைத்தது தமிழ்நேசன். வாசகர்களுக்கும், வளரும் எழுத்தாளர்களுக்கும் பாலமிட்டதும் தமிழ்நேசனே! இவ்வாறு உறவுப்பாலத்தைக் கொண்டு மக்களை உயர்வில் நாட்டமுறச் செய்தவர் முருகு ஆவார். இவர் தமிழ்நேசனில் தொடங்கிய 'ஆசிரியர் நாட்குறிப்பு' என்னும் பகுதி பத்திரிகை உலகின் பிரச்னைகளைச் சுட்டிக்காட்டியது; வாசகர் களுக்கும் பத்திரிகையாளர்க்கும் இடையில் புரிந்துணர்வை உண்டாக்கி நெருக்கமாகத் தொடர்பு கொள்ள வைத்தது. ஆகவே முருகுவின் பத்திரிகை உலகச் சாதனைகளைக் கொண்டு முனைவர் தண்டாயுதம் "முருகு ஆல்லது பத்திரிகை" என்று புகழாரம் சூட்டியது பொருத் தமன்றோ? 43

## ஆய்வுத்திறம் பெற்ற அறிஞர்:

1966இல் கோலாலம்பூரில் நடந்த முதல் உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டு அமைப்புக்குழு உறுப்பினராக இருந்து அரிய பணிகள் பல செய்தார். இம்மாநாட்டில் அவர் 'மலேசியாவில் தற்காலத் தமிழிலக்கிய வளர்ச்சி' என்னுந் தலைப்பில் கட்டுரையும் சமர்ப்பித்தார். மலேசியத் தமிழ் இலக்கியம் பற்றி ஆய்வு செய்பவர்களுக்கு இக்கட்டுரை பேருதவி புரியும். மலேசியச் சிறுகதைகளைப் பற்றி அவர் கூறியுள்ள கீழ்க்கண்ட கருத்து அவரின் ஆய்வுத்திறத்தைப் புலப்படுத்தும்.

> "பல சிறுகதைகள் நீதி புகட்டுவனவாகவே
> அமைந்துள்ளன; நம் எழுத்தாளர்கள்
> அவர்களுடைய எழுத்து மூலம் வாழ்க்கையைத்
> திருத்தியமைக்க முயல்கின்றனர். இம்முயற்சி
> யானது பல நல்ல சிறுகதைகளை வெறும்
> நீதிக்கட்டுரையாகவே மாற்றிவிடுகிறது" 44

இக்கூற்றிலிருந்து ஒரு திறனிக்குள்ள நடுநிலையான கொள் கையை முருகு பெற்றிருந்தார் என்பது அங்கைநெல்லி.

சென்னையில் நடந்த இரண்டாம் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டிலும் முருகு சுப்பிரமணியன் கலந்துகொண்டு ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பித்தார்.

இவை தவிர முருகு அவர்கள் தலைமையேற்று நடத்திய ஆய்வுக் கருத்தரங்குகள் எண்ணில. இவை முருகு அவர்களின் ஆராய்ச்சிப் புலமைக்குக் கட்டியங்கூறுவன.

## விருதுகள் பல பெற்ற வித்தகர்:

'சந்தனக்கிண்ணம்' என்னும் மணக்கும் கவிதைத்தொகுப்பை வழங்கிய கவிஞர் ஐ. உலகநாதன் 'மாதவி' என்னும் இலக்கிய இதழை வெளியிட்டார். அவ்விதழ் வெளியிட்ட பேட்டிக் கட்டுரையில் 'முத்தமிழ் வித்தகர்' என்னும் பட்டத்தை முருகுவுக்கு வழங்கியது.

பத்திரிகைத் துறைச் சேவைக்காக மாட்சிமைதங்கிய பேரரசர் அவர்கள் ஏ.எம்.என் (AMN) என்னும் விருதினை 1968 ஆம் ஆண்டு வழங்கி முருகுவைச் சிறப்பித்தாகள். பத்திரிகையின் வாயிலாகப் பல்லாற்றானும் பல்லருஞ் சேவைகள் புரிந்த முருகுவை மாட்சிமை தங்கிய சிலாங்கூர் சுல்தான் அவர்களும் கௌரவித்தார்கள். 1976 ஆம் ஆண்டு சிலாங்கூர் சுல்தான் அவர்களின் பிறந்த நாளன்று எஸ்.எம்.எஸ் (SMS) விருது வழங்கப்பட்டது.

## பதவிகள் பல பெற்ற பண்பாளர்:

பதவியைத் தேடி மக்கள் ஓடும்காலத்தில் வாழ்ந்தாலும் கூட, முருகு அவர்களை நாடிப் பதவிகள் தாமாக வந்தன. சமூக முன்னேற்றத்தில அதிக ஈடுபாடு கொண்ட முருகு அவர்களால் அவர் பதவி வகித்த பல அமைப்புகள் நலம்பெற்றன; வளமும் பெற்றன. பணியால் அவரும் அவரால் பணியும் சிறப்படைந்தன என்பது மிகையன்று. அவர் வகித்த பொறுப்புகள் கீழே வரிசைப்படுத்தப் பட்டுள்ளன.

அ. திரைப்பட மேல் முறையீட்டுக்குழு உறுப்பினர்.
ஆ. தேசிய வீரர் நல்வாழ்வு நிதி வாரிய உறுப்பினர்.
இ. பெர்னாமா செய்தி நிறுவன ஆட்சிக் குழு உறுப்பினர்.
ஈ. மலேசியப் பத்திரிகைக் கழக ஆட்சிக் குழு உறுப்பினர்.
உ. ஆசியான் தகவல் சாதன மலேசியாக் குழு உறுப்பினர்.
ஊ. தமிழ் இளைஞர் மணிமன்ற தேசியப் பேரவையின் காப்பாளர்.

## படைப்பிலக்கியம் தந்தவர்:

முருகு அவர்கள் நல்ல படைப்பிலக்கியவாதியும் ஆவார். அவர் எழுத்தாற்றல் வல்லவர் என்பது பத்திரிகைத் துறையில் அவர் நிகழ்த்திய சாதனைகளின் வழி அறியவரும். அவர் சோர்விலாச் சொல்லாற்றல் உடையவர் என்பது அவர் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய கருத்தரங்குகள், ஆய்வரங்குகள், தமிழர் திருநாள் கூட்டங்கள் ஆகியவற்றின் வழி அறியவரும். முருகுவின் படைப்பாற்றலை அவர் எழுதிய சிறுகதைகளும், நாடகங்களும் செவ்விதின் புலப்படுத்தும். சின்னப்பயல் போன்ற சிறுகதைகளும், மலேசிய வானொலியில் ஒலிபரப்பான நாடகங்களும் முருகுவின் படைப்புத்திறனை வெளி யிடுவனவாம். சின்னப்பயல் என்ற கதை குழந்தையின் சமர்த்தை வெளியிடுவதாம்.,

"தனையீன்ற சமுதா யத்தின் தரத்தினை உயர்த்தவேண்டி
நினைப்பெல்லாம் தேக்கி யிந்த நெடும்புவி
நிலைகளைல்லாம்முனைப்புற்றுத் தீட்டிக் காட்டி
முன்னேற்றப் பாதைபோட்டுத்தனையதற
கர்ப்பணிக்கும் தமிழெழுத் தாளன் நண்பன்" 45

எனத் தம் நண்பர்கள் இன்னார் என்பதை இனங்காட்டுவர் பாவாணர் ஐ. உலகநாதன். இவர் எழுத்தாளர்களுக்குக் கூறியுள்ள இலக்கணங் களையெல்லாம் நாம் முருகுவிடம் காணலாம்.

## புதிய சமுதாயம் படைத்தவர்:

பாவேந்தரிடம் பழுதிலா அன்பு கொண்டவர் முருகு ஆதலின் பாவேந்தரின் வேண்டுகோட்கிணங்கப் 'புதியதோர் உலகு செய்யப்' புறப்பட்டார். தமிழ்முரசு, தமிழ்நேசன் வழியே பாவேந்தரின் கனவுகளை நனவாக்கினார். அத்துடன் தம் பணி முடிந்தது என அமைந் தாரில்லை. 'புதிய சமுதாயம்' என்னும் இதழைத் தொடங்கினார். இவ்விதழ் இவர் அறக்கும் வரை (10. 4. 82) இருவார இதழாக ஐந்தாண்டுகள் தொடர்ந்து வெளிவந்தது.

## உயர்பண்புகளின் உறைவிடம்:

நற்பண்புகளின் கொள்கலமாகத் திகழ்ந்ததனால் அவர் வாழ்வில் உயரிய பதவிகளைப் பெற்றார்; மக்களின் நெஞ்சங்களில் உயரிய இடத்தைப் பெற்றார். செருக்கின்மை, அமைதி, அடக்கம், துணிவு, மனிதநேயம் ஆகிய மாபெரும் பண்புகளைக் கொண்டிருந்ததனால் வாழ்வில் உயர்ந்தார்; மற்றவர்களையும் உயர்த்தினார். பத்திரிகை ஆசிரியராக மட்டும் மலேசியத் தமிழ்ச் சமுதாயம் அவரை

மதிக்கவில்லை. இனக்காவலராக, மனிதநேயம் மிக்க மாண்பினராக, ஆய்வாளராக, அறிஞராக, நல்ல வழிகாட்டியாக, சீர்திருத்தச் செம்மலாக அன்றோ அவர் வாழ்ந்துகொண்டிருக்கிறார்?

## சைவப்பெரியார் கா. இராமநாதன்:

நகரத்தார் பெருமக்களுக்குச் சைவமும் தமிழும் இருகண்கள் ஆவன. நற்றமிழ் வளர்த்த நகரத்தார் பெருமக்கள் பலரும் சிவம் பெருக்கும் சீலர்களா விளங்கியமை இக்காரணம் பற்றியாம். சென்றவிய்மெல்லாம் திருப்பணியும் அறப்பணியும் செய்வது நகரத்தார்களின் சீரிய வழக்கம். மலைத்திருநாட்டிற்கு வந்து சமுதாயப் பணியும் சமயப்பணியும் செய்த பெருமக்களுள் குறிப்பிடத்தக்கவர் சைவப்பெரியார் கா. இராமநாதன் ஆவார்.

செட்டிநாட்டின் பள்ளத்தூர் என்னும்ஊரில் பிறந்து வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த பெரியார் இவர். நகரத்தார் சமுதாயத்தின் முதல் வழக்கறிஞர் என்னும் பெருமைக்குரியவர் இப்பெருமகனார். 1925 இல் இப்பெருமை சைவப்பெரியாரை நாடி வந்தது.

சென்னை சைவ சமாஜம், திருப்பராய்த்துறை இராமகிருஷ்ண தபோவனம் ஆகியவற்றில் உறுப்பியம் பெற்றுச் சமயப்பணிகள் புரிந்தார் கா.இராமநாதன். 1947 இல் மலையகம் வந்து நாட்டுக் கோட்டைச் செட்டியார் வர்த்தகசங்கத்தின் செயலாளராகப் பொறுப்பேற்றார். இவ்வாண்டு, சைவப்பெரியார் வாழ்வில் மிகவும் குறிப்பிடத் தக்கது என்பதில் தவறில்லை. தமிழையும் சைவத்தையும் பரப்ப வேண்டும் என்னும் இலட்சியம் நிறைவேற அன்னாருக்குப் பெரும் வாய்ப்பளித்தது இப்பணி ஆகும். 1948 ஆம் ஆண்டு முதல் கா. இராமநாதன் அவர்கள் மலேசியாவில் நிகழ்ந்த இலக்கிய, சமயத் தொடர்பான நிகழ்ச்சிகளில் பேரார்வத்துடன் பங்கு கொண்டார். கோலாலம்பூர் நகரமண்டபத்தில் நடந்த பாரதிவிழாவில் தேன்மாரி பெய்தாற்போன்ற சொற்பெருக் காற்றினார்.

## தமிழ்ப்பணிபுரிந்த தகைமை:

மலாக்கா அருணாசலஞ்செட்டியாருடன் இணைந்து 'மலாயாத் தமிழ்ப்பண்ணை' என்ற அமைப்பு உருவாகப் பெருந்துணைபுரிந்தார். 1948 இல் நிறுவப்பட்ட இப்பண்ணையின் வழி இலக்கியவகுப்புகளை நடத்தினார். திரு. இராமநாதன். பல தமிழ்நூல்களைப் படைத்தவர் சைவப்பெரியார். அவர் எழுதிய நூல்கள் வருமாறு:

1. என் பிறந்தோம் (1953)
2. ஆழமும் அகலமும் (1955)

3. நாரதபக்தி சூத்திரம் (1958)

4. பார்ப்பது எதை? (1960)

5. ஞானச்செய்தி (1960)

6. சைவத்தின் சிறப்பு (1961)

7. வேலன் விளையாட்டு (1962)

8. நான்கண்ட மலாயா (1964)

9. வாழ்க்கையும் சமயமும் (- )

10. முருகன் நாமங்கள் (- )

11. வாழ்க்கை (1965)

12. மலேயா - இந்தியா யாத்திரை (1965)

மேற்கூறப்பட்ட நூல்கள் பன்னிரண்டில் 'நான் கண்ட மலாயா' என்னும் நூல் தவிர எஞ்சியவை அனைத்தும் சமய நூல்களே. ஆங்கிலத்தில் சைவசித்தாந்தம் பற்றித் தாம் ஆற்றிய சொற்பொழிவு களைத் தமிழில் நூலாக்கியுள்ளார் சைவப்பெரியார்.

நான் கண்ட மலாயா - மதிப்பீடு:

மலாயா நாட்டிற்குத் தாம் வந்தது முதற்கொண்டு நடந்த முக்கியமான நிகழ்ச்சிகளை _ தம்முடைய அனுபவங்களை எல்லாம் தொகுத்துச் சைவப்பெரியார் தமிழ்நேசனில் கட்டுரையாக வடித்து வந்தார். அக்கட்டுரைகளின் தொகுப்பே இன்நூல். இது பயண நூலாகும்.

நகரத்தார் நலனில் அக்கறை கொண்ட சைவப்பெரியார் பர்மா, இந்தோசீனா ஆகிய நாடுகளுக்கு, நகரத்தார் சமுதாயத்திற்கு ஏற்பட்ட இன்னல்களைக் களைவதற்காகச் சென்றார். அது போன்றே அன்னா ரின் மலாயா வருகையும் அமைந்தது. தம்முடைய வருகைக்கான காரணத்தைச் சைவப்பெரியார்,

> "மேற்கண்ட பணிகளில் ஒரு பணியும் வேண்டிப்
> பெற்றதல்ல; பலர் விரும்பித் தந்த பணியைத்
> தள்ள மனமில்லை. விவேகாநந்தர் சொல்லுவார்,
> 'விலக்காதே, தேடாதே' என்று. அதுபோலத்தான்
> மலாயாவிற்கு வர ஏற்றுக்கொண்டதற்கான
> காரணம். திரு. க. வி. அழ. மு. இராமநாதன்
> செட்டியாரவர்களே" 46

எனக் குறிப்பர்.

கப்பற்பயணம் செய்கையில் கடலையும் தம்மையும் ஒப்பிடுகிறார் சைவப்பெரியார். இது நயமுடைய பகுதியாகும். மனிதப்பிறவியின் மாண்பையும், சிவனை மறவாச் சிந்தை கொண்ட சைவப் பெரியாரின் பெற்றியையும் இவ்வொப் பீட்டுப்பகுதி தெள்ளிதின் விளக்குகிறது. வருணனைத்திறம் வல்லார் சைவப்பெரியார் என்பதற்குக் கீழ்வரும் பகுதியே சான்றாகும்.

"அழகிய நீலநிற விரிப்பு நெடுகிலும் தெரிந்தது.
அலைகளின் அசைவு தெரியாததால் அவைக-
ளெல்லாம் அவ்விரிப்பில் பதித்த வைரங்கள்
போல ஒளி கக்கின. மனம் பறிக்கும் காட்சி" 47

'செட்டியார் சமூகநிலை' என்னும் கட்டுரை அரிய செய்திகளைக் கொண்டிலங்கும் - வரலாற்றுக் குறிப்புகளைக் கொண்டிலங்கும் நல்ல கட்டுரை. செட்டியார் சமூகத்தைத் தொல்லைக்குள்ளாக்கிய இரண்டு மசோதாக்களைப் பற்றிக் கீழ்க்கண்டவாறு எழுதியுள்ளார்.

"செட்டியார் சமூகத்தாரைத் தொந்தரவு செய்ய
முதலில் வந்த மசோதா இரண்டு. ஒன்று ஆதிக்ககால
நில மசோதா; மற்றொன்று ஆதிக்க காலத்துக்
கடன்கொடுத்தவர் வாங்கியவர் சட்ட நில
நசோதா. 1947 ஆகஸ்ட் மாதம் 5உ கெஜட்டில்
வெளிவந்தது. அது ஜப்பானியர் ஆட்சியில்
நடந்த பாராதீனங்கள் சரி என்று சொல்லியது.
. . . . . . . . . . . . . . . . . . இந்த மசோதா நியாயமற்றது."48

இவ்விரு மசோதாக்களின் விளைவுகளைச் சீர்தூக்கி ஆராய்ந்துள்ள திறம் அன்னார் மிகச்சிறந்த வழக்கறிஞர் என்பதையும், அன்னாரின் மதி நுட்பத்தையும் துல்லியமாகக் காட்டுகின்றது. இப்பகுதியில் விவாத நடையில் (argumentative) தம் கருத்துகளை வெளியிட்டுள்ளார்.

செட்டியார்கள் என்றால் வட்டிப்பணம் வாங்குபவர் என்றே பலரும் நினைக்கின்றனர். அவர்கள் பொருளாதாரத் துறையில் ஆற்றி யுள்ள பணிகளை நினைத்துப் பார்ப்பதில்லை. சைவப் பெரியார் நகரத்தார் சமுகத்தினர் பொருளாதாரத்தை வளர்த்த பாங்கைக் கீழ்க்கண்டவாறு நினைவுகூர்வர்.

" செட்டியார்கள் மலாயாவிற்கு ஒரு நூற்றாண்டிற்கு
முன் வந்தவர்கள். கொடுத்துவாங்கும் தொழிலை
நடத்தினார்கள். அவர்கள் வியாபாரத்திற்கு
ஊன்றுகோல். தோட்டத் தொழிலாளிக்கு உறுதுணை.
சிறு தோட்டக்காரர்களின் முதுகெலும்பு.
எல்லாருக்கும் பணம் கொடுத்து அதுகொண்டு
பிறர் முன்னேற உதவினர். எத்தனையோ பேர்
இவர்களால் பெரும் பணக்காரராயினர்" 49

ஜப்பானியர் ஆட்சியில் செட்டியார்களும் பலவித இன்னல்களுக்கு ஆளாயினர். பயங்கரவாதிகளின் உபத்திரவம் 1947 இல் இருந்ததைவிட 1948, 1949 ஆண்டுகளில் அதிகமாயிற்று. அவசரக்காலச் சட்டத்தினால் செட்டியார்கள் பாதிக்கப்பட்டதை,

"எஸ்டேட்டில் பால் வெட்டி வருவது முடியாத
காரியமாயிற்று. எஸ்டேட்டுகளில் அமைதியாகப்
பால் வெட்டுவதற்காகச் சில செட்டியார்கள்
பயங்கரவாதிகளுக்குப் பணம் கொடுத்திருப்பார்கள்
என்ற சந்தேகத்தின் பேரில் எதிர்பாராமல்
மூவார், மலாக்கா பகுதிகளில் பலபேரைக்
கைது செய்து பாதுகாப்பில் விசாரணையின்றிப்
பலநாள் வைத்தார்கள்." 50

இத்தகு தொல்லைகளால் பலர் இந்தியாவிற்குச் செல்லலாயினர்.

செட்டியார்களின் இயல்பைப்பற்றியும், 1950இல் விதிக்கப்பட்ட சட்டம் பற்றியும் சைவப்பெரியார் எழுதியுள்ளமை மிகவும் பயனுடைய செய்தியாகும்.

"செட்டியார்கள் எப்பொழுதுமே அமைதியான
வாழ்க்கையை, விரும்புகிறவர்கள். நாட்டில்
நிலவும் கலகத்தை அடக்க அவர்கள் எப்படிப்
படையில் சேருவார்களென்று எதிர்பார்க்கமுடியும்?
ஆனால் ஒரு சட்டம் வந்தது. அச்சட்டம்
மலாயாவிலுள்ள மக்களைப் பாதுகாப்பதற்கு
ஏற்பட்டது. அதற்கு 1950 ஆம் வருடத்திய
அவசரகால உள்நாட்டுக் காவல் படைச்
சட்டம் என்று பெயர்" 51

நல்லெண்ணக் கோஷ்டியில் அங்கம் வகித்த ஒவ் வொருவரைப் பற்றியும், குறிப்பாகச் செட்டியார் உறுப்பினர்கள் செய்த தர்மங்கள் பற்றியும் விரிவான செய்திகளை எழுதியுள்ளார்.. காரைக்குடி அழகப்பா கல்லூரியில் மலாய் மாணவர் ஒருவர் படிப்பதற்கான உதவிகளைச் செய்த க. வீ. அழ. மு. இராமநாதன் செட்டியார் அவர்களின் பரந்த மனப்பான்மை நம்மை வியப்பிலாழ்த்துகிறது. 1947 இல் வந்த இக்குழுவின் வருகை தமிழருக்கு ஊக்கமும் தமிழுக்கு ஆக்கமும் தந்தது. இக்குழுவினருக்கு அளிக்கப்பட்ட விருந்தைப் பற்றித் தமக்கே உரிய இயல்பான நகைச்சுவை உணர்வுடன் கீழ்வருமாறு எழுதியுள்ளார் கா. இராமநாதன்.

> "சிங்கப்பூரில் கோஷ்டியாருக்கு மிகப்பெரிய
> விருந்தொன்று நடந்தது. திரு. சா. கணேசன்
> 'மலாயாமக்கள்' என்னும் பொருள் பற்றிப்
> பேசினார். குடிக்காத கோஷ்டித் தலைவருக்குக்
> குடிவிருந்து மிகப் பிரமாதமாக நடந்தது.
> அங்கும் திரு. சா. கணேசன் மேல் வேஷ்டியுடன் தான்
> இருந்தார். உற்சாகம் அதிகமாக ஏற
> என்னைப் போன்றவர்களுக்கு அங்கிருப்பது
> சிரமமாயிற்று"52

பொதுத்தொண்டில் அளப்பரும் பங்காற்றியவர் சைவப் பெரியார். இவர் பணியாற்றிய துறைகளை சமயப்பணி, அரசியல் பணி, தமிழ்ப் பணி என ஒவ்வொரு துறையாக வகுத்துச் சொல்லலாம். கேட்டார்ப் பிணிக்கும் சொல்வன்மை உடையார் சைவப்பெரியார். இதற்குக் கோலாலம்பூர் நகர மண்டபத்தில் நடந்த பாரதிவிழாவில் அன்னார் ஆற்றிய சொற்பொழிவே சான்று. அச்சொற்பொழிவில் அவர் வழங்கிய சொல் விளக்கங்களும், நகைச்சுவை உணர்வும் என்றும் நினையற்பாலன.

### தமிழ்ப்பண்ணையின் தோற்றம் :

கோலாலும்பூரில் தமிழ்ச்சங்கம் இல்லாதகுறையை நீக்க உருவானதே தமிழ்ப்பண்ணை என்னும் அமைப்பு. தமிழ்ப் பண்ணை எனப் பெயர் சூட்டியவர் சைவப்பெரியாரே.

இலக்கிய வகுப்புகள் நடத்தியும், தமிழ்க்கலை மாநாடு கூட்டியும் தமிழ்ப்பண்ணை ஆக்ககரமான பணிகளைச் செய்தது.

தம்முடைய சமயப்பணி பற்றியும் அரசியல் பணி பற்றியும் பல செய்திகளைத் தன்னடக்கத்துடன் கூறியுள்ளார் சைவப் பெரியார்.

மலாயா இந்தியர் காங்கிரசின் தலைவராய் விளங்கிய இவர், தலைமைப் பதவியிலிருப்பவர்களுக்குத் தக்க ஆலோசனை களையும் இந்நூலில் வழங்கியுள்ளார்.

"எந்தப் பதவியை எடுத்துக்கொண்டாலும்
நான் தவறாமல் இரண்டு கேள்விகள்
என்னையே கேட்டுக் கொள்வது வழக்கம்.
ஒன்று, எவ்வளவு காலத்திற்கு இப்பதவியை
வகிக்கவேண்டும்? இரண்டு, நமக்குப் பின்னர்
நன்கு அப்பதவியை வகிப்பவர்களைத் தேடி
வைக்கமுடியுமா? ஒரு பதவியை ஒருவரே தொடர்ந்து
வகிப்பது வகிப்பவருக்கும் சமுதாயத்திற்கும்
கெடுதல் என்பது எனது எண்ணம். ஆகையால்
இந்தியாவிலும் மலாயாவிலும் நான் எப்பதவியையும்
'சிக்கெனப்' பிடித்துக் கொண்டதில்லை.
எந்தப் பணியை விட்டாலும் பணிசெய்ய விரும்புகிறவ-
னுக்கு மற்றொரு பணி காத்துக்கொண்டிருக்கும்;
உலகம் பெரியது; யாவருக்கும் இடமுண்டு
என்பதில் எனக்கு அபாரநம்பிக்கை"53

பதவியாசை - பதவிமோகம் கொண்டரர்கள் சைவப்பெரியாரின் பொருளார்ந்த அறிவுரையைப் பின்பற்றி நடக்க வேண்டும்.

மலாயாவில் தமக்குக் கிடைத்த நண்பர்களை நினைவுகூரும் சைவப்பெரியார் தமிழறம் பேணுந்தகைமையாளராம் மலாக்கா உ.அரு.அருணாசலம் செட்டியார் பற்றி விரிவாகப் புகழ்ந்துள்ளார். இவர் தொடங்கிய தமிழ்ப்பண்ணையின் வளர்ச்சியே தமிழ்வளர்ச்சி யாயிற்று.

"ஒவ்வொரு செட்டியார் வீட்டுக் கணக்கிலும் தமிழ்ப்
பண்ணையின் பெயர் இருக்கும்" 54

எனச் செட்டிமக்கள் செந்தமிழை வளர்க்கச் செய்துள்ள உ தவிகளைப் போற்றுவர் சைவப்பெரியார். மலாக்கா அருணாசலஞ் செட்டியார் பற்றி,

"அவருக்கு இரண்டில் நனிவிருப்பம்; ஒன்று
பிரசுரம்; மற்றொன்று பிரசாரம். அவைகளே
அவரது ஜீவநாடி . . . . . . . . . . . . . . . . .

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

> எந்த நற்குணமும் அதிகமாக இருந்தால் அது
> அக்குணமுடையோனுக்குக் கெடுதல் தரும் என்ற
> பேருண்மையை இவர் வாழ்க்கையில் காணலாம்."55

எனக் கூறுவர். அளவிறந்த தாராளமனங் கொண்டோருக்கு அருணாசலனார் வாழ்க்கை நல்லதொரு படிப்பினையாகும்.

மலாயா நாட்டின் பண்பாடுகள், பழக்கவழக்கங்கள், உணவு முறைகள், மொழிகள் முதலிய பல செய்திகளும் இந்நூலில் இடம் பெற்றுள. இவை மலாயாவை வாசகர்களுக்கு அறிமுகப்படுத்தும் பான்மையின. மொழிக்கலப்பையும் ஆசிரியர் சுட்டத் தவறில்லை.

சுருங்கக்கூறின் நான் கண்ட மலாயா என்னும் நூலில் மலாயா நாட்டை மட்டும் காட்டவில்லை ஆசிரியர். சாதாரண மனிதர்களை உயர்ந்த மனிதர்களாக்க உதவும் கொள்கைகளையும், நெறிமுறைகளையும் காட்டியுள்ளார். சமூகவியற்செய்திகள், வரலாற்றுச் செய்திகள், நூலாசிரியரின் நகைச்சுவையுணர்வு, நுண்மாண் நுழைபுலம் ஆகியவற்றை இந்நூலின் வழி அறிகிறோம். சைவப்பெரியார் சிறந்ததொரு பயணநூலை உருவாக்கியுள்ளார் என்பது மறுக்கவியலா உண்மை.

### இதழ்ப்பணி:

இலக்கிய வகுப்புகள் நடத்துவது; தமிழ்நூல்களை எழுதி வெளியிடுவது என்ற அளவுடன் தம் தமிழ்த்தொண்டை நிறுத்திக் கொள்ளவில்லை சைவப்பெரியார் "சோலை" என்னும் இலக்கிய ஏட்டை 1952 இல் தொடங்கினார். எட்டுத் திங்கள் மட்டுமே இலக்கியச் 'சோலை' மலர்நதது. பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியாரின் வாழ்த்துரை 'சோலை'யின் நோக்கைத் தெள்ளிதின் காட்டும்.

> "சொன்மலர் பூத்துப் பொருள் மணக்கும் சோலையெனும்
> நன்மைதரு திங்களிதழ் நானாளும்- மன்பதைகள்
> துய்த்து மகிழச் சுவைசால் கனியுதவி
> நித்தலும் வாழ்க நிலத்து"

> "கோலாலம் பூரிற் குளிர்சோலை கண்டவனெப்
> பாலாருத் தாழுவக்கும் பாண்மையினான்- நூலாகும்
> காராம நாதன் கலைவளர்க்கும் நன்னெஞ்சான்
> சீராக வாழ்க செழித்து."56

"மலாயாவில் தமிழ் இலக்கியம்" என்னும் தலையங்கத்தின் வழி மலேசியாவில் தமிழ் இலக்கியம் வளர்வதற்கான சூழல்களை ஏற்படுத்தித் தந்துள்ளது சோலை. சிறுவர் இலக்கிய வளர்ச்சிக்குச் சோலையே முதலில் வித்திட்டது.

> "சிறுவர்களுக்கு ஊட்டும் இலக்கிய இன்பம்
> மிகவும் எளிதான தன்மையுடன் இன்பமாகப்
> புகுத்தவேண்டும் /Sic/ புகுத்தப்படவேண்டும்.
> இதற்கு ஆரம்பப் பாடசாலைகளே தகுந்தவை
> அங்குள்ள ஆசிரியர்கள் நல்ல முறைப்படி
> பயின்ற தமிழ் மன்னர்களாக இருக்கவேண்டும்" 57

சோலை விடுத்த விண்ணப்பத்தின் எதிரொலியே தமிழ் முரசு மாணவர் மணிமன்ற மலராகும்.

**சமயநூல்கள்-மதிப்பீடு:**

ஆங்கிலத்தில் சைவசமயத்தின் சிறப்பை விளக்கிச் சொற்பெருக் காற்றிய சைவப்பெரியார் அச்சொற்பொழிவுகளை நூலாக்கினார். அவை வருமாறு

1. A brochure on Saiva Siddhanta (1953)
2. The meaning and Value of life (1964)

எளிய, இனிய தமிழிலும் சைவப்பெரியார் எழுதிய நூல்கள் முன்னர்க் காட்டப்பட்டன. சைவ சமயத்தைச் சாதாரண மக்களும் அறிந்து பின்பற்றத்தக்கவாறு எளிய நடையில் அரிய கருத்துகளை எழுதி யுள்ள திறம் போற்றற்குரியது. தமிழை நன்றாகக் கற்ற பலரும் தமிழ கத்தில் சைவசித்தாந்தம் பேசுவதில்லை. ஆயின் மலையகத்தில் தமிழை ஓரளவு படித்த பலரும் சைவசித்தாந்தத்தில் அளப்பரும் பற்றுக் கொண் டுள்ளனர்; இதனை நன்கறிந்துள்ளனர். இந்நிலை உருவாகச் சைவப் பெரியாரே காரணம் ஆவார்; அவர் தோற்றுவித்த அருள்நெறித் திருக்கூட்டம் அன்னாரின் பெருங்குறிக்கோளைச் செவ்வனே நிறைவேற்றி வருகின்றது.

நகைச்சுவை விருந்தளித்துத் தம்முடைய கருத்துகளை மற்றவர் மனங்களில் பதியச்செய்வதில் சைவப்பெரியார் மிகுந்த சமர்த்தர். சான்றாக, ஆழமும் ஆகலமும் என்னும் நூலில் சமரசத்தை நகைச்சுவைதோன்ற விளக்குவர். இவ்விளக்கம் அன்னாரின் சிந்தனைத் திறனுக்குத் தக்கதோர் எடுத்துக்காட்டாம்.

"பல சமயத்தவரும் கூடிச் சமரசநோக்கோடு கூடி விவாதித்தனர். அம்மகாநாட்டுத் தலைமைச் சமையற்காரன் கொஞ்சம் படித்தவன். அவன் காதில் சமரசம் என்ற சொல் விழுந்தது. மைசூர் ரசம், ஆந்திரா ரசம், பருப்பு ரசம் எனப் பல வகை ரசம் தயாரித்து ஒவ்வொன்றிலும் சமபாகம் எடுத்துக் கலந்தான். சமரசம் பேசியவர்கள் சமரசத்தில் பிரியம் வைப்பதில் என்ன அதிசயம்? சாப்பாட்டு வேளையும் வந்தது. ரசமும் பரிமாறப்பட்டது. துடுக்கானவர்கள் சிலர் இது என்ன ரசம்? என்று கேட்கவே தலைமைச் சமையற்காரன் நடந்ததை விளக்கினான். சமையல்தலைவன் மடப்பள்ளியில் செய்த வேலையைச் சமயத்தலைவர்கள் நம் நன்மைக்காகச் செய்ய முயல்கிறார்கள். என்ன விந்தை! பல மதங்களிலிருந்து கொஞ்சம் கொஞ்சம் ஒன்றாக வைத்துப்பார். இது புதுமதம்; அழகியமதம்; உண்மை நிறைந்த மதம், சமரசமதம் என்கிறார்கள். இது யாருக்குப் பிரீதி! சமையல் தலைவர் கெட்டிக்காரனாக இருக்காலம். ஆனால் இப்படிச் சமைப் பாருண்டோ? இது ஒரு வித சமரசம்" 58

மலேயா-இந்தியா யாத்திரை என்னும் நூல், சமய அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட பயணத்தை விவரிக்கும் நூலாகும். சைவப் பெரியாரின் சமயப்பற்றுக்கும், இலக்கியப் புலமைக்கும். இந்நூல் நல்ல சான்று. தமிழ்நாட்டுத் தலங்கள் ஒவ்வொன்றின் மகிமையையும் புராண, இலக்கிய விளக்கங் களுடன் கூறுவர் ஆசிரியர். குன்றக்குடி, குமரன் கோயில் கொண்ட ஓர் ஊர். இதனருகே உள்ள காரைக்குடி கலைமகளே குடி கொண்டுள்ள கோயில்! வள்ளல் அழகப்பா. கலைமகள் கொலுவீற்றிருக்கப் பல கோயில்களை-கல்விச்சாலைகளை எழுப்பியவர். இவரைப் பற்றிச் சைவப் பெரியார்,

"டாக்டர் அழகப்பா பைலெட் லைசென்ஸ் வைத்திருந்தும் ஆகாயக்கப்பல் ஓட்டினதில்லை. ஆனால், தரையில் அக்கப்பலை ஓட்டுவார். சிறுவர்களையும் இளைஞர்களையும், ஆராய்ச்சி செய்யும் முதியோர்களையும் ஏற்றிச்செல்லும் கல்விக்கப்பலை ஓட்டுகிறவர் இவர். திரு. அழகப்பா டாக்டர் பட்டம் பெற்றிருந்தாலும்

ஒரு ஊசி போட்டதில்லை. அவர் மக்கள் மனக்-
கோணலைத் திருத்துகிறவர். அவர் இலட்சப்பிரபு.
ஆனால் தர்மத்திற்குக் கொடுத்துவிட்டுத் தன்
கையில் ஒன்றுமில்லையென்ற நிலையிலிருப்பார்.
அவருடைய தொழில் கொடுப்பதே. அவருடைய
விளையாட்டு சம்பாத்தியம். தருமத்திற்கு இவரைவிட
அதிகம் கொடுத்தவர் பலர் உளர். ஆனால் தன்னுடைய
உடைமை முழுவதும் கொடுத்து நாளை வரும்
வரும்படியையும் சேர்த்துக்கொடுப்பவர் அருமையிலும்
அருமை" 59

என்று புகழ்வர். 'கோடி கொடுத்த கொடைஞன்! குடியிருந்த வீடுங்கொடுத்த விழுத்தெய்வமாம்' வள்ளல் அழகப்பரால் காரைக்குடி நகரம் 'மாநகராயிற்று'! ஆகலின் சைவப்பெரியாரின் புகழுரை மெய்யுரையே!

சில சொல்லாராய்ச்சி பற்றிய கருத்துகளையும் சைவப்பெரியார் இந்நூலில் குறிப்பிடுவது சிந்தனைக்கு விருந்தளிப்பதாகும். சான்றாக ஆவிநன்குடி என்னும் திருத்தலத் தைப்பற்றி எழுதுகையில், அத்தலத்தின் வேறு பெயாரான பழனி என்பதையும் சுட்டுவர். பழனியை மக்கள் பழநி என வழங்குவது பற்றியும் குறிப்பர். பழனியின் பழம்பெயர் பொதினி. பழனம் (வயல்) சூழ்ந்தது பழனி என விளக்குவர். பழனி என்ற பெயர் உருவானது புராணக்கதையை அடியொற்றியாம். பழனி. பழநி என்னும் இரு வடிவங்களைப் பற்றிச் சைவப்பெரியார் கூறியுள்ள கருத்து அறிஞர்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டதாகும். சான்றாக, மூதறிஞர் தமிழண்ணல் அவர்கள் மொழியும் கருத்தைக் கீழே காண்க.

"பழனியின் பழைய பெயர் பொதினி என்பது.
வேளிர், ஓவியர், ஆவியர் போல்வன மிகப்பழைய
அரசகுடிகளின் பெயராகும். பேராற்றல் மிக்க
நெடுவேளாவி பொதினியை ஆண்டதாக
மாமூலனார் அகநானூற்றில் இரண்டு இடங்களில்
குறிப்பிடுகிறார் (அகம் 1, 61). வையாவிக்கோப்
பெரும்பேகனும் இவ் ஆவியர்குடியைச் சேர்ந்தவனே
(புறம் 147). 'ஆவிநன்குடி' என்பது இவர்களது
தலைநகரின் பெயராக விளங்கியது. முருகனுடன்
தொடர்புபடுத்தப்பெற்று அஃதொரு தெய்விகத்

தலமான பொழுது திருவாவிநன்குடி ஆயிற்று. திருவாவிநன்குடியைச் சார்ந்திருந்த பொதினிமலை தெய்வமலையாக வழிபடப்பட்டபோது, முருகனை 'பழநி' என ஆயிற்று என்று புராணக்கதை தோன்றியது. ஆயினும், முதலில் பொதினி என்றிருந்ததுதான் காலப்போக்கில் பழனி என மக்களிடையே மருவி வழங்கியது. இதனால் பொதினி பழனியாகி பிறகு பழநியாகிய வரலாறு விளங்கும். இன்றைய நிலையில் பழனி, பழநி என இரு வகைகளாகவும் மக்கள் பயன்படுத்துகின்றனர். இவற்றுள் பழனி என்பதே அதன் பழைய பெயரோடு ஒட்டியதாகும்" 60

சமயம், மொழி, அரசியல் எனப்பல்வேறு துறைகளிலும் அரும்பணி புரிந்த சைவப்பெரியாரின் தொண்டு என்றென்றும் நின்று வாழ்வதாம்!

### சைவசித்தாந்த வித்தகர் முரு. பழ. இரத்தினம் செட்டியார்:

இலக்கியப் புலமையும், சைவப்புலமையும் ஒருங்கே வாய்க்கப்பெற்றவர் புலவர் மாமணி சைவசித்தாநத வித்தகர் முரு. பழ. இரத்தினம் செட்டியார் ஆவார். இவர் எளியமுறையில் இலக்கிய, சமயச் சொற்பொழிவாற்றுவதில் தன்னிகரற்றவர். இவர் நூல்கள் பல படைத்த நுண்மாண்நுழைபுலம் உடையார். தடைகளும் விடைகளும் *(1966)*; இதோ சைவசித்தாந்தம் தெரிந்து கொள்ளுங்கள் *(1991)* என்பன அன்னார் எழுதிய சமயநூல்களுள் சில. வாலிவதம் சரியா? *(1975)* என்ற ஆய்வு நூலும் அன்னார் எழுதியதே ஆகும்.

### நூல்கள் பாடிய நுட்பமுடையார்:

மதிநுட்பம் வாய்ந்த நல்லோர் சிலர் தெய்வமணம் கமழும் சில நூல்களையும் பாடியுள்ளமையை மலேசியத் தமிழ் இலக்கிய உலகில் காணலாம். சான்றாக வே.இராமநாதன் செட்டியார் 'ஸ்ரீமரத் தாண்டவர் வருகைப் பதிகமும் காவடிச்சிந்தும்' என்னும் நூலைப் *(1961)* பாடியுள்ளார். குவாந்தானில் எழுந்தருளியுள்ள மரத்தாண்டவர் மீது பதிகம் பாடியவர் 'பாலகவி வயினாகரம்' என்னும் குறிப்பை நோக்க அன்னாரின் மலேசிய வருகையின் போது இந்நூல் பாடப்பட்டிருக்க வேண்டும் என ஊகிக்கலாம். இந்நூலைப் பாடியவர் தமிழகத்தைச் சேர்ந்தவராயினும் நூலின் பாடுபொருள் மலேசியப் பின்னணி உடையதாகும். இராமனாத செட்டி என்பார் 'நாச்சியார் புரம் நாச்சியாரம்மன் தோத்திரப்பதிகம்' என்னும் நூலைப் *(1932)*

பாடியுள்ளார். இந்நூல் தமிழகப்பின்னணி கொண்டது. ஆயின் பாடிய வர் மலையகத்தைச் சேர்ந்தவர்.

**ரெ. இராமசாமி:**

அலோர்ஸ்டார் ரெ.இராமசாமி 'முத்தமிழ்ச்செல்வர்' என்னும் சிறப்புப்பெயர் பெற்றவர். எண்ணற்ற இலக்கிய நாடகங்களைப் படைத்தவர். இவருடைய மொழியுணர்வை மதிப்பிட நல்ல அளவு கோலாக அமைவன இவர்படைத்த இலக்கிய நாடகங்களாகும். இராமகாதையின் பன்னீராயிரம் பாடல்களுள் ஐந்நூற்றெண்பத்தெட்டுக் கவிதைகளைத் தேர்வு செய்து கதையின் செறிவு பழுதுறாமல், இலக்கியநயம் பொருந்திய விளக்கங்களை எழுதிக் 'கருத்தும் கவியும்' என்னும் பெயரில் மலேசிய வானொலியில் இவர் 1960 களில் சிறப்பாகப் படைத்தார்.

மரபு பிறழாமல் கவிதை புனைவதில் கைதேர்ந்தவர் ரெ.இராமசாமி. மலையகத்தில் மரபுக்கவிதைப்பயிர் செழித்து வளர்வதற்குக் கணிசமான அளவில் இவர் பங்காற்றியுள்ளார். அலோர்ஸ்டார் அருள்மிகு தண்டாயுதபாணி மீது பாடப்பெற்ற கவிதைநூல் 'இருபாஇருபது அந்தாதி' என்பதாகும். 'இலக்கிய நாயகி சீதை' என்னும் கவிதை நூலும், 'சுவாமி சிவானந்தர் மலர் வழிபாடு' என்னும் வழிபாட்டு நூலும் இவர் பாடியவை.

'எம்பாவை எழில்', 'பாரதியின் காதலி,' கம்பரின் காவிய ஓவியம்,' 'க.தி.தரும் காதற்சுவை' ஆகிய உரைநடை நூல்களையும் இவர் எழுதியுள்ளார். இவை (தமிழக இலக்கியங்களை) நயம் பாராட்டும் போக்கிலும், ஆய்வுக்குறிப்புகள் சிலவற்றைக் கொண்டும் இலங்கு கின்றன.

**நாடகக்கலை வளர்த்த நல்லோர்:**

நாடகக்கலையை வளர்ப்பதிலும் நாட்டம் காட்டியுள்ளனர் நகரத்தார். சான்றாக எஸ்.ஆர். எம். பழனியப்பன் அவர்கள் வானொலிக்கும், தொலைக்காட்சிக்கும் பல நாடகங்களை எழுதியுள் ளார். சா. ஆ. அன்பானந்தன் 'மலேசியாவில் தமிழ் நாடக வளர்ச்சி' என்னும் கட்டுரையில் எஸ்.ஆர். எம்.பழனியப்பனின் நாடகங்கள் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். இவருடைய நாடகங்கள் நூல்வடிவு பெற்றில.

**தமிழ்க்கல்வியும் தகைசால் பணியும்:**

"அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்

அன்ன யாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறி வித்தல்" 61

என்பது கவியரசர் பாரதியின் வாக்கு. இதனை வேதவாக்காய்ப் பின்பற்றியோர் நகரத்தார் பெருமக்கள். சென்றவிடமெல்லாம் கல்விப்பயிர் செழித்து வளரவேண்டும் என்பதில் கருத்தூன்றி யவர்கள். தமிழகத்தில் மட்டுமின்றி வெளிநாடுகளிலும் கல்விப் பணிக்கெனப் பொருட்செல்வத்தை வாரி வழங்கிய வள்ளல் பெருமக்களும் உள்ளனர். இத்தகையோருள் ஒருவர் செட்டியப்ப செட்டியார். இவர் ஈப்போவில் செட்டியார் தமிழ்ப்பள்ளி என்னும் பள்ளியை நிறுவினார். தொடக்கத்தில் இப்பள்ளி தனியார் பள்ளியாக இருந்து, பின் அரசினர் பள்ளியாயிற்று. தமிழ்க்கல்விக்கென வெள்ளி மாநிலத்தில் (பேரா) விடிவெள்ளியாகத் திகழ்ந்தது இப்பள்ளி ஒன்றேயாம்.

தமிழிலக்கியக் கல்விக்கெனப் பல வகுப்புகள் நடத்தி, அவற்றில் பாடங்கற்பித்த பல நல்லாசிரியப் பெருமக்களைப் பற்றிய குறிப்புகள் முன்னரே சுட்டப்பட்டன.

### சங்கப்பணியும் சால்புடை நெறியும்:

தமிழ்மொழி வளர்வதற்கும், வளப்பமடைவதற்கும் பல அமைப்பு களை நிறுவியுள்ளனர் நகரத்தார். இவ்வமைப்புகள் சொற் பொழிவின் வழி மொழிவளர்ச்சியில் பங்கு கொண்டமை யையும், பணியாற்றி வந்தமையையும் அறிகிறோம். சாதிக்கொரு சங்கம் அமைத்து ஒன்றுபட்டுச் செயலாற்றுவது தமிழர்தம் பெருவழக்கு. இவ்வண்ணம் நகரத்தாரும் சென்றவிட மெல்லாம் ஒன்றுபட்டுப் பண்பாட்டுணர் வுடன் செயல்படச் சங்கங்கள் அமைத்தனர். தொழில் முறையில் அமைந்த வர்த்தக சங்கங்களும் தாய்மொழியை மறக்கவில்லை. இச்சங்கங்களின் நிகழ்ச்சிகள் பல மொழியை மையமாய்க் கொண்டவையாயும், ஆக்ககரமாயும் அமைந்தன இவற்றுள் தொலைநோக்கோடு சிந்தித்துச் செயல்படுவதில் கோலாலும்பூர் நகரத்தார் சங்கம் முன்னணி வகிக்கிறது. மலையக அரசின் மொழிக் கொள்கைக்கு ஏற்பவும், எதிர்காலத்தைப் பொருளாதார வளமுடைய தாக்க அறிவியல், தொழில்நுட்பம் ஆகியவற்றைக் கற்றாலும் இன்றைய நகரத்தார் குலச்சிறார்கள் பலர் தமிழ் மொழியைக் கற்பதில்லை. மொழிவாழ்ந்தால்தான் இனம் வாழும் என்ற எச்சரிக்கை உணர்வோடு தமிழைக் கற்பித்து வருகின்றனர் கோலாலும்பூர் நகரத்தார் சங்கத்தினர். இவ்வகுப்புகள் செந்தூல் செட்டியார்கள் கோயிலில் ஒவ்வொரு சனி, ஞாயிறன்றும் நடத்தப்படுகின்றன. வேலைவாய்ப்பு, வாழ்க்கைவசதி ஆகியவைகளுக்காகப் பிற துறைகளைக் கற்றாலும் தமிழனாக வாழத்

தாய்த்தமிழைக் கற்பதும் கற்பிப்பதும் இன்றைய நிலையில் மிகவும் அவசியமான ஒன்று என உணர்ந்து அதற்கான செயல்திட்டங்களை நகரத்தார் சங்கம் நடைமுறைப்படுத்தி வருவது பாராட்டுக்குரியது. தமிழ் நாற்றங் கால்களை உருவாக்குவதில் பெண்கள் ஈடுபட்டுள்ளது, தாய்த் தமிழின்பால் தாய்க்குலம் கொ.்ட அக்கறையை வெளிக் காட்டுகின்றது.

## அறக்கட்டளையும் அருந்தமிழ்ப்பணியும்:

மலாயாப் பல்கலைக்கழகத்தின் இந்திய ஆய்வியல் துறையில் 'நாட்டுக்கே. காட்டைச் செட்டியார் அறக்கட்டளை' என்னும் அமைப்பை நிறுவி அதற்கெனப் பத்தாயிரம் மலேசிய வெள்ளியை அன்பளிப்பாக வழங்கியவர் சைவப்பெரியார். கா. இராமநாதன் இன்று பல இலட்சங்களாகப் பெருகியுள்ளது அப்பணம். பல தமிழ் நூல்கள் உருவாவதற்கும், தமிழ்க் கருத்தரங்குகள் நடத்துவதற்கும் இவ் அறக்கட் டளை உதவியுள்ளது. இந்திய ஆய்வியல் துறையின் வெளியீடுகள், சைவசித்தாந்த மாநாட்டு மலர் (இரண்டாவது மாநாடு 1986) மற்றும் அருள்நெறித் திருக்கூட்டப் பவளவிழா மலர் ஆகிய தமிழ்நூல்கள் வெளிவர இவ் அறக்கட்டளை பெரும்பங் காற்றியுள்ளது. விளம்பர வேட்கை சிறிதுமின்றித் தமிழ்நூல்கள் வெளிவரத் தனிப்பட்ட முறையில் அன்பளிப்புக் கொடுத்தும் சிலர் தமிழ்ப்பணி ஆற்றியுள்ளனர். விரிவஞ்சி அவை இவண் சுட்டப்பெறவில்லை.

## இயக்கங்களும் இன்றமிழர் நலனும்:

தமிழவேள் கோ. சாரங்கபாணி மலையகம் மற்றும் சிங்கையில் தமிழர் நலனுக்கும், தமிழ்மொழிக்கும் அயராது உழைத்த பெருமகனார். அன்னாரின் சமூகப் பணிக்கு ஆதரவு நல்கித் தோளோடு தோள்கொடுத்து உதவிய தொண்டர் பெருமகனார் வயி. சண்முகம் செட்டியார். தமிழவேள் சுயமரியாதைப் பிடிப்புடைவர். அவருடன் துணைநின்ற வயி. சண்முகம் செட்டியார் அருள்நெறிச்செல்வர். ஆயினும் தமிழவேளுடன் இணைந்து செயலாற்றியவர். தன்னுடைய சமூகமே (நகரத்தார்) தன்னைத் தனிமைப்படுத்தியபோதும் தயங்காது, அச்சமூகத்தினரின் எதிர்ப்புகளையும் பொருட் படுத்தாது மலையகத் தமிழர் நலனுக்காக அயராது பாடுபட்ட அருந்தொண்டர் சண்முகஞ்செட்டியார்! தமிழர் வாழ்ந்தா லன்றோ தமிழ் வாழும்? ஆகலின் தமிழரை வாழ்விக்கப் பல்லாற்றானும் பாடுபட்டு, 'நமக்கேன் வம்பு'? என ஒதுங்கிநில்லாது அவர்செய்த பணிகள் அனைத்தும் தமிழை வாழ்விக்கச் செய்த பணிகளே! கோ.சா வின் முயற்சிக்கு ஆதரவு நல்கிய ஒரே ஒரு செட்டியார் சண்முகம் செட்டியார் என்று ஒப்பற்ற

புகழ்பெற்றவர். தமிழவேள் மணிவிழா மலர்க்குழுத் தலைவராக இருந்து தக்கவழி காட்டியவர் வயி. சண்முகஞ்செட்டியார் ஆவார்.

### தொடர்புச்சாதனங்களும் தொல்தமிழ்ப்பணியும்:

அறிவியல் வளர்ச்சி பரந்து விரிந்திருக்கும் உலகைச் சுருக்கிவிட்டது. இதற்கு முக்கியமான காரணிகளுள் பத்திரிகையின் தோற்றமும் ஒன்றாம். மலேசியாவில் நாளிதழ்த் துறையில் நல்லதொரு முன்னோடியாத் திகழ்ந்தது தமிழ்நேசன் நாளிதழாகும். இதன் உரிமையாளராக விளங்கியவர் நா. மலையாண்டி செட்டியார்; நேசனின் இயக்குநர் புலவர் மு. சேதுராமன். நேசன் நிறுவனத்தின் அதிகாரி எம். நாகப்பன் ஆகியோரும் நகரத்தார் இனத்தவரே. புலவர் மு. சேதுராமன் தமிழ்நேசனின் ஆசிரியராகப் பணியாற்றித் தம் கடமையைச் செவ்வனே செய்துள்ளார். இவருடைய பணி மலேசியத் தமிழ் இலக்கிய உலகில் குறிப்பிடத்தக்கது. ஆயினும் முருகு சுப்பிரமணியன் தமிழ்நேசனின் ஆசிரியராகப் பணியாற்றிய வேளையில் தமிழ்நேசன் தலைசிறந்த பத்திரிகையாக விளங்கியது. இதற்கான சிறப்புக் காரணங்கள் இரண்டு:

(1) முருகுவின் திறமை - முதிர்ந்த பத்திரிகைத்துறை அனுபவம்; தமிழுணர்வு; சமுதாய அக்கறை; அஞ்சாநெஞ்சம்; உலகத்தோடொட்ட ஒழுகும் பண்பு; புதியன படைக்கும் புரட்சி வேட்கை ஆகிய தனித்திறன்கள்.

(2) முன்னவராம் கு. அழகிரிசாமி அமைத்துக் கொடுத்த தடம். பாதையில் சிக்கலில்லை என்றால் பயணத்தில் சிக்கல் இராதன்றோ?

முருகு பத்திரிகை ஆசிரியராக மட்டுமின்றிப் படைப்பிலக்கிய வாதியாகவும், ஆய்வுத்திறம் அமைந்த அறிஞராகவும் விளங்கினார். உலகத்தமிழ் ஆராய்ச்சி மாநாடுகள், மற்றும் பல கருத்தரங்குகள் ஆகியவற்றில் அன்னார் படைத்த கட்டுரைகள் மலைசியத் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குத் தடம் அமைத்துக் கொடுத்தமை முன்னர்க் கூறப்பட்டது. இவர் மைந்தர் திரு. செல்வம் வானொலியில் பணியாற்றிவருகிறார்.

நாளிதழ் மட்டுமின்றி வாரஇதழ், மாதஇதழ் போன்றவற்றையும் நகரத்தார் பெருமக்கள் வெளியிட்டுத் தமிழுக்கு நற்றொண்டு ஆற்றியுள்ளனர். 'சிலம்பு' என்னும் மாத இதழை 1960 இல் கோலாலம்பூரில் என்.எம்.என். மலையாண்டி செட்டியார்

வெளியிட்டுள்ளார். 'சோலை' என்னும் மாதஇதழ் இலக்கிய இதழாக மலர்ந்தது. சைவப்பெரியார் இதன் ஆசிரியர் என்பது முன்னர்க் கூறப்பட்டது. ஆயினும் தி.சு. சண்முகம் இதன் நிறுவனராக இருந்தார். இவ்விதழ் கோலாலம்பூரில் 1950 களில் வெளிவந்தது. தமிழ்ப்பூஞ்சோலை (வார இதழா அல்லது மாத இதழா என்பது அறியுமாறில்லை.) என்னும் இதழையும் மலாக்கா உ.அரு. அருணாசலம் செட்டியார் நடத்தினார்.

சிங்கப்பூர் வானொலியில் தேனினும் இனிய தமிழினிமையைப் பரப்பியவர் மெ. திருநாவுக்கரசு ஆவார். இவர் பல கட்டுரைகளைப் படைத்து வானொலியின் வழி தமிழை வளர்த்தவர். தமிழில் உள்ள இலக்கியச் செல்வங்களின் பெருமைகளைச் சிங்கப்பூர்த் தமிழ்மக்கள் அறியுமாறு செய்தவர். சிங்கப்பூர்த் தமிழிலக்கியம் பற்றிய பல கட்டுரைகளைப் பல்வேறு கருத்தரங்குகளில் இவர் படைத்துள்ளார்.

**படைப்பிலக்கியவாதிகளை ஆதரித்தோர்:**

முருகு சுப்பிரமணியன் பல புதிய இளம் எழுத்தாளர்களை உருவாக்கினார். இவர் பல எழுத்தாளர்களை அறிமுகப்படுத்தி, அவர்களின் வளர்ச்சியில் அக்கறை காட்டி, நிறையவும் நிறைவாகவும் எழுதத் தூண்டினார். முருகு கொடுத்த ஊக்கத்தால் உயர்ந்தோர் பலர்.

இராம. பெரியகருப்பன் செட்டியார் (காரைக்குடி இராமசாமி தமிழ்க்கல்லூரி நிறுவனர்) விளம்பரம் விழையாது தூய்தமிழ்த் தொண்டாற்றிய தூயர். இவர் 'மெய்யம்மை பதிப்பகம்' என்னும் பதிப்பகத்தைத் தமிழகத்தில் நிறுவி நல்ல, அரிய நூல்கள் பலவற்றை அச்சிட்டு வெளியிட்டார். உலகளாவிய நிலையில் 'மறைமலையடிகள் பிள்ளைத்தமிழ்' உருவாகக் கவிதைப்போட்டி (சிற்றிலக்கியப் போட்டி) நடத்தினார். இப்போட்டியில் பினாங்கைச் சேர்ந்த புலவர் சி. அன்பானந்தம் வெற்றி பெற்றார். இரருடைய படைப்பு மெய்யம்மை பதிப்பக வெளியீடாக மலர்ந்தது.

சிங்கப்பூருக்கு அகிலன் வருகையளித்தபோது அகிலனை வரவேற்பதற்காகச் சிங்கப்பூர்த் தமிழ் எழுத்தாளர்கள் இராம. பெரியகருப்பன் அவர்களைத் தலைவராகக் கொண்டு (வரவேற்புக் குழுத்தலைவர்) செயல்பட்டனர். இலக்கியக் கூட்டங்களுக்குச் சென்று, இலக்கியவாதிகளுக்குப் பொருளுதவி செய்து தமிழ்ப்பணியாற்றினார் இராம். பெரியகருப்பன்.

படைப்பிலக்கியத்துறை, கல்வித்துறை, சமயத்துறை, தொடர்பு சாதனத்துறை, நூல் வெளியீட்டுத்துறை, ஆய்வுத்துறை கலைத்துறை எனத் துறைதொறும் தமிழ்த் தொண்டாற்றிய தூயர் நகரத்தார்.

இவர்களுடைய தமிழ்ப்பணி நேற்றுடன் நில்லாது நாளையும் தொடரும் என நம்பலாம். ஏனெனில் தமிழை மறவாச் சிந்தையரன்றோ நகரத்தார்

## மேற்கோள் விளக்கம் :


1. S.Chandrasekhar, The Nagarathars of south India, P-21.
2. B.V. N.Naidu, The Nattukkottai Chettiars and their banking system", Rajah Sir Annamalai Chet tiar Commemoration Volume, p-457.
3. எஸ். சந்திரசேகர் அவர்களின் நூலில் மேறிகோளாகக் காட்டப்பட்டுள்ளது.
4. முனைவர் இலக்குமி மீனாட்சிசுந்தரம், "நகரத்தார்களின் இலக்கியப் பணி", கிட்டா நாட்டுக்கோட்டை தனைவசியர் சங்கப் பொன்விழாவில் வாசிக்கப்பட்ட கட்டுரையில் மேற்கோளாகக் காட்டப்பட்டது.
5. S. Chandrasekhear, The Nasgarathars of South India, P-19
6. மேலது
7. மேலது, ப 19-20
8. மேலது ப - 34
9. பெ. நா.மு. முத்துப்பழனியப்பன், மலாயாவின் தோற்றம், முன்னுரை.
10. மேலது, ப-111
11. மேலது, ப123 -
12. மேலது, ப -123
13. மேலது, சிறப்புரை (கே. சிதம்பரம்பிள்ளை எழுதியது)
14. பெ.நா.மு. முத்துப்பழனியப்பன், மலாயாவின் தோற்றம், ப-165
15. திருவள்ளுவர், திருக்குறள்- 641
16. பெ. நா. மு முத்துப்பழனியப்பன், மலாயா சரித்திரம், ப- 165

17. திரு. நாகப்பன் (மலாக்கா அருணாசலஞ்செட்டியார் மகன்) நூலாசிரியருக்குக் கொடுத்துதவிய குறிப்புகள்.

17. (A) T. Wignesan, Bunga Emas, An anthology of contemporary malaysian literature (1930 - 1963) Rayifath Publications.

18. பெ. நா. மு. முத்துபழனியப்பன், மலாயாசரித்திரம், ப- 166

19. ந. பாலபாஸ்கரன், கதை வகுப்பு - ஓர் ஆராய்ச்சி, ப-54 (மோகங்கள் என்னும் நாவலில் இக்கட்டுரையையும் இணைத்து வெளியிட்டுள்ளனர்.)

20. சுப. நாராயணன், சங்கமணி, மேதினமலர், 1950.

21. ந. சுப்பிரமணியன், மலேசியத் தமிழ் இலக்கியம் - ஒரு கண்ணோட்டம், தமிழாய்வு, இரண்டாம் உலகத்தமிழ் ஆராய்ச்சி மாநாட்டுக் கட்டுரைமலர், 35-36

22. ந. பாலபாஸ்கரன், கதைவகுப்பு - ஓர் ஆராய்ச்சி, ப-70

23. மேலது, பக். 70-71

24. மேலது, ப-71.

25. மேலது, ப-74.

26. மேலது, ப-76.

27. பாரதிதாசன், பாரதிதாசன் கவிதைகள்-முதல்தொகுதி, ப-186

28. முருகு சுப்பிரமணியன், இளந்தமிழன், 1.12.1942.

29. டாக்கடர், இரா. தண்டாயுதம், "முருகு அல்லது பத்திரிகை" முருகு சுப்ரமணியிம் அவர்களின் பொன்விழா மலர், ப-27

30. மேலது, ப- 28

31. அகிலன், "இலக்கியநேசன் முருகு", மேற்படி பொன்விழா மலர், ப - 11

32. தேவகுலத்தார், குறுந்தொகை, பா-3. (வையாபுரிப்பிள்ளை பதிப்பு)

33. அகிலன், "இலக்கியநேசன் முருகு", மேற்படி மலர்,ப-13

34. ஆழிஅருள்தாசன், மேற்படி பொன்விழாமலர், முன்னுரை.

35. ரெ.கார்த்திகேசு, "தமிழ்ச்சாதியின்காவலர்" இக்கட்டுரை யில் மேற்கோளாகக் காட்டப்பட்டது, ப-20

36. பரிதா மணாளன், முருகு வாழ்க்கைக்குறிப்பு, மேற்படி மலர், ப-11

37. பாரதியார், பாரதியார் கவிதைகள், ப-41

38. வித்வான் விசு. திருநாவுக்கரசு, "பொன்விழாக்காணும் செம்மல் ", மேற்படி பொன்விழாமலர், ப - 44.

39. திருவள்ளுவர், திருக்குறள், குறள் - 428

40. கண்ணதாசன், கண்ணதாசன் கவிதைகள் - முதலிரண்டு தொகுதிகள், ப - 95

41. முரு. பழ. இரத்தினம் செட்டியார், "முருகவாழ்க", மேற்படி பொன்விழா மலர், ப - 16

42. திருவள்ளுவர், திருக்குறள், குறள் - 510

43. டாக்டர் இரா. தண்டா"புதம், "முருகு அல்லது பத்திரிகை, மேற்படி பொன்விழா மலர், ப - 26

44. முருகு சுப்ரமணியன், 'மலேசியாவில் தற்காலத் தமிழ் இலக்கிய வளர்ச்சி' கையெழுத்துப்படி,

45. ஐ. உலகநாதன், சந்தனக்கிண்ணம், ப- 27.

46. கா. இராமநாதன், நான் கண்ட மலாயா, ப-7.

47. மேலது, 4-18

48. மேலது, ப-22-23

49. மேலது, பக்-24-25

50. மேலது, பக்-31-32

51. மேலது, ப-37

52. மேலது, ப-47

53. மேலது, ப-86

54. மேலது, ப-62

55. மேலது, ப-94.

56. மா. இராமையா, மலேசியத் தமிழ் இலக்கிய வரலாறு, ப-24.
57. மேலது, ப-28
58. கா. இராமநாதன், ஆழமும் அகலமும், ப-9-10
59. கா. இராமநாதன், மலேயா-இந்தியா யாத்திரை, ப-65.
60. தமிழண்ணில், வளர்தமிழ், ப-141-142.
61. பாரதியார், பாரதியார் கவிதைகள், ப-140

# 6. இன்றமிழ் வளர்த்த இசுலாமியர்

உலகில் வேறு எம்மொழிக்கும் இல்லாத தனிப்பெருஞ் சிறப்பு தமிழ்மொழிக்கு உண்டு. 'பொங்கு பல சயமெனும் நதிகளெல்லாம் புகுந்து கலந்திட நிறைவாய்ப் பொங்கி ஓங்கும் கரைகாணாத கடலாம்' தமிழ்மொழி கணக்கற்ற வளத்தாலும், கவினார் திறத்தாலும் அறியாமை இருளகற்றும் ஆதவனாகி ஒளிர்கிறது. பல்வேறு சமயத்தவரும் தங்களின் இலக்கியப் பணியால் தமிழ்மொழியை வளப்படுத்தியுள்ளனர். கடலையும் தமிழையும் புதிய நோக்கில் இசுலாமியப் புலவரான பனைக்குளம் மு. அப்துல்மஜீது புகழ்கிறார்.

"அறிவுத் திரைகள் அலையலையாய்
அன்பே ஓயா தம்முழக்காய்
நிறைவு ஒழுக்கம் பொறைகருணை
நெறியே காட்டும் கரைகரையாய்த்
துறைகள் தோறும் வளர்தரும்
துலங்கித் தோணும் தொல்பழைய
மறைகள் என்னும் கலம்தவழும்
வளமைத் தமிழ்மாக் கடலாமே"1

'இந்தியாவின் இலக்கியத்துறைக்கு இசுலாமியர்கள் ஆற்றிய பங்கு மிகப்பெரியது. கவிதை, உரைநடை என்ற இரு துறையிலும் இசுலாமியர்கள் எண்ணற்ற இலக்கியங்களைப் படைத்துள்ளனர்.' 2 தமிழ் மொழியில் மட்டும் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட இலக்கியங்கள் தோன்றியுள்ளன. இவற்றுள் பெரும்பாலான வற்றின் தலையாய நோக்கம் இசுலாத்தின் கொள்கைகளைத் தமிழ்மக்களிடையே பரப்புவ தாகும். ஆகவே இசுலாமியத் தமிழ் இலக்கியங்களை இசுலாமியக் கொள்கை விளக்கங்களாகவே காண்கிறோம். கொள்கைகளைப் பரப்பும் நோக்கம் கொண்டிருந் தாலும் அவை முற்றிலும் பிரச்சாரப் போக்கில் எழுதப்படவில்லை. கலையம்சம் பொருந்திய படைப்புகளாக அவை மிளிர்வது கற்றார்க்கே புலனாம். இசுலாமியத் தமிழ்ப் புலவர் பெருமக்களின் புலமைத் திறத்தையும் அவை வெளிப்படுத்துகின்றன. அழகுதமிழையும் அரபிமொழியையும் கலந்து பல வண்ணமலர்கள் கொண்ட பூஞ்சோலையை - இலக்கியச் சோலையை உருவாக்கியுள்ளனர் இசுலாமியத் தமிழ்ப்புலவர்கள்.

'இன்றமிழ் எங்கள் மொழி; இசுலாம் எங்கள் வழி' என்பது இசுலாமியத் தமிழர்களின் கோட்பாடு. தொழில் நிமித்தமாகத் தமிழ்

நாட்டை விட்டு மலேசியா, சிங்கப்பூர் முதலிய நாடுகளுக்குச் சென்ற இசுலாமியர்கள் அந்நாட்டுக் குடிமக் களாயினர்; ஆயினும் தமிழை மறந்தாரில்லை. பல இலக்கியங்களைப் படைத்துள்ளனர். மலைசிய, சிங்கப்பூர்த் தமிழிலக்கிய வளர்ச்சியில் தமிழ் முஸ்லீம்களின் பங்கு கணிசமானது.

மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் வாழும் தமிழ் முஸ்லீம்கள் தமிழார்வமும், தமிழ்ப்பற்றும் கொண்டு விளங்குகின்றனர். இந்நாடு களில் வாழும் தமிழர்களோடு (முஸ்லீம் அல்லாதார்) ஒப்புநோக்கு கையில் தமிழ் முஸ்லீம்களின் வீடுகளில் தமிழ்ப்புழக்கம் அதிகமாக உள்ளது. மற்ற தமிழர்களின் வீடுகளில் ஆங்கிலமே ஆட்சிசெய்து வருகிறது. மொழிப்புழக்கம் தமிழ் முஸ்லீம்களிடம் அதிகமாக உள்ள காரணத்தால் தமிழ்க்கல்வியில் தமிழ் முஸ்லீம்களின் தரம் உயர்ந்தும் காணப்படுகிறது.

இலக்கியம் படைப்பதற்கான சூழல்களில் மொழிப்பற்று, மொழிவளம், மொழியறிவு ஆகியவை இன்றியமையாது வேண்டப் படுவன. இத்தகு சூழல்கள் தமிழ்முஸ்லீம்களிடையே பிறங்கி வெளிப்படுவதால் இலக்கியம் படைக்கும் உணர்வு கிளர்ந்து எழுகிறது. இந்நிலை நீண்ட காலமாக இவ்விரு நாடுகளிலும் நிலவிவருகிறது. ஆகவே மலேசிய, சிங்கப்பூர்த் தமிழ் இலக்கிய வளர்ச்சியில் தமிழ் முஸ்லீம்களின் பங்கும், பணியும் கணிசமானது என்பதை மறுப்பதற் கில்லை.

இலக்கியப்பணி என்று கூறும்போது இலக்கியம் படைப்பதும், இலக்கியம் படைப்பதற்குத் துணைநிற்பதும் அடங்கும். இங்ஙனம் செந்தமிழ்ப்பணி செய்த சீரியர் பலர். மறைமலையடிகள் தமிழிலக்கிய வானில் தாரகையாக ஒளிர அவரின் குருகுலாம் காதிறு நாவலர் காரணமாவார். 'நான்காம் தமிழ்ச் சங்கத்து · நக்கீரர் என்ற சிறப்புப்பட்டம் பெற்றவர் குலாம் காதிறு நாவலர் ஆவார். ந.மு. வேங்கடசாமி நாட்டாரரோ 'இலக்கணக் கோடரி' என்ற பட்டம் பெற்றதிருச்சி பிச்சை இபுராஹீம் புலவரின் தலைமாணாக்கர்! தமிழ்த்தென்றல் திரு. வி. கலியாண சுந்தரனார் சதாவதானி செய்குத்தம்பிப் பாவலரின் மாணாக்கர். இவ்வரிசையில் பனைக் குளம் மு. அப்துல் மஜீது, பட்டர்வொத் ஜைனுதீன் போன்றோர் பலருக்கும் தமிழைப் பயிற்றுவித்துள்ளனர்.

மாணாக்கர் ஆசானிடம் பெருமதிப்புவைத்திருப்பது உலக இயற்கை. இவ்வண்ணமே தம் ஆசனிடம் பேரன்பும் பெருமதிப்பும்

கொண்ட சி.கு. மகமதூம் சாயபு ஆசானின் நூல்களைத் தமிழ்கூறு நல்லுலகிற்கு அறிமுகப்படுத்தினார். சிங்கப்பூர் தனிநாடாகப் பிரியுமுன் மலேசியாவுடன் இணைந்து இருந்தது யாவரும் அறிந்த ஒன்றே. இக்காலகட்டத்தில் 'சிங்கை நேசன்' என்னும் பத்திரிகையின் உரிமையாளராகிய சி. கு. மகமதூம் சாயபுதான் தம் ஆசானாகிய சதாசிவப் பண்டிதரின் நூல்களை முதன்முதலில் அறிமுகப்படுத்தினார். வண்ணைநகர் அந்தாதி, வண்ணைநகர் ஊஞ்சல், சிங்கைநகர் அந்தாதி, சித்திரகவிகள் ஆகிய நான்கு நூல்களையும் ஒரே தொகுப்பாக வெளியிட்டுள்ளார். இந்நான்கனுள் முதலிரண்டும் காஞ்சி காமாட்சியைப் பற்றியவை. பின்னிரண்டும் சிங்கப்பூர் சுப்பிரமணிய சுவாமியின் மீது பாடப்பெற்றவை. இவை மலேசியத் தமிழிலக்கிய உலகில் முதலில் வெளிவந்த நூல்கள். சமயப்பொறையுடன் திரு. சாயபு அவர்கள் இந்நூலை வெளியிட்டுள்ளார் என்பதும் இவண் கருதத்தக்கது.

சி.கு. மகமதூம் சாயபு அவர்கள் பத்திரிகைத்துறையில் பழுத்த அனுபவம் உடையவர். சிங்கை வர்த்தமானி, தங்கை நேசன், ஞானசூரியன் என்ற மூன்று பத்திரிகைகளையும் இவர் நடத்தினார். இவற்றுள் *1875* இல் வெளிவந்த சிங்கை வர்த்தமானியே மலேசியாவின் முதல் தமிழ்ப் பத்திரிகையாகும். பத்திரிகைகள் வழியே பைந்தமிழ் வளர்த்த மகமதூம் சாயபு அவர்களின் பணி இசுலாமியர்களின் தமிழிலக்கியப்பணிக்கு அடித்தளமிட்டது.

## கவிதைத்துறை வழி கன்னற்றமிழ் வளர்த்தோர்:

கவிதைத்துறையை மலேசியாவிலும், இபபோதைய சிங்கப்பூரி லும் நன்கு காலூன்றச் செய்த பெருமை தமிழ் முஸ்லீம்களுக்கும் உரியது. இசுலாமியர்கள் வளர்த்த இன்றமிழ்க் கவிதைத்துறை பற்றி அமரர் ந. வீ. செயராமன் கீழ்க்கண்டவாறு கருத்துரைப்பர்.

> மலேசியத் தமிழ்க் கவிதை உலகில்,
> 1947 முதல் 1986 வரையுள்ள 39 ஆண்டுகளில்
> மு. அப்துல் மஜீது முதல் எஸ்.எம், ஜைனுதீன்
> ஈறாக 43 கவிஞர்கள் கவிதைமலர்கள்
> முதலாகக் கடற்சோழன் கவிதைகள் ஈறாக
> 57 மறுமலர்ச்சிகள் கவிதைநூல்களைத்
> தந்துள்ளனர்."3

## நாச்சிகுளத்தாரின் நற்பணி :

மலேசியத் தமிழ்க்கவிதை உலகில், குறிப்பாக மரபுக் கவிதைத்துறை வளர நாச்சிகுளத்தார் ஆற்றிய பெரும்பணி

அரும்பணியாம். ஜனாப் எம். முகம்மது யூசுப் என்னும் இயற்பெயர் கொண்ட இவர் பல இலக்கியவகைகளைப் படைத்துள்ளார். நாச்சிகுளத்தாரின் படைப்புகளைத் 'தமிழ் மலேசியானா' என்னும் தொகுப்பு நூலில் அமரர் இராம. சுப்பையா அவர்கள் கீழ்க்கண்டவாறு வரிசைப்படுத்தியுள்ளார்.

1. அருள்நெறி வெண்பா (1966)
2. இன்பரசக்கீர்த்தனைகள் (1966)
3. செந்துறை வெண்பா (1966
4. செந்நெறிப்பாமாலை (1966)
5. திருநெறி ஐநூறு (1966)
6. நீதிநெறிச்சாரம் (1966)

நாச்சிக்குளத்தார் 'வரகவி' என்னும் சிறப்புப்பட்டம் பெற்றவர். இறையருளால் இன்னும் வாழ்ந்து வருகிறார். 4 ' இவர் எழுதிய நூல்கள் ஐம்பதுக்கும் மேற்பட்டவை. பல நூல்கள் இன்று கிடைத்தில. சீறாப்புராணத்தையும், கருணானந்த ஞானியாரின் நூல்களையும், இன்னும் பல இசுலாமிய இலக்கியங்களையும் பதிப்பித்துள்ளார். இவருடைய சீறாப்புராணப் பதிப்பு பினாங்கில் சிறப்பாக வெளியிடப் பெற்றது. 'கவிஞர் கண்ட கவிஞர்' என்ற தொடரில் நான்கு கட்டுரைகள் நாச்சிகுளத்தாரைப் பற்றிய வையாக மலேசிய வானொலியில் ஒலிபரப்பப்பட்டன. இக்கட்டுரைகளைப் படைத்தவர் பட்டர்வொர்த் ஜைனுதீன் ஆவார். 5

நாச்சிகுளத்தாரின் நற்புலமையைக் கவிஞர் டி. வி. ஆர். பி. இராகவன் பிள்ளை கீழ்க்கண்டாங்கு மதிப்பிட்டுள்ளார்.

> "இஸ்லாத்தின் தத்துவங்களையும், மதபோதனை
> கஙளையும், நல்ல நயத்துடன், அழகு தமிழில்,
> படிப்பவர்களின் உள்ளத்தைக் கவரும்வண்ணம்
> சொல்லலங்காரத்துடன் கவிதை புனைவதில்
> இவருக்குள்ள திறமை பாராட்டுக்குரியதாம்" 6

நாச்சிகுளத்தாரின் புலமையைக் கருத்தில் கொண்டு மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கமும் நாச்சிகுளத்தாரின் புலமையை மதித்துத் 'தங்கப்பதக்கம்' அளித்துச் சிறப்பித்தது.

கவிஞர் சாரணபாஸ்கரன் :

இவரைப் பற்றி 'இசுலாமிய இலக்கியக் கருவூலம்' என்னும் நூல் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறது.

"இன்றையக் கவிஞர் வரிசையில் முன்னணியில்
நிற்பவர் சாரணபாஸ்கரன். ஏனெனில் நமது
காலத்தில் இசுலாமியக் காவியம் எழுதிய பெருமை
இவர் ஒருவருக்கே உண்டு. 'யூஸுப் ஜுலைகா'
வைத் தந்த நாற்பது வயதை அடையப்பெற்ற
இவருடைய இயற்பெயர் டி. எம். எம். அகமது". 7

'யூஸுப் ஜுலைகா' என்னும் நூல் இலங்கையில் பலகலைக்கழகப் பாடப் புத்தகமாக இடம்பெற்றிருந்தது. மணியோசை, சாபம், சங்க நாதம், இதயக்குமுறல், நாடும்நாமும், மணிச்சரம் முதலிய பாடல் தொகுதிகள் இவருடைய சிறுவயதிலேயே அச்சேறியவை. 'பால யோகியின் பிரார்த்தனை' என்னும் இவருடைய நூல் ஆங்கிலத்திலும் மொழி பெயர்க்கப்பட்டது. இவர்கவித்திறனுக்கும், சமயப்பற்றுக்கும் சான்று பகர் வது கீழ்க்கண்ட பாட்டு.

"தோளெடுக்கும் பெற்றோரை இழந்த போதும்
துணைகொடுக்கும் சுற்றத்தார் பிரிந்த போதும்
வாளெடுக்கும் கொடும்பகைவர் சூழந்த போதும்
வறியவரில் வறியவராய் வாழ்ந்த போதும்
ஆளொடுக்கும் பசிப்பிணியே அடைந்த போதும்
அல்லாஹ்வே நின்ஆணை மறவாத் தூதர்
தாள்எடுக்கும் சமுதாயம் தாழ்ந்திடாமல்
தலைநிமிர்ந்து வாழ்ந்திடவே தயை செய்வாயே" 8

மன்னார்குடியூசுப் பாவலர் :

மலேசியாவில் ஜப்பானியர் ஆட்சி நடந்த காலத்தில் பாரதி விழா' எடுத்த தமிழ்ப்பாவலர் இவர். 'தேசநேசன்' இதழின் ஆசிரியர். சிறந்த பேச்சாளராகத் திகழ்ந்த இவர் 'இசுலாமிய ஞானச்சுடர்' என்னும் நூலை எழுதியவர். வெண்பாவும் இசைப்பாடல்களும் அடங்கிய நூலாகும் இது.

பனைக்குளம் மு. அப்துல்மஜீது :

பினாங்கில் வியாபாரத்தில் ஈடுபட்டிருந்தாலும் தமிழில் பெரும்புலமை பெற்றவர். நல்ல கவிஞர். இவருடைய 'கவிப்பூஞ்

சோலை' என்னும் நூல் கவிதைத்தொகுப்பாகும். 'இலக்கியப் பூங்கா', 'எனது தமிழ் வாழ்க்கை', 'நாயக வெண்பா', 'பெருமானார் அருள்வேட்டல்' எனப் பல நூல்களை எழுதியுள்ளார். தமிழ்நாட்டிலே வாழ்ந்த முஸ்லீம் தமிழ்ப் புலவர்களை பற்றி அப்துல் ரஹீம் என்பவர் தனியொரு நூல் வெளியீட்டார். அந்நூலில் விடுபட்டுப்போன புலவர்களைப் பற்றிய தகவல்களையெல்லாம் ஒருங்கு திரட்டித் 'தமிழ்நாட்டு இஸ்லாமியப் புலவர்கள்' என்ற நூலை இவர் எழுதியுள்ளார் . ஜே. எம். என்னும் புனை பெயரில் பல படைப்புகளை உருவாக்கி யுள்ளார் . நாயக வெண்பா இரு பாகங்களைக் கொண்டது; பெருமானார் அருள்வேட்டலும் இத்தகையதே. இவையிரண்டும் கவிதை நூல்கள்.

**சிங்கை முகிலன்:**

நூ. ஏ. ரஹ்மான் என்னும் இயற்பெயர் கொண்ட கவிஞர் சிங்கை முகிலன் ஆவார். சிங்கப்பூரக் கவிதைப் பண்ணையின் வெளியீடான 'இதய ஓசை' என்னும் கவிதை நூல் சிங்கை முகிலனின் சிந்தனை வண்ணமே. இவர் சிங்கப்பூரின் திறந்த கவிஞர்களுள் ஒருவர். சிங்கப்பூர் தனிநாடாகப் பிரிந்தபின் இவருடைய பல நூல்கள் வெளிவந்துள்ளன. 'நல்ல முடிவு' என்னும் கவிதைத்தொகுப்பில் மலேசியத்தமிழர்களின் பெருந் தலைவராம் டத்தோஸ்ரீ டாக்டர் ச. சாமிவேலு அவர்களைப் 'பொன்மனத்தர் வாழ்க' என்னும் தலைப்பில் பாடியுள்ளார் .

"மறைந்து வரும் தமிழ்ப்பள்ளிக் குதவாத தமிழா
மலைநாட்டில் லட்சம் இருந்தென்ன நன்மை" 9

எனப் பாடியுள்ள திறம் மொழிப்பற்றை அதிகம் வலியுறுத்து வதாகும். சிங்கை முகிலனின் கவிதைகள் பெரும்பாலும் நாட்டுப் பற்று, மொழிப்பற்று, தமிழினப்பற்று ஆகியவற்றை அதிகம் வலி யுறுத்துவன. இவர் பாடிய நூல்கள் வருமாறு :

1. தமிழ் ஒலிக் கீதம் (1939)
2. திராவிடமணிக்கீதம் (1940)
3. இந்திய தேசிய இராணுவ நினைவுக் கீதம் (1946)
4. இதயமலர் (1952)
5. துடிக்கும் உள்ளம் (1954)
6. இதய ஓசை (1960)
7. மனிதச் சுவடு (1975)

8. மன வீதி (1989)
9. உருவகக் கதைகள் (1976)

இவற்றுள் இறுதிநூல் தவிர எஞ்சியவை அனைத்தும் கவிதை நூல்களே. மனிதநேயம் மிக்க இக்கவிஞர் மலைநாட்டின் முது பெரும் எழுத்தாளாகளுள் ஒருவர். மலேசிய, சிங்கையின் இலக்கியவானில் கவிதை முகிலாகத் திரண்டு எழுந்தவர் கவிஞர் முகிலன். இஸ்லாமிய இலக்கியக் கருவூலம் என்ற நூல் பல இஸ்லாமியக் கவிஞர்களை வரிசைப்படுத்தியுள்ளது. ஆயின் இன்னின்னார் இன்னின்ன நாட்டைச் சேர்ந்தவர் எனத்தெளிவாகக் கூறிற்றிலது. சிங்கை முகிலனின் பெயர் இந்நூலுள் யாண்டும் சுட்டப்படவில்லை.

**கவிமதி தாசன் :**

ஷாயிர் அப்துல் ரஹீம் என்னும் இயற்பெயர் கொண்ட கவிஞர் கவிமதிதாசன் 'வீழந்த வெள்ளிகள்' என்னும் சிறு காவியத்தைப் படைத்துள்ளார் கத்திக்கப்பல் என்பது சிறுவர்களுக்காக எழுதப்பட்ட நூலாகும். இனிக்கும் இசை, சுவனத்தின் அமுதம் ஆகிய கவிதை நூல்களையும், 'நபிவழி சென்றால் நரகமில்லை' என்னும் உரைநூலையும் படைத்தவர் . இவருடைய 'எண்ணக் குவியல்' என்னும் நூலை அறிஞர் சுப. நாராயணன் ஆங்கிலத்தில் மொழிபெயர் த்துள்ளார்

**கவிகாசு காதர் சுல்தான்:**

கலாவல்லி காவியம் என்னும் நூலைப் பாடியவர். இந்நூலைப் பற்றிய திறனாய்வு 'இலக்கிய அரும்புகள்' என்னும் நூலில் இடம்பெற்றுள்ளது.

**கவிஞர் சாந்திதாசன் :**

பக்கீர் முகம்மது என்னும் இயற்பெயர் கொண்ட இக்கவிஞர் 'தியாகச்செம்மலார் ' என்னும் காவிய நூலைப்படைத்தவர் .

**கவிஞர் மீசல் அபுபக்கர் :**

பினாங்கு நகரைச் சேர்ந்த இப்பாவலர் 'மணிமுழக்கம்' என்னும் கவிதை நூலை வெளியிட்டுள்ளார்

**கவிஞர் ஹாஜி ஷவ்கத் அலி :**

இவரும் சில கவிதை நூல்களை வெளியிட்டுள்ளார். இவர் 'பாவலர் திலகம்' பட்டர்வொத் ஜைனுதீன் அவர்களுடன் இணைந்து 'நறுமணம்' என்னும் இதழ் நடத்தினர்.

**முதுபெரும்புலவர் உதுமான் கனி:**

சித்திரமொழி, கோடையிடி என்ற சிறப்புப்பெயர்களைப் பெற்ற நல்ல எழுத்தாளரும், பேச்சாளரும் ஆவார். அமரராகி விட்ட கவிஞர் இவர்.

**கவிஞர் ஜைனுதீன் :**

'பாவலர் திலகம்' என்னும் சிறப்புப் பெயர் பெற்ற இவர் 'இதயத் தாமரை' என்னும் நூலின் ஆசிரியர். மாமறை வந்த மாதம், நீதிபதி பலராமையாவின் சுற்றுலா, இலட்சியக் கவிஞர் இக்பால், மறை போற்றும் இறைத்தூதர், செந்தமிழ்த்தேனி ஆகிய உரைநடை நூல் களையும் படைத்தவர். பலருக்குத் தமிழும் யாப்பிலக்கணமும் பயிற்றுவிக்கிறார். இசுலாமிய சமயத்தைப் பல்லாற்றானும் பரப்பி வருபவார் இவருடைய தமிழ்ப்பணியை நினைவு கூர்ந்து கௌரவ டாக்டர் பட்டம்(D.LiH) வழங்கப் பட்டது.

**கவிஞர் சீனி நெய்னா முகம்மது :**

கவியரசு பட்டம் பெற்ற இவருடைய கவிதைகள் நூலாக இன்னும் வெளிவரவில்லை.

**புலவர் ப.மு. அன்வர் :**

தமிழாசிரியரான இவர் நல்ல கவிஞரும் ஆவார் இவருடைய கவிதைகளும் இன்னும் அச்சுவாகனம் ஏறிற்றில.

**க.து.மு. இக்பால் :**

மரபுக்கவிதையில் காலூன்றிப் புதுக்விதைத் துறையில் வேகமாக வளாந்து வரும் நல்ல கவிஞர். சிங்கையில் உள்ள கவிஞர்களில் குறிப்பிடத்தக்கவர். இவரைப் பற்றிய குறிப்பினை 'இஸ்லாமிய இலக்கியக் கருவூலத்தில்' காணலாம். 'முகவரிகள்' என்னும் கவிதைத் தொகுப்பினை வெளியிட்டுள்ளார். மரபுக் கவிதைகளும், புதுக்கவி தைகளும் அடங்கிய தொகுப்பு இது. சிங்கையில் புதுக்கவிதைக்கு மெருகும் வளமும் கூட்டிவரும் க.து.மு. இக்பாலின் கவித்திறனுக்குக் கீழ்க்கண்ட கவிதை பதச்சோறாக அமைகிறது.

"வெள்ளிப் பானையை
விடியற் காலையில்
விண்ணில் தூக்கி வைத்தவர் யார்? ஒரு
விறகில் லாமலே
வெந்தணல் மூட்டி
விருந்து சமைக்கக் கற்றவர் யார்? 10

கற்பனை நயமிக்க இக்கவிதையைப் போல் பற்பல கவிதைகளைப் பாடியுள்ளார். மரபுக்கவிதைகளில் இயற்கையைப் பாடும் போக்கு விஞ்சி நிற்கிறது. புதுக்கவிதைகளில் சமுதாயநோக்கு சிறக்கிறது.

## இறையருட் கவி ஜமாலுதீன் :

இக்பால் யார்? என்னும் ஆய்வு நூலை 1960-களில் வெளியிட்டவர்.

## கடையநல்லூர் ஜமீலா:

என்.எம். சம்சுதீன் என்னும் இயற்பெயர் கொண்டவர் இவருடைய புனைபெயாகள் கடையநல்லூர் ஜமீலா, பநாஸ், தீன்தாஸ், பட்டாணி என்பன. 1953 முதல் எழுதிவருகிறார். இவர் மல்லிகை (1953), ஜமீலாவின் கவிதைகள் (1975), ஆசை (1984) புரட்சிப் பெண் ஜமீலா (1984) ஆகிய கவிதை நூல்களை வெளியிட்டுள்ளார். இவருடைய கட்டுரை நூல்கள் சிலவும் வெளிவந்துள்ளன. ஆசைநெஞ்சங்கள் (1989) வரலாற்றுத்துளிகள் (1989) காதல் மலாகள் (1990) ஆகியவை கடையநல்லூர் ஜமீலாவுடைய எண்ண வெளிப்பாடுகள். இவர் சிங்கப்பூர் கவிஞர்.

## மைதீ சுல்தான் :

வளர்ந்துவரும் இசுலாமியக் கவிஞர்களுள் ஒருவர் மைதீசுல்தான். இவருடைய கவிதைகள் 'மைதீசுல்தான் கவிதைகள்' என்னும் பெயரில் தொகுப்பாக வெளிவந்துள்ளன.

## சிறுகதைத்துறை:

இசுலாமிய சமயக்கதைகள் எனவும், சமயம் சாராத பொதுவான சிறுகதைகள் எனவும் இருவகைக்குள் இசுலாமியரின் சிறுகதைத் தொண்டினை அடக்கிப் பாாக்கலாம்.

## சிறுகதைப்பித்தன் :

கன்னல் கவி நக்கம்பாடி நா. கரீம் என்பவர் சிறுகதைப் பித்தன் என்னும் புனைபெயரில் மலேசியாவின் சிறுகதைத் துறைக்குப் பெரும்பங்கு ஆற்றியுள்ளார். 'புதுமைப்பித்தன் பரம்பரை' என்னும் தொடர் கட்டுரையைத் தமிழ்நேசன் பத்திரிகையில் எழுதி வெளியிட்டுள்ளார்.

## ஜே.எம்.ஹுசேன் :

இசுலாமியச் சிறுகதைகளின் முன்னோடி என்று நாம் இவரைக் குறிப்பதில் தவறில்லை. 1957 இல் 'இசுலாமியச் சிறுகதைகள்' என்னும் நூலை வெளியிட்டுள்ளார். தமிழ்நாட்டில் இயங்கிய முஸ்லீம் முரசு, பிறை, மணிவிளக்கு ஆகிய இதழ்களிலும் இவரருடைய படைப்புகள்

வெளிவந்துள. இஸ்லாமிய இலக்கியக் கருவூலம் இவரைப் பற்றிய செய்திகளை ஓரளவு கூறுகிறது.

## மைதீ சுல்தான் :

நல்ல சிறுகதை எழுத்தாளர். சில அற்புதமான கதைகளை அவ்வப்போது எழுதுபவர். மலாயாப் பல்கலைக்கழகத்தின் தமிழ்ப்பேரவையினர்நடத்தும் சிறுகதைப் போட்டிகளில் சிறந்த சிறுகதைளை எழுதிப் பரிசுகளைத் தொடர்ந்து பெறுபவர். இவருடைய சிறுகதைகள் பேரவைக்கதைகள் என்னும் தொகுப்பில் இடம் பெற்றுள. 'மைதீசுல்தான் சிறுகதைகள்' என்னும் சிறுகதைத் தொகுப்பினையும் இவர் வெளியிட்டுள்ளார் .

## சை. பீர்முகம்மது :

இவரும் நல்ல சிறுகதை எழுத்தாளர். இவருடைய 'வெண்மணல்' என்னும் சிறுகதைத் தொகுப்பு நூலுப்பெற்றதாம்.

## திருகிம்:

இப்ராகிம் என்னும் இயற்பெயர் கொண்ட இவர் தைப்பிங் நகரைச் சோந்தவர். சில சிறுகதைத்தொகுப்புகளை வெளியிட்டுள்ளார்

## நாடகத்துறை :

மலேசிய வானொலியின் தமிழ்ப்பிரிவில் இசுலாமிய நாடகம் எனத் தனியொரு நிகழ்ச்சி ஒலிபரப்பப்பட்டு வருகிறது. இதில் பல இசுலாமியர்கள் தங்கள் படைப்புகளை ஒலியேற்றி வருகின்றனர். இவர்களுள் அசன்கனி (கபீர் செல்வன்) அதிரை தாசன் (ஷாகுல் ஹமீது) மைதீ சுல்தான் போன்றோர் குறிப்பிடத்தக்கோர். ஜேம்.எம். பல நல்ல வானொலி நாடகங்களை எழுதியுள்ளார். 'பிறை தெரிந்தது', 'கண திறந்தது', 'அழகின் சிரிப்பு' போன்றவை குறிப்பிடத்தக்கவை. கவிமதி தாசன் சிங்கை வானொலிக்குப் பல நாடகங்களை எழுதியுள்ளார். கவிஞர் சாரண பாஸ்கரன் கவிதை நாடகங்கள் படைப்பதில் வல்லவர். மலாயா நண்பனின் ஆசிரியரான காம்கனி பல நாடகங்களைத் தம் பத்திரிகையின் வழி வெளியிட்டுள்ளார். சிங்கை வனொலியிலும் இசுலாமியரின் நாடகங்கள் ஒலிபரப்பப்படுகின்றன.

## பத்திரிகைத்துறை :

மலேசியாவின் முதல் பத்திரிகை என்னும் பெருமை படைத்த 'சிங்கை வர்த்தமானியின் ஆசிரியர் சி.கு. மகமதூம் சாயுபு. இவர் நடத்திய ஏனைய பத்திரிகைகளின் விவரம் முன்னர்க் கூறப்பட்டது. 'மலாயா நண்பன்' சிங்கப்பூரிலிருந்து வெளிவந்த நாளித ழாகும். கரிம்கனி அவர்கள் நடத்திய 'உதயசூரியன்' என்னும் பத்திரிகை

சிங்கையிலிருந்து சிறிதுகாலம் வெளிவந்தது. 'மணிச்சுடர் என்ற பத்திரிகையும் வெளிவந்ததாக அறிகிறோம்.

முடிவுரை :

வளர்ந்து வரும் தற்காலத் தமிழிலக்கியத் துறைகளுக்கும், இவ்வளர்ச்சிக்கு ஆதாரமாக இலங்கிய பத்திரிகைத் துறைக்கும் இசுலாமியர்கள் ஆற்றிய பங்கு மலேசிய, சிங்கைத் தமிழிலக்கிய வரலாற்றில் முக்கியமாகக் குறிக்கப்படவேண்டிய ஒன்று.

## மேற்கோள் விளக்கம்

1. மு. அப்துல் மஜீது, கவிப்பூஞ்சோலை, ப -
2. Anne mmarie Schimmel, Islamic Literatures of India, p - 1.
3. ந. வீ. செயராமன், "மலேசியாவில் மரபுக்கவிதைகள்", மலேசியத் தமிழ்க் கவிதைக் கருத்தரங்கு மலர், ப. 33.
4. பாவலர் திலகம் ஜைனுதீன் அவர்களுடன் நூலாசிரியர் நேர்முகம், 5. 7. 92.
5. மேலது.
6. டி.வி.ஆர்.பி. இராகவன் பிள்ளையின் கருத்து மலேசியத் தமிழ்க்கவிதைக் கருத்தரங்கு மலரில் மேற்கோளாகக் காட்டப்பட்டது.
7. ஆர்.பி.எம். கனி, இஸ்லாமிய இலக்கியக் கருவூலம், ப - 235.
8. மேலது, ப - 236
9. சிங்கை முகிலன், நல்ல முடிவு, ப - 59
10. க.து.மு. இக்பால், முகவரிகள், ப - 2.